லட்சுமி பாலாஜி பதிப்பகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ கன்னத்தில் முத்தமிட்டாள்... ★ முத்துலட்சுமி ராகவன்

முத்துலட்சுமி ராகவன்

கன்னத்தில் முத்தமிட்டாள்...

முத்துலட்சுமி ராகவன்
கன்னத்தில் முத்தமிட்டாள்...
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ கன்னத்தில் முத்தமிட்டாள்... ★ முத்துலட்சுமி ராகவன்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

கன்னத்தில் முத்தமிட்டாள்...

1

திருமண வீட்டுக்கான அனைத்து அடையாளங்களும் அங்கிருந்தன.. அந்தத் தெருவையே அடைத்ததைப் போன்ற பிரம்மாண்டமான அந்த வீட்டின் முன்பாக ஊரையே அடைத்ததைப் போன்ற பந்தல்.. அதன் வாசலில் தோரணம் போல கட்டப் பட்டிருந்த வாழை மரம்.. பந்தலில் அணி வகுத்ததைப் போல வரிசை.. வரிசையாக போடப் பட்டிருந்த நாற்காலிகள்.. அதை நிரப்பியிருந்த உற்றார்.. உறவினர்.. அங்குமிங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள்.. பட்டுப் புடவையும்.. நகைகளுமாக.. பூவாசத்துடன் விரைந்து கொண்டிருந்த பெண்கள்.. என அங்கே தனியான ஒரு களை தாண்டவமாடியது..

அந்த வீடு.. ஏழெட்டு திருமண மண்டபங்களை உள்ளடக்கியது போல விஸ்தீரணமாக இருந்தது.. வீட்டின் முன்புறம் அகன்று பரந்த வழவழப்பான

தூண்கள் கொண்ட போர்டிகோவும்.. அதை ஒட்டியிருந்த நீண்ட படிக்கட்டுக்களும்.. படிக்கட்டின் முடிவில் இருந்த அகன்ற வரண்டாவும்.. அந்தக் காலத்து ஜமீன் பாரம்பர்யத்தின் கட்டிடக் கலையை கண்முன் கொண்டுவந்தன..

வரண்டாவுக்கு அடுத்ததாக தென்பட்ட மிகப் பெரிய ஹாலில் ஆங்காங்கே.. பெரியபெரிய சோபாக்கள் போடப் பட்டிருந்தன.. மேற்கூரையில் தொங்கிய அலங்கார விளக்குகள் ஜமீன் பாரம்பர்யத்தை அறிவுறுத்தின.. சுவர்களில் மாட்டப்பட்டிருந்த அழகான ஓவியங்களின்

விலை மதிப்பு கோடிகளைத் தாண்டும் என்பதை அந்தக் கிராம மக்கள் அறிந்திருக்க மாட்டார்கள்..

அந்த வீடு.. அன்னவாசல் கிராமத்தின் ஜமீன் பரம்பரையின் வீடுதான்.. ஜமீன்தார்களின் ஆட்சி மறைந்தாலும்.. அவர்களுக்கான பாரம்பர்யப் பெருமையும்.. பெயரும்.. அந்தக் கிராமத்தில் இன்னும் மறையவில்லை.. அவர்கள் அந்த வீட்டை 'ஜமீன் வீடு' என்றே இன்றுவரை அழைத்து வருகிறார்கள்..

வீட்டின் உள்ளே இருந்தவர்களின் முகங்களில் ஓர்விதமான இறுக்கம் காணப்பட்டது.. அந்தக் காலத்து வரலட்சுமியைப் போல அரச கம்பீரக் களையுடன் இருந்த இந்திராதேவி.. மகனைக் கவலையுடன் பார்த்தாள்...

"காய்ச்சல் குறையலை தனஞ்ஜெயா.. கூடிக்கிட்டே இருக்கு.."

அவள் அழைத்த தனஞ்ஜெயன் ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவான தோற்றத்தில் கம்பீரமான அழகுடன் இருந்தான்.. அவனது முரட்டுத்தனமான தோற்றத்தில் ஆண்மையின் ஆளுமை ததும்பியது.. அகன்ற நெற்றியும்.. செதுக்கி வைத்த சிலையைப் போன்ற திருத்தமான முக அமைப்பும்.. பெரிய மீசையும்.. அவனுடைய ஆகிருதியின் அழகை அதிகப் படுத்திக் காட்டின..

தனஞ்ஜெயன் பட்டு வேட்டி சட்டையுடன் மாப்பிள்ளையைப் போல இருந்தான்.. ஆனால்.. மாப்பிள்ளைக்குரிய சந்தோசம் அவன் முகத்தில் இல்லை.. லேசான சஞ்சலத்துடன் கூடிய இறுக்கம் அதில் நிறைந்து காணப்பட்டது..

"எங்கேயிருக்காம்மா..?"

"மாடி ரூமில..."

"என் ரூமிலயா..?"

"இல்லைப்பா.. அதில அலங்காரம் பண்ணிக் கிட்டிருக்காங்களே.. வேற ஒரு ரூமில படுக்க

வைச்சிருக்கேன்.."

அந்த மாளிகையில் அறைகளுக்கா பஞ்சம்..?

வீட்டின் நிர்வாகத்தை கைக்குள் வைத்திருந்ததாலும்.. அடிக்கடி மாடி ஏறி இறங்க முடியாத மூட்டுவலியாலும் இந்திராதேவி ஹாலை ஒட்டியிருந்த மிகப்பெரிய படுக்கை அறையில் இருந்தாள்.. வீட்டை கண்காணிப்பில் வைத்திருக்க அதுதான் அவளுக்கு வசதியாக இருந்தது..

தனஞ்ஜெயனின் அறை மாடியில் இருந்தது.. அதை அறை என்பதை விட.. அழகான தனி வீடு என்று சொல்லலாம்.. சமையலறை.. பூஜையறையைத் தவிர.. ஒரு வீட்டுக்கான சகல அம்சங்களும் அவன் அறையில் இருந்தன..

கதவைத் திறந்ததும் வரவேற்பறை.. அதை ஒட்டிய பெரிய பால்கனி.. வரவேற்பறையை அடுத்து நீண்டதாக படிக்கும் அறை.. அதையும் தாண்டினால்.. மிகப்பெரிய கட்டில்களும்.. சோபாக்களுமாக இருந்த படுக்கையறை.. படுக்கையறையை ஒட்டிய உடை மாற்றும் அறை.. அதனுள் இருக்கும் குளியலறை என்று தனஞ்ஜெயனின் அறை அனைத்து வசதிகளையும் கொண்டது..

அந்த அறையில்தான் அவனது முதலிரவுக்கான அலங்கார வேலைகள் நடந்து கொண்டிருந்தன.. அதைக் கொண்டாட வேண்டியவனோ.. அந்தச் செய்தியைக் கேட்டதும் அதிருப்தியுடன்..

"ம்ப்ச்.." என்றான்..

"ஏன் தனா..?" இந்திரா தேவியின் இதயம் வலித்தது..

எத்தனை ஆண்டுகால கனவு அது..!

திருமணமே வேண்டாமென்று இருந்த தனஞ் ஜெயனுக்கு திருமணம் நடக்காதா..? அந்த வீட்டில் விளக்கேற்ற ஒரு மருமகள் வரமாட்டாளா என்று அந்தத்தாய் எத்தனை கோவில்களில் ஏறி இறங்கியிருப் பாள்.. எத்தனை நேர்த்திக்கடன்களை நேர்ந்திருப்பாள்.. அத்தனையும் கூடி வந்து தனஞ்ஜெயனுக்கும் திருமணமாகி.. புதுமணப்

பெண்ணாக அந்த வீட்டில் வலது காலை எடுத்து வைத்து பிரவேசித்த சுமித்ரா.. வந்தவுடனே மயங்கி விழ வேண்டுமா..? அவளைத் தாங்கிப் பிடித்த தனஞ்ஜெயனுக்கு அவள் உடல் காய்ச்சலில் கொதிக்கிறது என்று தெரிய வேண்டுமா..?

"அம்மா.. இவளைப் படுக்க வையுங்க.. நான் டாக்டருக்குப் போன் பண்ணிட்டு வரேன்.."

தனஞ்ஜெயன் தன்மேல் சரிந்த புதுமனைவியை கைகளில் ஏந்தி அங்கிருந்த சோபாவில் அமர வைத்து விட்டு.. செல்போனுடன் வாசல்பக்கம் போனான்..

"அண்ணி.. என்ன ஆச்சு..?"

"கல்யாணப் பொண்ணு காய்ச்சல்ல கிடக்கிறாளா..? காய்ச்சலோடவா மணமேடை ஏறினா..?"

"நேத்தே காய்ச்சல் இருந்திருக்குமோ..?"

"இல்லையே தெய்வானை.. மணியக்காரர் வீட்டில நடந்த பஞ்சாயத்தில இந்தப் பொண்ணு தெளிவாத்தானே வந்து நின்னுச்சு.."

"ஆமாண்டி மருக்கொழுந்து.. நானும் பாத்தேனே.. எதுக்காக பஞ்சாயத்தைக் கூட்டியிருக்காங்கன்னு தெரியாம.. சிநேகிதப் பிள்ளையோட சிரிச்சுப் பேசிக்கிட்டே வந்துச்சே.."

"அதுக்கப்புறமாத்தான் காய்ச்சல் வந்திருக்குமோ..?"

"யாருக்குத் தெரியும்..? ஏன் இந்திரா உனக்குத் தெரியுமா..?"

உறவுக்காரப் பெண்கள்.. இந்திரதேவியின் உணர்வுகளைப் பற்றிக் கவலைப்படாமல் ஆளுக்கு ஒன்றாகப் பேசினார்கள்..

அவளது மனம் ரணமானது.. இருந்திருந்து அவள் மகன் திருமணம் செய்து கொண்டிருக்கிறான்... அந்தத் திருமணம் இப்படி மற்றவர்கள் விமரிச்சிக்கும்படியா நடந்து முடிய வேண்டும்..?

"பொண்ணு வயசில சின்னப் பொண்ணா இருப்பா போல இருக்கே.."

"ஆமாம் தாமரை... இப்பத்தான் படிப்பை முடிச்சாளாம்.."

"முடிச்சவுடனே வேலைக்குப் போகனும்னு நினைச்சிருப்பா.. மெட்ராஸ்காரப் பொண்ணில்ல.. அது மனசில என்ன நினைப்போ..?"

அந்தத் தாமரையின் மனதில்தான் வன்மம் கலந்த நினைவு இருந்தது.. அவளின் மகளை தனஞ்ஜெயனுக்கு திருமணம் செய்து வைத்து விட வேண்டுமென்று அவள் பகீரத பிரயத்தனங்களைச் செய்தாள்.. ஜமீன் வீட்டுக்கு நடையாய் நடந்தாள்.. இந்திராதேவிக்கு மனமிருந்தது தான்.. தனஞ்ஜெயனுக்குத்தான் மனமில்லை..

"பிடிக்கலைன்னா.. விட்டுருங்கம்மா.." கண்டித்துப் பேசிவிட்டான்..

இந்திரா தேவியின் கண்கள் கலங்கி விட்டன.. அதில் எண்ணற்ற மன உளைச்சல்கள் கலந்து வந்தன.. அவளும் தான் என்ன செய்வாள்..?

"அம்மா.. நீங்க எதைக் கேட்டாலும் செய்யறேன்.. கல்யாணம் மட்டும் வேண்டாம்.. என்னை என் போக்கில் விட்டிருங்க.." என்று சொல்லும் மகனுடன் எப்படிப் போராடுவாள்..?

விடுவதா..? ஒரு தாயால் அது முடியுமா..?

இந்திராதேவி கண்ணீரில் கரைந்தாள்.. தனக்குள் மறுகினாள்.. தனஞ்ஜெயன் அசைந்து கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டான்..

அந்த வன்மம்தான் அந்தத் தாமரைக்கு..

"நேத்துப் பாக்கனும் கோமளா.. என்னவோ ஊரைச் சுத்திப் பாக்க வந்திருக்கிறதைப் போல இந்தப் பொண்ணு அம்புட்டு மலர்ச்சியா வந்துச்சே மருக்கொளுந்து.. இப்ப அந்த மலர்ச்சியெல்லாம் காணாமப் போயி கண்ணத் திறக்காம மயங்கிக் கிடக்கு.. பாவம்.."

அவள் பாவம் என்று பரிதாபப் பட்டது எதற்காக..? மயங்கிக் கிடக்கும் சுமித்ராவின் காய்ச்சலுக்காக பரிதாபப் பட்டாளா..? இல்லை.. அந்த ஜமீன் குடும்பத்தின் மருமகளாக அவள் வந்து விட்டாளே என்று பரிதாபப் பட்டாளா..?

இந்திராதேவி பல்லைக் கடித்தாள்.. முதல்நாள் வரை அவள் முன்னால் நின்று பேசத் தயங்கிய பெண்களெல்லாம் அன்று தைரியமாக அவள் முன்னாலேயே கதை பேசியதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

"இப்பத்தான் கல்யாணம் ஆனதைப் போல இருக்கு.. அதுக்குள்ள என்மக இடுப்பில் ஒன்னு.. கையில் ஒன்னுன்னு இருக்கிறா.. இந்தக் காலத்துப் பொண்ணுக கல்யாணமாகிட்டா அப்படித்தான்.. பொறந்த வீட்ட மறந்துட்டு.. புருசன் வீடே கதின்னு ஆகிருவாங்க.."

'இப்ப என்ன கழுதைக்காக இவ மகளுக்கு ரெண்டு குழந்தைகன்னு சொல்லிக்கிட்டு இருக்கா..'

இந்திராவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. தாமரையின் மகள் இரண்டு குழந்தைகளுக்கு தாயாகி நிற்பதற்கும்.. புது மணப்பெண்ணான சுமித்ரா காய்ச்சலில் மயங்கிக் கிடப்பதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லைதான்..

ஆனால் எதற்காக தாமரை அதற்கும்.. இதற்கும் இணை கூட்டினாள் என்பதை இந்திராதேவியால் இனம் கண்டு கொள்ள முடிந்தது..

தனஞ்ஜெயன் மணக்க மறுத்து விட்ட தாமரையின் மகள் இரண்டு குழந்தைகளுக்குத் தாயென்றால் தனஞ்ஜெயனுக்கு எத்தனை வயதாகி இருக்க வேண்டும் என்ற கேள்வி அதில் தொங்கி நிற்பதை உணர்ந்து கொள்ள முடியாத முட்டாளா இந்திராதேவி..?

அதை மறைமுகமாக சொல்லிக் காட்டுவதற் காகத்தான் அறியாப் பெண்மணியைப் போல முகத்தை வைத்துக் கொண்டு

'பொண்ணு வயசில சின்னப்பொண்ணா இருப்பா போல இருக்கே..' என்று அந்தத் தாமரை கேட்டு வைத்தாள்..

'இந்தத் தனா மட்டும் காலாகாலத்தில கல்யாணத்தை பண்ணியிருந்தா.. இவளுகல்லாம் என் முன்னாலே நின்னு நாக்கு மேலே பல்லைப் போட்டு நியாயம் பேசியிருப்பாளுகளா..?'

இமையோரம் துளிர்த்த கண்ணீரை.. இமைசிமிட்டி அடக்கிக் கொண்டாள் இந்திரா தேவி.. பெரிய வீட்டின் பெண்மணி அவள்.. வருத்தத்தை வெளிப்படுத்திக் கொள்ளும் சுதந்திரம் அவளுக்குக் கிடையாது... இமையோரம் துளிர்க்கும் கண்ணீரை அவள் விழிகளுக்குள் விரட்டித்தான் ஆக வேண்டும்.. கம்பீரத்தைக் கைவிடாமல் அந்த அன்னவாசலின் ஜமீன்தாரிணியாக நிமிர்ந்து நின்று தான் ஆக வேண்டும்..

அதுபோன்ற நிலைமையை தாய்க்குக் கொடுப்ப வனல்ல தனஞ்ஜெயன்.. அவன் வல்லமையாளன்.. ஜமீன்தார் ரகுநாதனின் மறைவுக்குப் பின்னால் அந்த ஜமீன் சொத்தை நிர்வகித்து.. கணவரை இழந்து விட்ட தனிமை தாயை அண்டி விடாமல் பாதுகாத்து.. புதிதாகப் பல தொழில்களைத் தொடங்கி.. பாரம்பர்யத்தின் பெருமையை உயர்த்தி.. அந்த சுற்று வட்டாரத்திலேயே மிகப்பெரும் மனிதனாக.. செல்வந்தனாக உயர்ந்து நிற்பவன்..

இந்திரதேவிக்கு அவன் வாழ்வதற்கான தைரியத்தைக் கொடுத்தான்.. பாசத்தைக் கொடுத்தான்.. பாதுகாப்பைக் கொடுத்தான்.. பெருமைகளைக் கொடுத்தான்.. அவள் கேட்காமலே இவை அனைத்தையும் கொடுத்தவன்.. அவள் கேட்டும் கொடுக்காதது ஒன்றே ஒன்றுதான்..

அதுதான் தனஞ்ஜெயனின் திருமணம்..!

அவனுடைய கல்லூரி நாள்களில் அவன் அறியாமல் சொன்ன ஒரு சிறு விவரத்தால் அவனுடன் படித்த நண்பனின் காதல் முறிந்து போனதாம்.. மனம் வெறுத்துப் போன அந்த நண்பன்.. படிப்பை முடித்து விட்டு பிரிந்த கடைசிநாளன்று தன் வாழ்வில் திருமணம் என்பதே கிடையாது என்று சொன்னானாம்.. அத்துடன் நிறுத்தாமல்

அதற்கு காரணம் தனஞ்ஜெயன்தான் என்று விரல் நீட்டிக் குற்றம் சாட்டி விட்டுப் போய் விட்டானாம்..

அந்த நண்பன் சொன்ன சொல்லைக் காப்பாற்றினானோ.. இல்லையோ.. தனஞ்ஜெயன் அந்த சொல்லில் உறுதியாக நின்று விட்டான்.. இந்திராதேவி எதைச் சொன்னாலும் காதில் போட்டுக் கொள்கிறவன்.. திருமணம் என்ற சொல்லை மட்டும் காதில் போட்டுக் கொள்ளாமல் அழிச்சாட்டியம் பண்ணினான்..

"காலேஜீக்குப் போனா.. படிச்சோமா.. டிகிரியை வாங்கினோமான்னு இருக்கனும்.. அதைவிட்டுட்டு கூடப் படிச்சவன் காதலிலே தோத்துப் போனான்.. அதனால எனக்குக் கல்யாணம் வேணாம்ன்னு இருக்கக் கண்டோமா..? ஏண்டா.. அவன்தானடா காதலிச்சான்..?"

"அதில ஏம்மா உங்களுக்கு இம்புட்டுச் சந்தேகம்..?"

"பின்னே..? அவன் காதலில் தோத்துப் போனா அவன் தானடா கல்யாணம் வேணாம்ன்னு சொல்லனும்..? அதை விட்டுட்டு என்ன அலுவலுக்கு நீ கல்யாணம் வேணாம்ன்னு சொல்லிக்கிட்டு இருக்கிற..?"

"அவன் காதலில் தோத்துப் போறதுக்கு நான் தானேம்மா காரணம்..?"

"இப்படியே பேசிக்கிட்டு இரு.. ஏண்டா தனஞ்ஜெயா இப்படி இருக்கே..? நீயென்ன அவன் காதலியை அவனை விட்டுட்டு ஓடுன்னு சொல்லி ஓட்டியா விட்ட..?"

"ஏறக்குறைய அப்படித்தான்ம்மா.."

"என்னடா மகனே இப்படிச் சொல்ற..?"

"ஆமாம்மா.. அன்பழகன் இருக்கானே..."

"அவன் யாருடா..?"

"அவன்தான்மா.. என்னால காதலில தோத்துப் போனவன்.."

"அந்தக் கட்டையில போற கடன்காரன் அவன்தானா..?"

"ப்ம்ச்.. நான் பண்ணின வேலையாலே அவன்தான் பாதிக்கப் பட்டான்ம்மா.."

"டேய்.. டேய்.. அவன் பேசின பேச்சில.. நீயும்.. உன்னால நானும் தாண்டா தம்பி பாதிக்கப்பட்டு நிற்கிறோம்.."

"இல்லேம்மா.. சித்ராகிட்ட.."

"இவயாருடா.. சித்ராங்கி..?"

"அன்பழகனோட காதலிம்மா.."

"என்ன கருமமாவோ இருந்துட்டுப் போகட்டும்.. அவகிட்ட உனக்கென்ன பேச்சு..?"

"அவதான்ம்மா என்கிட்டப் பேசினா.."

"என்ன கழுதைக்காம்..?"

"அன்பழகனோட பர்ஸில சின்ன வயசுப் பெண்ணோட படம் இருந்துச்சாம்.. அது யாருன்னு கேட்டா.."

"அதை அவன்கிட்டத்தானே கேட்டிருக்கனும்..? உன்கிட்ட வந்து வேலை மெனக்கெட்டு ஏண்டா கேட்டு வைச்சா..?"

"நான்தானேம்மா அன்பழகனோட ரூம்மேட்.."

"அந்தக் கொடுமைக்கு நீ ஹாஸ்டலில தங்கிப் படிக்காம தனிவீட்டை வாங்கிப் படிச்சிருக்கலாம்.. நம்ம கிட்ட இல்லாத பணமா..?"

'செய்திருக்கலாமோ..?' தனஞ்ஜெயன் பெருமூச்சு விட்டான்..

செய்யாமல் விட்டதைப் பற்றிப் பேசிப் பயன் என்ன..? அவன் எதற்காக கல்லூரி விடுதியில் அன்பழகனுடன் ஒரே அறையில் தங்க வேண்டும்..? அந்த அன்பழகன் எதற்காக அவனுடைய 'ஆட்டோகிராப்' காதல் கதைகளை தனஞ்ஜெயனிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்..? தனஞ்ஜெயன் எதற்காக சித்ரா கேட்டவுடன் யதார்த்தமாக அவற்றைச் சொல்லி விட வேண்டும்..? சித்ரா எதற்காக அதுதான் சாக்கு என்று அன்பழகனைக் கழட்டி விட்டுவிட்டு..

அப்பாம்மா பார்த்திருந்த அமெரிக்க மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டி வெளிநாட்டுக்குப் பறக்க வேண்டும்..?

விதி வலியது..!

"நீ வேறடா.. அவளே இவனைக் கழட்டி விட எந்தக் காரணம் சிக்கும்ன்னு தேடிக்கிட்டு இருந்தா.. நீ வசமா மாட்டின.. இல்லேன்னா பாப்பாவுக்கு இவனைப் பற்றி எதுவும் தெரியாதாக்கும்..?"

தனஞ்ஜெயனுடன் படித்த இன்னொரு நண்பன் சொன்னான்.. அதை மற்றொருவன் ஆமோதித்தான்..

"அதுக ரெண்டுமே விவரமானதுகடா.. சித்ராவுக்கு அமெரிக்கமாப்பிள்ளை கிடைக்கிற வரைக்கும் அவ அன்பழகனைப் பற்றித் தூண்டித் துருவினாளா..? வெளிநாட்டு மாப்பிள்ளை கிடைச்சதும்.. அவமேல குற்றமில்லாம தப்பிக்கக் காரணத்தை உண்டாக்கிக்கிட்டா.. அவ்வளவுதாண்டா.."

நண்பர்கள் பலரும் அதையேதான் சொன்னார்கள்.. தனஞ்ஜெயன் கேட்டுக் கொள்ளவில்லை.. அவன் மனதில் ஒரு குற்ற உணர்வு தங்கி விட்டது..

2

"இந்தப் பொண்ணு ஸ்கூல் யூனிபார்மில இருக்குதே தனஞ்ஜெயன் இது யாரா இருக்கும்..? ஒருவேளை அன்பழகனின் தங்கையாக இருக்குமோ..?"

போட்டோவைக் காட்டாமல் சித்ரா கேட்டு வைத்த போது.. நான்கு வருடங்களுக்கு மேலாக அன்பழகனைக் காதலிக்கிறவளுக்கு அவனுக்குத் தங்கை இல்லை.. தம்பிதான் இருக்கிறான் என்ற விவரம் கூடவா தெரியாது என்ற கேள்விதான் தனஞ்ஜெயனின் மனதில் முதலில் எழுந்தது.. இருந்தாலும் அவன் அதை மறைத்துக் கொண்டு நண்பனின் காதலி என்பதால்..

"எந்தப் போட்டோங்க..? அவன் நாலாம்கிளாஸில் படிக்கிறப்ப ரோஸிங்கிற பாப்பாவுக்கு ரூட் விட்டானே.. அந்தப் போட்டோவா..?" என்று கேட்டு வைத்தான்..

"இல்லேங்க.. இது வேற போட்டோ.." சித்ராவின் முகம் லேசாக மாறியது..

"வேற போட்டோன்னா எதுவா இருக்கும்..? அவன் ஆறாம் கிளாஸ் படிக்கிறப்ப.. ஆஷான்னு ஒரு குட்டிப் பொண்ணு பின்னால சுத்தினதா சொன்னானே.. அந்தப் போட்டோவா..?" தனஞ்ஜெயன் விளக்கம் கேட்டான்..

"ஊஹீம்.." சித்ராவின் முகம் இறுக ஆரம்பித்தது..

"அதுவுமில்லைன்னா.. அவன் எட்டாம் கிளாஸ் படிக்கிறப்ப எர்ணாகுளத்தில இருந்து வந்து படிச்ச சாந்தினிகிட்ட சரண்டர் ஆகியிருந்ததாச் சொன்னானே.. அந்தப் போட்டோவாங்க..?" தனஞ்ஜெயன் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்..

சித்ரா கடினமான முகத்துடன் தலையை இடம் வலமாக அசைத்தாள்..

"இதுவும் இல்லேன்னா.. அவன் பத்தாவதிலே பார்த்து வைச்ச பக்கத்து வீட்டு பங்கஜத்தோட போட்டோவாத்தான் இருக்கும்ங்க.." உறுதி படச் சொன்னான் தனஞ்ஜெயன்..

"ப்ம்ச்.." சூள் கொட்டினாள் சித்ரா..

"பங்கஜமும் இல்லேன்னா யாரா இருக்கும்..? அவன் ப்ளஸ் டூவில ஒன்னுக்கு மூணு பொண்ணு பின்னாலே சுத்தினானாம்.. இரண்டை கரெக்ட் பண்ண முடியலையாம்.. மூணாவது திரும்பிப் பார்த்துச்சாம்.. அதுவா இருக்குமோ..?" சித்ராவிடமே தனஞ்ஜெயன் கேட்டு வைத்தான்..

"ஆக.. உங்க பிரண்ட்.. நாலாம் கிளாஸில இருந்து காதலிக்க ஆரம்பிச்சு.. இரண்டு வருசத்துக்கு ஒரு பொண்ண மாத்திக்கிட்டு இருந்திருக்காரு.. காலேஜ்

வந்தவுடனே கேணத்தனமா நான் கிடைச்சிட்டேன்னு அடக்கி வாசிச்சிருக்காரு.. அப்படித்தானே..?"

அன்பழகனை விட்டு விட்டு தனஞ்ஜெயனிடம் குமுறியவள் அன்றே கல்லூரிவிடுதியை காலி செய்து விட்டு ஊரைப் பார்த்துப் போய் விட்டாள்.. தேர்வை மட்டும் அண்ணன்.. அப்பா என்ற படைபலத்தோடு வந்து எழுதிவிட்டுப் போனாள் என்பது வேறு விவரம்..

இதில் தனஞ்ஜெயன் தலைமுடியைப் பிய்த்துக் கொண்ட ஒன்று எது என்றால்.. கடைசிவரை சித்ரா கையிலிருந்த போட்டோவை அவன் கண்ணிலேயே காட்டவில்லை என்பதுதான்..

"போட்டோவாவது.. ஒன்னாவது.. அவபோட்டு வாங்கியிருக்காடா மச்சான்.." என்றான் தனஞ்ஜெயனின் நண்பன்..

"அது சரிடா.. அவ எதுக்காகடா அன்பழகன்கிட்டப் போடவேண்டிய சண்டையை உன்கிட்டப் போட்டா..? அதுக்கே அவளை வீடு கட்டி அடிக்கனும்.. அவன்கிட்டப் போனா அவன் அமெரிக்க மாப்பிள்ளையைப் பத்தி வண்டை.. வண்டையாக கேட்பானில்ல.. அதுக்காகத்தான் அம்மணி உன்கிட்டப் பிலிம் காட்டிட்டு ஓடிப் போயிருச்சு.." என்றான் இன்னொருவன்..

எது எப்படியோ.. தேர்வு முடிந்து.. நண்பர்குழாம் பிரிந்து போன கடைசி நாளில்.. தலைமூடி கலைந்து.. கண்கள் சிவக்க.. தேவதாஸ்போல தனஞ்ஜெயனை வெறித்து வெறித்துப் பார்த்த அன்பழகன் சூளுரைத்தான்..

"என் காதலைக் கவுத்துட்டல்ல.. நீயெல்லாம் நல்லா வருவேடா.. போடா டேய்.. உன் ஜமீன் பரம்பரைக்கேத்த பெரிய இடத்துப் பொண்ணைக் கட்டிக்கிட்டு சந்தோசமா வாழு.. நான் மட்டும் கடைசி வரைக்கும் கல்யாணம் இல்லாமலே வாழ்ந்துட்டுப் போறேன்.."

"அன்பு..."

"என் பேரைச் சொல்லிக்கூடக் கூப்பிடாதே.. துரோகி.. நான் உனக்கு என்னடா கெடுதல் பண்ணினேன்..? எதுக்காகடா என் காதலில மண்ணை அள்ளிப் போட்ட..?"

"இப்படியாகும்ன்னு நான் நினைக்கலைடா.."

"அவளை உண்மையாகக் காதலிச்சேண்டா.. அவகிட்ட என் மேட்டரையெல்லாம் ஓபன் பண்ணி ஓட்டி விட்டுட்டியேடா பாவி.. என் வயிற்றெரிச்சல் உன்னைச் சும்மா விடாதுடா.. என் வாழ்க்கையிலே இனி கல்யாணம் என்கிற நிகழ்வு வரவே வராதுடா.."

அவன் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.. தனஞ்ஜெயன் அதைப் பிடித்துக் கொண்டு திருமணமே வேண்டாம் என்று சொல்லி விட்டான்.. இந்திராதேவியும் எத்தனையோ விதமாக எடுத்துச் சொல்லிப் பார்த்து விட்டாள்.. தனஞ்ஜெயன் அசைந்து கொடுக்கவில்லை.. முப்பத்தி மூன்று வயது வரைக்கும் திருமணத்தைத் தள்ளிப் போட்டு பிடிவாதமாக நின்று விட்டான்..

அவனுடைய இருபத்தி ஐந்தாம் வயதிலிருந்து அவனுக்குப் பேசப்பட்ட பெண்கள் அனைவருக்கும் திருமணமாகி.. தாமரை சொன்னதைப் போல... கையில் ஒன்றும்.. இடுப்பில் ஒன்றுமாக உலா வந்து கொண்டிருந்தார்கள்.. தனஞ்ஜெயன் மட்டும் யாரையும் கண்டு கொள்ளாமல் வீடு உண்டு.. தொழில் உண்டு.. என்று தன் வாழ்க்கைப் போக்கை அமைத்துக் கொண்டான்..

ரகுநாதன் விட்டுச் சென்ற நூறை.. தனஞ்ஜெயன் ஆயிரமாக்கிக் காட்டியதில் அவனுடைய அன்னையின் மனம் நிறைவ்ந்து விடவில்லை.. அவள் மாலையும்.. கழுத்துமாக தன் மகனை மணக்கோலத்தில் பார்க்க வேண்டும் என்று விரும்பினாள்.. ஏங்கினாள்..

இன்று அந்த ஏக்கம் நிறைவேறிவிட்டது.. தனஞ்ஜெயனுக்குத் திருமணமாகி மாலையும் கழுத்துமாக வந்து நின்று விட்டான்..

'வந்து நின்னு என்ன பண்ண..?'

இந்திராதேவியின் மனதை ஏக்கம் சூழ்ந்தது.. அவள் மகனுக்குத் திருமணம் நடக்க வேண்டும் என்று விரும்பினாள்தான்.. இப்படியொரு அவசரத் திருமணம் நடக்க வேண்டும் என்று விரும்பவில்லையே.. இருந்தும் அதையும் அவள்தான் நடத்திக்காட்டினாள்.. அவளுக்கு வேறு வழி தெரியவில்லை..

"யாருன்னு தெரியலைம்மா.. நம்ம ஐயாவோட காருக்கு முன்னாலே குடிச்சுட்டு விழுந்துட்டான்.."

கணக்குப்பிள்ளை விவரம் சொன்னபோது இந்திராதேவி பதறிவிட்டாள்..

"என்ன சாமி ஆச்சு..?"

ஒன்றும் ஆகவில்லையென்றார் அந்த ரங்கசாமி..

"லேசாத்தான் கார் இடிச்சிருக்கு.. அவன் குடி போதையிலே மயங்கி விழுந்துட்டான்.. நம்ம ஐயா ரோட்டோரமா இழுத்துப்போட்டுட்டுப் போகாம.. காருக்குள்ளே தூக்கிப் போட்டுக்கிட்டு போயி ஆஸ்பத்திரியில சேர்த்திட்டாரு.."

"என் மகன் அப்படித்தான் இருப்பான் சாமி.. அது எப்படி கண்ணுக்கு முன்னாலே ஒருத்தன் மயங்கிக் கிடக்கிறப்ப.. கண்டும் காணாம அவனை ரோட்டில் விட்டுட்டுப் போறது..?"

"ம்ஹீம்.. இப்படிப் பாவம் பார்த்ததோட பலன்தான் இது..?"

"எது சாமி..?"

"அந்தாளோட மச்சினனாம்.. எப்படி என் தங்கச்சி புருசன் மேலே காரை

விட்டு மோதலாம்ன்னு ஆஸ்பத்திரிக்கு வந்து தையத்தக்கத்தையான்னு குதிக்க ஆரம்பிச்சிட்டாரு.. "

"அடக்கவுடளே..! நல்லதுக்கே காலமில்லை சாமி.."

"அதைத்தான்ம்மா நானும் சொல்றேன்.. அங்கேயிருந்த டாக்டர்க.. அடி எதுவும் படல... அந்தாளு குடி மயக்கத்திலதான் மயங்கி கிடக்கான்னு சொன்னாங்க..

அதைக் கேட்டதும் அந்தாளோட மச்சினன் போட்டாரே ஒரு போடு.."

"என்ன சொன்னாரு சாமி.."

"எந்தங்கச்சி புருசனுக்கு குடிப் பழக்கமே இல்ல.. நீங்க உங்க குத்தத்தை மறைக்கிறதுக்கு மாத்திச் சொல்றீங்கன்னு சொல்லிட்டாரு.."

"அதை அந்தாளோட தங்கச்சி புருசன்கிட்டயே கேட்கச் சொல்ல வேண்டியதுதானே சாமி..?"

"சொன்னோமே.. அந்தக் குடிகாரன் கண்முழிச்சதும் அடிச்சான் பாருங்க.. ஒரு அந்தர் பல்ட்டி.."

"அவன் என்னத்தச் சொன்னான்..?"

"மாமா.. எனக்கு ஊத்திக் கொடுத்ததே இவருதான் மாமான்னு நம்ம ஐயா பக்கம் கையைக் காட்டிட்டான்.."

"என்னது...?" இந்திராதேவிக்கு தூக்கி வாரிப் போட்டது..

"அட சண்டாளா..! என்ன கழுதைக்கு என்மகன் அந்தாளுக்கு ஊத்திக் கொடுக்கப் போறானாம்..? அவன் பொண்ணக் கிண்ணக்கட்டிப்புடணும்னு என் மகன் அந்தாளக் கணக்குப் பண்ணப் பார்த்தானாமா..?" மனம் தாளாமல் கேட்டாள்..

"அப்புடித்தான் அந்தாளு சொல்லிப்புட்டான்ம்மா.."

கணக்குப்பிள்ளை சொன்னபோது திகைத்து விட்டாள் இந்திரா..

இப்படிக்கூட உலகத்தில் சொல்வார்களா என்ன..?

"என்ன சொல்றீங்க சாமி.. நிஜமாவே அந்தாளு அப்படித்தான் சொன்னானா..?"

"ஏறக்குறைய அப்படித்தான்... ஒரு சின்ன வித்தியாசம் என்னன்னா... அந்தாளோட பொண்ணக் கட்டிக்கிறதுக்காக கணக்குப் பண்ணலையாம்.."

"பின்னே..?"

"ஆஸ்பத்திரிக்கு வந்து சத்தம் போட்டாரே.. அந்தாளுக்கு தங்கச்சியைக் கட்டிக் கொடுத்த மனுசன்.."

"ஆமாம்.. அந்தாளுக்கு என்ன..?"

"அந்த மச்சினனோட மகளைக் கட்டனும்னுதான் இவனை நம்ம ஐயா கணக்குப் பண்ணினாராம்.."

"இது என்ன சாமி கூத்தா இருக்கு..? எங்கேயோ போற மங்காத்தா.. என் வீட்டில கொஞ்சம் தங்காத்தான்னு. இவனோட அழகு மச்சினன் மகளக் கட்டிக்கனும்னு என் மகன் இவனக் கவுத்தானா..? காலக் கொடுமை சாமி.."

"இன்னொரு வித்தியாசம்ங்கம்மா.."

"நீங்க என்ன சாமி.. ஆறில இருந்து அறுபது வரைக்கும் வித்தியாசத்தை அள்ளி விடுவீங்க போல.."

"நான் என்னம்மா செய்யட்டும்.. நடக்கறது அப்படி.. அப்புறம் இன்னொன்னும்மா.."

"இன்னும் என்ன சாமி..?"

"இந்த வித்தியாசம் அறுபதோடு நிக்காது போல இருக்கும்மா.. அது பாட்டுக்கு அனுமார் வால் போல நீண்டுக்கிட்டேப் போயி அறுபதாயிரம் வித்தியாசத்தில வந்து நின்னுரும் போல இருக்கும்மா.."

"அடக்கடவுளே..!"

"ஆமாம்மா.. அந்தாளோட மச்சினனை அழகுன்னு எடுத்த எடுப்பில சொல்லிர முடியாதுதான்.. கொஞ்சம் அப்படி.. இப்படி பல கோணத்தில பார்த்து வைச்சா.. கொஞ்சம் பார்க்கிற மாதிரி இருக்கிறவருதான்.."

"இப்ப இது தேவையா சாமி..? அந்த மச்சினர் எப்படி இருந்தா நமக்கென்ன..?"

"அவரு எப்படி இருந்தாலும்.. அவரோட பொண்ணு ரொம்ப அழகா இருக்குதுங்கம்மா.."

"அந்தப் பொண்ண நீங்க எங்க பார்த்தீங்க..?"

"போட்டோவிலதான்.."

"போட்டோவிலயா..?"

"ஆமாம்மா.. குடிச்சிட்டு விழுந்த மனுசன் கையில ஒரு பையி இருந்துச்சு.. அந்தப் பையிலதான்

அந்தப் பொண்ணோட போட்டோ.. ஜாதகம்.. லொட்டு லொசுக்கெல்லாம் இருந்துச்சு.."

"அவன் பையை நீங்க ஏன் குடைஞ்சீங்க..?"

"நான் ஏன்ம்மா குடையப் போறேன்..? நாந்தான் அந்தாள அப்படியே அம்போன்னு விட்டுப்புட்டு

வீட்டைப் பாத்துப் போகலாம்ன்னு ஐயாவப் போட்டுக் குடைஞ்சிக்கிட்டு இருந்தேனே.. ஐயாதான் அவன் வீட்டுக்கத் தகவல் சொல்லனும்னு அவன் பையைக் குடைஞ்சாரு.. ஏம்மா.. நீங்களே சொல்லுங்க.. குடிச்சிட்டு விழுந்து வைச்சவனை ஆஸ்பத்திரியிலே சேர்த்ததே அதிகம்.. அதுக்கும் மேலே அவன் கண்ணை முழிச்சு வீட்டைப் பாத்துப் போகட்டும்ன்னு விட்டுட்டுப் போகாம.. அவன் வீட்டுக்கும் தகவல் கொடுத்து வரவைக்கனு மான்னேன்.. இப்பப் பாருங்க.. வந்த மச்சினன்.. நம்ம ஐயாவப் பாராட்டி மெடலா குத்தினாரு..? அத்தனைக்கும் காரணம் நம்ம ஐயாதான்னு சொல்லிப்புட்டாரா இல்லையா..?"

இந்திராதேவி சிந்தனையில் ஆழ்ந்தாள்.. தேவையில்லாத பிரச்னை வந்து முளைத்திருக்கிறது என்றாலும்.. அதைப் பற்றி அவளோ.. கணக்குப் பிள்ளையோ கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை என்பது அவளுக்கும் தெரியும்.. ரங்கசாமிக்கும் தெரியும்..

தனஞ்ஜெயன் பார்த்துக் கொள்வான்.. அவன் சந்திக்காத தடைகளா..? அவன் எதிர் கொள்ளாத போராட்டமா..?

இருப்பினும் இப்போது வந்திருப்பது மிக நூதனமான பிரச்னை இல்லையா..? எதற்கும் எதற்கும் இணை கூட்டுவது..? வழியோடு போனவனின் காருக்கு முன்னால்

குடித்து விட்டு விழுந்தவனைக் கொண்டு போய் மருத்துவ மனையில் சேர்த்தால்.. அதற்கு அவன் நன்றி சொல்லாமல் அவன் வீட்டுப் பெண்ணுக்காக தனஞ்ஜெயன் அவனைக் குடிக்க வைத்தான் என்று சொல்லி விடுவதா..?

இதுபோன்ற வழக்கை அவள் எங்கேயும் கேட்டதில்லை..

"அந்தப் பொண்ணோட போட்டோவ தனஞ்ஜெயன் பார்த்தானா..?"

"வில்லங்கமே அங்கேயிருந்துதானம்மா ஆரம்பிச்சுச்சு.."

"ஏன் சாமி..?"

"அவன் வைச்சிருந்த பையி நழுவி அவன் ரோட்டில விழுந்தப்ப ரோட்டோர மரத்து வேரில மாட்டிக்கிச்சு.. நாங்க இவனத் தூக்கிப் போட்டப்ப.. இவன் கையில பிடிச்சிருந்த பையும் சேர்ந்து வந்திச்சு.. சும்மாவும் வரல.. மரத்தோட வேரில மாட்டியிருந்ததினால கிழிஞ்சு வந்திருச்சும்மா.."

"சுத்தம்.."

"ஐயா இதில இருந்த அத்தனயையும் ஆராய்ச்சி பண்ணிட்டு.. அட்ரஸை நோட் பண்ணிட்டு.. மொத்தத்தையும் மடிச்சு சட்டைப் பையில் திணிச்சிட்டாரு.."

"அந்தக் குடிகாரனோட சட்டைப் பையிலயா..?"

"அப்படிச் செஞ்சிருந்தாத்தான் வினையே வந்திருக் காதே.. ஐயா அதைச் செய்யாம தன்னோட சட்டைப்பையில அந்தப் பொண்ணோட போட்டோவையும்.. ஜாதகத்தையும் திணிச்சிட்டாரும்மா.."

"அப்படிப் போடு.."

இந்திராதேவிக்குச் சிரிப்பு வந்தது.. போட்டோவுக்கும் தனஞ்ஜெயனுக்கும் ஏழாம் பொருத்தம் என்று ஆகிவிட்ட பின்பும் அவன் அந்த விசப் பரிட்சையை மேற் கொள்ளலாமா..?

"அந்தக் குடிகாரன் அதையே காரணமா சொல்லிட்டான்.."

"எப்படிச் சொன்னான்..?"

"அவன் மச்சினன் பொண்ணுக்கு மாப்பிள்ளை பாக்கப் போனானாம்.."

"இதுவும் கதையா..?"

"இல்லையாம்மா.. உண்மையிலேயே அந்த முகரக் கட்டையை மாப்பிள்ளை வீட்டைப் பாக்கிறதுக்குத்தான் அந்த மச்சினன்காரரு அனுப்பி வைச்சிருக்காரு.."

"மாப்பிள்ளை வீட்டைப் பாக்கப் போனவன் குடிச்சுட்டா மாப்பிள்ளை வீட்டைப் பாக்கப் போனான்..?"

"குடிக்க வைச்சதே அந்த மாப்பிள்ளை தானாம்மா.."

"என்னது..?!"

இந்திராதேவிக்கு தலையைச் சுற்றியது.. எதனால் கணக்குப்பிள்ளை.. ஆறிலிருந்து அறுபதாயிரம் வரை வித்தியாசங்கள் நீளும் என்று ஆருடம் சொன்னாரென்று அப்போது அவளுக்குப் புரிந்தது..

இப்படி எந்த வரையறைகளுக்கும் ஆட்படாமல் எக்குத் தப்பாக திசை திரும்பிக் கொண்டிருந்தால் வித்தியாசங்கள் அனுமார்வாலாக நீளாமல் என்ன செய்யும்..?

"ஆமாங்கம்மா.. அந்த மச்சினரோட பொண்ணுக்காக பார்க்கப் போன மாப்பிள்ளை மொடா குடிகாரன்தான்.. தோப்பு.. துரவுன்னு வசதி வாய்ப்பா இருக்கிறவன்தான்.. யாருங்கறிங்க.. நம்ம பக்கத்து ஊரு பரமசிவத்தோட பையன்தான்.."

"பரமசிவத்தோட பையனா..?"

இந்திராதேவிக்கு அந்த பரமசிவத்தைத் தெரியும்.. அவர் ஒருவகையில் ரகுநாதனுக்கு பங்காளி முறையாக வேண்டும்.. அவருடைய மகன் பட்டப் படிப்பை முடித்து விட்டு.. வயலைப் பார்த்துக் கொள்கிறேன் பேர்வழியென்று வேறு எதை எதையோ பார்த்துக் கொண்டிருப்பதாக

உறவினர் வட்டாரங்களில் பேசிக் கொள்வதை இந்திராதேவி கேட்டிருக்கிறாள்..

"ஆமாங்கம்மா.. அதே பையன்தான்.."

"அவனுக்குப் பொண்ணுக் கொடுக்கப் போனவங் களையா நம்ம தனஞ்ஜெயனோட காரு இடிச்சுச்சு..?"

"நீங்க ஒருத்தங்க போதுங்கம்மா.. நம்ம ஐயாவுக்கு எதிரா வேற சாட்சியே வேணாம்.. ஏம்மா..? நம்ம ஐயாவோட காரா அவனை இடிச்சுச்சு..? அவன்தான் நம்ம ஐயாவோட காரில இடிச்சான்ம்மா.."

ரங்கசாமி ஆதங்கத்துடன் விளக்கம் சொன்னார்.. பொழுது சாய வீட்டுக்குப் போக வேண்டிய மனிதர் பேசாமல் வீட்டுக்குப் போயிருக்க வேண்டாமோ..? தனஞ்ஜெயனின் காரைப் பார்த்ததும் கார் சவாரிக்கு ஆசைப்பட்டு அதில் காலை வைக்கலாமா..?

'இந்நேரத்துக்கு வீட்டில சாப்பிட்டுட்டு.. யாரோ.. எவரோன்னு தூங்கித் தொலைச்சிருக்கலாம்..'

அவர் கவலை அவருக்கு..

3

தாமரை பண்ணிய அழிச்சாட்டியங்களில் தலை வேதனை கொண்ட இந்திராதேவிக்கு.. புது மருமகளுக்கு வந்திருந்த காய்ச்சலின் மீது கோபம் வந்தது..

அவளே வன்பாடுபட்டு.. இல்லாத பஞ்சாயத்தை உருவாக்கி.. கூட்டாத பஞ்சாயத்தை கூட்ட வைத்து.. தனஞ்ஜெயனுக்குத் திருமணத்தை நடத்தி வைத்திருக் கிறாள்.. அவசரத் திருமணமாக இருந்தாலும் ஒரு குறைவுமில்லாமல் சுற்றுப்பட்டியையும் கலக்கிய ஆடம்பரத் திருமணம் அது..

அப்பேற்பட்ட திருமணம் முடிந்து வலது காலை எடுத்து வைத்து புகுந்த வீட்டிற்குள் நுழைந்த மருமகள் பூஜையறையில் விளக்கை ஏற்றி வைத்து விட்டு வெளியே வந்தவுடன் கடமை முடிந்தது என்று மயக்கம் போட்டு விழுந்து வைக்கலாமா..?

சுமித்ரா மட்டும் காய்ச்சல் கண்டு மயங்கி விழாம லிருந்திருந்தால்.. தாமரை போன்ற பெண்மணிகளின் வயிற்றெரிச்சல் நிறைந்த வாய்மொழிகளைக் கேட்டிருக்க வேண்டிய தேவை இந்திராதேவிக்கு இருந்திருக்காதே..

அது தனஞ்ஜெயன் முடிவு பண்ணிய திருமணம் என்றாலும் அதற்கு வெளியே தெரியாத தூண்டுகோலாக இருந்தது இந்திராதேவிதான்..

பக்கத்து ஊர் பரமசிவத்தின் மகனுக்கு பெண் கேட்ட இடத்திலிருந்து மாப்பிள்ளை வீடு பார்க்க வந்தவன் தனஞ்ஜெயனுடைய காரின் முன்னால் விழுந்து வைத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு.. அத்தனைக்கும் காரணம் தனஞ்ஜெயன்தான் என்று அவன்மீது அடாது பழி சுமத்தியதிலிருந்து அந்தப் பிரச்னை ஆரம்பமானது..

"அம்மா.. இவன் மாப்பிள்ளை வீடு பார்க்கப் போயிருக்கான்.. அங்கிருந்தவங்க இவனுக்கு ஆக்கிப் போட்டு உபசரணை பண்ணி மாப்பிள்ளைப் பையனக் கண்ணில காட்டாம ஊருக்கு தாட்டி விட்டுட்டாங்க.. இவனும் வீடு பெரிய வீடு.. ஆளுக பெரிய மனுசங்கன்னு ஊரப் பாத்து போய்க்கிட்டு இருந்திருக்கான்.. வழியில புல்லட்டில அந்த மாப்பிள்ளை பையன் வந்திருக்கான்.. அவன போட்டோவில பாத்தோமேன்னு இவன் நிற்க.. யாருடா நீயின்னு அவன் கேக்க.. பேச்சு வார்த்தை ஆரம்பமாகியிருக்கு.. பொண்ணு கொடுக்க வந்தவன்னு தெரிஞ்சதும் மாப்பிள்ளப் பையன் குஷாலாகிட்டான்.. அவனுக்குத் தெரிஞ்ச வகையில அவன் விருந்து உபசாரம் பண்ண வேணாமா..? அதனால.. பக்கத்திலதான் நம்ம தோப்பு.. நீங்க வந்தா தோப்பையும் பாத்த மாதிரி இருக்கும்.. தண்ணியையும் குடிச்ச மாதிரி இருக்கும்ன்னு சொல்லியிருக்கான்.. இந்த மூஞ்சி.. அந்தத் தண்ணிய

இளநித் தண்ணின்னு நினைச்சுக்கிட்டு பின்னாலேயே போயிருச்சு.."

"ஐயோ பாவம்.. மனுசருக்கு குடிப் பழக்கம் இல்ல போல.."

"நீங்க வேறம்மா.. அதெல்லாம் மூச்சு முட்டக் குடிக்கிறவன்தானாம்.. ஆனா.. மாப்பிள்ளை வீடு பாக்கப் போன இடத்தில அதையெல்லாம் செய்வானா..? இவன் பாவம்.. அடக்க ஒடுக்கமாத்தான் இருந்திருக்கான்.. அந்தக் கழுதைப்பயதான் தோப்புக்குப் போனதும்.. சரக்கையும்.. இளநியையும் கலந்து மட்டவாங்கு வாங்க வைச்சிருக்கான்.."

"இந்தக் கருமமெல்லாம் நமக்கெதுக்கு சாமி..?"

எல்லாக்கதைகளையும் உணக்கையாக 'ஊம்' கொட்டிக் கேட்டு விட்டு கடைசியில் இந்திராதேவி இப்படிச் சொன்னதில் தூக்கமின்றி நின்ற கணக்குப் பிள்ளை நொந்து நூலானார்..

'இவுககிட்ட கணக்குப்பிள்ளை உத்தியோகம் பாக்கிறதுக்குப் பதிலா கழுதை மேய்க்கப் போயிரலாம்..'

அந்தக் கழுதை மேய்த்தலில் இது போன்ற கைநிறைய சம்பளமும்.. ஜமீன் வீட்டுக் கணக்குப் பிள்ளையென்ற பட்டமும் கிடைக்காதென்பதால்.. அந்த யோசனையை பெருமூச்சுடன் துரத்தி அடித்து விட்டு விதியே என்று இந்திராதேவியின் முகம் பார்த்தார்..

"நீங்க சொன்னா சரிதான்ம்மா.. இந்த கருமமெல்லாம் நமக்கு எதுக்கு..? அப்ப நான் வீட்டுக்குப் போகட்டுங் களா..?"

தூங்காத விழிகள் இரண்டையும் இமை சிமிட்டி அடக்கியபடி அவர் கேட்க.. அதைக் கொஞ்சம் கூடக் கவனிக்காமல் இந்திராதேவி பேச்சே குறியாக இருந்தாள்..

"சொல்றதை விளங்கச் சொல்லாம வீட்டுக்குப் போகனும்னு பறந்தா எப்படிச் சாமி..?"

அப்படி அவள் கேட்டபோது மணி நள்ளிரவு இரண்டு.

அந்த நேரத்தில் ஒரு வயதான மனிதன் தூக்கம் சுழட்டும் கண்களுடன் வீட்டுக்குப் போக நினைத்தால் அது பறப்பதாக ஆகி விடுமா..?

இந்த நியாயத்தை ஜமீன் வீட்டு அம்மாவிடம் கணக்குப் பிள்ளையான அவர் எப்படி கேட்டு வைப்பார்..?

ஆதலினால் தழுவ வந்த தூக்கத்தை.. போய்விடு என்று மானசீகமாக கெஞ்சியபடி.. இந்திராதேவி கேட்ட விளக்கத்தை அவர் கொடுத்தார்..

"அம்மா.. குடிக்க வைச்சவன் அந்த மாப்பிள்ளப் பயதான்னு காட்டிக் கொடுக்க இந்த களவாணிப் பயலுக்கு மனசில்லம்மா.. சரக்கு வாங்கிக் குடிச்ச நன்றி விசுவாசம் ஒருபக்கம்.. இன்னொரு பக்கம்.. குடிகார மாப்பிள்ளைக்கு இவனோட மச்சினரு பொண்ணைக் கட்டிக் குடுக்க மாட்டாரு.."

"எப்படிக் கொடுப்பாரு..?"

"அதான்.. இந்தாளு பிளேட்டை மாத்திப் போட்டுட்டான்.. இந்தக் கல்யாணம் நடந்தா இவன் பேரில ஐஞ்சு ஏக்கர் புஞ்சையை எழுதி வைக்கிறேன்னு அந்த பரமசிவம் மகன் சரக்கு மேல அடிச்சு சத்தியம் பண்ணித் தந்திருக்கானாம்.."

"இது வேறயா..? கிழிஞ்சது போங்க.. அந்தப் பரமசிவம் மகனுக்கு பொண்ணைப் பிடிச்சிருக்கும் போல.."

"பிடிக்காம எப்படிம்மா இருக்கும்..? பொண்ணுக பக்கமே திரும்பிப் பாக்காத நம்ம ஐயாவே... அந்தப் பொண்ணோட போட்டோவப் பாத்துட்டு.. அழகா இருக்குன்னாரே.."

"தனாவா அப்படிச் சொன்னான்..? இது எப்ப..?"

இந்திராதேவிக்கு ஆச்சரியமாக இருந்தது.. அவளுடைய அருமந்தப் புதல்வன்.. பெண்களையே திரும்பிப் பார்க்காத புத்திரசிகாமணி.. திருமணமே வேண்டாமென்று சொல்லும் நவின ரிஷியசிருங்கர்.. தனஞ்ஜெயனா இப்படிச் சொன்னான்..?

"ஆமாங்கம்மா.. ஆமாம்.." என்றார் ரங்கசாமி..

"அந்தப் பொண்ண அந்த அளவுக்கு அவனுக்குப் பிடிச்சிருக்குதா சாமி..?" ஆவலுடன் கேட்டாள் இந்திராதேவி..

"அதில்லங்கம்மா.. இவரு சொன்ன அழகாயிருக்கே வேற.."

"வேறவா..?"

இந்திராதேவி சுரத்தில்லாமல் கேட்டாள்.. அவள் மகனாவது ஒரு பெண்ணின் அழகில் மயங்குகிறதாவது..

'ம்ஹீம்..'

இந்திராதேவியின் பெருமூச்சை அறிந்தும் அறியாதவரைப் போல.. எதற்காக தனஞ்ஜெயன் அந்தப் பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்து விட்டு அழகாய் இருக்கிறதென்று சொன்னான் என்ற விளக்கம் தர களத்தில் இறங்கினார் ரங்கசாமி..

"ஐயா அந்தப் போட்டோவ பார்த்தார்.. இந்தக் குடிகாரன் உளறினதக் கேட்டார்.. பாவம் சாமி இந்தப் பொண்ணு.. இத்தனை அழகாய் இருக்கு.. இதுக்கு பரமசிவம் மகனை விட்டா வேற மாப்பிள்ளை கிடைக்கலியான்னு கேட்டுக்கிட்டே சட்டைப்பையில போட்டோவை வைச்சுக்கிட்டார்.."

"ஓஹோ.."

"இத.. இந்தக் குடிகாரப்பய அரைகுறை போதையில தெள்ளத் தெளிவாக கேட்டிருக்கான்.. அதையே மாத்தி யோசிச்சு.. அவனோட மச்சினர்கிட்ட.. உன் மாமன் பொண்ணு இத்தனை அழகாயிருக்கே.. இதை பரமசிவம் மகனுக்கா கட்டிக் கொடுக்கப் போகிற..? எனக்குக் கட்டிக் கொடுத்தா உனக்கு ஐஞ்சு ஏக்கர் புஞ்சையை எழுதி வைக்கிறேன்னு ஆசை வார்த்தை காட்டி நம்ம ஐயா பேசினாருன்னு சொல்லிட்டான்.."

"அடப்பாவி.. அப்பவும் இந்த ஐஞ்சு ஏக்கர் புஞ்சையை இவன் மறக்கலையா..? இவன் என்ன பெண் வீட்டுக்காரனா போனானா..? இல்ல.. பெண்ணக் கட்டிக் கொடுத்தா எனக்கு

எத்தனை ஏக்கர் புஞ்சையை எழுதிக் தருவேன்னு பேரம் பேச போனானா..?"

"பின்னதுக்குத்தான் போயிருப்பான்.. அந்த மச்சினரோட அத்தனை வேலயிலயும் இவன் தலை கொடுத்து ஊடே கமிசன் அடிப்பானாம்.. இவன் பிழைப்பே அதுதானாம்.. இவனைப் பத்தின உண்மையை அந்த மச்சினர்கிட்டச் சொன்னா.. அந்த மனுசர் அதைக் காதிலேயே வாங்கிக்க மாட்டாராம்.. என் தங்கச்சி புருசனப் போல உண்டுமான்னு சொல்லி.. நல்லது சொல்லப் போனா மனுசனையே தூக்கிப் போட்டு நாலு மிதி மிதிச்சு அனுப்பி வைப்பாராம்.."

"தங்கச்சி மேலே அம்புட்டு பாசமா..?"

"தங்கச்சி புருசன் மேலே அம்புட்டு பாசம்.."

"தங்கச்சியைக் கட்டிக் கொடுத்ததினாலதான சாமி.. இந்த மனுசன்.. அந்த மனுசருக்கு சொந்தமானான்..?"

"தங்கச்சியைக் கட்டிக் கொடுக்கனும்னே வீட்டோடு வளர்த்த சொந்தக்காரன்ம்மா அவன்.. அந்த மனுசரைத் தூக்கி வளர்த்த தாய் மாமனோட ஒத்தை மகன்.."

"பாருடா.."

முகவாயில் கை வைத்து அதிசதியத்தாள் இந்திரா.. பேச்சு சுவராஸ்யத்தில் அவள் சொன்ன 'பாருடா..'

'யாருடா..?' என்ற சிந்தனையில் ஆழ்ந்தார் ரங்கசாமி.. அதற்கான விளக்கத்தை அவர் ஜமீன் வீட்டு அம்மாவிடம் கேட்டு விட முடியுமா..? கேட்டால்தான் அவள் பதில் சொல்லி விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பாளா..?

அதனால்.. 'சேச்சே.. பேச்சுவாக்கில அம்மா சொல்லியிருப்பாங்க.. இந்த 'பாருடா..' நானா இருக்காது..' என்று மனதைத் தேற்றிக் கொண்டு மேற்கொண்டு பேச்சைத் தொடர்ந்தார் ரங்கசாமி..

"ஆமாம்மா.. அந்த தங்கச்சி புருசனப் பத்தி.. சொந்தத் தங்கச்சியே பிராது கொடுத்தாலும் அந்த மனுசர் கிழிச்சுப் போட்டுருவாராம்.. அவர் காண்பிக்கிற அந்தக்

கண்மூடித்தனமான பாசத்தைத்தான் இவன் இவனுக்குச் சாதகமாக பயன்படுத்திக்கிட்டு ஊழல் பண்ணிக்கிட்டு அலையறானாம்.."

"ஓ..."

இந்த விவரங்களை எதற்காக இந்த அளவுக்கு ஜமீன் வீட்டம்மா உள்வாங்கிக் கொள்கிறாள் என்று ரங்கசாமிக்குப் புரியவில்லை.. இந்திராதேவிக்குத் தெரியாமல் அவர் கைக்கடிகாரத்தை ஏக்கத்துடன் பார்த்தார்.. அது மூன்று என்றது..

பிரச்னையை எதிர் கொண்டிருக்கும் தனஞ்ஜெயனே தூங்கப் போய்விட்டான்.. அவனுடன் கூடப் போன கொடுமைக்காக.. ரங்கசாமி தூக்கத்தை தொலைத்து விட்டு.. இந்திராதேவியின் விசாரணைக் கமிசனில் மாட்டிக் கொண்டு திக்கு முக்காடினார்..

"கடைசியில என்னதான் ஆச்சு சாமி..?"

"இவன் குடிச்சுட்டு காருக்கு முன்னாலே மயக்கம் போட்டு விழுந்து வைச்சிட்டான்ம்மா.. விட்டுட்டுப் போகலாம்ன்னு நான் சொன்னதைக் காதில வாங்கிக்காம நம்ம ஐயா அந்தக் கழுதையைத் தூக்கிக் காரில போட்டுக் கிட்டுப் போயி ஆஸ்பத்திரியில சேர்த்தாரும்மா.. கூடவே அவன் கையிலிருந்த கிழிஞ்ச பையையும் பத்திரமா கொண்டு போனாரு.. இந்த நாயி மயங்கிக் கிடக்குதேன்னு இவன் வீட்டுக்குத் தகவல் சொல்ல.. அந்த கிழிஞ்ச பையில இருந்ததை வெளியே எடுத்துப் பார்த்தாரு.. அதில இவனோட மச்சினன் மகளோட போட்டோவும்.. ஜாதகமும் இருந்துச்சும்மா.. ஜாதக நோட்டில இருந்த இவன் மச்சினரோட போன் நம்பருக்கு நம்ம ஐயா போன் பண்ணிட்டு.. போட்டாவைப் பார்த்தாரும்மா.. பொண்ணு அழகாயிருக்கே கணக்கு.. இந்தப் பொண்ணுக்கு பரமசிவம் மகனை விட்டா வேற மாப்பிள்ளை கிடைக்கலியான்னு கேட்டுக்கிட்டே சட்டைப் பைக்குள்ள போட்டோவை வைச்சுக்கிட்டாரு.. இவரு பேசியதை அந்த நாதாரிப்பய.. அரை குறை போதையில கேட்டு வைச்சிட்டான்.."

கோர்வையாகச் சொன்னாலாவது விடுதலை கிடைக்காதா என்ற நப்பாசையுடன் ரங்கசாமி நடந்தவற்றை ஒன்று சேர்த்து மடமடவென்று ஒப்பிக்க ஆரம்பித்தார்.. இருந்தும் அவருக்கு விடுதலை கிடைக்கவில்லை..

"இருங்க ரங்கசாமி.." என்று ஊடே புகுந்து அவர் பேச்சை நிறுத்தினாள் இந்திராதேவி..

'இருக்காம ஓடவா போறேன்..?' கேட்க நினைத்ததை கேட்காமல்.

"என்னங்கம்மா..?" என்று பவ்யமாக கேட்டு வைத்தார் ரங்கசாமி..

"இந்தப்பய.. அவனோட மச்சினர் மகளுக்க.. பரமசிவத்தோட மகனை மாப்பிள்ளை பாக்கப் போயிருக்கான்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..? இது முதலாவது சந்தேகம்.. என்னோட ரெண்டாவது சந்தேகம் என்னன்னா.. இவனோட கிழிஞ்சு போன பையில இருந்த போட்டோவும்.. ஜாதகமும்.. இவன் மச்சினர் மகளோடதுன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..? இதுக்கெல்லாம் அடுத்ததா வர்ற என்னோட மூணாவது சந்தேகம் என்னன்னா.. அந்த பரமசிவத்தோட மகன்தான் இவனைக் குடிக்க வைச்சு அனுப்பினான்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..? எப்படி பக்கத்தில

இருந்து பாத்ததைப் போல இத்தனையையும் நீங்க பிட்டுப்பிட்டு வைக்கறிங்க..?"

'இந்தம்மா போலிஸ் கமிசனரா ஆகியிருக்க வேண்டியவங்க..'

ரங்கசாமி.. இத்தனை கேள்விகளையும் அவரை எதிர் நோக்க வைத்துவிட்டு நிம்மதியாக உறங்கப் போய் விட்ட தனஞ்ஜெயனின் மீது பொறாமை கொண்டார்..

அந்த உறக்கம் அவருக்கு மட்டும் ஏன் எட்டாக்கனியாக போய் விட்டது..?

"நீங்க கேட்கிறதும் சரிதான்ம்மா.. இவனைத் தூக்கிக் காரில போட்டப்ப இத்தனை விவரமும் எங்களுக்குத் தெரியாது.. ஆஸ்பத்திரியில சேர்க்கப் போன இடத்தில பரமசிவத்தோட ஊர்க்காரன் ஒருத்தனப் பார்த்தோம்.. அவன் பொண்டாட்டிக்கு பிரசவ வலின்னு அப்பத்தான் கொண்டு வந்து சேர்த்ததாச் சொன்னான்.."

அடுத்து மருத்துவ மனையில் அந்த நேரத்தில்.. பரமசிவத்தின் ஊர்க்காரனுக்கு என்ன வேலை என்ற கேள்வியைத்தான் இந்திராதேவி கேட்டு வைப்பாள் என்பதினால் முன் ஜாக்கிரதை மூர்த்தியாக அந்த விவரத்தையும் சொல்லி விட்டார் ரங்கசாமி..

"பிரசவ வேதனையில துடிச்ச பொண்டாட்டிய விட்டுட்டு வந்தா உங்ககிட்ட அவன் கதை பேசிக்கிட்டு இருந்தான்..?"

என்னதான் அவர் முன்ஜாக்கிரதை மூர்த்தியாக இருந்தாலும்.. அவள் ஜமீன்தாரிணி இந்திராதேவி என்பதை அழகுற மெய்ப்பித்தாள் இந்திராதேவி..

தப்பிக்க முடியாத கேள்விகளைக் கேட்கும் எஜமானியம்மாவிடம்.. மாட்டிக் கொண்டிருந்த ரங்கசாமி.. பரமசிவத்தின் ஊர்க்காரனின் மனைவியின் பிரசவ வலியைப் பற்றிய விளக்கத்தைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்..

"கொண்டு வந்து சேர்க்கிறவரைக்கும் அந்தப் பொண்ணுக்கு இடுப்பு வலி இருந்துச்சாம்மா.. ஆஸ்பத்திரிக் குள்ள கால் வைச்சதும் வலி போயிருச்சு.."

"பொய் வலியா இருந்திருக்கும்.."

ரங்கசாமி அந்த பொய் வலியையும்.. மெய் வலியையும் பற்றி என்னத்தைக் கண்டார்..?

"தெரியலம்மா.. இவன் பயந்துக்கிட்டு பொண்டாட்டிய ஆஸ்பத்திரியில சேத்துட்டான்.. மாத்திரை.. மருந்தை வாங்க வந்தவன்... இவனைத் தூக்கிக்கிட்டு வந்த எங்களைப் பார்த்ததும் மாத்திரை மருந்தை மறந்துட்டு.. எங்க கூடவே டாக்டர்கிட்ட வந்துட்டான்.. டாக்டர் இவனை

செக் பண்ணிட்டு.. குடி மயக்கம்ன்னு சொன்னதும்.. அவன்தான் கதை கதையாய் இத்தனையையும் சொன்னான்.. அவன் பரமசிவத்தோட தோப்பில வேலை செய்துக்கிட்டு இருந்தானாம்.. அப்பத்தான் இவனக் கூப்பிட்டுக்கிட்டு பரமசிவத்தோட மகன் தோப்புக்குள்ள வந்தானாம்.."

"ஓ..."

மீண்டும் யோசனையில் ஆழ்ந்தாள் இந்திராதேவி.. தூக்கத்தில் தவித்தார் ரங்கசாமி..

4

"இவன் கதையைக் கேட்ட பின்னாலேயும் அங்கே நீங்க ரெண்டு பேரும் இருந்திருக்கக் கூடாது சாமி.. கிடக்கிறான் பயல்ன்னு கிளம்பி வந்திருக்க வேணாமா..?"

"அம்மா.. நானா வேணாம்ன்னு சொன்னேன்..? கெஞ்சிக் கூத்தாடினேன்ம்மா.. ஐயா.. குடிகாரப்பய மயக்கம் தெளிஞ்சதும் வீட்டைப் பாத்துப் போயிருவான்னு.. ஐயா கேட்கலையே.. சொந்தக்காரங்க வந்ததும் போகலாம்ன்னு அடிச்சுச் சொல்லிட்டாரே.."

"யாரை அடிச்சான் சாமி..? உங்களையா..?"

'அது ஒன்னுதாம்மா குறை..'

ரங்கசாமிக்கு கோபம் கோபமாக வந்தது.. தூங்க முடியாத கண் எரிச்சல்.. அடை மழை போல ஓயாத இந்திராதேவியின் விசாரனை என்று அவர் கந்தலாகிக் கொண்டிருந்தார்..

"ஒரு பேச்சுக்குச் சொன்னேன்ம்மா.. ஹி.. ஹி.."

"இருக்கட்டும்.. இருக்கட்டும்.. அந்த மச்சினர் வந்ததும் என்னாச்சு..?"

'அதத்தானே இத்தனை நேரமும் கூவிக்கிட்டு இருந்தேன்..' பொறுமையை இழுத்துப் பிடிக்க பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்டார் ரங்கசாமி..

"அந்த மச்சினர் வந்தாரும்மா.. தங்கச்சி புருசனைப் பாத்ததும் பதறிப் போயிட்டாரு.. டாக்டர்கள் குடிமயக்கம்ன்னு சொன்னத அந்த மச்சினரு காதிலேயே போட்டுக்கலை.. எந்தங்கச்சி புருசனுக்கு குடிப்பழக்கமே கிடையாது.. அதை மூக்கில வைச்சு முகர்ந்து கூடப் பார்க்க மாட்டான்னு சத்தம் போட்டாரு.. உன் தங்கச்சி புருசனையே கேளுய்யான்னு இவனக் கை காட்டினோம்.. மயக்கம் தெளிஞ்சு உணக்கையா சூடான பாலை வாங்கிக் குடிச்சுக்கிட்டு இருந்த இந்த நாதாரி.. அதைவாங்கிக் கொடுத்தத நினைச்சுப் பார்க்காம கொஞ்சம் கூட நன்றி விசுவாசம் இல்லாம.. பழியைத் தூக்கி நம்ம ஐயா மேலே போட்டுட்டான்ம்மா.."

"என்னத்தைச் சொன்னான்..?"

"மாமா.. நான் மாப்பிள்ளை வீடு பாக்கப் போனேன்.. அந்த பரமசிவம் ஐயாதங்கமான மனுசரு.. ஊருக்கு பெரிய மனுசரு.. வீடு.. வாசல் தோப்பு.. துரவுன்னு எல்லாமும் இருக்கு.. மாப்பிள்ள சொக்கத்தங்கம்.."

"அடப்பாவி..! அவன் தகரத்திலகூட சேர்த்தியில்லாத வனாச்சே.."

"அது நமக்குத் தெரியும்.. அந்த மச்சினருக்குத் தெரியுமா..?"

"அதைச் சொல்லுங்க.."

"மாப்பிள்ளைக்கு வெத்தலை பாக்கு போடற பழக்கம்கூட இல்லை.. சிகரெட்டுன்னா எப்படி யிருக்கும்ன்னு கேப்பாரு.. தண்ணின்னா சுடுதண்ணியா.. பச்சைத் தண்ணியான்னு கேட்டு வைக்கிற அப்பாவி மனுசன்.. பொண்ணுக அந்தப் பக்கம் வந்தா.. இந்தப் பக்கம் குதிச்சு ஓடிடற தங்கமான பிள்ளை.. பெண்ணைக் கொடுத்தா இப்படியாப்பட்ட தங்கத்துக்கு கொடுக்கனும்ன்னு வாய் கூசாம பொய் சொன்னான்.. நம்ம ஐயா சும்மா இருக்க மாட்டாப்புல

அவனை முறைச்சு வைச்சிட்டார்.. அவன் அப்பாவி போல முகத்தை வைச்சுக்கிட்டு.. மாப்பிள்ளை வீட்டைப் பார்த்திட்டு வர வழியில இந்தாளு காரில வந்து என் வழியை மறிச்சு.. உன் மச்சினர் மகளுக்கு பரமசிவம் ஐயாவோட மகன் தோதுப்பட மாட்டாருன்னு சொல்லிரு.. அதுக்குப் பதிலா என் பேரைச் சொல்லி.. எனக்குக் கட்டிக் கொடுக்கச் சொல்லுன்னு சொன்னாரு மாமா.. நான் மாட்டேன்னு சொல்லிக் காரை விட்டு இறங்கப் பார்த்தேன். என்னைக் கட்டாயப்படுத்தி குடிக்க வைச்சாரு.. அப்பவும் நான் காரை விட்டு இறங்கி ரோட்டில ஓடப் பாத்தேன்.. இவரு காரை விட்டு என்மேல மோதிக் கொல்லப் பாத்தாரு மாமான்னு அள்ளித் தெளிச்சுட்டான்ம்மா.."

"அட சண்டாளா..!"

இந்திராதேவிக்கு ஆத்திரம் பொங்கியது.. யாரைப் பார்த்து யார் பழி போடுவது..? அதற்கும் ஒரு தகுதி.. தராதரம் வேண்டாமா..?

"நம்ம ஐயா கையை ஓங்கிட்டாரு.. அந்த மச்சினரு ஊடே வந்திட்டாரு.. இல்லைன்னா இந்தக் குடிகார நாய.. ஐயா உண்டு இல்லைன்னு பண்ணிட்டு வந்திருப்பாரு.."

"மச்சினரு என்னதான் சொன்னாரு..?"

"அவரோட தங்கச்சி புருசன் சொன்னதுதான் உண்மைன்னு சொல்லிட்டாரு."

"தனஞ்ஜெயன் என்ன சொன்னான்..?"

"போய்யா.. நீ ஒரு ஆளு.. உன் தங்கச்சி புருசன் ஒரு ஆளு.. உங்க கூடல்லாம் பேசறதே வேஸ்டுன்னு சொல்லிட்டு வந்திட்டாரும்மா.."

இனிமேலாவது எஜமானியம்மா வேலையிலிருந்து விடுதலை கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைப்பாள் என்று மனதார நம்பினார் ரங்கசாமி.. அந்த நம்பிக்கையில் மண்ணைக் கொட்டினாள் இந்திராதேவி..

"நீங்க என்ன செய்கறிங்கன்னா.. முதலிலே காபியைக் குடிக்கறிங்க.."

அவள் யோசனையுடன் சொன்னபோது.. ஜமீன் வீட்டுக் காபியின் ருசியில் நாக்கைச் சப்புக் கொட்டத்தான் செய்தார் ரங்கசாமி.. அவ்வளவு நேரமும்.. தொண்டைத் தண்ணீர் வற்ற அவர் கதை சொன்னதற்கு ஒரு காபியாவது கிடைக்கிறதே..

இருந்தும் ஒரு பேச்சுக்காக அதை மறுக்க வேண்டும் என்பதற்காக..

"இந்த நேரத்தில எதுக்கும்மா காபியெல்லாம்..? பாவம் சுசிலா... அதைத் தூக்கத்தில இருந்து எழுப்ப வேணாம்..." என்று சமையல்வேலை செய்யும் சுசிலாவுக்காக பரிந்துரை செய்தார்..

"இந்த நேரத்தில காபி குடிக்காம வேற எந்த நேரத்தில காபி குடிப்பாங்க சாமி..? சுசிலாவை தூக்கத்தில் இருந்து எழுப்பனுமா..? அவ எப்பவோ எழுந்திருச்சு.. வாசலைத் தெளிச்சுக் கோலம் போட்டுட்டு வந்துட்டாளே.."

இந்திராதேவி ஆச்சரியத்தோடு சொன்னதும் அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது.. அர்த்த ஜாம வேளையில் சுசிலா வாசலில் தண்ணீர் தெளித்துக் கோலம் போடுகிறாளா..?

'என்னடா இது..?' என்ற நினைத்தபடி வாசல் பக்கமாக பார்த்தவர் அரண்டு போனார்..

அங்கே அதிகாலை வெளிச்சத்தில் ஜமீன் வீட்டின் தோட்டத்துப் பூக்கள் அவரைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்தன..

'விடிஞ்சுருச்சா..?'

விடிய விடியவா அவர் இந்திராதேவியின் புலன் விசாரணைக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்..?

நெஞ்சை அடைக்க திரும்பிப் பார்த்தவரை.. மாடியிலிருந்து 'ஹாவ்..' என்ற கொட்டாவியுடன் வந்த தனஞ்ஜெயன் பார்த்து விட்டு புருவங்களை உயர்த்தினான்..

"என்ன சாமி.. இவ்வளவு சீக்கிரமா வேலைக்கு வந்துட்டிங்க..?"

ரங்கசாமிக்கு அழுகையே வந்து விட்டது.. அவர் அதிகாலையில் வேலைக்கு கிளம்பி வந்திருக்கிறாரா..?

'நான் வீட்டுக்கே போகலைய்யா..'

மனதுக்குள் பொருமிக் கொண்டிருந்தவரிடம் காபித் தம்ளரை நீட்டினாள் சுசிலா.. மகனுக்கு காபி கொடுத்த இந்திராதேவி..

"நல்லாத் தூங்கினயாப்பா.." என்று பரிவுடன் விசாரித்தாள்..

ரங்கசாமிக்கு வயிறு எரிந்தது.. தனஞ்ஜெயனுக்கு மட்டும் தான் தூக்கம் வருமா..? அவனுடைய கணக்குப் பிள்ளைக்கு தூக்கம் வராதா..?

அனைத்து மனிதப் பிறவிகளுக்கும் பொதுவான தூக்கத்தை அவருக்கு மறுத்துவிட்ட எஜமானியம்மாவை அவர் விரோதத்துடன்தான் பார்க்க முயன்றார்.. ஆனால் அவளது கம்பீரமான பார்வையில்.. அவரது பார்வை கூழைக்கும்பிடு போடும் பார்வையாக தழைந்து போனது..

தனஞ்ஜெயன் காபியை குடித்துவிட்டு மாடிக்குப் போய் விட்டான்.. இனியாவது வீட்டுப் பக்கம் போகலாம் என்று எழுந்தார் ரங்கசாமி.. அவரது உடலும்..

மனமும்.. அசதியில் ஓய்வுக்காக கெஞ்சியதில்.. அன்று மட்டும் விடுமுறை வாங்கிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன்..

"அம்மா.." என்று ஆரம்பித்தார்..

"நீங்க வாசல்பக்கம் பாத்ரூமில குளிச்சுத் தயாராகிருங்க ரங்கசாமி.. உங்களுக்கு மாற்றுத்துணியை வாங்கிக்கிட்டு வர பூபதி போயிருக்கான்.." என்று குண்டைத் தூக்கிப் போட்டாள் இந்திரா..

"என்னங்கம்மா சொல்றீங்க..?"

"ஆமாம் சாமி.. நாம உடனடியா மணியக்காரர் வீட்டுக்குப் போயாகனும்.. சீக்கிரமா கிளம்புங்க.."

அவருடைய பதிலை எதிர்பாராமல் இந்திராதேவி.. வீட்டுக்குள் போய்விட்டாள்.. ரங்கசாமி இடிந்து போனார்.

ஒரு மனிதன் வேலை செய்ய வந்து விட்டால்.. பசி.. தாகம்.. தூக்கம் என்ற அனைத்தையும் மறந்தாக வேண்டுமா..?

அவர் மனதுக்குள் புலம்பியபடி வாசல்பக்கம் போன போது அங்கே கார் டிரைவர் பூபதி அவருடைய மாற்றுடையுடன் வந்து நின்றான்..

'இது ஒன்னுதான் குறைச்சல்..'

இந்திராதேவியை முறைக்க முடியாதவர்.. அவனை முறைத்தபடி துணிகளை வாங்கிக் கொண்டு பாத்ரூம் பக்கம் நகர்ந்தார்..

குளித்து உடைமாற்றி வந்தவருக்கு சூடாக நெய் தோசைகளும்.. சட்னி.. சாம்பாரும் கிடைத்தன.. தோசைகளின் ருசியில் அவரின் கோபம் கொஞ்சம் குறைந்தது..

இந்திராதேவி அவசரமாக அங்கு வந்தாள்.. அகலக் கரையிட்ட பட்டுப் புடவையும்.. டாலடிக்கும் வைர நகைகளுமாக.. ஜமீன்தாரிணிக்கே உரிய தோரணையுடன் வந்தவள்.. ரங்கசாமியிடம்..

"சாப்பிட்டாச்சா சாமி..?" என்று கேட்டாள்..

ரங்கசாமி சாப்பிட்டு முடித்திருக்கவில்லை.. இரவு முழுவதும் தனஞ்ஜெயனுடன் அல்லாடி.. அதற்குப் பின்னால் இந்திராதேவியின் புலன்விசாரணையில் தூக்கமின்றி சாமியாடி.. துயரப்பட்டிருந்தவர் அகோரப் பசியில் இருந்தார்.. அவர் தட்டில் வரிசைகட்டி இருபது நெய் தோசைகள் வந்து விழுந்த பின்பும் அவரின் பசி அடங்கவில்லை.. தோசை வார்த்து எடுத்து வந்து போட்டுக் கொண்டிருந்த சுசிலாவுக்கு கை தளர்ந்து.. நடையும் தளர்ந்து கொண்டிருந்த வேளையில் இந்திhதேவி அந்தக்

கேள்வியைக் கேட்டதும் அவள் ரங்கசாமியை முந்திக் கொண்டு..

"சாப்பிட்டாரும்மா.." என்று குரல் கொடுத்தாள்..

'வயிறு என்னுடையதா.. இல்லை.. இவளுடையதா..' ரங்கசாமி அவளை உக்கிரபார்வை பார்த்தார்..

சுசிலா அவர் பார்வையை சந்திக்கவே இல்லையே.. அவளும்தான் என்ன செய்வாள்..? ரங்கசாமி இப்போது போதும் என்று சொல்லிவிடுவார் என்ற எதிர்பார்ப்புடன் ஒவ்வொரு தோசையாக கொண்டு வந்து போட்டு விட்டு அவர் முகத்தை எதிர்பார்ப்புடன் பார்ப்பாள்.. அவர் வாயிலிருந்து.. சட்னி வேண்டும்.. சாம்பார் வேண்டும்

என்ற வார்த்தைகள்தான் வந்ததேயொழிய 'போதும்..' என்ற வார்த்தை மட்டும் வரவே இல்லை..

'இந்த மனுசனுக்கு இருக்கிறது வயிறா.. இல்ல.. ஊரனியா..?'

அவள் அசந்து விட்டாள்.. இருநூறு தோசைகள் சாப்பிட்டாலும் ரங்கசாமியின் வாயிலிருந்து தானாக போதும் என்ற வார்த்தை வரப்போவதில்லை என்று தெரிந்த பின்பு கிடைத்த வாய்ப்பை இறுக்கிப் பற்றிக் கொள்ளாவிட்டால் அவள் தப்பிக்க முடியாதே..

ரங்கசாமி சாப்பிட்டு விட்டார் என்று சமையல் செய்யும் சுசிலாவே சான்றிதழ் கொடுத்து விட்ட பின்பு.. அவர் தட்டை விட மாட்டேன் என்று கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியுமா..?

வேறு வழியின்றி அவர் சுசிலாவை விரோதி போல பார்த்தபடி கை கழுவ எழுந்தார்..

"சுசிலா.." ரகசிய குரலில் அழைத்த இந்திரா தேவியின் பார்வை மாடிப்படிகளில் படிந்து மீண்டது..

"என்னங்கம்மா..?" இந்திராவை விட ரகசியமாக பேசிய சுசிலாவின் குரலில் அவளை எஜமானியம்மா ரகசியம் பேச அழைத்து விட்டாள் என்ற மகிழ்வு இருந்தது..

"தனா வந்தா டிபன் எடுத்து வைய்யி.. நான் எங்கேன்னு கேட்டா.. மணியக்காரரோட மருமகளுக்கு என்னைக்கு வளைகாப்பு நடத்தப் போறாங்கன்னு கேட்டுட்டு வரப் போயிருக்கேன்னு சொல்லு.." என்று சொல்லியபடி ரங்கசாமியைப் பார்த்த இந்திராதேவி அடுத்துச் சொன்ன வார்த்தைகளில் ரங்கசாமியின் தலையில் இடி இறங்கியதைப்போல இருந்தது..

"ரங்கசாமி எங்கேன்னு கேட்டா.. அவருக்கு நானு லீவு கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைச்சிட்டேன்னு சொல்லிரு.." என்று இரக்கமில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தாள் இந்திராதேவி..

'போச்சா.. ஒரு நாள் லீவு போச்சா.. நாளைக்காவது லீவு கேட்கலாம்ன்னு நினைச்சேனே.. இனி லீவு கேட்டா ஐயா இன்னைக்கு லீவு எடுத்ததா கணக்குப் பண்ணிக்கிட்டு.. லீவு கொடுக்க மாட்டாரே.. கணக்கைப் பாருன்னு சொல்லிருவாரே..'

மனதுக்குள் புலம்பிய ரங்கசாமி... எதுவும் நடக்காதைப் போல வெகு இயல்பாக அவர் முகம் பார்த்து..

"போகலாமா சாமி..?" என்று கேட்ட இந்திரா தேவியிடம் எங்கே போகிறோம் எதற்காக போகிறோம் என்ற எந்தக் கேள்வியையும் கேட்காமல்.. பலி ஆட்டைப் போல தலையை ஆட்டிக் கொண்டு அவளைப் பின்தொடர்ந்தார்..

காரில் ஏறிய இந்திராதேவி.. வாகாக சீட்டில் சாய்ந்து அமர்ந்தபடி ரங்கசாமியையும் ஏறச் சொன்னாள்..

"காரை மணியக்காரர் வீட்டுக்கு விடு பூபதி.." என்றவள்..

"ரங்கசாமி நம்ம கூட வந்ததா தனாவிடம் சொல்ல வேணாம் பூபதி.. அவர் அப்பவே லீவு வாங்கிக்கிட்டு அவர் வீட்டைப் பார்த்துப் போயிட்டாருன்னு சொல்லிரு.." என்றும் சொன்னாள்..

ரங்கசாமிக்கு அவர் வீட்டைப் பார்த்துப் போக வேண்டுமென்ற ஆசை உண்டானது.. அதை எவ்விதம் எஜமானியிடம் வெளிப்படுத்துவது என்று புரியாமல்

வாயிருந்தும் ஊமையாக.. செய்து வைத்த சிலை போல காருக்குள் அமர்ந்திருந்தார்..

கார் கிளம்பியது.. அது போன வேகத்தில் ரங்கசாமிக்கு சுகமான தூக்கம் வந்தது.. சொக்கிய இமைகளை மூடியவர்.. கண்கள் செறுக.. அப்படியே பூபதியின் தோளில் சாய்ந்து தூங்கி விட்டார்..

காரை ஓட்டிக் கொண்டிருந்த பூபதிக்கு கடுப்பாக இருந்தது.. ஒருமுறை.. இந்திராதேவி.. ஒரு பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று ஐநூறு கிலோ மீட்டருக்கு அப்பாலிருந்த ஊருக்குப் போயிருந்தாள்.. அவள் கூடத் துணைக்கு சுசிலாவும் சென்றிருந்தாள்.. திரும்பி வந்த போது இரவாகியிருந்தது.. விடிய.. விடிய காரோட்டிய பூபதிக்கு அலுப்பே தெரியவில்லை.. அவனருகில்தான் சுசிலா உட்கார்ந்திருந்தாளே.. தூங்கிக் கொண்டு வருவதற்கு தோதாக இந்திராதேவி பின்சீட்டில் தலையணையைப் போட்டுப் படுத்து விட்டாள்..

அந்த இரவு நேரப் பயணத்தில் சுசிலாவும் அயர்ந்து உறங்குவாள்.. அந்த உறக்கத்தில் அவளையுமறியாமல் பூபதியின் தோள் சாய்வாள் என்று அவன் நொட்டை விட்டுக் கொண்டு எதிர்பார்ப்புடன் காரை ஓட்டினான்.. சுசிலாவோ.. கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு வந்தாளே தவிர.. இமைமூடி பூபதியின் தோள் மீது தலை சாய்க்கவேயில்லை..

'என் நேரம்.. மயிலு தூங்கி வழிஞ்சு என் தோளில தலை சாய்க்க மாட்டேங்குது.. இந்தக் கிழவன்தான் தலை சாய்க்கிறான்..' பூபதி பல்லைக் கடித்தான்..

மணியக்காரரின் வீட்டிற்கு முன்னால் கார் நின்றது.. அந்த காலை நேரத்தில் வீடு தேடி வந்திருக்கும் ஜமீன்தாரிணியை ஓடி வந்து வரவேற்ற மணியக்காரர் தியாகராஜனின் முகத்தில் எதற்காக இந்த திடிர் விஜயம் என்ற கேள்வி தென்பட்டது..

"மரகதம்.." அவர் மனைவியை அழைத்தார்..

"அண்ணி.. நீங்களா..! வாங்க.. வாங்க.." அவர் மனைவி ஓடோடி வந்தாள்..

ரங்கசாமி பின்தொடர தியாகராஜனின் வீட்டுக்குள் பிரவேசித்தாள் இந்திராதேவி..

5

காபி.. பலகார உபசரிப்புகள் முடிந்த பின்பு இந்திராதேவி விவரத்திற்கு வந்தாள்..

"அண்ணா.. நேத்து பொழுது சாய ஒரு பிரச்னை நடந்திருக்குது.." என்று ஆரம்பித்தவள்.. ரங்கசாமி அவளிடம் ஒப்பித்த அனைத்து விவரங்களையும் விலாவாரியாக தியாக ராஜனிடமும்.. மரகதத்திடமும் எடுத்துரைத்தாள்..

தியாகராஜன் ஒரு வார்த்தையைக் கூடத் தவற விட்டு விடாமல் வெகு கவனமாக கேட்டு விட்டு..

"அந்தாளு எந்த ஊர்க்காரன்..?" என்று ரங்கசாமியிடம் கேட்டார்..

"லட்சுமி புரம்ங்கய்யா.." என்றார் ரங்கசாமி..

"லட்சுமி புரம்ன்னா.. அங்கே நம்ம சொந்தக்காரன் ஒருத்தன் இருக்கான்.. அவன்கிட்ட விசாரிக்கலாம்.." என்றபடி மனைவியை அவர் பார்த்தார்.. அவள் உடனே இந்திராதேவியை பார்த்து..

"ஆமாங்கண்ணி.. என் சின்னம்மா மகளைக் கட்டிக் கொடுத்த மாப்பிள்ளைக்கு உடன் விட்ட பங்காளியோட ரெண்டு விட்ட அண்ணனோட பேத்தியைத்தான் லட்சுமி புரத்தில கட்டிக் கொடுத்திருக்காங்க.. நெருங்கின சொந்தம்தான்.." என்று சொன்னாள்..

இந்திராதேவி ரங்கசாமியை ஒரு மௌனபார்வை பார்த்தாள்.. தூக்கம் கெட்டுப் போயிருந்த ரங்கசாமிக்கு எங்கே எஜமானியம்மா அந்த உறவுமுறை குறித்த

வரைபடத்தைக் கேட்டு விடுவாளோ என்ற கலவரம் எழுந்தது.. அப்படியெல்லாம் அவள் கேட்டு விடக் கூடாது என்று ஊரில் உள்ள கடவுள்களையெல்லாம் அழைத்து மனதிற்குள் வேண்டுதல்கள் வைத்தார்..

கடவுள்கள் ரங்கசாமியைக் காப்பாற்றினார்கள்.. இந்திராதேவி.. மரகதம் சொன்ன உறவுமுறையின் விளக்க வரைபடத்தை தயாரித்துச் சொல்லும்படி ரங்கசாமியிடம் சொல்லவில்லை..

"அதுக்கென்னண்ணா.. உங்க சொந்தக்காரங்க கிட்டயே விசாரிச்சுச் சொல்லுங்க.." என்று தியாகராஜனிடம் தான் சொன்னாள்..

தியாகராஜன் செல்போனை எடுத்துப் பேசினார்.. மறுமுனையில் பேசியவன் சொன்னதை புருவங்கள் சுருங்க.. உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருந்தார்.. ரங்கசாமிக்கு தூக்கம் கண்களைச் சுழற்றியது.. அவர் மரியாதையுடன் தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருக்கும் பாவனையில் அரைக் கண்களை மூடிக் கொண்டு கோழித்தூக்கம் போடலானார்.. தியாகராஜன் போன் பேசி முடித்து விட்டு இந்திராதேவியை பார்த்தார்..

"அந்தாளோட பேரு மணிவாசகமாம்மா.. துர்காங்கிறது அவரோட பொண்டாட்டியாம்.. பொண்ணொன்னு ஆணொன்னுன்னு ரெண்டு புள்ளைகளாம்.. மூத்தது பொண்ணாம்.. சுமித்ரான்னு பேராம்.. சென்னையிலே ஆஸ்டலில தங்கி.. எம்.எஸ்ஸி பட்டப் படிப்ப படிச்சுக்கிட்டு இருந்துச்சாம்.. இப்பத்தான் போனமாசம் படிப்பை முடிச்சுட்டு.. லட்சுமி புரத்துக்கு வந்திருக்குதாம்.. அதைப்பத்தி கேள்விப்பட்டுத்தான் நம்ம பக்கத்து ஊரு பரமசிவம் பொண்ணுக் கேட்டுப் போயிருக்கான்.."

"அப்ப.. அவங்க ஒன்னும் பொண்ணு கொடுக்கறேன்னு மாப்பிள்ளை கேட்கலைங்கறிங்களா..?"

"ஆமாம்மா.. தானா வந்து பெண் கேட்கவும்.. மாப்பிள்ளை வீட்டைப் பத்தி விசாரிச்சுட்டு அப்புறமா பொண்ணுப் பாக்க வரச் சொல்லலாம்ன்னு மணிவாசகம் நினைச்சாராம்..

மனுசன்.. நல்ல குணமானவராம்.. ஊரில ரைஸ்மில்... வயல் வரப்புன்னு வசதியான குடும்பமாம்.. ரெண்டாவதா பொறந்த மகன்.. இப்பத்தான் பனிரெண்டாம் வகுப்பில படிக்கிறானாம்.. மூத்த பொண்ணுக்கும் இவனுக்கும் இடையில ஆறு வயசு வித்தியாசமாம்.."

"பையன் கொஞ்சம் சின்னவன்தான்னு சொல்லுங்க.. அக்கா கல்யாணத்தில தலை கொடுக்கிற வயசு இன்னும் வரலைன்னு சொல்லுங்க.."

"ஆமாம்மா.. அதனாலதான மணிவாசகம் வீட்டோடு இருந்த அவரோட தங்கச்சி புருசன் திருக்குமரன்கிட்ட பரமசிவம் மகனைப் பத்தியும்.. அவன் வீட்டப் பத்தியும் விசாரிச்சுட்டு வான்னு அனுப்பியிருக்காரு..?"

"தங்கச்சி குடும்பத்த கூடவே வைச்சிருக்காரா..?"

"அப்படித்தான் என் சொந்தக்காரன் சொல்றான்.. மணிவாசகத்தக்கு ஒரே தங்கச்சியாம்.. அதோட பேரு மல்லிகாவாம்.. இந்தக் கருமாயம் பிடிச்ச நாதாரிக் கழுதை மணிவாசகத்தோட மாமன் மகனாப் பிறந்திட்டானாம்.. மணிவாசகத்துக்கு சின்ன வயசிலேயே தகப்பன் தவறிட்டாரு.. அக்கா மகனைப் பார்த்துக்கறேன் பேர்வழின்னு அந்தக் காலத்திலேயே மணிவாசகத்தோட வீட்டோட செட்டிலானவன்தான் இந்தத் திருக்குமரனோட அப்பன்.. அது தெரியாம.. மாமன் தூக்கி வளர்த்தாருன்னு ஏமாந்த சோணகிரி போல புலம்பிக்கிட்டு அந்த ஆளு பெத்த ஒத்தை மகனுக்கு தங்கச்சியைக் கட்டிக் கொடுத்து வீட்டோட மாப்பிள்ளையாக்கிக்கிட்டாராம் மணிவாசகம்.. தங்கச்சிக்கு ரெண்டும் பொண்ணுகளாம்.. சின்னப் புள்ளைகளாம்.. அதில ஒன்னை மணிவாசகத்தோட மகன் சுந்தருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து.. வீட்டோட மாமனாரா புரமோசன் ஆகிடனும்னு திருக்குமரன் பிளான் போட்டு வைச்சிருக்கானாம்.."

"போடுவான்.. போடுவான்.. அவன்தான் எந்த பிளானையும் இமைக்கிற பொழுதுக்குள் போட்டுடறதிலே கெட்டிக்காரனா இருக்கானே அண்ணா.. அவனுக்கு பிளான் போட

சொல்லியா கொடுக்கனும்..? எப்படித்தான் இப்படி கூசாம பொய் சொல்றானோ தெரியலை.. உண்ட வீட்டுக்கே இரண்டகம் நினைக்கிறானே.. இவனெல்லாம் ஒரு மனுசனா.. இவனையும் பிள்ளைன்னு பெத்து வளர்த்திருக்காளே ஒரு பொம்பளை.. நல்லதாயின் வயிற்றில பிறந்தவன் அடுத்த வீட்டு பொம்பளைகளுக்கு கெடுதல் நினைக்க மாட்டான்.. இந்த நாதேரி வீட்டோட இருக்க வைச்சு.. தங்கச்சியக் கட்டிக் கொடுத்து.. குடும்பத்தையே தாங்கி சோறு போட்டுக்கிட்டு இருக்கிற மகராசன் மகளை

ஐஞ்சு ஏக்கர் புஞ்சையை வாங்கிக்கிட்டு.. ஒரு கேடு கெட்ட குடிகாரனுக்கு கட்டிக் கொடுக்கப் பாக்கிறானே.. இவனெல்லாம் ஒரு ஜென்மம்.. ச்சே..."

"சொல்லும்மா.. இப்ப என்ன செய்யலாம்..?"

"பஞ்சாயத்தை கூட்டுங்கண்ணா.."

இந்திராதேவி.. நிதானமாக.. ஆனால்.. தீர்மானமாக சொன்னாள்..

"கூட்டிட்டாப் போகுது.. எப்படியும் மணிவாசகம் இதுக்குப் பதில் சொல்லித்தான் ஆகனும்.. அவருக்கு வேணும்னா அவரோட தங்கச்சி புருசன் உசத்தியா இருக்கலாம்.. மத்தவங்களுக்கு அப்படியில்லை.. குடிச்சுப் புட்டு காருக்கு முன்னாலே விழுந்ததுமில்லாம.. கொண்டு போயி ஆஸ்பத்திரியில சேர்த்த நம்ம மாப்பிள்ளை மேலேயே பழி போட்டு பயம்.. பத்தில்லாம பேசியிருக்கானே.. பஞ்சாயத்தைக் கூட்டி.. இதுக்கு என்ன பதில் சொல்றான்னு கேட்டுரலாம்.. ஆனா தனஞ்ஜெயன் ஊடே தலை யிட்டுட்டா என்னம்மா பண்றது..?"

தனஞ்ஜெயன் தலையிடுவான்தான்.. அவனால் முடியாததையா மணியக்காரர் முடித்து வைக்கப் போகிறார் என்ற கேள்வியை எழுப்புவான்தான்.. அவனால் முடியும்.. அவன் நிச்சயமாக அந்த திருக்குமரனை ஒரு கை பார்ப்பான் என்று இந்திராவுக்கு நன்றாகவே தெரியும்.. வழியோடு போனவனை வம்புக்கு இழுத்து.. பழி போட்டு

பேசிய திருக்குமரனை ஒருநாளும் தனஞ்ஜெயன் மன்னிக்க மாட்டான்... ஏனென்று கேட்டு... பாடம் கற்றுக் கொடுக்காமல் விடவும் மாட்டான் என்பதை அவள் நன்கு அறிவாள்..

ஆனால் இந்திராதேவிக்கு அது போதாதே..

"தனா தலையிடக் கூடாதுங்கிறதுக்காகத்தான் அவனுக்குத் தெரியாம இங்கே கிளம்பி வந்திருக்கேன் அண்ணா.." என்றாள் இந்திராதேவி..

"என்னம்மா சொல்கிற..? மாப்பிள்ளைகிட்ட தேவையில்லாம வம்பு வளர்த்தான்ங்கிறதுக்காகத்தான் இந்தப் பஞ்சாயத்தையே கூட்டப் போறோம்.. சம்பந்தப்பட்ட அவருக்கே விவரம் தெரியக் கூடாதுன்னு சொன்னா எப்படிம்மா..?"

"இல்லேண்ணா.. இந்த விவரம் இப்ப தனாவுக்கு தெரியக் கூடாது.. அவனுக்கு தெரிய வருகிறப்ப.. இந்தப் பஞ்சாயத்தில இருந்து அவன் பின் வாங்கவே கூடாது.."

புதிர் போட்டுப் பேசினாலும்.. தெளிவாக.. தீர்க்கமாகப் பேசினாள் இந்திராதேவி.. அவள் ஒரு முடிவோடுதான் அங்கே வந்திருக்கிறாள் என்பதை தியாகராஜனும்.. மரகதமும் புரிந்து கொண்டார்கள்..

"உன் மனசில என்ன நினைப்பிருக்கும்மா..?" தியாகராஜன் நேரடியாகவே கேட்டு விட்டார்..

"அண்ணா.. என் புள்ள.. யதேச்சையா அந்தப் பொண்ணோட படத்தைப் பார்த்திருக்கான்.. பாவம்.. அழகான பொண்ணு.. இதைப் போயி அந்த பரமசிவம் மகன்கிட்டத் தள்ளப் பாக்குறாங்களேன்னு சொல்லி யிருக்கான்.. அதை அந்த நாதாரிகேட்டுட்டு.. அந்தப் பொண்ணக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப் பட்டுத்தான் என்மகன் அவன்மேல காரை ஏத்தினான்னு கூசாம பழி சொல்லிட்டானே அண்ணா.. இதை சும்மா விடச் சொல்றிங்களா..?"

"எதை செய்தாலும் நானே செய்துக்கறேன்னு மாப்பிள்ளை சொல்லுவாரேம்மா.."

"அவன் செய்கிறதை அவன் செய்யட்டும்.. நாம செய்ய வேண்டியதை நாம செய்யலாம்..."

"என்ன செய்யனும்னு சொல்லும்மா.."

"எந்தப் பொண்ணு மேலே என்மகன் ஆசைப் பட்டான்னு அந்தக் களவாணிப்பய சொன்னானோ.. அந்தப் பொண்ணையே என் மகன் கல்யாணம் பண்ணிக் காட்டனும் அண்ணா.."

"என்னம்மா சொன்ன..?"

இந்திராதேவியின் உறுதியான குரலில் ஆச்சரியப் பட்டுப் போனார் தியாகராஜன்.. ரங்கசாமியின் கோழித் தூக்கம் சேவலைத் தேடிப் பறந்து போய்விட்டது.. மரகதம் தலையை ஆட்டி மகிழ்ந்து போனாள்..

"அண்ணின்னா அண்ணிதான்.. அந்தக் கடன்காரனையும் கேள்வி கேட்கனும்.. நம்ம மாப்பிள்ள முத முதலா அழகாயிருக்குன்னு சொன்ன பொண்ணயே அவருக்கு கட்டியும் வைக்கனும்.. ஆஹா..! ஆஹா..! சும்மாவா.. ஜமீன் வீட்டம்மா ஒரு வாசகம் பேசினாலும் அது திருவாசகமா இருக்கும்ன்னு ஊருக்குள்ள பேசிக்கிறாங்க..?"

மணியக்காரர் தாடையைத் தடவியபடி யோசித்தார்.. இந்திராதேவி மௌனமாக அவர் என்ன சொல்லப் போகிறார் என்று காத்திருந்தாள்..

தியாகராஜனும்.. தனஞ்ஜெயனின் அப்பா ரகுநாதனும் உயிர் நண்பர்கள்.. ரகுநாதன் போன பின்பு.. அவருடைய வார்ப்பாக இருக்கும் தனஞ்ஜெயனைப் பார்க்கும் போதெல்லாம் நண்பரின் நினைவில் தியாகராஜனின் கண்கள் கசியும்.. அவன் திருமணத்தை தள்ளிப் போடுவதைச் சொல்லி இந்திராதேவி வருத்தப் படும் போதெல்லாம் அவரும் வருத்தப்படுவார்..

அந்த தனஞ்ஜெயனுக்கு அதிரடியாக அவன் அழகாயிருக்கிறாள் என்று வாய் விட்டுச் சொன்ன பெண்ணைத் திருமணம் செய்து வைக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது..

அதை அவரால் எப்படி நழுவ விட முடியும்..?

"இவ்வளவுதானேம்மா..? என் காதில விசயத்தை போட்டுட்டல்ல.. இனி நான் பாத்துக்கறேன்.. கவலைப் படாதே.. இன்னைக்கு முதல் கட்ட பஞ்சாயத்த ஆரம்பிச்சு வைப்போம்.. நீயும் இரு.."

"நானுமா அண்ணா..?"

"நீதான் கட்டாயம் இருக்கனும்.. நீதானே சொன்ன.. மாப்பிள்ளைக்கு விசயம் தெரிகிறப்ப இந்தப் பஞ்சாயத்தில இருந்து அவரு பின்வாங்கவே கூடாதுன்னு.. நாம இன்னும் ஒரு படி மேலே போயி.. பஞ்சாயத்தில முனைப்பா அவரை இறங்க வைப்போம்.."

அவர்கள் போட்ட திட்டத்தில் ரங்கசாமிக்கு தூக்கத்தின் சுவடு கூட கிட்ட வரவில்லை.. அவர் கொட்டக் கொட்ட கண்களை விழித்தபடி அடுத்து நடக்கப் போகும் நிகழ்வுகளைக் காண ஆயத்தமானார்..

தியாகராஜன் அவருடைய சொந்தக்காரனுக்கு திரும்பவும் போன் போட்டு பேசி விட்டு.. போனை அணைத்தார்.. இந்திராதேவியிடம் வேறு விவரங்களை பேச ஆரம்பித்தார்..

"நீங்க வேணும்னா வாசப்பக்க ரூமில கண் அசருகிறிங்களா ரங்கசாமி.." என்று ரங்கசாமிக்கு கருணையும் காட்டினார்..

"ஆமாண்ணா.. சாமிதான் பாவம்.. நேத்துப் பூராவும் தூங்கல.. நீங்க போயி தூங்குங்க சாமி.." இந்திராதேவியும் ஞானோதயம் வந்து சொன்னாள்..

ரங்கசாமி நகரவில்லையே.. தூக்கத்துக்கு என்ன..? தினம்.. தினம்தான் அவர் தூங்கி எழுந்து கொள்கிறார்.. ஆனால்

இதுபோன்ற காட்சிகளை அவரால் தினம் தினம் பார்க்க முடியுமா என்ன..?

"எனக்குத் தூக்கம் வரலைம்மா.." என்று சொல்லி விட்டு கல்லுக்குண்டைப் போல அங்கேயே உட்கார்ந்து விட்டார்..

சற்று நேரத்தில் கார் வரும் ஓசை கேட்டது..

"வந்துட்டாங்க.." தியாகராஜன் மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்த போதே அவர்கள் உள்ளே நுழைந்தார்கள்..

"வா கேசவா.." மரகதம் அவர்களுடைய சொந்தக்காரன் என்று சொல்லப்பட்டவனை வரவேற்றாள்..

மரகதம் சொன்ன உறவுமுறை வரைபடத்தை வைத்து அவன் மரகதத்திற்கு என்ன முறையாவான் என்று அறியும் ஆவல் ரங்கசாமிக்குள் மிகுந்தது.. அவனோ..

"நல்லாயிருக்கீங்களா..?" என்று பொதுப்படையாக கேட்டு விட்டு உட்கார்ந்து விட்டான்..

'அவன் என்ன செய்வான் பாவம்.. அவனுக்கே என்ன உறவுமுறைன்னு தெரிஞ்சிருக்காது..' ரங்கசாமி நினைத்துக் கொண்டார்..

"இவர்தான் மணிவாசம் ஐயா.. இவரு.. ஐயாவோட தங்கச்சி புருசன்.."

கேசவன் அந்த தங்கச்சி புருசனின் பெயரைக் கூடச் சொல்லவில்லை.. இப்படிப் பெயரில்லாமல் பிழைப்பதில் அந்த திருக்குமரனுக்கு வருத்தம் எதுவும் இருப்பதாக அங்கிருந்த யாருக்கும் தெரியவில்லை.. அவன் என்னவோ மெடல் கிடைத்து விட்டதைப் போல முகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்..

"எங்களை எதுக்காக வரச் சொன்னீங்க..?" மணிவாசகம் கணிரென்ற குரலில் கண்டிப்புடன் கேட்டார்..

"எதுக்காகவா..? நீங்க வயசிலயும் சரி.. நிலைமையிலயும் சரி.. பெரிய மனுசன்.. பேசற வார்த்தையை யோசிச்சுப் பேச வேணாமா..? உங்க ஊருக்குள்ள வேணும்னா நீங்க பெரிய

மனுசனா இருக்கலாம்.. ஆனா.. இந்த சுத்துப்பட்டி ஊருகளுக்கே.. அன்னவாசல் ஜமீன்தாரரான எங்க மாப்பிள்ளை தனஞ்ஜெயன்தான் பெரிய மனுசன்.. அவரைப் பார்த்து நாக்கு மேலே பல்லைப் போட்டுப் பேசியிருக்கான் உங்க தங்கச்சி புருசன்.. நீங்க இவனைக் கண்டிச்சு வைக்காம எங்க மாப்பிள்ளை மேலே குத்தம் சொன்னீங்களாமே..?" மணியக்காரர் தியாகராஜன்.. மணிவாசகத்தை விடக் கண்டிப்பான தோரணையில் கேள்வி கேட்டார்..

திருக்குமரன் திருதிருத்தான்.. விசயம் பஞ்சாயத்து வரை வந்து விடும் என்று அவன் நினைத்திருக்கவில்லை.. மாப்பிள்ளை வீட்டைப் பார்க்கப் போனவன்.. யாருடன்.. எங்கே குடித்தான் என்ற விவரத்தை மறைப்பதற்காக.. சொன்ன பொய் அன்னவாசல் ஜமீனைப் பற்றியதாக இருக்கும் என்று நினைத்திருந்தால் அவன் வாயைத் திறந்திருப்பானா..? எவனோ ஒரு கார்காரன் என்று நினைத்து ஐந்து ஏக்கர் புஞ்சை நிலத்துக்கு ஆசைப்பட்டு.. பரமசிவத்தின் மகனைக் காட்டிக் கொடுக்காமல் இருப்பதற்காக அன்னவாசல் ஜமீனின் மீது பழியைத் தூக்கிப் போட்டு விட்டானே..

"என் தங்கச்சி புருசனைப் பத்தி எனக்குத் தெரியும்.."

மணிவாசகம் கறாராகப் பதில் சொல்ல... திருக்குமரனின் வயிற்றில் புளி கரைந்தது..

'இந்த மாமன் வாயை வைச்சுக்கிட்டு சும்மா இருந்தாத் தேவலையே..' அவனுக்கு பதக்.. பதக்கென்று இருந்தது..

மணிவாசகம் அந்த இடத்தில் மடங்கிப் போக வேண்டுமென்று அவன் மனதார நினைத்தான்..

அந்த நினைப்பை மட்டும் மணிவாசகம் அறிந்திருந்தால் அவனை உண்டு இல்லையென்று ஓர்வழி பண்ணியிருப்பார்..

6

'என்னைப் பத்தி இந்த மாமனுக்கு என்ன தெரியும்..?'

திருக்குமரனுக்கு ஆற்றாமையாக இருந்தது.. பரமசிவத்தின் மகன் ஊற்றிக்கொடுக்கிறானே என்று ஓர் அளவோடு நிறுத்தாமல் ஊர்பட்ட 'தண்ணி'யை உள்ளே சரித்துக் கொண்டதினால் வந்த வினையல்லவா இது என்று அவன் தன்னைத்தானே நொந்து கொண்டான்..

'பேசாம பாட்டிலைக் கொடுங்க தம்பி..! வீட்டில போயி யாருக்கும் தெரியாம போட்டுக்கறேன்னு சொல்லியிருக்கலாம்..'

காலம் கடந்து வந்த ஞானோதயத்திலும் அந்த பாட்டில்களை விட்டுக் கொடுக்காமல் கைப்பற்றி இருக்க வேண்டுமென்ற புத்திதான் அவனுக்கு இருந்தது..

"இன்னைக்குத்தான் இவன் என் தங்கச்சி புருசன்.."

மணிவாசகம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே..

"நேத்து யாரா இருந்தான்..?" என்று சன்னமான குரலில் கேசவனிடம் சந்தேகம் கேட்டார் ரங்கசாமி..

கேசவனுக்கு சிரிப்பு வந்தது.. முக்கியமான பஞ்சாயத்து நடக்கும் இடத்தில் அப்படி சிரித்து வைக்க முடியாது என்பதினால் அவன் சித்தனைப் போல ரங்கசாமியைப் பார்த்து வைத்தான்..

அந்தப் பார்வையில் அரண்டு போன ரங்கசாமி அவசரமாக முகத்தைத் திருப்பி.. பஞ்சாயத்தை தீவிரமாக கவனிப்பவரைப் போல பாவனை செய்ய ஆரம்பித்து விட..

'அஃது..! இனிமே என்கிட்ட இது போல கேள்வியைக் கேட்டு சிரிப்பு மூட்டுவ..?' என்ற திருப்தியுடன் கேசவன் மணிவாசகம் சொல்வதைக் கவனிக்க ஆரம்பித்தான்..

உணர்ச்சி வேகத்தில் மாமன் அப்படி உரையாற்றி யிருக்கக் கூடாது என்று திருக்குமரனுக்கும் தோன்றியது.. ரங்கசாமியின் சன்னமான கேள்வி கேசவனின் காதுகளில் விழுந்ததைப் போல திருக்குமரனின் காதுகளிலும் விழுந்தது.. அவன் காதுகளில் விழ வேண்டும் என்பதற் காகவே.. கேசவனை விட நெருக்கமாக திருக்குமரன் பக்கம் சரிந்து ரங்கசாமி பேசினாரோ என்ற சம்சயம் அவன் மனதில் எழுந்தது.. ரங்கசாமியின் நமட்டுச் சிரிப்பு அதை உறுதிப் படுத்தியதில் அவன் மூச்சு விடாமல் உட்கார்ந்திருந்தான்..

"என் தங்கச்சியைக் கட்டிக்கிட்டதாலே இவன் எனக்குச் சொந்தமில்ல.. என் சொந்தம்ங்கிறதினாலதான் என் தங்கச்சியை இவனுக்குக் கட்டிக் கொடுத்தேன்.. என்னைத் தூக்கி வளர்த்த என் தாய்மாமனின் மகன் இவன்.."

"அதுக்கு..?"

மணிவாசகத்தின் மணிப்பிரவாக உணர்ச்சி மயமான பேச்சை.. ஒற்றை வார்த்தையில் நறுக்கென்று தடுத்து நிறுத்தினார் தியாகராஜன்..

மணிவாசகம் கொதித்து விட்டார்.. அவருடைய உணர்வுகள் அலட்சியப்படுத்தப் படுவதா..?

"என்னங்க..? அன்னவாசல் மணியக்காரர் கூப்பிடறாருன்னு மரியாதை கொடுத்து வந்தா.. என்னையே கிணடல் பண்றீங்களா..?" கோபத்துடன் கேட்டார்..

"இதில கிண்டலுமில்ல.. சுண்டலுமில்ல மணிவாசகம்.. உங்க தங்கச்சி புருசன் உங்களுக்கு உசத்தின்னா.. அத உங்க வீட்டுக்குள்ளேயே வைச்சுக் கொண்டாடிக்கனும்.. ஊருக்கே அவன் உசத்தியாயிருக் கனும்னு அவசியம் ஒன்னுமில்ல.."

"இப்ப என்னதான் சொல்ல வரீங்க..?"

"எங்க மாப்பிள்ளை தனஞ்ஜெயன் உங்க பொண்ணு மேல ஆசைப்பட்டு... உங்க தங்கச்சி புருசன்கிட்ட பொண்ணுக்

கேட்டதாகவும்... இவன் மாட்டேன்னு சொன்னதுக்கு எங்க மாப்பிள்ளை உங்க தங்கச்சி புருசனைக் குடிக்க வைச்சதாகவும்.. அதுக்கும் மேலே இறங்கி ஓடப் பார்த்தவன் மேலே காரை விட்டு மோதினதாகவும் பழி சொல்லியிருக்கானே.. இதை நாங்க சும்மா விட்டுருவோம்ன்னு நினைச்சீங்களா..?"

"சும்மா விடாம என்ன செய்வீங்க..? உங்களாலே ஆனதைப் பார்த்துக்கங்க.."

மணிவாசகம் போட்ட சப்தத்தில் திருக்குமரனின் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது..

'கடவுளே..! மாமனே ஆனதைப் பாத்துக்கங்கன்னு சொல்லிக் கவுத்துட்டாரே.. இவனுக ஆனதைப் பாத்துக்கக் கிளம்பினா நான் தாங்குவேனா..?'

"பாத்துட்டாப் போச்சு.." என்றார் மணியக்காரர்..

அத்துடன் நிறுத்தாமல் திருக்குமரனைப் பார்த்து..

"என்னப்பா.. வீட்டோட மாப்பிள்ளை..! ஆனதைப் பாத்துக்கச்சொல்லி உன் மாமனே சொல்லிட்டாரு.. ஆனதைப் பார்த்துரலாமா..?" என்று கிண்டலாக கேட்கவும் செய்தார்..

திருக்குமரன் என்ன செய்வான்..? பக்கத்தில் மணிவாசகம் இல்லாமலிருந்தாலாவது.. ஐயா சாமி.. என்று மணியக்காரரின் கால்களில் விழுந்திருப்பான்.. அப்படிச் செய்யவும் முடியாமல் மணிவாசகம்தான் கோந்து போட்டதைப் போல திருக்குமரனுடன் ஒட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே..

"இந்தப் பூச்சாண்டியையெல்லாம் வேற எங்கே யாவது வைச்சுக்கங்க.. அன்னவாசல் ஜமீனுன்னா கொம்பா முளைச்சிருக்கு..? வழியோடு போன என் தங்கச்சி புருசனை மடக்கி.. பொண்ணுக் கேட்டது யாரு..? உங்க மாப்பிள்ளைதான்.."

நடந்தது என்னவென்று அறியாமல் வார்த்தைகளைச் சிதற விட்டார் மணிவாசகம்.. மணியக்காரரின் முகம் இறுகியது.. இந்திராதேவியின் புருவங்கள் சுருங்கின..

"யாரு பொண்ணுக் கேட்டது..?" அவள் கோபமாக கேட்டாள்..

"இந்தம்மா யாரு..?"

பெண்களிடம் பேசுவதற்கு யோசிக்கும் வழக்கமுள்ள மணிவாசகம் தயங்கினார்..

"அன்னவாசல் ஜமீன்தாரிணி இந்திராதேவி.. நீங்க பொண்ணுக் கேட்டதாச் சொன்ன தனஞ்ஜெயனைப் பெத்த அம்மா.."

தியாகராஜன் நிதானமாக இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்..

"ஓ.." மணிவாசகம் சங்கடப்பட்டுப் போனார்..

"உங்க பொண்ணு உலகப் பேரழகியாகவே இருக்கட்டும்.. அதை என் மகன் பொண்ணு கேட்டான்னு எப்படி நீங்க சொல்லலாம்..? எங்க தகுதிக்கும்.. உயரத்துக்கும் உங்க வீட்டில வந்து பெண்ணெடுக்க எங்களுக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு..?"

கம்பீரமான இந்திராதேவி கேட்ட கேள்வியில் மணிவாசகத்தின் சங்கடம் பறந்தோடி விட்டது.. அவர் ரோசத்துடன் நிமிர்ந்தார்..

"உங்க மகன் பொண்ணுக் கேட்டதா என் தங்கச்சி புருசன் சொல்றானே..."

"அவன் சொன்னா..? அது உண்மையாகிருமா..?"

"பொய்யின்னு நீங்க சொல்கிறிங்களா..?"

"பொய்யேதான்.. உங்ககிட்டயெல்லாம் நாங்க பொண்ணு கேட்க மாட்டோம்.. யாரு வந்து.. யார் வீட்டிலே பொண்ணு கட்டறது..?"

இந்திராதேவியின் கம்பீரமான அலட்சியத்தில் தான் மட்டம் தட்டப்படுவதைப் போல உணர்ந்தார் மணிவாசகம்.. அவர் முகத்தில் கோபச் சிகப்பு வந்தது..

"போதும்மா.. ரொம்பப் பேசாதீங்க.. நீங்க பொண்ணு கேட்டாலும் நாங்க கொடுக்க மாட்டோம்.. உங்களுக்கு மருமகளா அனுப்பி வைக்கத்தான் என் பொண்ணைப் பெத்து வளர்த்து வைச்சிருக்கிறேனா..?"

மணிவாசகம் கோபத்துடன் இரைந்த போது..

"யாரைப் பார்த்து என்ன பேசறிங்கன்னு யோசித்துத் தான் பேசறிங்களா..?" என்ற குரல் கணிரென்று கேட்டது..

'ஆஹா..! ஐயா வந்திட்டாரு..'

திரைப்படத்தில் அடுத்த காட்சியைப் பார்க்கப் போகும் ஆவலுடன் வாசல் பக்கமாக திரும்பிப் பார்த்தார் ரங்கசாமி..

அங்கே செந்தணலாக நின்று கொண்டிருந்தான் தனஞ்ஜெயன்..

தியாகராஜனின் பார்வையும்.. இந்திராதேவியின் பார்வையும் அர்த்தபுஷ்டியுடன் சந்தித்து மீண்டன.. அவர்கள் இயல்பாக பார்ப்பதைப் போல உள்ளே பார்த்தார்கள்.. அங்கே டைனிங் ஹாலின் அருகே செல்போனுடன் நின்றிருந்த மரகதம் கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தாள்..

அதுதான் அவர்களின் திட்டம்.. தனஞ்ஜெயனின் மீது எப்படி பழி போட்டுப் பேசலாம் என்று கேட்பதற்காக வரவழைப்பதைப் போல மணிவாசகத்தை வரவழைப்பது.. அவரிடம் இந்திராதேவி கடுமையாக பேசி சண்டை வளர்ப்பது.. மரகதம் முன் கூட்டியே தனஞ்ஜெயனுக்குப் போன் பண்ணி தனஞ்ஜெயனை வர வைப்பது.. அவன் வரும் தருணத்தில் மிகச் சரியாக இந்திராதேவியை மணிவாசகம் திட்டிப் பேசுவதைப் போல சூழ்நிலையை உருவாக்குவது..

அதன்படி மணிவாசகம் வந்தவுடனே மரகதம் உள்ளே நழுவி தனஞ்ஜெயனுக்குப் போன் பண்ணி விட்டாள்..

"தனா.. என்னஙகய்யா இது..? உங்க அம்மாவை அந்த லட்சுமிபுரத்து மணிவாசகம் மனம் நோக பேசிக்கிட்டு இருக்காருப்பா.. பாவம் அண்ணி.. அண்ணன் போய் சேர்ந்த பின்னாலே உங்களுக்காகவே உயிரை வைச்சுக் கிட்டு இருக்கிற ஆத்மா.. அவங்களை நீங்கதானேப்பா பத்திரமா பார்த்துக்கனும்..?"

குரல் தழதழக்க மரகதம் பேசிய பேச்சில் தனஞ்ஜெயன் பதறிவிட்டான்.. அவனுக்கு லட்சுமிபுரத்து மணிவாசகம் என்பது யாராக இருக்கக்கூடும் என்றே தெரியவில்லை..

"யாரு அத்தை அது..?" என்று மரகதத்திடமே கேட்டு வைத்தான்..

'சரியாப் போச்சு போ.. உனக்குப் பொண்ணு கொடுக்கப் போகிற மாங்காய் மடையனப்பா அவரு..' மானசீகமாக தலையில் அடித்துக் கொண்ட மரகதம்.. விலாவாரியாக விவரத்தை எடுத்துச் சொன்னாள்..

"ஏன் அத்தை.. இந்தப் பஞ்சாயத்தை நான் பார்த்துக்க மாட்டேனா..? இதுக்காகவா அம்மா விட்ட விடிகாலையிலே உங்க வீட்டைத் தேடி ஓடி வந்தாங்க..?" தனஞ்ஜெயனின் குரலில் அதிருப்தி தொனித்தது..

"இல்லே தம்பி.. அண்ணி அதுக்காக வரலை.. எங்க மகளுக்கு என்னைக்கு வளைகாப்புன்னு கேட்டுட்டுப் போக வந்தாங்க.. உங்க மாமாதான் விசயத்தை வேற

யாரு மூலமாவோ கேள்விப்பட்டுட்டு உங்க அம்மாகிட்ட இப்படியாமில்ல தங்கச்சின்னு கேட்டாரு.. அண்ணி பதறிப் போயி கணக்குப்பிள்ளையை வரச்சொல்லி விவரம் கேட்டாங்க.. அவரும் மறுத்துப் பேச முடியாம ஆமாம்ன்னு சொல்லிட்டாரு.. உங்க மாமாதான் மனசு கொதிச்சுப் போயி.. அந்த மாணிக்கவாசகத்துக்கிட்ட நியாயம் கேட்கனும்னு வரச் சொன்னாரு.. வந்த மனுசன் உங்க

மாமாவை விட்டுட்டு.. உங்க அம்மாகூட சண்டைக்கு வாராரு தம்பி.."

அதற்கு மேலும் பொறுமையாக தனஞ்ஜெயன் விளக்கம் கேட்டுக் கொண்டிருப்பானா என்ன..?

"இதோ கிளம்பிட்டேன் அத்தை.. நீங்க அம்மாவை பத்திரமா பார்த்துக்கங்க.." என்று கிளம்பி விட்டான்..

இந்திராதேவி ஹாலின் ஜன்னல் வழியாக போர்டி கோவை பார்த்தபடி தியாகராஜனுக்கும்.. மணிவாசகத்துக்கம் நடந்து கொண்டிருந்த பேச்சு வார்த்தையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.. தனஞ்ஜெயனின் கார் போர்டிகோவில் நுழைவதைக் கண்டதும் களத்தில் இறங்கி விட்டாள்.. அவளின் கர்வமான பேச்சில் ரோசப்பட்டுப் போன மணிவாசகம்..

"உங்களுக்கு மருமகளா அனுப்பத்தான் நான் பொண்ணைப் பெத்து வளர்த்து வைச்சிருக்கேனா..?" என்று கேட்டுக் கொண்டிருந்தபோது தனஞ்ஜெயன் வீட்டுக்குள் பிரவேசித்து விட்டான்..

"யாரைப் பார்த்து என்ன பேசறிங்கன்னு யோசித்துத்தான் பேசறிங்களா..?"

அவனின் கோபமான குரலில் இந்திராதேவி சோகமாக முகத்தை வைத்துக் கொண்டாள்.. மணிவாசகத்திற்கு கோபம் குறையவில்லை..

"என்னங்க இது.. வாயெடுக்கிறவங்கள்ளாம் இதே போல பேசி வைக்கறிங்க.. உங்களைப் பாத்து நான் இதைப் பேசக் கூடாதா..? பெண்ணைப் பெத்தவங்க நானு.."

"யோவ்.. போய்யா.. ஊரில இல்லாத பெண்ணைப் பெத்து வைச்சிட்டீரு.. எதுக்கெடுத்தாலும்.. பொண்ணு.. பொண்ணுன்னு அனத்திக்கிட்டு.. ஏன்..? என் அம்மாவுக்கு மருமகளா உங்க பொண்ணை அனுப்பி வைக்க மாட்டீரோ..?"

கண்கள் இடுங்க கோபத்துடன் கனன்ற தனஞ்ஜெயனின் கேள்வியில் இந்திராதேவியின் இதயம் குளிர்ந்தது..

தனஞ்ஜெயனுக்குத் தெரியாமல் பஞ்சாயத்தை ஆரம்பிக்க வேண்டும்.. தனஞ்ஜெயனுக்கு விவரம் தெரிய வருகிறபோது அவன் அந்தப் பஞ்சாயத்தில் இருந்து பின் வாங்கவே கூடாது என்ற அவரின் எண்ணம் பலித்து விட்டது..

இனி அவளே 'நில்' என்று சொன்னாலும் அவள் மகன் நிற்க மாட்டான்.. பஞ்சாயத்திலிருந்து பின் வாங்க மாட்டான்.. இதற்கு மேலான பஞ்சாயத்து தனஞ்ஜெயனுக்கும்.. மணிவாசகத்திற்குமானது.. அவன் நினைத்ததை சாதிக்காமல் விடமாட்டான்..

நிம்மதி பெருமூச்சுடன் அவள் தியாகராஜனையும்.. மரகதத்தையும் பார்த்தாள்.. அவர்கள் இமைமூடி அவளை அமைதிப் படுத்தினார்கள்..

'என்னாங்கடா இது.. இதவிட மோசமா ஆஸ்பத்திரியில் இந்த ஆளுக பேசினானுக.. ஐயா அதையெல்லாம் கண்டுக்காம இவனுகள்ளாம் ஒரு ஆளுகளான்னு கேட்டுட்டு வந்திட்டாரு.. இப்ப என்னடான்னா.. அம்மாவைப் பார்த்து சொன்ன ஒற்றை வார்த்தைக்காக யுத்த முழக்கம் செய்யறாரு..'

ரங்கசாமி வாயில் ஈ போய் வருவதைக் கவனிக்காமல் 'ஆ' வென்று வாய் பிளந்து கவனித்துக் கொண்டிருந்தார்..

"என்னது..?" மணிவாசகம் கொதித்தார்..

அவருக்கு தனஞ்ஜெயன் யாரென்று தெரியாதுதான்.. அவன் அன்னவாசலின் ஜமீன்தாரர் என்பதை அறியாமல் மருத்துவமனையில் தங்கையின் கணவன் இருக்கிறானே என்ற கோபத்துடன் பேசி விட்டார்தான்.. அதற்காக அவன் உச்சாணிக் கொம்பில் ஏற.. அவர் அண்ணாந்து பார்த்து முட்டி போட்டு கன்னத்தில் போட்டுக் கொள்ள வேண்டுமா..?

"வயசில பெரியவர்ங்கிற நினைப்பில்லாம பேசற நீங்கள்ளாம் ஒரு பெரிய மனுசன்..! எந்த தைரியத்தில என்

பொண்ணைக் கட்டிக் கொடுன்னு கேட்கறிங்க..?"

"போய்யா.. உமக்கெல்லாம் என்ன மரியாதை வேண்டிக் கிடக்கு..? மாப்பிள்ளை வீட்டைப் பார்க்கப் போன உங்க தங்கச்சி புருசன் குடிச்சுப்புட்டு காருக்கு குறுக்கால வந்து விழுகறான்.. கருமமேன்னு ஆஸ்பத்திரியில சேத்தா.. உம்மைக் கண்டதும்.. உங்க பொண்ணுக்காக நானே இவனுக்கு ஊத்திக் கொடுத்தேன்னு அந்தர் பல்ட்டி அடிக்கிறான்.. உம்ம குடும்பமெல்லாம் ஒரு குடும்பம்.. அதில பெண்ணைப் பெத்து வைச்சுக்கிட்டு நீரு பிலிம் காட்டறீரு.. ஆமாம்.. உம்ம வயசுக்கு நான் மரியாதை கொடுக்கனும்.. என்னோட அம்மாவுக்கு நீர் மரியாதை கொடுக்க மாட்டிரு.. அப்படித்தானே..? உமக்கெல்லாம் இம்புட்டுத்தான்ய்யா மரியாதை.. உம்ம பொண்ணைக்

கட்டிக் கொடுன்னு கேட்க எங்களுக்கு தைரியம் வேண்டியதில்லைய்யா.. உமக்குத்தான் தகுதி வேணும்.."

இந்திராதேவி சொன்ன அதே தகுதி..!

மணிவாசகத்தின் தன்மானம் அடிவாங்கியது.. சுயமரியாதை சிலிர்த்து எழுந்தது..

7

"உங்க தகுதியைப் பத்தி எனக்குத் தெரியாதா..? முப்பத்தி மூணு வயசு வரைக்கும் கல்யாணமாகாம இருக்கிறதுதான உங்க தகுதி..?"

காயப்பட்ட மணிவாசகத்தின் தன்மானம் பதிலுக்கு தனஞ்ஜெயனின் தன்மானத்தைக் காயப்படுத்தி விட்டது..

குருதிகண்ட சிங்கமாக சிலிர்த்து நிமிர்ந்தான் தனஞ்ஜெயன்..

"ஆமாம்.. இப்ப எனக்கு முப்பத்துமூணு வயதுதான்.. அதுக்கு இப்ப என்னாங்கறிங்க..?" கண்கள் சிவக்க

ரௌத்ரத்துடன் கேட்டான்..

மணிவாசகத்திற்கு என்னவோ போல ஆகி விட்டது.. எதிலோ ஆரம்பித்து.. எதிலோ வந்து நிற்பதைப் போல அவர் உணர்ந்தார்.. புலி வாலை பிடித்த கதையாய் அவர் கதை ஆகிவிட்டது.. அதிலிருந்து விடுபடும் மார்க்கம் புரியாமல் அவர் திகைத்து நிற்க.. தனஞ்ஜெயன் தியாகராஜனைப் பார்த்தான்..

"மாமா.. சுத்துப்பட்டிக்கு தகவல் சொல்லி அனுப்புங்க.. வார புதன்கிழமை இங்கே சுத்துப்பட்டி பஞ்சாயத்து கூடியாகனும்.."

"ஆகட்டும் மாப்பிள்ளை.."

"இந்த மணிவாசகத்தோட தங்கச்சி புருசன் மேல நான் பிராது கொடுக்கறேன்.. என் மேல இவன் சொன்ன குற்றச்சாட்டை இவன் புரூவ் பண்ணனும்.. அப்படிக் குற்றச்சாட்டை புரூவ் பண்ண முடியாமப் போனா.. ஒன்னு இவனும்.. இந்த மணிவாசகமும் குடும்பத்தோட சுத்துப்பட்டு கிராம பஞ்சாயத்தில என் காலில

விழுந்து மன்னிப்புக் கேட்கனும்.. இல்லைன்னா.. இந்த மணிவாசகத்தோட மகளை எனக்குக் கட்டிக் கொடுத்தாகனும்.. வாங்கம்மா போகலாம்..."

தனஞ்ஜெயன் இந்திராதேவியை அழைத்துக் கொண்டு வேகமாக வெளியேறிவிட்டான்.. மணிவாசகம் அவனை விட கோபமாக மீசையை முறுக்கினார்..

"நீ கவலைப்படாதேடா மாப்பிள்ள.. நாம எதுக்கு பயப்படனும்..? நியாயமும் தர்மமும் நம்ம பக்கம் இருக்கு.."

மணிவாசகம் முழங்க.. திருக்குமரன் பரிதாபமாக தலையை அசைத்தான்.. தியாகராஜனின் பார்வை அவனைத் துளைத்தது.. அப்படியா.. நியாயமும்.. தர்மமும்.. உன் பக்கம் இருக்கின்றனவா என்று கேள்வி கேட்டது.. அவன் அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டான்..

வீட்டுக்கு போனபின்பும் அவன் ஆன மட்டும் முயற்சி செய்தான்தான்..

"மாமா.. நமக்கெதுக்கு வம்பு..? அவனோ பெருங்கொண்ட பணக்காரன்.. அவன்கூட மோத நம்மால் முடியுமா..?"

"அதுக்கு..?"

"சமாதானமாப் போயிரலாம் மாமா.."

"எப்புடி சமாதானமாப் போறது..?"

"நடந்தது நடந்து போச்சு.. நீங்க உங்க வேலையைப் பாருங்க.. நாங்க எங்க வேலையைப் பார்க்கிறோம்ன்னு சொல்லலாமில்ல..?"

"அவன் ஆஹான்னு கேட்டுட்டுத்தான் வேற சோலியைப் பாப்பான்... போவியா... நிலைமை முத்திப் போச்சுப்பா.. சுத்துப்பட்டி பஞ்சாயத்து கூடப் போகுது.. அதுக்கான அழைப்பு வந்திருச்சு.. நாம வரமாட்டோம்ன்னு சொல்ல முடியாது.."

"ஏன் முடியாது..?"

"முடியாதுன்னா முடியாதுதான்... இது ஊர் கட்டுப்பாடு.. இன்னும் உடையாம இருக்கிற நியாய தர்மம்.. இதை மறுக்க என்னால முடியாது.. அப்படி மறுத்தா சுத்துப்பட்டியும் என் குடும்பத்தை தள்ளி வைச்சிருவாங்க.. என் குடும்பத்தில பொண்ணு கொடுத்து பொண்ணெடுக்க மாட்டாங்க..."

மணிவாசகம் கவலையுடன் சொன்ன போது பெண் கொடுப்பதைப் பற்றி வேண்டுமானால் இவர் கவலைப் படலாம்.. பெண் எடுப்பதைப் பற்றி ஏன் இவர் கவலைப்பட வேண்டும் என்ற சினம் திருக்குமரனுக்கு வந்தது.. அவன் பெற்று வைத்திருக்கும் பெண்கள் இருவரும் மணிவாசகத்தின் கண்களுக்குத் தென்பட வில்லையா..?

திருக்குமரனிடம் கேட்டால் பெண் கொடுப்பதற்கும் வழியைச் சொல்லிக் கொடுப்பானே.. அத்தையின் கணவனான அவனே மைத்துனரின் மகளை இரண்டாம்

தாரமாக திருமணம் செய்து கொள்ள மாட்டானா..? அவனுக்கும் ஆண் குழந்தை வேண்டுமென்ற ஆசை இருக்காதா..? இப்போது ஒன்றும் இரண்டு தார மணம் தடைசெய்யப்பட்ட.. சட்ட விரோதமான செயல் போல தோன்றவில்லையே.. எத்தனையோ சீரியல்கள் இருதார மணத்தை சட்டரீதியான மணம் போல அங்கீகரிக்கின்றனவே.. ஒரு மனைவியின் கண் முன்னே.. இன்னொரு மனைவியுடன் அந்தக் கணவன் கூடி வாழ்வதும்.. அந்த ஆண்பிள்ளை சிங்கத்திற்காக.. இந்த சக்களத்திகள் இருவரும் ஒருவருக்கொருவர் வில்லிகளாக மாறி அடித்து உருள்வதும் அன்றாடம் சீரியலில் வரும் நிகழ்வுகளாக இருக்கின்றனவே..

அவன் என்ன அப்படியா மல்லிகாவிடம் சுமித்ராவை அடிபட விட்டு விடுவான்..?

இதைப்பற்றியெல்லாம் கிஞ்சித்தும் யோசிக்காமல் பேசிக் கொண்டிருக்கும் மணிவாசத்தை 'மர மண்டை' என்று மனதுக்குள் திட்டித் தீர்த்தான் அவன்..

'அந்தச் சுத்துப்பட்டி பஞ்சாயத்துக்கு போகலைன்னா இத்தனை ஆதாயம் இருக்கா..?'

அவன் இஞ்சி திண்ற குரங்கைப் போல மனதுக்குள் இளித்தான்.. அந்த பரமசிவத்தின் மகனுக்கு சுமித்ராவை திருமணம் செய்து கொடுக்க வைத்தால் அவனுக்கு ஐந்து ஏக்கர் புஞ்சை நிலம்தான் கிடைக்கும்.. இந்த சுத்துப்பட்டிப் பஞ்சாயத்திற்கு போகா விட்டால் அவனுக்கு சுமித்ராவே கிடைத்து விடுவாள் போல இருக்கிறதே..

அந்த எண்ணத்துடன் மணிவாசகத்தை பஞ்சாயத்துக்கு கிளம்ப விடாமல் அவன் தடுத்துப் பார்த்தான்..

"எந்தக் காலத்தில இருக்கீங்க மாமா..? இவனுக அழைச்சா நாம போய்த்தான் ஆகனுமா..?"

"போய்த்தான் ஆகனும்.. நம்ம பக்கம் நியாயமும் தர்மமும் இருக்கு.."

சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளையாய் மணிவாசகம் ஜெபிக்க.. திருக்குமரனின் முகம் அஷ்ட கோணலானது..

'இந்த ஆளு இந்த நாயத்தையும்.. தர்மத்தையும் விடவே மாட்டாரா..? பிடிச்சுத் தொங்கிக்கிட்டே இருக்காரு..'

"அது பாட்டுக்கு இருந்துட்டுப் போகட்டும் மாமா.."

"அப்படியெல்லாம் விட்டுவிட முடியாது மாப்பிள்ளை.. பஞ்சாயத்திலே நாம சொன்னது உண்மைன்னு நாம நிரூபிக்கனும்.. அப்படி நிரூபிச்சுட்டு அந்த தனஞ்ஜெயனைக் குடும்பத்தோட நம்ம காலில விழ வைக்கனும்.."

சிவந்த கண்களுடன் மணிவாசகம் சூளுரைத்ததில் திருக்குமரனுக்கு குலை நடுங்கி விட்டது..

'நடக்கிற காரியமா இது..?'

இது இப்படியிருக்க.. தியாகராஜனின் தரப்பிலிருந்து ஒரு செய்தி மணிவாசகத்திற்கு வந்து சேர்ந்தது.. அந்தச் செய்தியின் சாராம்சம்.. சுற்றுப்பட்டி பஞ்சாயத்திற்கு மணிவாசகம் குடும்பத்துடன் வந்து சேரவில்லை யென்றால்.. அவரின் தங்கையின் கணவன் தனஞ்ஜெயனின் காரிலிருந்த ஐம்பது லட்சரூபாய் ரொக்க பணத்தை திருடிக் கொண்டு போய் விட்டான் என்று போலிஸில் புகார் செய்யப்படும் என்று சொன்னது..

"இது என்ன மாமா வம்பா இருக்கு..? நானெங்கே அவன் காரில ஏறினேன்..?"

அவனையுமறியாமல் வாய் விட்ட திருக்குமரன் நாக்கைக் கடித்துக் கொண்டான்..

"நீதானேடா மாப்பிள்ள.. அவன் காருக்குள்ள உன்னை உட்காரவைச்சு ஊத்திக் குடுத்தான்னு சொன்ன..?" மணிவாசகத்தின் புருவங்கள் யோசனையுடன் உயர்ந்தன..

"ஆமாம் மாமா.. ஆமாம்.." திருக்குமரன் இமயமலையின் உச்சியில் இருப்பதைப் போல வெடவெடத்தான்..

'இப்புடியா.. முன்னாலயும் போக முடியாம.. பின்னாலயும் போக முடியாம அவன் வேலி போட்டு வைப்பான்..?'

தனஞ்ஜெயனின் வேட்டையாடுதலில் முதன் முதலாக திருக்குமரனுக்குள் பயம் எழுந்தது..

ஆழம் தெரியாமல் அவன் காலை விட்டு விட்டானா..?

"நீ வாயை வைத்துக்கிட்டு சும்மா இருந்திருந் தாலாவது அந்த தியாகராஜன்கிட்ட நான் துணிஞ்சு பதில் சொல்லலாம்.. நீதான் அவன் காருக்குள்ள ஏறி.. இறங்கினதை ஆஸ்பத்திரியில அத்தனை பேர் முன்னாடியும் ஒப்பிச்சு வைச்சிருக்க.. இப்ப அவன் பேக்டரியில வேலை பாக்கிற வொர்க்கர்ஸீக்கு கொடுக்கக் கொண்டு போன சம்பள பணம் ஐம்பது லட்சத்தக் காணோம்ன்னு சொல்லப் போகிறதாச்சொல்றான்.. இருக்கிற பிரச்னையில இதுவும் சேர்ந்திருக்கு..."

அதற்குமேல் திருக்குமரன் மறுத்துப் பேச வாயைத் திறக்கவில்லை.. குடும்பத்தினரிடம் விவரம் சொல்ல மணிவாசகம்தான் தயங்கினார்.. திருக்குமரனுக்கு அந்தத் தயக்கமெல்லாம் எதுவுமில்லை.. அவன் மல்லிகாவிடம் விவரத்தை சொல்லி விட்டான்..

"உண்மையைச் சொல்லுங்க.. அந்த தனஞ்ஜெயனா உங்களுக்கு ஊற்றிக் கொடுத்தான்..?" மல்லிகா நெற்றிக் கண்ணைத் திறந்தாள்..

"சத்தம் போடாதேடி.. உனக்குப் புண்ணியமாப் போகும்.. அந்த பரமசிவம் மகன்தான் ஊற்றியும் கொடுத்து.. ஐந்து ஏக்கர் புஞ்சை நிலத்தையும் கொடுக்கிறேன்னான்.."

"எதுக்கு..? என் அண்ணன் மகளை அவனுக்கு காவு கொடுக்கிறதுக்கா..?"

"மல்லிகா.."

"பேசாதீங்க.. உங்களை வளர்த்து ஆளாக்கி.. தங்கச்சியையும் கட்டிக் கொடுத்து.. குடும்பத்தோட வீட்டில உட்கார வைச்சு சோறு போடறாரே.. எங்கண்ணன்..! அவரு

மகளை குடிகாரக் காவாலிப் பயலுக்கு கட்டிக் கொடுக்க விலை பேசிட்டு வந்தீங்களா..?"

மல்லிகா விடிய விடிய கொடுத்த கொடுப்பில்.. விடியும் போது திருக்குமரனின் இரண்டு காதுகளிலும் ஜவ்வு கிழிந்து ரத்தம் கொட்ட ஆரம்பிக்கவா என்று கேட்டது..

'பேச வாயைத் திறந்தா மூட மாட்டேங்கிறாளே..'

அந்தப் பேச்சும் அவனைத் திட்டுவதற்காக மட்டுமே பேசப்படும் பேச்சு என்பதில் அவனுக்கு மலையளவு வருத்தமிருந்தது..

பெரிய குடும்பத்தில் பிறந்த பெண்களால் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை என்றுமே பெற முடிந்ததில்லை.. அதற்கான உதாரணமாக விளங்குபவள் மல்லிகா.. அவளுடைய அழகுக்கும்.. குணத்துக்கும்.. அறிவுக்கும்.. அவளுக்கு திருக்குமரனைப் போன்ற கணவன்தான் வாய்த்திருக்க வேண்டுமா..?

'விதி..!'

கட்டிலில் கண்மூடி படுத்திருந்த மல்லிகாவின் விழியோரம் கண்ணீர் வழிந்து தலையணையை நனைத்தது.. அவளிருந்த மார்கழி மாத நோன்புகள் அவளுக்கு நினைவுக்கு வந்தன.. கடைபிடித்த விரதங்கள் மனதில் ஊஞ்சல் கட்டி ஆடின..

இந்தக் கணவனை மணவாளனாக அடைவதற்கா அவள் இத்தனை விரதங்களையும் கடைபிடித்தாள்..?

மல்லிகா சொல்லிய விவரங்களில் மலைத்து விட்டாள் திலகவதி...

"என்ன மல்லி சொல்லுற..?"

"ஆமாங்கண்ணி.. ராத்திரிதான் இந்த மனுசன் வாயத் திறந்தாரு.."

"உங்கண்ணன் அதையும் செய்யலையே.."

ரைஸ்மில்லில் இருந்து வீட்டுக்கு வந்த மணிவாசகம்.. கை.. கால்களை அலம்பி.. முகம் கழுவி.. தோளில் கிடந்த துண்டால் முகத்தை துடைத்தபடி ஹாலில் இருந்த சோபாவில்..

"உஸ்.. அப்பாடி.." என்று ஆசுவாசப் பெருமூச்சை விட்டபடி உட்கார்ந்தார்..

அவரை முறைத்தபடி வந்த திலவதியின் கையில் மோர் தம்ளரை எதிர்பார்த்து ஏமாந்து போனவராக..

"மோர் கொண்டு வரலை..?" என்று வினவினார்..

"இல்லை.." இறுக்கமாக பதிலைச் சொன்னாள் திலகவதி..

'ஏன் இப்படிப் பேசறா..?' மணிவாசகம் அவள் முகத்தை கூர்ந்து பார்த்தார்..

திலகவதி அப்படி அலட்சியமாகப் பேசக்கூடியவளல்ல..

"என்னடி..?"

"ஒன்னுமில்லை.."

"ஒன்னுமில்லாததுக்கா முகத்தை ஒரு முழ நீளத்துக்கு தூக்கி வைத்திருக்கிறவ..? அந்த ஃபேனைப் போடு.."

திலகவதி பேனின் சுவிட்சை ஓங்கி அடித்த அடியில் ஃபேன் அலறிக் கொண்டு சுழன்றது..

"என்னடி செய்கிற..?" மனைவியை விசித்திரமாக பார்த்தார் மணிவாசகம்..

"என்னத்தைச் செஞ்சேன்..?" எதிரியிடம் பேசுவதைப் போல கேட்டாள் திலகவதி..

"ஃபேனைப் போடச் சொன்னா.. சுவிட்ச் பாக்ஸை உடைக்கிற.. நீ ஒரு மார்க்கமாத்தாண்டி இருக்க.."

"என்ன செய்கிறது..? கட்டிக்கிட்ட ஆம்பளை உண்மை.. சண்மையை பொண்டாட்டிகிட்டச் சொல் கிறவரா இருந்தா பொண்டாட்டியும் ஒரு மார்க்கமா இல்லாம.. சாந்தமா.. பாந்தமா இருந்திருப்பா.. இங்கதான் அப்படியில்லையே.."

திலகவதி சமையலறைக்குள் போனாள்.. அவள் கைபட்ட பாத்திரங்கள் டாமால்... டுமால்... என்ற சப்தங்களை எழுப்பியதில் மணிவாசகத்தின் ஆசுவாசம் அம்போ எனப் பறந்து போய் விட்டது.. அவர் எழுந்து சமையலறைக்குள் சென்றார்.. அவர் வந்து

நிற்பதை உணர்ந்தும்.. பார்த்தும்.. பார்க்காதவளைப் போல திலகவதி தன்போக்கில் பாத்திரங்களை உடைத்துக் கொண்டிருந்தாள்..

"திலகவதி.."

"திலகவதிக்கு என்ன வைச்சிருக்கீங்க..?"

"வேலை முடிஞ்சிருச்சா..?"

"எப்படி முடியும்..? இருபத்தி நாலுமணி நேரமும் வேலை செஞ்சாலும் ஓயாத வேலை.. இந்த வீட்டு வேலைதான்.. ஒருநாள் செஞ்சு பாருங்க.. அப்பத் தெரியும்.. பொம்பளையாப் பொறந்தவள எப்படி அடிமையா வேலை வாங்கறோம்ன்னு.."

'என்னடா இது..!'

திலகவதியின் உரிமைக் குரலில் சஞ்சலப் பட்டுப் போனார் மணிவாசகம்.. பெண்ணுரிமை வாதத்திற்கும்.. திலகவதிக்கும் அதிகதூரம் என்று அவர் போட்டு வைத்திருந்த கணக்கீடு தவறான கணக்கீடோ..?

"நீ இப்படியெல்லாம் பேச மாட்டியேடி.."

"அப்படி உங்ககிட்ட நான் வந்து சொன்னேனா..? நீங்களா அப்படியொரு முடிவுக்கு வந்தா அதுக்கு நான் பிணையாக முடியுமா..?"

"புதுசாப் பேசறியேடி.."

"மனசில இருக்கிறதைப் பேசறேன்.. மாடு மாதிரி உழைக்கிறதுக்குத்தான் பெண்ஜென்மம் இருக்குன்னு முடிவே பண்ணிட்டிங்களா..? உங்களுக்கு சமைச்சுப் போட நான் வேணும்.. துணிமணிகளை துவைச்சுப் போட நான்

வேணும்.. வீட்டைப் பாத்துக்க நான் வேணும்.. பிள்ளை பெத்து வளர்க்கிறதுக்கும் நான் வேணும்.. ஆனா.. உண்மை சண்மையைப் பேச மட்டும் உங்க மாமன் மகன் வேணும்.. அப்படித்தானே..? அப்புறம் எதுக்காக என் கழுத்தில் தாலியைக் கட்டினீங்க.. அவன் கழுத்திலேயே அதைக் கட்டியிருக்கலாமே..."

8

திலகவதியின் கோபம் பல ஆண்டுகளாய் பதுங்கியிருந்தது.. சமயம் கிடைத்ததும் சீறிப் பாய்ந்து விட்டது..

"சேச்சே.. என்னப் பேச்சுன்னு பேசற..? வாயை மூடு.."

"உங்களுக்குத்தான் நான் பேசினாலே பிடிக்காதே.. வாயை மூடிரனுமே.. அதுவே உங்க மாமன்மகன் வாயைத் திறந்தா அது வில்லங்கமா இருந்தாலும் விழுந்து விழுந்து கேப்பீங்களே.."

"திலகவதி.."

"போதும்.. இந்த சத்தத்தை உங்க மாமன் மகன்கிட்டக் காண்பிங்க.. என்கிட்ட வேணாம்.. ஆட்டைக் கடிச்சு.. மாட்டைக் கடிச்சு.. ஆளைக்கடிச்ச கதையாய்.. நம்மள குடும்பத்தோட சுத்துப்பட்டி பஞ்சாயத்திலே நிக்க வைச்சிட்டான் உங்க மாமன் மகன்.. இனியும் நான் வாயை மூடிக்கிட்டு இருந்தா இந்தக் குடும்பம் என்ன கதிக்கு ஆளாகுமோ.."

"திலகா.. அவன் என் தங்கச்சி புருசன்டி.."

"பாவம் மல்லிகா..! உங்க கூடப் பிறந்த பாவத்துக்கு.. இவனைப் புருசன்னு சொல்லிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியிருக்கா.. அவளுக்கு செஞ்ச

கொடுமை பத்தாதுன்னு உங்க மகளுக்கும் கொடுமை செய்யத் துணிஞ்சிட்டிங்க.."

"ஏய்.. ஏய்.. சுமித்ராவுக்கு நான் என்னடி கொடுமை செஞ்சேன்..?"

"எவனாவது ஒரு காவாலிப்பயலுக்கு நம்ம மகளைப் பொண்ணு கேட்டு வந்தா.. நேராப் போயி நீங்க விசாரிக்கனும்.. அதை விட்டுட்டு.. இன்னொரு காவாலிப் பயலை அனுப்பி வைச்சு விசாரிக்கச் சொல்லியிருக்கக் கூடாது.."

"நாக்கு நீளுது திலகா.."

"மாட்டியிருக்கிறது என் மகளோட வாழ்க்கை.. நாக்கு நீளத்தான் செய்யும்.."

"சுமித்ரா என்னோட மகள்.."

"அந்த நினைப்பிருந்தா இப்படியொரு பஞ்சாயத்தைக் கூட்டித் தொலைச்சிருக்க மாட்டிங்க.."

"நானாடி பஞ்சாயத்தைக் கூட்டச் சொன்னேன்..?"

"உங்க மாமன் மகனை விட்டுக் கொடுக்காத உங்க பேச்சு பஞ்சாயத்தைக் கூட்ட வைச்சிருச்சு.."

மணிவாசகம் களைத்துப் போனார்.. மனைவி காட்டிய முழு வீச்சு எதிர்ப்பில் அவரின் மன நிம்மதி பறந்து போனது..

"சமாதானமாய் பேசிப் பாருங்க.." என்றாள் திலகவதி..

"எப்படிடீ..? அவன் என் மாமன் மகனை மன்னிப்புக் கேட்கச் சொல்றானேடி.."

"கேட்டா அவனொன்னும் குறைஞ்சு போக மாட்டான்.."

"செய்யாத தப்புக்கு அவன் ஏன் மன்னிப்புக் கேட்கனும்..?"

"அவன் தப்புச் செய்யலைன்னு உங்களுக்குத் தெரியுமா..?"

திலகவதி சமையலறையை விட்டுவிட்டு வெளிநடப்பு செய்து விட்டாள்.. பிள்ளைகள் விவரம் கேட்டபோது

காய்ச்சல் என்று காரணம் சொல்லிவிட்டு இழுத்துப் போர்த்திப் படுத்து விட்டாள்.. மணிவாசகத்திடம் முகம் கொடுத்துப் பேசவில்லை..

சுமித்ராவும்.. சுந்தரமும் எதுவும் தெரியாதவர்களாக.. மல்லிகா சமைத்ததை நொட்டை சொல்லியபடி சாப்பிட்டார்கள்.. மல்லிகாவின் பெண்களிடம் வம்பிழுத் தார்கள்.. நாள்கள் உருண்டு.. விடிந்தால் புதன்கிழமை என்ற நிலையில் மல்லிகா தன்னைத் தனிமைச் சிறையில் இருத்திக் கொண்ட திலகவதியை அணுகினாள்..

"அண்ணி.."

"ம்ம்ம்..."

"நாளைக்கு நாம குடும்பத்தோட அன்னவாசலுக்கு கிளம்பியாகனும்.."

"அதில உனக்கு மெத்த சந்தோசம் போல இருக்கு.."

குத்தலும்.. கோபமுமாக கேட்டாள் திலகவதி.. புண்ணான மனதை ஒரு புன்னகையில் மறைத்தபடி அண்ணன் மனைவியின் அருகில் அமர்ந்தாள் மல்லிகா.. அவள் கையை தன் கைக்குள் பத்திரப் படுத்திக் கொண்டாள்..

"உண்மையைச் சொல்லனும்னா எனக்குச் சந்தோசம் தான் அண்ணி.."

"மல்லிகா.."

"நினைச்சுப் பாருங்க அண்ணி.. வெறும் வாய் வார்த்தையில மன்னிப்புக் கேட்கிறதுக்கே மாட்டேன்னு சொன்ன நம்ம அண்ணன்.. குடும்பத்தோட பஞ்சாயத்தில எல்லார் காலிலயும் விழுந்து மன்னிப்பு கேட்டிருவாரா..?"

"வேணாம் மல்லிகா.. நானே நொந்து போயிருக்கேன்.. நீ அதில கபடி விளையாடிப் பார்க்காதே.."

"இல்லண்ணி.. நான் சொல்ல வந்ததே வேற.."

"என்னத்தைச் சொல்ல வந்த..? உங்க அண்ணன் மன்னிப்புக் கேட்கலைன்னா என்ன ஆகும்ன்னு நினைச்சுப்

பார்த்தியா..?"

"என்ன ஆகும்..? எனக்குத் தெரிஞ்ச வரையில்.. அண்ணன் மன்னிப்புக் கேட்கலைன்னா நம்ம சுமித்ராவை அந்த அன்னவாசல் ஜமீன்தாருக்கு கட்டிக் கொடுக்க வேண்டியிருக்கும்.. அவ்வளவுதானே..?"

"மல்லிகா..."

திலகவதியின் விழிகளில் உயிர்ப்பு வந்தது.. அவள் வெகு சந்தோசமாக நாத்தனாரின் கையைப் பிடித்துக் கொண்டாள்..

"ஆமாங்கண்ணி.. என்னோட கணக்கு சரியாயிருந்தா அதுதான் நடக்கும்... அது நடக்கனும்னுதான் இந்த பஞ்சாயத்தையே அவங்க கூட்டியிருப்பாங்களோன்னு எனக்குத் தோணுது.."

"எதை வைச்சு அப்படிச் சொல்ற..?"

"இந்த மனுசன் சும்மாயிருக்க மாட்டாம அந்த தனஞ்ஜெயன் நம்ம சுமி மேலே ஆசைப்பட்டு பொண்ணு கேட்டதா பழி போட்டிருக்கார்.. நம்ம அண்ணனும் கூட்டுச் சேர்ந்துக்கிட்டு அந்த தனஞ்ஜெயன் காதுபட அவரோட அம்மாகிட்ட உனக்கு மருமகளா அனுப்பத்தான் என் பொண்ண பெத்து வளர்த்து வைச்சிருக்கேனான்னு கேட்டிருக்கார்.. அந்த தனஞ்ஜெயன் அண்ணனைப் பாத்து.. என் அம்மாவுக்கு உங்க மகளை மருமகளா அனுப்ப மாட்டிங்களோன்னு சவால் விட்டிருக்கார்.."

"ஆத்தாடி.. இம்புட்டுக் கதயும் உனக்கெப்படி தெரியும் மல்லி..? பக்கத்தில இருந்து பாத்ததைப் போல இல்ல பேசற.."

"நான் பக்கத்தில இல்லைன்னா என்ன அண்ணி..? அதான் நான் கழுத்தை நீட்டியிருக்கிற குணசாலி புருசன் பக்கத்தில இருந்திருக்காரே.." கசப்புடன் சொன்னாள் மல்லிகா..

இப்போது ஆறுதலாக கைபிடித்து தட்டுவது திலகவதியின் வேலையாக ஆகிப் போனது..

"நடந்ததை மாத்த முடியுமா மல்லிகா..?"

"அதனாலதான் சொல்றேன்... இனி நடக்கப் போகிறதையாவது நல்லவிதமா மாத்தலாம்.. எப்படியும் நம்ம சுமித்ராவை நல்ல இடத்தில கட்டிக் கொடுக்க என் புருசன் விடப் போறதில்ல..."

அதில் பொதிந்திருந்த உண்மையில் திலகவதி மௌனமானாள்.. அவளால் என்ன பேச முடியும்.. கட்டிய மனைவியே கணவனின் கயமைத்தனத்தைப் பற்றித் தெளிவாக மதிப்பிட்டுச் சொல்கிறாள்.. ஆமாம் என்று சொன்னால் அந்தப் பேதையின் மனம் வலிக்காதா..?

கயவனாக இருந்தாலும் அவன் அவளின் கணவனாகித் தொலைத்து விட்டானே.. ஃபுல்லாக குடித்தாலும் அந்தக் குடிகாரன் அவளுக்குப் புருசனாகித் தொலைத்து விட்டானே..

"அண்ணனும் மாமன் மகன் சொல்றதுதான் வேதம்ன்னு என் புருசன் பேச்சுக்குத் தலையை ஆட்டி வைச்சிருவாரு.. இந்த வீட்டுக்கு ஒரு மல்லிகா போதும் அண்ணி.. சுமித்ராவும் என்கூட கூட்டுச் சேர வேணாம்.."

நாத்தனாரின் தவிப்பில் திலகவதியின் மனம் கரைந்தது.. இவள்தான் எப்பேற்பட்டவள் என்று அவள் மனம் நெகிழ்ந்து போனாள்..

"அதனாலதான் சொல்றேன் அண்ணி.. நம்ம சுமித்ராவுக்கு கிடைத்திருக்கிறது அதிர்ஷ்ட வாய்ப்பு.. இதைப் பயன்படுத்தி அவளை அன்னவாசல் ஜமின்தாருக்கு கட்டிக் கொடுத்திடறதுதான் அவளுக்கு நல்லது அண்ணி.."

"அவங்க ஜமீன் வம்சம் மல்லிகா.. கோடிஸ்வரங்க.. நம்மால நினைச்சுப் பாக்க முடியாத உயரத்தில இருக்கிறவங்க.."

"அவங்களத்தான்.. உங்க புருசனும்.. என் புருசனும்.. கூட்டணி போட்டுக்கிட்டு அவமானப் படுத்தியிருக்காங்க..

அண்ணி.. சும்மாவும் பேசலை.. நீ எங்க வீட்டுப் பொண்ணக் கேட்ட.. நாங்க உனக்கெல்லாம் பொண்ணு கொடுப்போமான்னு பேசி வைச்சிருக்காங்க.."

"கடவுளே..!"

திலகவதி மனம் நொந்து போனாள்.. தேடினாலும் கிடைக்காத மாப்பிள்ளை தானாக தேடி வந்து நின்றால்.. கடவுளை கையெடுத்துக் கும்பிட்டு விட்டு அந்த மாப்பிள்ளையை ஒரே அமுக்காய் அமுக்கி பெண்ணைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றுதானே பெண்ணைப் பெற்றவன் நினைப்பான்..? அதை விட்டுவிட்டு அப்பேற்பட்ட மாப்பிள்ளையுடன் அடிதடி சண்டைக்குப் போகிறவன் அறிவாளி ஆவானா..?

"இப்ப பஞ்சாயத்து வரைக்கும் பிரச்னை வந்து நின்னிருச்சு.. இவ்வளவு பெரிய வார்த்தையைக் கேட்டவங்க சும்மா விட மாட்டாங்க அண்ணி.. நாம எதுக்கும் தயாரா கிளம்பறதுதான் நல்லது அண்ணி.."

"எதுக்கும் தயாரான்னா..?"

திலகவதியின் கேள்விக்குப் பதிலைச் சொல்ல ஓர்நொடி தயங்கினாள் மல்லிகா.. அடுத்த நொடியில் பெருமூச்சுடன் விளக்கம் சொன்னாள்.. வேறு வழியில்லை.. நிலைமையை அவர்கள் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும்..?

"சுமித்ராவை அங்கேயே அவங்க கையில பிடிச்சுக் கொடுத்திட்டு வர வேண்டி இருந்தாலும் இருக்கலாம்.."

"என்ன மல்லி இப்படிச் சொல்ற..? கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறதுன்னா சரி.. நீ சொல்கிறது வேற மாதிரியில்ல இருக்கு.."

"இல்லேண்ணி.. இங்கேயும் கல்யாணம் நடக்கும்.. அந்தக் கல்யாணம் நாளைக்கே நடந்துரும்ன்னு தோணுது.."

மல்லிகாவுக்குத் தோன்றினால் அதற்குப் பின்னால் ஆயிரம் காரண காரியங்கள் இருக்கும் என்பதை அறிந்த வைத்திருந்தவள் திலகவதி.. லட்சுமிபுரத்துக்கு அந்த

காரண காரியங்கள் சரிப்பட்டு வரலாம்.. அன்னவாசலுக்கு எப்படி சரிப்பட்டு வரும்..?

"ஜமீன் வீட்டுல சொந்த பந்தங்கள் வந்து இறங்கியிருக்கிறதா சுத்து வட்டாரத்தில பேசிக்கிறாங்க அண்ணி.. வீட்டு வாசலிலே ஊரை அடைச்சு பந்தல் போட்டிருக்காங்களாம்.. அன்னவாசலில இருக்கிற அவங்க கல்யாண மண்டபத்திலே மூணு வேளையும் பந்தி நடக்குதாம்.. மண்டபமே ஜே.. ஜேன்னு இருக்கிறதாய் சொல்லிக்கிறாங்க.. சமையலுக்கு பெயர் வாங்கின கோஷ்டிய ஒரு வார சமையலுக்கு புக் பண்ணியிருக் காங்களாம்.. காய்கறியும்.. மளிகை ஜாமானும் லாரி.. லாரியா வந்து இறங்கியிருக்காம்.."

மல்லிகா சொன்ன விவரங்களில் கலவரப் பட்டுப் போனாள் திலகவதி.. அவளின் மகளுடைய திருமணம்.. திடிர் திருமணமாக நடக்கப் போகிறதா..?

"நமக்குத்தான் இது திடிர் திருமணம்.. அவங்க பக்கம் பத்திரிக்கையே அடிச்சு ரகசியமா கொடுத்துக்கிட்டு இருக்காங்களாம்.. நெருங்கின சொந்த பந்தத்த நேரில போய் அழைச்சிருக்காங்களாம்.."

"ஒரே பொண்ணு மல்லிகா.. ஊரைக் கூட்டி பந்தல் போட்டு.. பாக்கு வெத்திலையோட பத்திரிக்கை வைச்சு.. பரிசம் போட்டு.. பொண்ணழைக்க வர்ற காரில பெண்ணைக் கூப்பிட்டுக்கிட்டு.. நம்ம ஊரு ஜனங்களுக்கு நாலு பஸ் ஏற்பாடு பண்ணி.. மண்டபத்தில போய் இறங்கி.. நலங்கு வைச்சு.. முகூர்த்த நேரத்திலே பெண்ணை தாரை வார்த்துக் கொடுத்து.. அவளை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பி வைச்சு.. மறுநாளிலே போயி மறு வீட்டு விருந்துக்கு அழைச்சு.. வீட்டுக்கு வார பொண்ணு மாப்பிள்ளைக்கு ஊரு மெச்ச மறுவீட்டு விருந்தை ஆக்கிப் போட்டு.. லாரி.. லாரியா சீர்வரிசை சாமான்களை சம்மந்தி வீட்டில கொண்டு போயி மெப்பனையா இறக்கி வைச்சிட்டு வாரது எப்படியிருக்கும்..? இப்படி பஞ்சாயத்தில நின்னு பொண்ணை தாரை வார்த்துக் கொடுத்துட்டு வாரது

எப்படியிருக்கும்..? நினைச்சாலே நெஞ்சம் பதறுது மல்லிகா.."

பெண்ணைப் பெற்றவளின் பரிதவிப்பில் மல்லிகாவின் மனம் கலங்கியது.. அவளும் ஒன்றுக்கு இரண்டாய் பெண் குழந்தைகளை பெற்று வைத்திருக் கிறாளே.. இதே நிலைமை அவள் மகளுக்கு வந்தால் அவளுக்கு எப்படியிருக்கும்..?

அதை எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தால் நடைபெறப் போவதை எப்படி எதிர் கொள்வது..? அதற்கான மனோதிடம் வேண்டாமா..?

"நீங்க சொன்ன அத்தனை சடங்கு.. சாங்கியத்தையும் ஒன்னு விடாம என் கல்யாணத்தில பண்ணினீங்களே அண்ணி.. நான் என்னத்த வாழ்ந்துக்கிட்டு இருக்கேன்..? வாழ்க்கைங்கிறது சடங்கு.. சாஸ்திரத்தில இல்லை அண்ணி.. நாம வாழற வாழ்க்கையில இருக்கு.. அப்படிப் பார்க்கப் போனா.. நம்ம சுமித்ரா அருமை.. பெருமையா வாழ்வா பாருங்க.." மல்லிகா தைரியம் கொடுத்தாள்..

திலகவதி கேவி அழுதாள்.. அழுகட்டும் என்று மல்லிகாவும் விட்டு விட்டாள்.. மனம் விட்டு அழுது விடட்டும்.. மனதில் உள்ள சுமையெல்லாம் கண்ணீரில் கரைந்து விட்டால் எதையும் எதிர்கொள்ளும் திடம் அங்கு வந்து விடும்..

அழுது.. அழுது.. ஓய்ந்த திலகவதி.. கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.. அந்த இரவு வேளையில் மகளின் அறையை அடைந்தவள்.. கட்டிலில் படுத்தபடி நாவல் படித்துக் கொண்டிருந்த சுமித்ராவிடம்..

"சுந்தர் உன்னைக் கூப்பிட்டான் சுமித்ரா.. போயி.. என்னன்னு கேட்டுட்டு வா.." என்று சொன்னாள்..

"இப்பத்தான் புக்கை கையில எடுத்தேன்.. அதுக்குள்ள உங்களுக்கும் உங்க மகனுக்கும் மூக்கு வியர்த்திருச்சா..?" சுமித்ரா அலுத்தபடி புத்தகத்தை மூடி வைத்து விட்டு போனாள்..

திலகவதியும்.. மல்லிகாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அவர்களுக்குத் தெரியும்.. சுந்தர் கூப்பிடவில்லை என்று சொன்னாலும்.. சுமித்ரா அவனுடன் உட்கார்ந்து வாயடித்து விட்டுத்தான் வருவாள் என்று..

"இன்னைக்கு தம்பிகூட விளையாடிக்கிட்டு இருக்கா.. நாளைக்கு எங்கே இருப்பாளோ.." திலகவதிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது..

"எங்கே இருக்கப் போகிறா.. அன்னவாசல் ஜமீனில மகாராணியா இருக்கப் போகிறா.. இதுக்குப் போயி வருத்தப்பட்டு நின்னா ஆகிற வேலையை யாரு பார்க்கிறது அண்ணி..?" மல்லிகா அதட்டல் போட்டு சூழ்நிலையை உணர்த்தினாள்..

அவர்கள் படுவேகமாக செயல்பட்டார்கள்.. சுமித்ராவின் பெட்டிகளில் சுவர் அலமாரியிலிருந்த அவளுடைய துணிகளை அடுக்கி முடித்தார்கள்.. இன்னொரு பெட்டியில் அவள் விரும்பிப் படிக்கும் புத்தகங்கள்.. அவளுடைய பள்ளி.. மற்றும் கல்லூரி படிப்புகளின் சான்றிதழ்கள்.. குடும்பத்தினர் சேர்ந்து

எடுத்த போட்டோ ஆல்பம் இவற்றை பார்த்துப் பார்த்து சேகரித்து பத்திரப் படுத்தி வைத்தார்கள்.. அவளுடைய கைப்பையில் டூத்பிரஷ்.. பற்பசை.. சோப்பு.. சீப்பு..

பவுடர்.. மற்றும் ஒப்பனைப் பொருள்கள் அடங்கிய பெட்டியையும்.. மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டியையும் வைத்தார்கள்.. சுமித்ராவுக்கான நகைகளையும்.. கொஞ்சம் பணத்தையும் ஒரு சிறு பெட்டியில் வைத்து அதை திலகவதி கையில் எடுத்துக் கொண்டாள்..

வெளியே காலடி சப்தம் கேட்டது.. சுமித்ரா வந்து கொண்டிருப்பதை உணர்ந்த மல்லிகா பரபரப்புடன் பெட்டிகளை கட்டிலுக்கு அடியில் தள்ளி விட்டாள்.. உள்ளே வந்த சுமித்ரா..

"அந்த பொய் சொல்லி.. என்னைக் கூப்பிடவே இல்லைன்னு சாதிக்கிறான்ம்மா.. முதுகில் ரெண்டு போடு போட்டேன்.." என்று சுவாதீனமாக சொல்லியபடி அவள் விட்டுவிட்டுப் போன புத்தகத்தை தேடினாள்..

அதைத்தான் திலகவதியும்.. மல்லிகாவும்.. பெட்டியில் அடுக்கி வைத்து விட்டார்களே.. வேறு வழியில்லாத திலகவதி.. அவளையுமறியாமல்..

"படுத்துத் தூங்கு சுமித்ரா.. நாளைக்கு ஊருக்குப் போக வேண்டியிருக்கு.." என்று சொல்லி விட்டாள்..

9

"ஊருக்குப் போகனுமா..? எந்த ஊருக்கும்மா..?"

வியப்புடன் கேட்டாள் சுமித்ரா.. இரவு மணி பத்தைத் தாண்டியிருந்த அந்த நேரம் வரை அவர்களின் குடும்பம் ஊருக்குக் கிளம்பப் போகிறது என்றே அவளுக்கும் சுந்தருக்கும் தெரியவில்லையே..

"அன்னவாசலுக்குப் போகனும் சுமித்ரா.."

"அங்கே யாரிருக்காங்கம்மா..? நம்ம சொந்தத்திலே யாரும் அங்கே இல்லையே.."

"சொந்தம் இருந்தாத்தான் போகனுமா சுமி... நம்ம இனத்தில இருக்கிறவங்க வீட்டில ஒரு விசேசம்.. அதில குடும்பத்தோட கலந்துக்கனும்னு உங்க அப்பா சொல்கிறாரு.. அதனால விடியறதுக்கு முன்னாலேயே எழுந்திருச்சு குளிச்சுத் தயாராகிரு.."

"பார்க்கலாம்.."

இலகுவாக சொல்லிவிட்டு.. எந்தவிதமான மனக் கிலேசமும் இல்லாமல் நிம்மதியாக உறங்க ஆரம்பித்த மகளின் முகம் பார்த்த அந்தத் தாயின் மனம் கலங்கியது..

மகளின் முடி கோதி.. பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள்.. நள்ளிரவில் உறக்கத்தில் புரண்டு படுத்த சுமித்ரா தாயின் மடியை உணர்ந்தவளாய் தூக்கக் கலக்கத்துடன்..

"அம்மா.." என்றாள்..

"அம்மாதான் மகளே..! உன் அம்மாதான்.. தூங்கு.."

கண்ணீருடன் மகளைத் தட்டிக் கொடுத்தாள் அந்தத் தாய்.. உறக்கத்துடன் தாயின் மடியில் முகம் புதைத்த சுமித்ரா.. அவளின் இடுப்பைக் கட்டிக் கொண்டு உறங்கிப் போனாள்..

விடியும் வரை தூங்காமல் அந்த இரவின் ஒளியில் மகளின் முகத்தைப் பார்த்துக் கண்ணீரை உகுத்தபடி தூங்காமல் இருந்தாள் திலகவதி..

விடிந்தது.. வீடே மௌனமாக அன்னவாசலுக்குக் கிளம்பத் தயாரானது.. அந்த நேரம் பார்த்து தோளில் ஒரு டிராவல் பேக்குடன் குதிரை வண்டியில் வந்து வாசலில் இறங்கினாள் தாரா.. சுமித்ராவின் கல்லூரி சிநேகிதி..

"ஏய்.. தாரா.. என்னடி திடிர்ன்னு வந்து நிற்கிற..?" சுமித்ரா கண்கள் மின்ன தோழியைக் கட்டிக் கொண்டாள்.

அழையாத விருந்தாளியாய் வந்து நிற்பவளை வரவேற்க முடியாமல் குடும்பத்தின் பெரியவர்கள் கைகளைப் பிசைந்தார்கள்..

"பக்கத்து ஊரில சொந்தக்காரங்க வீட்டுக் கல்யாணம்.. இவ்வளவு கிட்டத்தில வந்துட்டு.. உன்னைப் பார்க்காம போக மனசில்லை.. அதான் அப்பாம்மாவுக்கு டாட்டா சொல்லி அனுப்பி வைச்சிட்டு.. உன்கூட ஒரு வாரம் இருந்துட்டுப் போகலாம்ன்னு வந்தேன்.." தாரா உற்சாகமாக சொன்னாள்..

'அதுசரி.. என் மகளே.. இன்னைக்கு சாயங்காலம் என் வீட்டுக்கு திரும்பி வாராளோ.. இல்லியோ.. இந்த லட்சணத்தில இவகூட ஒருவாரம் தங்கியிருக்கப் போறியா..' திலகவதிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை..

"வெளியே கிளம்பிக்கிட்டு இருக்கீங்களா..?"

அப்போதுதான் குடும்பத்தினரின் பரபரப்பைக் கவனித்த தாரா வினவினாள்.. என்ன சொல்வது என்று தெரியாமல் பெரியவர்கள் தடுமாறிய போது..

"ஆமாண்டி.. நீயும் கிளம்பு.. ஜாலியா ஒரு டிரிப் அடிச்சுட்டு வரலாம்.." உற்சாகத்துடன் தோழியின் கை பற்றிச் சொன்னாள் சுமித்ரா..

குடும்பத்தினர் பதறிப் போய் விட்டார்கள்.. மல்லிகாவோ.. திலகவதியின் கையைப் பிடித்து அழுத்தி..

"அவளும் வரட்டும் அண்ணி.." என்றாள்..

"புரிஞ்சுதான் பேசறியா.. நாம போகப் போறது பஞ்சாயத்துக்கு.. அதை இவ தெரிஞ்சுக்கனுமா..?"

"சுமித்ராவே தெரிஞ்சுக்கிறப்ப.. அவளோட தோழியும் தெரிஞ்சுக்கிறதில தப்பு எதுவும் இல்லை அண்ணி.. அதோட.. சுமித்ராவுக்கும் தோழிப் பொண்ணு வேணுமில்லையா..?"

"மல்லிகா..."

திலகவதியால் பேச முடியவில்லை.. மணிவாசகம் மனைவியுடன் பேச முயன்று தோற்றார்.. முகம் இறுகிப் போயிருந்த திலகவதி கணவரிடம் பேசுவதை தவிர்த்தாள்.. ஏஸி செய்யப்பட்ட சொகுசு வேன் வாசலில் வந்து நின்றது.. தாராவுடன் பேசிக் கொண்டிருந்த சுமித்ரா எதையும் கவனிக்கவில்லை என்பதை உறுதி படுத்திக் கொண்ட மல்லிகாவும் திலகவதியும்.. அவள் அறையில் கட்டிலுக்கு அடியிலிருந்த பெட்டிகளை எடுத்து வேனில் அடுக்கினார்கள்.. மறக்காமல் நகை இருந்த சிறு பெட்டியை தன் வசத்தில் வைத்துக் கொண்டாள் திலகவதி..

"எதுக்குடி இத்தனை பெட்டிக..?"

சந்தேகம் கேட்ட மணிவாசகம் மனைவி முறைத்த முறைப்பில் அடங்கி விட்டார்.. மாமன் தனது மனைவியுடன் பேச விழைவதைக் கவனித்த திருக்குமரன் அப்படியேதும்

நிகழ்ந்து கணவன் மனைவிக்கு இடையினில் பாசப் பிணைப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக.. மணிவாசகத்தின் பக்கத்தில் அட்டை போல ஒட்டிக் கொண்டான்..

"ம்மா.. என் ஹேண்ட் பேகில எதுக்கும்மா டூத்பிரஷ்.. பேஸ்டுன்னு இத்தனை திங்ஸை அடுக்கியிருக்கீங்க..?"

சுமித்ரா அவற்றை கீழே கொட்டப் போனதில் திலகவதி..

"கொட்டாதே.. கொட்டாதே.." என்று பதறியதில் அவள் திலகவதியை விசித்திரமாக பார்த்தாள்..

"என்னம்மா..?"

"ஒன்னுமில்ல.. நீ தாராவை சாப்பிடக் கூப்பிட்டு வா.. பாவம்.. பிள்ளை எப்பச் சாப்பிட்டுச்சோ என்னவோ.."

திலகவதியின் திருப்பி விடலுக்குப் பலன் இருந்தது.. சுமித்ரா கைப்பையில் இருப்பதை கீழே கவிழ்க்கும் உத்தேசத்தை மறந்து தோழியைக் கவனிக்க ஓடிவிட்டாள்.. அந்த நேரம் பார்த்து தாராவின் டிராவல் பேகையும் தூக்கி சுமித்ராவின் பெட்டிகளுடன் வைத்துவிட்டாள் மல்லிகா..

"எதுக்கு மல்லிகா.."

"இருக்கட்டும் அண்ணி.. போகிற இடத்தில நிலைமை எப்படியிருக்மோ என்னவோ.. இந்தப் பெண்ணோட பேகை நாம என்ன தூக்கிச் சுமந்துக்கிட்டாப் போகப் போறோம்..? வேனில போட்டுக்கிட்டுப் போகப் போறோம்.. வேன்தானே சுமக்குது..? நாம சுமக்கலையே.."

மல்லிகா காரணமில்லாமல் எதையும் செய்ய மாட்டாள் என்பதினால் திலகவதியும் மறுத்துப் பேசவில்லை.. இளையவர்கள் என்னவோ உல்லாசப் பயணம் போவதைப் போல ஒருவருக்கொருவர் சீண்டிப் பேசி விளையாடியபடி வேனுக்குள் ஏற.. பெரியவர்கள் கருங்கல்லைப் போல இறுக்கமான முகத்தோடும்.. மனத்தோடும் வேனில் ஏறினார்கள்..

அன்னவாசலில் மணியக்காரர் வீட்டு வளாகத்தில் பஞ்சாயத்து நடைபெறுவதாக இருந்தது.. விசாரிக்கப்படும் இரு வீட்டாரும் கௌரவமான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதினாலும்.. அதில் அன்னவாசலின் ஜமீன்குடும்பம் சம்பந்தப் பட்டிருந்ததாலும்.. வயதுப் பெண்ணை ஊடே வைத்துப் பஞ்சாயத்து பண்ண வேண்டியிருந்ததாலும்.. பஞ்சாயத்தின் இருப்பிடம்.. ஆலமரத்தடியிலிருந்து.. மணியக்காரர் வீட்டு வளாகத்திற்கு மாறியிருந்தது..

மணியக்காரரின் வீடும் தனஞ்ஜெயனின் வீட்டைப் போல அகன்ற பெரிய தூண்களுடன் கூடிய போர்டிகோவைக் கொண்டது.. அங்கே சேர்கள் போடப் பட்டிருக்க.. சுத்துப் பட்டியிலிருந்து வந்திருந்தவர்கள் எல்லோரும் தோட்டத்தில் நிரம்பியிருந்தார்கள்..

தாராவுடன் பேசியபடியே வந்த சுமித்ரா மணியக்காரரின் வீட்டுத் தோட்டத்தைக் கண்டதும்..

"விசேச வீடுங்கிறது சரியாத்தான் இருக்கு.. தோட்டம் பூராவும் ஜனங்களா இருக்கிறாங்களே.." என்று சொன்னாள்..

"இவங்க உங்க சொந்தக்காரங்களா..?" தாரா கேட்டாள்..

"அப்படித்தான் அம்மா சொன்னாங்க..." என்றாள் சுமித்ரா..

மல்லிகாவின் பெண்களின் சடைபின்னல்களை இணைத்து ஒரே ரிப்பனில் ஒன்றுமறியாதவனைப் போல கட்டிவிட்டு சுந்தர் கீழே இறங்கி விட.. எதிரும் புதிருமாக எழுந்த மல்லிகாவின் பெண்கள் பின்னல் இழுபட்டதில் தொபுகடிர் என்று வேனில் குப்புற விழுந்து வைத்தார்கள்..

"இவன் இருக்கானே.."

சுமித்ரா கலகலத்து சிரித்தபடி தாராவுடன் இறங்கினாள்.. அவளின் கலகலத்த சிரிப்பில் கூடியிருந்த மக்கள் கூட்டம் அவளை விசித்திரமாக திரும்பிப் பார்த்து விட்டுத் தங்களுக்குள் கிசுகிசுத்தது..

போர்டிகோவில் போடப்பட்டிருந்த சேர்களில் ஒரு பக்கமாக அமர்ந்திருந்த தனஞ்ஜெயனும்.. இந்திரா தேவியும்.. சிரித்தபடி வேனை விட்டு இறங்கிய சுமித்ராவை பார்த்தார்கள்..

'போட்டோவை விட நேரில் அதிகமான அழகோடு இருக்கா..' தனஞ்ஜெயன் நினைத்துக் கொண்டான்..

'இவதான் சுமித்ராவா..? எப்பேர்பட்ட பேரழகி..! என் மகனுக்கேத்த பொண்ணு..! இவளை என் மகனுக்கு கட்டி வைக்கலேன்னா நான் அன்னவாசல் ஜமின்தாரிணியா இருந்து என்ன பிரயோசனம்..?' இந்திராதேவி.. தீர்க்கமான முடிவை எடுத்தாள்..

தனஞ்ஜெயனுக்கு எதிரே போடப்பட்டிருந்த நாற்காலிகளில் மணிவாசகத்தின் குடும்பம் அமர்ந்தது.. நடுநாயகமாக மணியக்காரரும் பக்கத்து ஊர்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் அமர்ந்திருந்தார்கள்..

அது பஞ்சாயத்து என்பதை உணராமல் சுமித்ரா.. தாராவுடனும்.. சுந்தருடனும் தாழ்ந்த குரலில் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.. அவளின் ஒவ்வொரு சிரிப்புச் சத்தத்திற்கும் தனஞ்ஜெயனின் பார்வை அவள் மீது தாவிப் படிந்து திரும்பி வந்தது..

"எல்லோரும் வந்தாச்சா..? பஞ்சாயத்தை ஆரம்பிக் கலாமா..?"

பஞ்சாயத்திற்கு தலைமை தாங்கியவர் கேட்டார்.. சுமித்ரா அவரைப் பார்த்து விட்டு சுந்தரிடம் முணுமுணுத்தாள்..

"என்னடா இது..? விசேச வீட்டில பஞ்சாயத்துப் பண்ணிக்கிட்டு இருக்காங்க..?"

"ஏதாச்சும் விவகாரமா இருக்கும்.. நமக்கென்ன வந்தது..? வேடிக்கை பார்த்து விட்டுப் போக வேண்டியது தானே.."

"அப்படிங்கற..?"

"ஆமாம்கிறேன்.."

"தாரா.. நீ என்னடி சொல்ற..?"

"உன் தம்பி சொன்னதை வழி மொழியறேண்டி.."

"இவன் சொல்கிறதுக்கு வழிமொழியற ஒரே ஆள் நீதாண்டி.."

சுமித்ரா பொங்கிச்சிரித்தாள்.. எதிர் தரப்பில் இருந்த தனஞ்ஜெயனின் மௌனப் பார்வை அவளை துளைத்தது.. சுமித்ராவுக்கு என்னவோ போல இருந்தது.. அவளும்

அங்கே வந்து இறங்கியதிலிருந்து கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.. அந்தக் கம்பீரமான ஆண்மகன் அவளையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான்..

"யாருடி அது..?" தாரா அவள் காதோரமாக கேட்டாள்.

"தெரியலையே.." என்றாள் சுமித்ரா..

"ஆளு உன்னையே செமத்தியா சைட் அடிக்கிறாண்டி.."

"உஸ்ஸ்.. அப்பா.. இருக்கிறார்.. அவர் காதில விழுந்திரப் போகுது.."

"அவருக்குக் கேட்காது.. ஆளைப் பார்த்தியா.. ஹீரோ போல ஜம்முன்னு இருக்கானில்ல..?"

சுமித்ரா அவனை இப்போது நன்றாக பார்த்து வைத்தாள்.. தாரா சொன்னதைப் போல படு கவர்ச்சியான கம்பீரத்தோடு இருந்தான்.. அவள் பார்ப்பதை உணர்ந்தவனின் பார்வையில் மின்னல் வந்தது..

'ஹேண்ட்சம்மாத்தான் இருக்கான்..'

சுமித்ரா பார்வையை விலக்கிக் கொண்டாள்.. தாராவிடம் பேசுவதைப் போல இருந்தாலும்.. அடிக்கடி அவளின் பார்வையும் அவன் பக்கமே தாவியது..

"ஆரம்பிச்சுரலாம்.." என்றார் மணியக்காரர்..

மணிவாசகத்தின் உடலில் தோன்றிய விறைப்பை அப்போதுதான் கவனித்தாள் சுமித்ரா.. எவரோ ஒருவர் வீட்டுப் பஞ்சாயத்திற்காக அவளுடைய அப்பா எதற்காக

மிலிடிரி மேன் போல விறைப்பாக உட்கார வேண்டும் என்று இருந்தது அவளுக்கு..

அம்மாவிடம் அதைப் பற்றிச் சொல்லலாம் என்று பார்த்தால்.. அவள் அவரைவிட அதிக விறைப்புடன் உட்கார்ந்திருந்தாள்..

'என்னாச்சு இவங்களுக்கு..'

பஞ்சாயத்திற்கு தலைமை தாங்கியவர் தனஞ்ஜெயனின் பக்கமாகத் திரும்பி..

"பிராது கொடுத்திருக்கிறது அன்னவாசலோட ஜமீன்தாரர் அதனாலே அவர் முதலில் சொல்லட்டும்.." என்றார்..

"ஏய்ய்.. நம்ம ஆளுதான் யாரையோ பஞ்சாயத்துக்கு இழுத்திருக்கிறாரு போல இருக்குடி.." என்றாள் தாரா..

ஏனோ அவள் 'நம்ம ஆளு..' என்று தனஞ்ஜெயனை விளித்ததை சுமித்ரா விரும்பவில்லை.. அது எதனால் என்றும் அவளுக்குத் தெரியவில்லை.. அதனால் அசுவராஸ்யம் போலக் காட்டிக் கொண்டபடி..

"ஓயோ.." என்றாள்..

தனஞ்ஜெயன் சொல்ல ஆரம்பித்தான்..

"ஐயா.. இரண்டு வாரத்துக்கு முன்னாலே நான் பேக்டரியில இருந்து திரும்பி வந்துக்கிட்டு இருந்தேன்.. அப்ப.. லட்சுமிபுரத்து மணிவாசகத்தோட தங்கச்சி புருசன் குடி போதையில என் காருக்கு முன்னாலே விழுந்தார்.. அப்ப என் கணக்குப் பிள்ளையும் கூட இருந்தார்.. ரோட்டில விழுந்து கிடந்த மனுசனுக்கு நெத்தியில அடி பட்டிருந்துச்சு.. அதனால ஐயோ பாவம்ன்னு பரிதாபப்பட்டு என் காரில தூக்கிப் போட்டுக்கிட்டுப் போயி ஆஸ்பத்திரியில சேத்தேன்.. இதுதான் நான் செஞ்சது.. அதுக்கு லட்சுமி புரத்து மணிவாசகம் அவரோட தங்கச்சி புருசனுக்கு குடிக்கவே தெரியாதுன்னும்.. அவரோட பெண்ணைக் கட்டிக்க ஆசைப்பட்டு நான்தான் அவரோட தங்கச்சி புருசனுக்கு ஊற்றிக் கொடுத்து குடிக்க வைத்தேன்னும்..

போதாக் குறைக்கு அவரை ரோட்டில தள்ளி காரை விட்டு மோதி.. ஆஸ்பத்திரியில கொண்டு வந்து சேர்த்தேன்னும் அபாண்டமா என் மேல பழி போடறார்.. இதை உண்மைன்னு அவங்க புரூவ் பண்ணனும்.. இதை பொய்யின்னு புரூவ் பண்ண என்கிட்ட சாட்சி இருக்கு.."

தனஞ்ஜெயன் பேசப் பேச.. ஓர்விதமான குறுகுறுப் போடு அவனையே பார்த்துக் கொண்டிருந்த சுமித்ரா உறைந்து போனாள்..

நடந்து கொண்டிருக்கும் பஞ்சாயத்தின் நாயகி அவள்தானா..?

"என்னடி சுமி இது..?" தாரா பதட்டமானாள்..

"என்னன்னே தெரியலையேடி.. விசேச வீட்டுக்குப் போகலாம் வான்னுதான் சொல்லிக் கூப்பிட்டுக்கிட்டு வந்தாங்க.."

சுமித்ரா நடுங்கும் கைகளுடன் தம்பியின் கையைப் பிடித்துக் கொண்டாள்.. சுந்தர் கோபத்தில் கொதித்தான்..

"எல்லாம் இந்த மாமாவாலே வந்திருக்குக்கா.."

தலைமை தாங்கியவர் இப்போது மணிவாசகத்தின் பக்கமாக திரும்பினார்..

"ஜமீன்தாரர் சொன்னதைக் கேட்டிங்கள்ல.. உங்க பக்கத்து பதிலைச் சொல்லுங்க.."

"ஜமீன்தார்ன்னா கொம்பு முளைச்சிருக்கா..?"

"அப்படியாரும் இங்கே சொல்லலையே மணிவாசகம்.."

"அவர் சொல்கிறதுதான் நியாயம்.. மத்தவங்க சொல்கிறது அநியாயமா..?"

"நீங்களா அப்படி நினைச்சுக்கிட்டா எப்படி..? உங்க பக்கத்து நியாயத்தைச் சொல்லுங்க.. கேட்போம்.. அதுக்காகத்தானே இன்னைக்கு பஞ்சாயத்தே கூடியிருக்கு..?"

"என் தங்கச்சி புருசன் உத்தமன்ங்க.. அவனுக்கு குடிப்பழக்கம் கிடையாது.. அவன் குடிச்சுட்டு வந்தான்னு இவர் சொல்கிறது அக்கிரம்ங்க... பக்கத்து ஊரு பரமசிவம் அவரு மகனுக்காக என் மகளை பொண்ணு கேட்டாரு.. மாப்பிள்ளை வீட்டைப் பாத்துட்டு வர.. என் மகளோட போட்டோவையும்.. ஜாதகத்தையும் கொடுத்து என் தங்கச்சி புருசனை அனுப்பி வைச்சேன்.. அவனும் மாப்பிள்ளை வீட்டைப் பாத்து பேசிட்டு.. எல்லாம் திருப்தியா இருக்கவும் என் மாமன்கிட்ட கலந்து பேசிட்டு தகவல் சொல்றோம்ன்னு சொல்லிட்டு ஊரைப் பாத்து வந்திருக்கான்.. ஊடே இவரு பார்த்துட்டு கதையையே மாத்திட்டாரு.." மணிவாசகம் கோபாவேசத்துடன் பேசித் தள்ளினார்..

10

"இவ்வளவு வேகமா பேச வேண்டிய அவசியமில்லை மணிவாசகம்.." என்றார் தலைமை தாங்கியவர்..

"நெஞ்சு கொதிக்குதுங்க.." என்றார் மணிவாசகம்..

அட அப்பாவியே என்பதைப் போல தனஞ்ஜெயன் அவரை ஓர்பார்வை பார்த்து வைத்தான்.. அதில் கொதித்த அவரின் நெஞ்சம் அடைத்தது..

'இந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்..?' அவர் மனதில் கேள்வி குடைந்தது..

"இந்த அன்னவாசல் ஜமீன்தாருக்கு என் பொண்ணைக் கட்டிக்கனும்னு தோணியிருந்தா என்ன செஞ்சிருக்கனும்..? பரமசிவம் பொண்ணு கேட்டதைப் போல என்கிட்டப் பொண்ணு கேட்டிருக்கனும்.. அதை விட்டுட்டு.. ஒன்னும் தெரியாத என் மச்சினனை மடக்கி.. காருக்குள்ள உட்கார வைச்சு.. ஊத்திக் குடுத்து குடிக்க வைச்சதும் இல்லாம.. பரமசிவத்தோட மகனுக்கு குணம் சரியில்லைன்னு

சொல்லிரு.. அதுக்குப் பதிலா எனக்குக் கட்டிக் கொடுக்க வைச்சா உனக்கு ஐஞ்சு ஏக்கரு புஞ்சை நிலத்தை எழுதி வைக்கறேன்னு ஆசை வார்த்தை காட்டியிருக்கார்.. அவன் மாட்டேன்னு சொல்லி காரை விட்டு இறங்கி ஓடியிருக்கான்.. அப்படி ஓடினவன் மேலே காரை ஏத்திக் கொல்லப் பார்த்திருக்கார்.. எந்தச் சாமி புண்ணியமோ.. அவன் லேசான அடியோடு தப்பிச்சிட்டான்.. அவனைக் கொண்டு போயி நல்லவர் போல ஆஸ்பத்திரியில சேர்த்துட்டு இது எதுவுமே நடக்கலைன்னு சாதிக்கிறார்.."

மணிவாசகம் சொல்வதை கூர்மையான பார்வை யோடும்.. சலனமில்லாத முகத்தோடும் கேட்டுக் கொண்டிருந்தான் தனஞ்ஜெயன்.. கூட்டம் சலசலத்தது.. மணிவாசகத்தை நோக்கிக் கை நீட்டிக் கூச்சலிட்டது.. தலைமை தாங்கியவர் கூட்டத்தை அமைதி படுத்தினார்..

"அன்னவாசல் ஜமீன்தாரரே அமைதியா இருக்காரு.. இதில மத்தவங்க எதுக்காக சத்தம் போடறிங்க..?"

"எங்கே வந்து.. யாரைப் பார்த்து.. ஊத்திக் கொடுத்ததா சொல்கிறாங்க..? ஐயாவைப் பத்தி இப்படிப் பேசற துணிச்சல் எப்படி இவங்களுக்கு வந்தது..?"

"அதைக் கேட்டுக் கொடுக்கத்தானே பஞ்சாயத்து கூடியிருக்கு.. ஆளுhளுக்கு நியாயம் பேசினா.. நான் எப்படி விசாரிக்கிறது..?"

அவர் போட்ட அதட்டலில் கூட்டம் சப்தத்தைக் குறைத்தது.. ஆனால் மௌனமாகி விடவில்லை.. சன்னக்குரலில் மணிவாசகத்தையும்.. அவருடைய தங்கை கணவரையும் அவர்கள் திட்டிக் கொண்டே இருந்தார்கள்..

தலைமை தனஞ்ஜெயனின் பக்கமாக திரும்பினார்..

"லட்சுமிபுரத்து மணிவாசகம் சொல்கிறது இப்படி இருக்கு.. உங்க தரப்பில நீங்க என்ன கேட்டுக்கறிங்க..?"

"இந்தப் பஞ்சாயத்தில நான் கேட்டுக்கிறது இதைத் தான்ங்க ஐயா.. இந்த மணிவாசகத்தின் தங்கச்சி புருசன் சொன்னது எல்லாமே பொய்ன்னு நிரூபிக்க என்னிடம்

சாட்சி இருக்கு.. அதைப் போல அவங்க என்னைப் பத்திச் சொன்னதை உண்மைன்னு அவங்க சாட்சியோட இந்தப் பஞ்சாயத்திலே நிரூபிக்கனும்.. அப்படி நிரூபிக்கத் தவறினா.." தனஞ்ஜெயன் நிறுத்தினான்..

"தவறினா..?" தலைமை கேட்டார்..

"ஒன்னு அவங்க குடும்பத்தோட இந்த பஞ்சாயத்துக்கு முன்னாலே என் காலிலயும் எங்கம்மா காலிலயும் விழுந்து கும்பிட்டு மன்னிப்புக் கேட்கனும்.. இல்லைன்னா.. எந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கிறதுக்காக நான் இந்த வேலைகளையெல்லாம் பண்ணினதா இவங்க சொல்கிறாங்களோ.. அந்தப் பெண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாகனும்.."

தனஞ்ஜெயன் அழுத்தம் திருத்தமாக அவன் பக்கத்தைச் சொல்லி விட்டான்.. சுமித்ராவை அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி தாக்கியது.. அவள் பற்றுகோலைப் போல தம்பியின் கையை இறுக்கமாக பிடித்திருந்தாள்.. தாராவோ.. விழி விரிய ஆச்சரியத்துடன் நடந்து கொண்டிருந்த பஞ்சாயத்தை வேடிக்கை பார்த்தாள்..

"என்ன மணிவாசகம்.. பிராது கொடுத்தவர் சொன்னதைக் கேட்டிங்கள்ல.. நீங்க இவர் மேலே சொன்ன குற்றச்சாட்டை இப்ப.. இந்தப் பஞ்சாயத்தில நிரூபியுங்க.."

"என்னத்தை நிரூபிக்கச் சொல்கிறிங்க..? மாப்பிள்ளை வீட்டைப் பார்க்கப் போனவன் எப்படி குடிச்சான்..? பக்கத்து ஊரில இருந்து இவன் மெயின் ரோட்டுக்கு வந்தப்ப இவர் காரில அடிபட்டிருக்கான்.. அப்படின்னா மாப்பிள்ளை வீட்டிலே காபிக்குப் பதிலா சாராயத்தை ஊத்திக் கொடுத்து உபசரிச்சு அனுப்பினாங் கன்னு சொல்கிறிங்களா..?"

"ஒரு திருத்தம்.." என்றான் தனஞ்ஜெயன்..

"என்ன..?" என்றார் தலைமை..

"இவரோட தங்கச்சி புருசன் மாப்பிள்ளை வீடு பாக்கப் போன இடத்தில மாப்பிள்ளை வீட்டுக்காரங்க காபியை ஊத்தித்தான் இவன் கையிலே கொடுத்திருக்காங்க..

மாப்பிள்ளைதான் ஐயாவை தோப்புக்குக் கூப்பிட்டுக் கிட்டுப் போயி ஊத்திக் கொடுத்திருக்காரு.. சும்மாவும் கொடுக்கலை.. இந்த மணிவாசகம் பெத்து வைச்சிருக்கிற பெண்ணை அந்தக் குடிகாரனுக்கு கட்டிக் கொடுத்தா ஐஞ்சு ஏக்கர் புஞ்சை நிலத்தை எழுதித் தர்றதா சொல்லி ஊத்திக் கொடுத்திருக்கான்.. இந்தக் காவாலிப்பய.. அந்த பிளேட்டை அப்படியே என் பக்கமா திருப்பிப் போட்டு விட்டுட்டான்.."

"வேணாங்கய்யா.. பஞ்சாயத்தாச்சேன்னு பார்க்கறேன்.. வாய் இருக்கிறதுங்கிறதுக்காக எதையும் பழுது படிக்கப் பேசிரக்கூடாது.. இவர் மேலே குத்தம் சொன்னா நிரூபிக்கச் சொல்கிறாரே.. இவர் சொல்கிற இந்தக் குத்தத்தை எப்படி நிரூபிக்கப் போகிறாரு..?"

"இப்படித்தான்.."

தனஞ்ஜெயன் கையிலிருந்த லேப்டாப்பை உயிர்ப் பித்தான்.. அதில் பரமசிவத்தின் தோப்புத் தெரிந்தது.. மணிவாசகத்தின் தங்கையின் கணவனுக்கு பரமசிவத்தின் மகன் சரக்கை சப்ளை செய்து கொண்டிருந்தான்.. அதை ஆவலாக வாங்கி.. தங்கையின் கணவன் தொண்டையில் சரித்துக் கொண்டிருந்தான்.. அவன் வெளுத்துக் கட்டிய விதத்தில் தேர்ந்த குடிகாரனின் லாவகம் இருப்பதை அனைவருமே உணர்ந்தார்கள்.. குடிபோதையின் இடையில்.. பெண்ணைக் கட்டிக் கொடுத்தால்.. ஐந்து ஏக்கர் புஞ்சையை அவனுக்குக் கொடுப்பதாக பரமசிவத்தின் மகன் வாக்களித்தான்.. அப்படியே செய்வதாக சரக்குப் பாட்டிலின் மீது சத்தியம் செய்தான் மல்லிகாவின் கணவன்.. அவன் தள்ளாடியபடியே கிளம்பிச் செல்ல.. பரமசிவத்தின் மகன் மற்ற நண்பர்களைப் பார்த்து..

"நாளைக்கு இவன் வார்த்தை மாறிட்டான்னா என்ன செய்யறது..? அதான் வீடியோவ எடுக்கச் சொன்னேன்.. இப்ப இவன் குடுமி நம்ம கையில.. பொண்ணக் கட்டிக் குடுக்க முடியாதுன்னு இனி இவன் சொல்லிருவானா..?" என்று கேட்டுக் கொண்டிருக்க வீடியோ முடிந்து விட்டது..

மணிவாசகத்தின் மீசை துடித்தது.. சப்த நாடியும் ஒடுங்க உட்கார்ந்திருந்த திருக்குமரனை அந்த இடத்திலேயே பொலி போட்டு விட அவர் துடித்தார்..

"இந்த வீடியோவை பரமசிவத்தின் மகன்தான் என்னிடம் கொடுத்தான்.." உதட்டைச் சுழித்து லேசாக சிரித்தான் தனஞ்ஜெயன்..

எப்போது அன்னவாசலின் தனஞ்ஜெயன் களத்தில் இறங்கி விட்டானோ.. அதற்கு மேல் அவனை எதிர்த்து நிற்பவர்களின் கதி.. அதோ கதிதான் என்பதை அறிந்து வைத்திருந்த பரமசிவத்தின் மகன் முதல் ஆளாய் வீடியோ ஆதாரத்தைக் கொண்டு வந்து தனஞ்ஜெயனிடம் ஒப்படைத்து விட்டு.. இனிமேல் மணிவாசகத்தின் மகளை அவன் மனதால் கூட நினைக்க மாட்டான் என்று அந்த வீடியோவின் மீதே சத்தியம் செய்து கொடுத்து விட்டுப் போய் விட்டான்..

"மீறி நினைச்சா.. உன் உடம்பில இருக்கிற அத்தனை எழும்புகளையும் எண்ணிருவேன்.." தனஞ்ஜெயனும் எச்சரித்துத்தான் அனுப்பி வைத்திருந்தான்..

"இந்த மாப்பிள்ளையைத்தான் உங்க தங்கச்சி புருசன்.. நல்லவரு.. வல்லவரு.. நாலும் தெரிஞ்சவரு.. வெத்தலைபாக்கு கூடப் போடமாட்டாரு.. சிகரெட்டுன்னா அலர்ஜி.. தண்ணின்னா அது பச்சைத் தண்ணியா.. சுடுதண்ணியான்னு கேட்கிற அப்பாவி.. பொண்ணுக அந்தப் பக்கம் வந்தா.. இந்தப் பக்கம் குதிச்சு ஓடிடற மனுசருன்னு அண்டப் புளுகு.. ஆகாசாப் புளுகை புளுகினான்.. இதில இருந்தே உங்க மாமன் மகனோட வருணாச்சலத்த நீங்க தெரிஞ்சுக்கங்க.." என்று மணிவாசகத்திடம் சொன்ன தனஞ்ஜெயன்.. தலைமையைப் பார்த்தான்..

"ஐயா.. இவரோட தங்கச்சி புருசன் என்னைப் பத்திச் சொன்ன அத்தனை அவதூறையும் பொய்யின்னு நான் புரூவ் பண்ணிட்டேன்.. உண்மை எதுங்கிறதையும் காட்டிட்டேன்.. எனக்கு குடிப் பழக்கம் கிடையாது.. இது

சுத்துப் பட்டியில இருக்கிற அத்தனை ஜனங்களுக்கும் தெரியும்.. என்னிடம் வேலை செய்கிறவங்களும் குடிக்கக் கூடாதுன்னு நான் கண்டிசனா ஆர்டர் போட்டே வைச்சிருக்கேன்.. இதுவும் எல்லாருக்கும் தெரியும்.. இனி இவங்க என்ன செய்யப் போறாங்கன்னு.. கேட்டுச் சொல்லுங்க.. மன்னிப்புக் கேட்கப் போகிறாங்களா.. இல்ல.. பொண்ணக் கட்டித்தரப் போறாங்களா..?"

மணிவாசகத்தின் வியர்த்த முகத்தை பயத்துடன் பார்த்தாள் சுமித்ரா.. அவருக்கு இதயநோய் இருந்தது..

'அப்பாவுக்கு இப்படி வியர்க்கக் கூடாதே..'

மணிவாசகம் நெஞ்சைப் பிடித்தபடி பேசத் திணறினார்.. திலகவதி கண்கலங்க.. அவரின் தோளைத் தட்டினாள்..

"என்ன செய்யலாம் சொல்லுங்க.. இத்தனை ஊராளுக முன்னாலே குடும்பத்தோட அவங்க காலில விழுந்து மன்னிப்புக் கேட்கலாமா.. இல்லை பொண்ணை அவருக்கே கட்டிக் கொடுக்கலாமா..?"

அவளுக்குத் துக்கமாக இருந்தது.. தங்கக் குத்தூசி என்பதினால் கீறும்போது வலி ஏற்படாமல் போய் விடுமா..? அன்னவாசல் ஜமீன்தாரரின் மனைவியாகும் வாய்ப்பு திலகவதியின் மகளுக்குக் கிடைத்திருக்கிறது என்பதினால்.. பஞ்சாயத்தில் பெண்ணை விட்டுக் கொடுத்து விட்டு வெளியேற முடியுமா..?

'பாவிப்பய.. அவர்தான் பொண்ணு போட்டோவப் பார்த்திட்டு அழகா இருக்குன்னு சொல்லியிருக்காரே.. பிடிக்கிறவங்களைப் பிடிச்சு.. அவருக்கே பெண் கொடுக்கிறதாய் பேசி முடிச்சிட்டு வாரதை விட்டுட்டு.. அதை பெரும் பிரச்னையாக்கி பஞ்சாயத்தில கொண்டு வந்து நிப்பாட்டிட்டானே..'

அவள் மனம் நாத்தனார் கணவனை வறுத்து எடுத்தது.. அவனோ மனைவியின் பக்கமும்.. மாமன் மனைவியின் பக்கமும் திரும்பிக்கூடப் பார்க்காமல் துக்க வீட்டுக்கு வந்திருக்கிறவனைப் போல வாயில் துண்டை அமுக்கிக்

கொண்டு தலையை வாகாய் குனிந்து மற்றவர்களின் பார்வையைச் சந்திக்கும் துன்பத்திலிருந்து தப்பித்து நின்றிருந்தான்..

"அண்ணி.. பொறுமையா இருங்க.. வெண்ணை திரண்டு வாரப்ப சட்டியை உடைச்சிராதீங்க.." மல்லிகா கிசுகிசுத்தாள்..

"எப்படி மல்லிகா..?" பெண்ணைப் பெற்றவள் குமுறினாள்..

"இத்தனை ஊரு சனங்க முன்னாடியும் பெண்ணை விட்டுக் கொடுத்திட்டுப் போகச் சொல்றியா..? என் மக கல்யாணம் இப்படியா நடக்கனும்..?"

"நாம பேசி வைச்சதை மறந்துட்டிங்களா அண்ணி..? இப்படியாவது நம்ம சுமித்ராவுக்கு நல்ல இடத்தில மாப்பிள்ளை அமையுதேன்னு சந்தோசப்பட்டுக்கங்க.. இங்கே நடந்த கூத்தைக் கவனிச்சீங்கள்ல.. இப்படியொரு பிரச்னை கிளம்பியிருக் கலைன்னா.. அந்த பரமசிவம் பெத்த குடிகாரப் பயலுக்கு நம்ம வீட்டுப் பெண்ணை தாரை வார்த்துக் கொடுத்திருப்போம்.. என் புருசன் ஐந்து ஏக்கர் புஞ்சை நிலத்துக்கு ஆசைப்பட்டு அவன் நல்லவன்னு சொல்லியிருப்பாரு.. என் அண்ணன் தங்கச்சி புருசன் சொல்றதே வேத வாக்குன்னு கண்ணை மூடிட்டு பெண்ணை பாழுங் கிணத்தில தள்ளியிருப்பாரு.."

"சொல்லதே மல்லிகா.."

ஈரக்குலை நடுங்க காதுகளைப் பொத்திக் கொண்டாள் திலகவதி.. இரக்கத்துடன் அவளை அணைத்துக் கொண்டாள் மல்லிகா..

"என் பொண்ணுகளைப் பத்திக் கவலையில்லை அண்ணி.. என்புருசன் ஊரான் வீட்டுப் பொண்ணுகளுக்குத் தான் கெடுதல் செய்வாரு.. அதுவே அவரு பெத்த பொண்ணா இருந்தா.. அருமை.. பெருமையா கல்யாணம் பண்ணி வைப்பாரு.. அதனாலே சுமித்ராவை தப்ப வைக்கிற வழியப் பாப்போம் அண்ணி.."

"எப்படி மல்லிகா.. பெண்ணைப் பெத்தவ.. என் வாயாலே என் மகளை விட்டுக் கொடுக்கிறேன்னு பஞ்சாயத்தில வாயைத் திறந்து சொல்லச் சொல்றியா..? அதுக்குப் பதிலா உயிரை விட்டிருவேன் மல்லிகா.."

மல்லிகா செய்வதறியாது தவித்தாள்.. திலகவதியின் மன உணர்வுகளை பெண்ணைப் பெற்ற தாயாக அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. ஆனால்.. அந்தப் பஞ்சாயத்தில் சுமித்ராவின் வாழ்க்கையை தீர்மானித்தாக வேண்டுமே..

மணிவாசகம் குடும்பத்தோடு மன்னிப்புக் கேட்டாலும் கேட்பார்.. ஆனால் பெண்ணை விட்டுக் கொடுக்க மாட்டார்.. ஒருவேளை அதுபோல நடந்து அவர்கள் சுமித்ராவுடன் ஊர் திரும்ப நேரிட்டால் அதற்குப் பிறகு சுமித்ராவின் நிலைமை என்னவாகும்..?

சுற்றுப்பட்டியும் கூடியிருந்த அந்தப் பஞ்சாயத்தில் அவளின் சொந்த அத்தையின் கணவனே.. ஐந்து ஏக்கர் நிலத்திற்கு ஆசைப்பட்டு ஒரு குடிகார புறம்போக்கு மாப்பிள்ளைக்கு மாமன் மகளை தாரை வார்த்துக் கொடுக்க நினைத்தான் என்ற விவரம் வெளிப்பட்டு விட்டது.. அதற்குப் பின்னால் சுமித்ராவை நல்ல இடத்திலிருந்து பெண் கேட்டு வருவார்களா..?

சுற்றுப்பட்டி பஞ்சாயத்தில் குடும்பத்துடன் மன்னிப்புக் கேட்ட மணிவாசகத்தின் மகள் என்று அவளைச் சொல்லி விட மாட்டார்களா..? அதற்குப் பின்னால் அவர்களின் குடும்பம் லட்சுமிபுரத்தில் பெரிய மனிதர் வீட்டுக் குடும்பமாக தலை நிமிர்ந்து வாழ முடியுமா..?

மணிவாசகத்தின் கௌரவமும் காப்பாற்றப்பட வேண்டும்.. அதே சமயத்தில் சுமித்ராவின் வாழ்வும் வளமாக இருக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரே வழிதான் இருந்தது..

அந்த வழி எதுவென்பதை மல்லிகா தீர்மானித்து விட்டாள்.. எதை.. எப்போது.. யாரைக் கொண்டு செய்ய வேண்டுமென்பது வள்ளுவருக்கு மட்டும் தெரிந்த பாடமல்ல.. இந்தியக் குடும்பங்களில் வாழும் ஒவ்வொரு பெண்ணிற்கும் தெரிந்த பாடம்தான்..

"சுமித்ரா.."

மல்லிகா அண்ணன் மகளின் காதோரமாக சரிந்து முணுமுணுப்பாக பேச ஆரம்பித்தாள்.. அவள் என்ன பேசினாள் என்பதை அருகிலிருந்த தாராவாலும் கேட்க முடியவில்லை.. பக்கத்திலிருந்த சுந்தராலும் கேட்க முடியவில்லை.. சுமித்ராவின் செவியில் மட்டுமே மல்லிகா பேசிய வார்த்தைகள் அட்சர சுத்தமாக விழுந்தன..

"அப்பாவை நினைச்சுப்பாரு சுமி.. அவர் ஹார்ட் பேசண்ட்.. அம்மா வீட்டை விட்டு வெளியே வராதவங்க.. இந்தப் பஞ்சாயத்தில மன்னிப்புக் கேட்க வேண்டி வந்தா அவங்க உயிரோட வீட்டுக்குத் திரும்பிருவாங்கன்னா நினைக்கிற..?"

சுமித்ராவின் இதயம் அதிர்ந்தது.. மல்லிகா சொன்னது அனைத்தும் கடைந்தெடுத்த உண்மை என்பதை அவள் மனம் ஒப்புக் கொண்டது..

'இதை எப்படித் தவிர்ப்பது..?'

சுமித்ரா அவசரமாக யோசித்தாள்.. அதைப் புரிந்து கொண்ட மல்லிகா சுமித்ரா செய்ய வேண்டியது என்ன என்பதை கோடிட்டுக் காட்டிவிட்டாள்..

11

"எனக்கும் தெரியும்.. உனக்கும் தெரியும்.. உன்னைப் பெத்தவங்க ஒருநாளும் பஞ்சாயத்தில பெத்த மகளை விட்டுக் கொடுக்க மாட்டாங்கன்னு.. அதுக்காக எதை வேண்டும்னாலும் அவங்க செய்வாங்க.. மரியாதையை விட்டுட்டு மன்னிப்பும் கேட்பாங்க.. அம்மாடி சுமித்ரா.. அதுக்குப் பின்னாலே அவங்க என்ன ஆவாங்கன்னு

யோசிச்சுப் பாரும்மா.. நீ நினைச்சா இது ரெண்டையும் தடுக்கலாம்.. பெண்ணைப் பெத்தவங்க பெண்ணை விட்டுக் கொடுத்ததாய் இருக்க வேணாம்.. பெண்ணே.. பெத்தவங்களை விட்டுப் பிரிஞ்சதா இருக்கட்டும்.. இது ஒன்னுதான் இப்போதைக்கு உன்னைப் பெத்தவங்களைக் காப்பாத்தறதுக்கு இருக்கிற ஒரே வழி.. நியாயம்ன்னு ஒன்னு இருக்கு.. அந்த நியாயம் அன்னவாசல் ஜமீன்தார் பக்கம்தான் இருக்கு.. உன் அத்தை புருசன் பக்கமும்.. அவர் எதைச் சொன்னாலும் கண்ணைமூடிக்கிட்டு கேட்டுக்கிற உன் அப்பா பக்கமும் இல்லை.. நம்ம வீட்டாளுகளால ஒரு தங்கமான மனுசரோட மனசு புண்பட்டு.. இப்ப சுத்துப்பட்டி பஞ்சாயத்து வரைக்கும் வந்து நிக்குது.. அதையும் நினைப்பில வை.."

மல்லிகா சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டாள்.. மணிவாசகம் வியர்த்த முகத்தை துண்டினால் அழுந்தத் துடைத்தபடி..

"மன்னிப்புக் கேட்டிரலாம் திலகா.." என்று உடைந்த குரலில் மனைவியிடம் சொன்னார்..

அவள் பதில் சொல்ல முடியாமல் அழுகையை கட்டுப்படுத்த முயன்று தோற்றபடி தலையை ஆட்டினாள்..

"ஒரு நிமிசம்.."

கணிரென்ற குரலுடன்.. மணிவாசகத்தின் பின்னால் நின்றிருந்த சுமித்ரா விலகி.. பஞ்சாயத்தின் தலைமையின் முன்னால் வந்து நின்றாள்.. திலகவதி பதறினாள்..

"மல்லிகா.. இவ எங்கே போகிறா..?"

"தெரியலை அண்ணி.. என்ன பேசப் போறான்னு கேக்கலாம் பொறுங்க.."

அதற்குள் மணிவாசகம் மகளை அதட்டினார்..

"சுமித்ரா.. இங்கே வா.."

"இல்லேப்பா.. எனக்கு பஞ்சாயத்தில பேச வேண்டியிருக்கு.."

"நீ சின்னப் புள்ளை.. உனக்கென்ன தெரியும்..?"

"அதனாலதானேப்பா.. நம்ம மாமா.. ஐஞ்சு ஏக்கர் புஞ்சை நிலத்துக்காக குடிகார மாப்பிள்ளையை.. யோக்கியமான மாப்பிள்ளைன்னு சொன்னாரு..?"

"சுமித்ரா.."

மணிவாசகம் வாயடைத்துப் போனார்.. தனஞ்ஜெயன் சுமித்ராவையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவளது துடிப்பு அவனைக் கவர்ந்தது.. இந்திராதேவியோ.. ஜமீன் வீட்டுக்கு மருமகளாக வருகிறவள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று மனதுக்குள் சிலாகித்தாள்..

"பொறுங்க மணிவாசகம்.. இது பஞ்சாயத்து.. உங்க பொண்ணு சொல்ல நினைக்கிறதை இந்தப் பஞ்சாயத்தில தாராளமாச் சொல்லட்டும்..."

தலைமை சொல்லி விட்டபின்பு மணிவாசகத்தால் தடுக்க முடியாமல் போய் விட்டது.. அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று அவர் மனம் அடித்துக் கொண்டது..

"நீ சொல்லும்மா.."

தலைமை உத்தரவிட்டதும் சுமித்ரா மடமடவென்று சொல்லி விட்டாள்..

"இந்தப் பஞ்சாயத்தைக் கூட்டியிருக்கிற அன்னவாசல் ஜமீன்தாருக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டிருக்கோ.. அதே போல பாதிப்பு எனக்கும் ஏற்பட்டிருக்கு.. என் மாமா பேசின பேச்சுக்கு நான் எப்படிப் பொறுப்பாவேன்..? பெண்ணோட விருப்பமில்லாம பெத்தவங்களும்.. அவளோட சொந்தக்காரங்களும்.. மத்தவங்களும்.. அவளைப் பஞ்சாயத்தில நிறுத்தி வைச்சு பணயப் பொருளா ஆக்கலாமா..? அதைத்தானே இப்ப அன்னவாசல் ஜமீன்தாரும் செய்திருக்கிறார்..? அவருக்கு எதிரா நான் பஞ்சாயத்தைக் கூட்டலாமா..?"

தனஞ்ஜெயனின் புருவங்கள் முடிச்சிட்டன.. இந்திராதேவியோ விவகாரம் வேறு கோணத்தில் திரும்பப்

போகிறதோ என்று கவலையாகி விட்டாள்.. மணிவாசகத்தின் முகத்தில் கூட லேசான வெளிச்சம் வந்தது..

"தாராளமாக் கூட்டலாம்மா.. அப்பவும் முதல் குற்றவாளியா உன் அத்தை புருசனும்.. இரண்டாவது குற்றவாளியா உன் அப்பாவும்தான் முன்னால் நிற்பாங்க.. அன்னவாசல் ஜமீன்தார் மூன்றாவது குற்றவாளியாத்தான் நிற்பார்.."

தலைமையின் சுட்டிக் காட்டுதலில் இந்திரா தேவியின் மனதில் நிம்மதி பரவியது.. மணிவாசகத்தின் முகம் இருண்டது.. முதன் முதலாக அவர் அருகில் நின்றிருந்த திருக்குமரனை வெறுப்புடன் பார்த்தார்..

'இவனால்தான் இத்தனையும்..'

சுமித்ரா முகம் மாறாமல் தலையை ஆட்டித் தலைமையின் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டாள்..

"உண்மைதான் அய்யா.. அதனாலதான் நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்.. என்னைப் பெண் கொடுக்க முடியாதுன்னுதானே என் மாமாவும்.. அப்பாவும் சொன்னாங்க..? என்னைப் பெண் கேட்டார்ன்னு தானே அன்னவாசல் ஜமீன்தார்மேலே பொய்ப்பழியை சொன்னாங்க..? என் மாமாவும்.. அப்பாவும் பெண் கொடுக்க மாட்டேன்னு சொன்ன இந்த சுமித்ரா முழு மனதா அன்னவாசல் ஜமீன்தாரரைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கிறா... பஞ்சாயத்தில பெண்ணை விட்டுக் கொடுக்க வைச்சுத் தாலிகட்டினதா அன்னவாசல் ஜமீன்தாருக்கு ஏன் பேர் வரனும்..? என்னை விட்டுக் கொடுக்க முடியாதுன்னு ஏன் என் அப்பா மல்லுக்கு நிற்கனும்..? இது இரண்டுமே வேண்டாம்.. இந்த நிமிசமே அன்னவாசல் ஜமீன்தாரர் கையாலே தாலி வாங்கிக்க

நான் ரெடியா இருக்கேன்.. இதை பஞ்சாயத்தில் ஏத்துக்கிட்டு மேற்கொண்டு எதுவும் வேண்டாம்ன்னு சொல்லி இந்தப் பஞ்சாயத்தைக் கலைக்கச் சொல்லிக் கேட்டுக்கறேன்.."

தலைமையும் மணியக்காரரும்.. மற்ற முக்கியஸ்தர்களும் தாழ்ந்த குரலில் தங்களுக்குள் விவாதம் செய்தார்கள்.. பின்னர் தலைமை நிமிர்ந்து அமர்ந்து தொண்டையைக் கனைத்தார்.. அவர் தீர்ப்பைச் சொல்லப் போகிறார் என்பதில் சுற்றுப்பட்டி மக்களும் அமைதியாகி அவர் வாயையே பார்த்தார்கள்.. குண்டூசி விழுந்தாலும் கேட்கும் அளவிற்கு அங்கே அமைதி நிலவியதில் தாரா ஆச்சரியப்பட்டுப் போனாள்..

தலைமை தீர்ப்பைச் சொல்ல ஆரம்பித்தார்..

"லட்சுமிபுரத்து மணிவாசத்தின் தங்கச்சி புருசன் அன்னவாசல் ஜமீன்தார் தனஞ்ஜெயனின் மீது பொய்பழி சொல்லியிருக்கிறார் என்பதை இந்தப் பஞ்சாயத்து

உறுதி செய்கிறது.. தேவையில்லாத மன உளைச்சலை தனஞ்ஜெயனுக்கு ஏற்படுத்தியதற்காக இந்தப் பஞ்சாயத்து அவர்கள் இருவரையும் வன்மையாக கண்டிக்கிறது.. அதே சமயத்தில் தனஞ்ஜெயன் கேட்டுக் கொண்டபடி அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசிய மில்லாமல்.. அவர்கள் வீட்டுப் பெண் சுமித்ரா தானாகவே முன்வந்து தனஞ்ஜெயனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள சம்மதித்து விட்டதால் இந்தப் பஞ்சாயத்து சுமித்ராவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு.. தனஞ்ஜெயனுக்கும்.. சுமித்ராவிற்கும் நாளைக் காலையில் அன்னவாசல் திருமண மண்டபத்தில் கல்யாணம் நடக்கும் என்று அறிவிக்கிறது.. இந்த வினாடியிலிருந்து சுமித்ரா அன்னவாசல் கிராமத்தின் ஜமீன் வம்சத்தின் மருமகள்.. தனஞ்ஜெயனுக்காக நிச்சயம் செய்யப்பட்ட பெண்.. சுமித்ராவைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டுத்தான் மணிவாசகத்தின் குடும்பத்தினர் லட்சுமிபுரத்திற்கு திரும்ப வேண்டும் என்று இந்தப் பஞ்சாயத்து உத்தரவிடுகிறது.. மேலும்.. பிரச்னையை சுமித்ரா சுமூகமாக தீர்த்து விட்டதால்.. மணிவாசகம்.. குடும்பத்துடன் மன்னிப்பும் கேட்க வேண்டியதில்லை.. பெண்ணையும் பஞ்சாயத்தில் விட்டுக் கொடுக்க வேண்டியதில்லை என்று இந்தப்

பஞ்சாயத்து தீர்ப்பளிக்கிறது.. இத்துடன் இந்தப் பஞ்சாயத்து முடிந்து கலைகின்றது.."

மணிவாசகம் திக் பிரமை பிடித்துப் போய் நின்று விட்டார்.. இது அவருக்கான வெற்றியா..? இல்லை.. தோல்வியா..?

தனஞ்ஜெயனின் கணக்குப்பிள்ளை ரங்கசாமி பவ்யமாக அவரிடம் வந்து.. வணக்கம் வைத்தார்.. மணியக்காரர் தியாகராஜனும்.. அவர் மனைவி மரகதமும் வந்து மரியாதையுடன் அவர்களை வீட்டுக்குள் அழைத்தார்கள்..

"நாளைக்குக் காலையிலேதான் கல்யாணம்.. பொழுது சாயத்தான் பெண் அழைப்பு நடக்கிறதா இருக்கு.. நீங்க அதுவரைக்கும் நம்ம வீட்டிலே தங்கிக்கலாம்.. இது உங்க வீடு போல.. இப்ப விருந்து ரெடியா இருக்கு.. சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுங்க.."

எதுவுமே நடக்காததைப் போல மாப்பிள்ளை வீட்டின் சார்பாக உபசரித்தவர்களின் மென்னியைப் பிடிக்க வேண்டும் போல மணிவாசகத்திற்கு வெறி ஏற்பட்டது..

'யாருக்கு வேணும் உன் வீட்டு விருந்துச் சாப்பாடு..' என்று கத்தத்தான் அவர் நினைத்தார்..

ஆனால் சோர்ந்திருந்த சுமித்ராவின் முகமும்.. கண்ணீருடன் இறைஞ்சிய திலகவதியின் முகமும் அவருடைய கோபத்தை கட்டுப்படுத்தி தியாகராஜன் சொன்னதற்கு ஒப்புதலாக தலையை அசைக்க வைத்தன..

"என்மக.. நம்மை மீறி எதையும் பேசாதவ.. தானா முன்னாடி போயி இந்தக் கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லியிருக்கா.. ஏன்..? நம்ம குடும்பத்தோட மரியாதையைக் காப்பாத்தறதுக்காக..! அவ கல்யாணம் முடிவாகிருச்சு.. பெத்தவங்களா நாம அவ மனசு வருத்தப் படாம கல்யாணத்தை முடிச்சு வைச்சுட்டுப் போயிரலாம்ங்க.. இத்தனை நாளாத்தான் உங்க தங்கச்சி புருசனைப் பத்தி நான் சொன்னதை காதில வாங்கிக்காம பாடாய் படுத்தினீங்க.. இப்பவாவது என் பேச்சைக் கேட்டு.. என் பொண்ணு கல்யாணத்த நல்லபடியா முடிச்சுக்

கொடுங்க.. கல்யாணம்ங்கிறது ஆயிரம் காலத்துப் பயிர்.. வாழ்க்கையிலே ஒரே ஒரு தரம்தான் வருகிறது.. அந்தக் கல்யாணத்தில நம்ம மக நிம்மதியில்லாம நிக்க வேண்டாங்க.. நமக்காக இந்தக் கல்யாணத்தை ஒப்புக்கிட்ட நம்ம மகளுக்கு நம்மால செய்ய முடிஞ்சது இது மட்டும்தாங்க.."

திலகவதியின் கெஞ்சலுக்குப் பலனிருந்தது..

"உங்க சொந்த பந்தத்தோட போன் நம்பர்களைக் கொடுங்க.. திடிர்ன்னு கல்யாணம் நிச்சயமாகிருச்சுன்னு சொல்லி மாப்பிள்ளை வீட்டு சார்பா நான் அழைப்புக் கொடுக்கிறேன்.. நீங்களும் அழைச்சிருங்க.. இன்னும் ஒரு நாள் ஊடே இருக்கு.. கல்யாணத்துக்கு வரனும்னு நினைக்கிறவங்க கிளம்பி வரட்டும்.." என்று மணியக்காரரர் சொன்னபோது மறுத்துப் பேசாமல் அவர் பக்கத்து நெருங்கிய சொந்தங்களின் விலாசத்தையும்.. போன் நம்பர்களையும் எழுதிக் கொடுத்தார் மணிவாசகம்..

தனஞ்ஜெயன் திருமண ஏற்பாடுகளில் ஒரு குறைவும் வைக்கவில்லை.. அன்னவாசலுக்கும்.. லட்சுமி புரத்துக்கும் இடையே ஒரு தனியார் பேருந்தை வாடகைக்கு எடுத்து ஓட விட்டிருந்தான்.. திருமணத்தில் கலந்து கொள்ள லட்சுமிபுரத்தில் இருந்த மணிவாசகத்தின் உறவினர்கள் திரண்டு வந்தார்கள்.. வந்தவர்கள் தங்குவதற்கு ஜமீன் வீடுகளில் ஒன்று கொடுக்கப் பட்டிருந்தது.. அவர்கள் மணிவாசகத்தைப் பார்த்துப்

பேச மணியக்காரரரின் வீட்டிற்கு வந்து போய் கொண்டிருந்தார்கள்.. வந்தவர்களை வரவேற்று உபசரித்தது மணியக்காரரின் வீடு.. எல்லோரும் தவறாமல் கேட்ட ஒரே கேள்வி..

"என்ன மணி.. திடிர்ன்னு கல்யாணத்த வைச்சிருக்க..?"

'நானா வைச்சேன்..?' நொந்து போன மனதை மூடி மறைத்தபடி.. கீறல் விழுந்த ரிகார்டைப் போல ஒரே வார்த்தையை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார் மணிவாகம்..

"திடிர்ன்னு முடிவான கல்யாணம்.. அதான் திடிர்ன்னு கல்யாணத்த வைச்சிருக்கோம்.."

இது ஒரு பதிலா என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாலும் வெளியே தலையை ஆட்டி விட்டு அவர்கள் போனார்கள்..

மாலையில் பெண்ணழைக்க வந்து விட்டார்கள்.. கையோடு கொண்டு போயிருந்த நகைப் பெட்டியிலிருந்த சுமித்ராவின் நகைகளைப் போட்டு அவளை அழகு படுத்தி அழைத்துப் போனாள் மல்லிகா..

'இவளுக்கு இந்தக் கல்யாணத்தில இம்புட்டு ஆனந்தமா..?' அவள் கணவன் பல்லைக் கடித்தான்..

திருமண மண்டபத்தில் காத்திருந்த தனஞ்ஜெயனின் உறவினர்கள் ஆரத்தி எடுத்து பெண்ணை அழைத்துச் சென்றார்கள்.. தோழியைப் பார்க்க வந்த இடத்தில்.. அவளுடைய கல்யாணத்தையும் பார்க்க நேர்ந்து விட்ட சந்தோசத்தில் தோழிப் பெண்ணாக கூடவே இருந்தாள் தாரா.. இரவில் நிச்சயதார்த்தமும் நலங்கும் நடந்து முடிந்தது.. சின்னதாக ஒரு நாட்டிய கச்சேரியை ஏற்பாடு பண்ணியிருந்தான் தனஞ்ஜெயன்.. நாட்டியம் முடிந்ததும் இரவு விருந்து..

"தூள் கிளப்பறார்டி உன் ஹீரோ.." என்றாள் தாரா..

"ஆமாமாம்.. நம்ம சுத்து வட்டாரத்தில யாரோட கல்யாணம் இவ்வளவு தடபுடலா நடந்திருக்கு..?" மல்லிகா கேட்டாள்..

திலகவதிக்கும் மனது அமைதியடைந்திருந்தது.. அவளது மனக்காயம் ஆறுவதைப் போல இருந்தது.. மகளின் திருமண நிகழ்வுகளின் பிரம்மாண்டத்தில் அவள் மனம் பூரிப்படைய முயற்ச்சித்தது.. சுந்தரின் இறுகிய முகம்கூட லேசாக இளக்கமானது.. மல்லிகாவின் பெண்கள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்ததில் மண்டபம் களை கட்டியது..

அன்றைய இரவில் யாரும் உறங்கவில்லை.. உறக்கமின்றி விழித்திருந்தார்கள்.. விடியலுக்கு முன்னரே சுமித்ராவை

எழுப்பி குளிக்க வைத்து.. மணப்பெண் அலங்காரத்தை ஆரம்பித்து விட்டார்கள்..

காலை விருந்து முடிந்தவுடன் கல்யாண நிகழ்வுகள் ஆரம்பமாகின.. மணமேடையில் மாப்பிள்ளை கோலத்தில் அமர்ந்திருந்த தனஞ்ஜெயனைப் பார்த்தபோது இந்திரா தேவியின் மனம் நிறைந்தது.. அத்தனை நாளாக எதைப் பார்க்க அவள் ஏங்கிக் கொண்டிருந்தாளோ.. அது.. அவளுடைய மகனின் திருமணம்.. அப்போது நடக்கப் போகிறது.. கண்களில் பனித்த ஆனந்தக் கண்ணீரை நெகிழ்வுடன் அவள் துடைத்துக் கொண்டாள்..

"பொண்ண அழைச்சிட்டு வாங்கோ.." அய்யர் உத்தரவிட்டார்..

சர்வாலங்கார பூஷிதையாக சுமித்ரா மணமேடைக்கு அழைத்து வரப்பட்டாள்... மணிவாசகத்தின் கண் நிறைந்தது.. திலகவதி.. மகளின் திருமணக் கோலத்தில் பெருமிதம் கொண்டாள்.. அவள் பெற்ற மகளுக்கு மிகப் பெரிய இடத்தில் திருமணம் நடக்கப் போகிறது.. அந்தத் திருமணம் எந்த வகையில் முடிவானால் என்ன..?

திருமணம்.. திருமணம்தானே...

தனஞ்ஜெயனின் அருகே பதுமை போல அமர்ந்தவளை லேசாக பார்த்தான் அவன்.. அவளின் அழகில் அவன் மனம் மயங்கியது.. இமை உயர்த்தி அவனைப் பார்த்த அவள் பார்வையில் இருப்பது என்னவென்று கண்டு கொள்ள அவனால் முடியவில்லை..

"கெட்டி மேளம்.. கெட்டி மேளம்.."

நாதஸ்வர ஒலியுடன் கெட்டிமேளம் முழங்க.. தனஞ்ஜெயன் தாலியை எடுத்து சுமித்ராவின் கழுத்தில் கட்டினான்.. சுற்றிலும் இருந்தவர்கள் அட்சதை போட்டு வாழ்த்தினார்கள்..

"பொண்ணும்.. மாப்பிள்ளையும்.. அக்கினியைச் சுத்தி வலம் வரனும்.."

அய்யரின் கட்டளையில் தனஞ்ஜெயனின் கரம் பிடித்து அக்கினியைச் சுற்றி வலம் வந்தாள் சுமித்ரா.. மணமக்கள் இந்திராதேவியின் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார்கள்.. அடுத்து மணிவாசகத்திடமும்.. திலகவதியிடமும் ஆசிர்வாதம் வாங்கப் போன போது.. அதைத் தடுத்த மணிவாசகம்.. மகளின் தலையில் கைவைத்து ஆசிர்வாதம் செய்தார்..

"தீர்க்க சுமங்கலியாய் இரும்மா.. நீ நல்லா வாழனும்.. உன் மனசுப்பிரகாரம் கல்யாணத்தை முடிச்சுக் கொடுத்திட்டேன். இனி நாங்க கிளம்பறோம்.. இதுக்கு மேலே இங்கே நிற்க என்னால முடியாதும்மா.. எப்பவுமே உன் பிறந்த வீடு உன்னைத் தாங்க காத்திருக்கும்.. இதை நீ மறக்காதே.. திலகா.. நாம போகலாம்.."

மணிவாசகம் குடும்பத்துடன் வெளியேறி விட்டார்..

12

சுமித்ராவின் விழிகள் விரிந்தன.. அவ்வளவு விரைவில் அவளுடைய பிறந்தவீடு அவளை விட்டுப் பிரியும் என்று அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.. அவளுடைய தவிப்பில் தாரா தயங்கி நின்றாள்..

"சுமி.. இந்த நிலைமையிலே உன்னை விட்டுட்டுப் போக மனசில்லைடி.. ஆனா.. நான் என்ன செய்யட்டும்..? உன்கூட இருக்கனும்னு வந்தேன்.. இரண்டுநாள் உன் கூடவே இருந்துட்டேன்.. எனக்கு இது போதும்டி.. நான் ஊருக்குக் கிளம்பறேன்.."

தோழியின் கையைப் பிடித்துத் தட்டிக் கொடுத்து விட்டு அவளும் போய் விட்டாள்.. சுமித்ரா தனித்து நின்றாள்.. அவள் கழுத்திலிருந்த மாலை கனப்பதைப் போல உணர்ந்தாள்.. புது ஊர்.. புது மனிதர்கள்.. புதிய சூழ்நிலை...

பிரமை பிடித்தவளைப் போல நின்றவளின்தோள் தொட்டு அணைத்துக் கொண்டாள் இந்திராதேவி.. மிரண்டு விழித்தவளின் பார்வையில் அவளுக்குள் குற்ற உணர்வு வந்தது..

இந்தத் திருமணத்தில் பெண்ணின் மனதில் என்ன இருக்கிறது என்று கேட்டறிய இந்திராதேவி தவறி விட்டாளா..?

குலதெய்வம் கோவிலுக்குப் போய் வணங்கிவிட்டு.. மணமக்கள் தனஞ்ஜெயனின் வீட்டுக்குச் சென்றார்கள்.. உடல் சோர்வதை உணர்ந்தாள் சுமித்ரா.. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் மிகவும் சிரமப் பட்டே எடுத்து வைத்தாள்..

அவளுக்கு ஆரத்தி எடுத்த உறவினர் பெண்களுக்கு பணக்கற்றை பரிசாக கிடைத்தது..

"வலதுகாலை எடுத்து வைச்சு உள்ளே வாம்மா.. இனிமே இதுதான் உன் வீடு.." அன்புடன் அழைத்துக் கொண்டாள் இந்திராதேவி..

பூஜையறைக்கு மருமகளை அழைத்துச் சென்று விளக்கேற்றச் சொன்னாள்.. நடுங்கும் விரல்களால் விளக்கேற்றியவளிடம்..

"உன் பெட்டிகளை உன்னோட அத்தையும்.. அம்மாவும் கொடுத்துட்டுப் போயிருக்காங்கம்மா.. மாடி ரூமில அதுகள்ளாம் இருக்கு.. தனா ரூமிலதான் அதுகளையெல்லாம் வைச்சிருக்கனும்.. ஆனா.. அங்கே பூ அலங்காரம் நடந்துக்கிட்டு இருக்கிறதால பெட்டிகளை வேற ஒரு ரூமில வைக்கச் சொல்லியிருக்கேன்.. நாளைக்கு அதுகளை உங்க ரூமுக்கு கொண்டு போய் பிரிச்சு அடுக்கி வைச்சுக்கம்மா.."

சுவாதீனமாய் சொல்லிக் கொண்டிருந்தாள் இந்திராதேவி..

"பொண்ணு மாப்பிள்ளைக்கு பால் பழம்.. கொடுங்க.." அங்கிருந்த மருக்கொழுந்து சொன்னாள்..

"தனா.. இங்கே வா.."

தாயின் அழைப்பில் புது மனைவியின் பக்கத்தில் வந்தான் தனஞ்ஜெயன்.. அவள் நிற்க முடியாமல் தள்ளாடுவதை அவன் கவனிக்கவில்லை.. இந்திராதேவியோ மணமக்களுக்கான பால்.. பழ ஏற்பாட்டில் மும்முரமாக இருந்தாள்..

"தனா.. நீயும் சுமித்ராவும் சோபாவில் உட்காருங்க.."

அன்னையின் கட்டளையில் புதுமனைவியின் முகத்தைப் போகலாமா என்ற பார்வையுடன் பார்த்த தனஞ்ஜெயன் திகைத்தான்..

சுமித்ரா கண்கள் சோர்ந்து மடிந்து கீழே விழப் போனாள்.. மயங்கிச் சரிந்தவளை தாங்கிக் கொண்டவனின் கைகள் அவள் உடலில் காய்ச்சலை உணர்ந்தன..

"அம்மா இவளைப் படுக்க வையுங்க.. நான் டாக்டருக்குப் போன் பண்ணிட்டு வரேன்.."

சுமித்ராவை சோபாவில் அமர வைத்து விட்டு தனஞ்ஜெயன் கூவியதில் இந்திராதேவியும்... மற்ற உறவினர் பெண்களும் சுமித்ராவை சூழ்ந்து கொண்டார்கள்..

வாடி.. வதங்கித் தெரிந்த சுமித்ராவின் தலை மயக்கத்தில் சாய்ந்திருந்தது.. இந்திராதேவி.. மருமகளை தன்மேல் சாய்த்துக் கொண்டு மணமக்கள் பகிர்ந்துண்ணக் கொண்டு வந்த பாலைப் புகட்டினாள்.. வெந்நீரில் அவள் முகத்தை துடைத்து விட்டபோது கண்விழித்த சுமித்ரா.. லேசாக அரற்றினாள்..

"இது தூங்கட்டும்.."

இந்திராதேவி.. உறவினர் வீட்டுப் பெண்களை அழைத்து மருமகளை கைத்தாங்கலாக மாடிக்கு அழைத்து வரச் சொன்னாள்.. திருமண வீடு.. உறவினர் நடமாட்டம் அதிகமாக இருந்ததில் தரைத்தளத்தில் இருந்த அறைகளில் ஒன்றில் சுமித்ராவைப் படுக்க வைத்தால்

அவளுக்குத் தேவையான ஓய்வு கிடைக்காது என்று அவள் நினைத்தாள்.. மாடிக்கு உறவினர்கள் போக மாட்டார்கள்.. தனஞ்ஜெயன் மனைவியின் அருகில் இருக்க விரும்பினால் மாடியறைதான் தோதாக இருக்கும்..

சுமித்ராவின் பெட்டிகள் இருந்த அறையிலேயே சுமித்ரா படுக்க வைக்கப்பட்டாள்.. தனஞ்ஜெயன் வந்து கேட்டபோது அவளை மாடியறையில் படுக்க வைத்திருப்பதாகச் சொன்னாள் இந்திராதேவி.. டாக்டரின் வரவுக்காக காத்திருந்த தனஞ்ஜெயன்.. அவர் வந்ததும் மாடியறைக்கு அழைத்துக் கொண்டு போனான்.. கட்டிலில் கண்மூடிக் கிடந்த புதுமனைவியைப் பார்த்தபோது அவளுக்கு அநியாயம் இழைத்து விட்டதைப் போல அவன் மனம் பதைத்தது..

"டெம்பரேச்சர் அதிகமா இருக்கு.." டாக்டர் கவலையுடன் சொன்னார்..

"எதுக்கும் ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணிடறது பெட்டர்.."

"வேண்டாம் டாக்டர்.." இந்திராதேவி மறுத்தாள்..

"இப்பத்தான் கல்யாணம் முடிஞ்சிருக்கு.. வீட்டுக்குள்ளே காலடி வைச்சதும் ஹாஸ்பிடலிலே அட்மிட் பண்ணினா நல்லாயிருக்காது.. ஊருக்குள்ளே நாலுபேரு நாலுவிதமா பேசுவாங்க.. நீங்க கேட்கிற வசதியைப் பண்ணித்தரோம்.. இங்கேயே வந்து வைத்தியம் பார்த்துட்டுப் போங்க.."

இந்திராதேவியின் கெஞ்சுதலான குரலில்.. யோசனையான டாக்டர்.. சுமித்ராவின் இமைகளை உயர்த்தி கண்களை பரிசோதித்தார்..

"பிளட் டெஸ்ட் கொடுங்க.. ரிசல்ட் வந்ததும் என்ன வகையான ஃபீவர் அட்டாக்கியிருக்குன்னு பார்க்கலாம்.. இப்போதைக்கு டெம்பரேச்சரைக் குறைக்க இன்ஜெக்சன் போட்டுட்டு.. டேப்லெட்ஸ் கொடுத்திட்டுப் போறேன்.."

டாக்டர் போய் விட்டார்.. தனஞ்ஜெயன் அவள் படுத்திருந்த கட்டிலுக்கு அருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக்

கொண்டு உட்கார்ந்தான்.. இரவு நெருங்கிக் கொண்டிருந்தது..

"தனா.." இந்திராதேவி அறைக்குள் வந்தாள்..

தனஞ்ஜெயன் நிமிர்ந்து பார்த்தான்.. சிவந்திருந்த அவனது கண்களும்.. கலைந்திருந்த தலைமுடியும் இந்திராதேவிக்குள் துன்பத்தைக் கொண்டு வந்தன.. பட்டுவேட்டி சட்டையைக்கூட மாற்றாமல் மனைவியின் பக்கத்தில் இருந்தவனை கவலையுடன் அவள் பார்த்தாள்..

"போயி குளிச்சுட்டு டிரஸை மாத்திட்டு வா தனா.."

"இருக்கட்டும்மா.."

"குளிக்காம நீ சாப்பிட மாட்டியேடா.."

"சாப்பாடா..? எனக்கா..?"

"என்னடா தம்பி இப்படிக் கேட்கிற.. ராத்திரி ஆகிருச்சுப்பா.. வீட்டில எல்லாரும் சாப்பிட்டு முடிச்சாச்சு.."

"இவ சாப்பிடலையேம்மா.."

துயரத்துடன் கட்டிலில் கண்மூடிக் கிடந்த சுமித்ராவைக் காட்டினான் தனஞ்ஜெயன்.. வாடிக் கிடந்தவளைப் பார்த்த இந்திராவின் மனதை வருத்தம் சூழ்ந்தது..

"சூடா கஞ்சியைக் கரைச்சுக் கொண்டு வந்திருக்கேன்ப்பா.. புகட்டி விடலாம்.. வெறும் வயித்தில மாத்திரை சாப்பிட முடியாதில்ல.."

இந்திராதேவி அறை வாசலைப் பார்த்தாள்.. அங்கே பாத்திரத்தோடு நின்றிருந்த சுசிலா உள்ளே வந்தாள்.. அதை வாங்கிக் கொண்ட இந்திரா படுக்கையை நெருங்கினாள்..

"நீ போ தனா.. நான் இவளுக்கு கஞ்சி புகட்டி விட்டுக்கறேன்.. நீ போய் குளிச்சுட்டு வா.."

"இருக்கட்டும்மா.. நீங்க விலகுங்க.. நான் இவளுக்குக் கஞ்சியைக் கொடுக்கிறேன்.."

தனஞ்ஜெயன் சுமித்ராவைத் தன்மீது சாய்த்துக் கொண்டான்.. இந்திராதேவி மறுக்காமல் பாத்திரத்தை அவன் கையில் கொடுத்து விட்டு சுசிலாவை மௌன பார்வை பார்த்தாள்.. அந்தப் பார்வையில் சுசிலா போய் விட்டாள்.. கஞ்சியை புகட்டி முடித்ததும்.. சுமித்ராவின் வாயை சுடுநீரால் துடைத்து விட்டு.. அவளுக்கான மாத்திரைகளை விழுங்க வைத்துவிட்டு.. அவளைப் படுக்க வைத்துப் போர்த்தி விட்டான்..

புது மனைவியின் மீதான மகனின் அக்கறையிலும்.. சேவையிலும் இந்திராதேவியின் இதயம் நெகிழ்ந்தது.. தளைகள் இல்லாமல் வாழ்ந்த தனஞ்ஜெயனுக்கு சுமித்ரா தளையாகி விட்டதை அவள் உணர்ந்தாள்.. மருமகளின் உடல்நிலை சீக்கிரத்திலேயே குணமடைந்து விட வேண்டும் என்று அவள் மனம் பிரார்த்தித்தது..

"இனியாவது குளிக்கப் போடா.. சுமித்ரா பக்கத்திலே நானிருக்கேன்.." மகனை வற்புறுத்தினாள்..

"பசிக்கலைம்மா.." அவன் மறுத்தான்..

"நீ சாப்பிடாம நான் மட்டும் சாப்பிட முடியுமாடா தனா..?"

இந்திராதேவியின் தழதழத்த குரலில் அவன் பதறிப் போனான்..

"இன்னும் நீங்க சாப்பிடலையா..?"

"எப்படிடா சாப்பிடுவேன்..? என் மருமக கண் திறக்காம கிடக்கா.. நீ அந்தக் கவலையிலே சாப்பிடாம கிடக்கே.. உங்களை விட்டுட்டு நான் மட்டும் எப்படிடா தம்பி சாப்பிடுவேன்..?"

அன்று காலையில்தான் சுமித்ரா அவளுக்கு மருமகளானாள்.. அதற்குள் ஆண்டாண்டு காலமாக சுமித்ராவை அறிந்தவளைப் போல.. மகனையும்.. மருமகளையும் பிரித்துப் பேசாமல்.. பிணைத்துப் பேசிய இந்திராதேவியின் மனம் மருமகளின் ஆரோக்கியத்திற்காக ஏங்கியது..

"என்னம்மா நீங்க.. உங்க மருமக மட்டும் வெறும் வயிறில மாத்திரை போட்டுக்கக் கூடாது.. நீங்க அதைச் செய்யலாமா..?"

தனஞ்ஜெயனும் சுமித்ராவை ஆண்டாண்டு காலமாக அறிந்தவனைப் போல பேசி வைத்தான்.. அவ்வாறு அந்தத் தாய்.. மகன் இருவருக்கும் ஒரே நாளில் உறவாகிப் போனதை அறியாதவளாய் கண்மூடி காய்ச்சலில் கிடந்தாள் சுமித்ரா..

இந்திராதேவிக்காக குளித்து உடை மாற்றி வந்தான் தனஞ்ஜெயன்..

மாடியறைக்கே இரவு உணவை கொண்டு வரச் செய்திருந்தாள் இந்திராதேவி... தாயும் மகனும் பேசியபடியே சாப்பிட்டதாக பெயர் பண்ணி முடித்தார்கள்.. தனஞ்ஜெயன் அந்த அறையில் இருந்த இன்னொரு கட்டிலில் படுத்துக் கொள்வதாகச் சொல்லி விட்டான்.. அவனுடைய அறையில் இருந்த பூ அலங்காரத்தை நினைத்துப் பார்த்த இந்திராதேவியின் கண்களில் நீர் பெருகியது.. மகன் அறியாமல் அதைத் துடைத்துக் கொண்டவள் மனதில் பாரத்துடன் தளர்வாக மாடிப் படிகளில் இறங்கினாள்..

'யார் கொடுத்த சாபம் இது..?'

அன்று இரவு முழுவதும்.. தாயும்.. மகனும்.. தூக்கமின்றி இரவைக் கழித்தார்கள்..

மறுநாள் காலையில் டாக்டர் வந்தார்.. சுமித்ராவின் ரத்தப் பரிசோதனையின் முடிவு வெறும் வைரஸ் ஃபீவர் என்று அறிவிப்பதாக சொன்னபின்புதான் தனஞ்ஜெயனின் முகத்தில் கொஞ்சம் தெளிவு வந்தது..

"இருந்தாலும் கவனமா பார்த்துக்கங்க.. டெம்பரேச்சர் இறங்க மாட்டேங்குது.." டாக்டர் எச்சரித்துவிட்டுப் போனார்..

இந்திராதேவி கண்ணும் கருத்துமாக மருமகளைப் பார்த்துக் கொண்டாள்.. சுமித்ராவை எழுப்பி.. பல்துலக்க வைத்து.. பாத்ரூமிற்கு அழைத்துச் சென்று வந்து படுக்க

வைத்தாள்.. சுசிலாவிடம் சொல்லி வெந்நீரால் அவள் முகத்தை துடைத்து விட்டாள்.. தனஞ்ஜெயன் மனைவியை விட்டு அகலாமல் பக்கத்திலேயே இருந்தான்.. அன்றைய நாள் கழிந்தது..

அடுத்த நாள் காலையில் சுமித்ராவின் காய்ச்சல் வெகுவாக குறைந்திருந்தது.. கண்விழித்தவள் அருகிலிருந்த தனஞ்ஜெயனைப் பார்த்ததும் அவசரமாக எழுந்தாள்..

"அலட்டிக்காம படு.." பரிவுடன் சொன்னான் தனஞ்ஜெயன்..

சுமித்ராவுக்கு குளிக்க வேண்டும் போல இருந்தது.. அதை அவனிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் சங்கடப் பட்டாள்.. அவளையே பார்த்த தனஞ்ஜெயனின் புருவங்கள் சுருங்கின.. வெளியே போனவன் இந்திரா தேவியை அழைத்தான்..

"என்னப்பா.." என்று விரைந்து வந்தவளிடம்..

"அவ கண்ணை முழிச்சிட்டாம்மா.. எதையோ சொல்ல நினைக்கிறா.. என்னன்னுதான் தெரியலை.." என்றான்..

"இரு.. நான் போய் விசாரிக்கறேன்.."

மகனை அமைதிப் படுத்தி விட்டு சுமித்ராவிடம் போனாள் இந்திராதேவி.. மாமியாரைக் கண்டதும் சுமித்ராவின் சங்கடம் கொஞ்சமாக குறைந்தது..

"ஏம்மா எழுந்திருச்சுட்ட..? படு.."

"இல்லை.. எனக்கு உடம்பெல்லாம் கசகசன்னு வியர்த்துக் கொட்டுது.. குளிச்சாத் தேவலை.."

சன்னமான குரலில் சொன்ன சுமித்ராவின் உடல் வியர்க்க ஆரம்பித்திருந்தது.. இந்திராதேவி.. குளியலறையைக் காட்டினாள்..

"ஹீட்டரைப் போட்டுக்கம்மா.. சுடுதண்ணீரில் குளி.."

அவளின் பரிவான அக்கறையில் சுமித்ராவுக்கு ஆச்சரியமாக இருந்தது.. வேற்று மனுஷியைப் போல இல்லாமல்.. தாயைப் போல சாலப் பரிந்த அவளது

குணத்தில் சுமித்ராவின் மனதிலிருந்த தனிமையுணர்வு லேசாக மறைந்தது..

குளியலறைக்குள் புகுந்தாள்.. சுடுநீரில் குளித்து முடித்தபின்பு உடலுக்கு புத்துணர்வு வந்ததைப் போல இருந்தாலும்.. அந்தச் சிறிய அளவிலான நடமாட்டத்தைத் தாங்க முடியாமல் அவள் உடல் தள்ளாடியது..

அப்போதுதான் அறைக்குள் நுழைந்த தனஞ்ஜெயன் அவளைத் தாங்கிப் பிடித்துத் தூக்கிக் கொண்டான்.. அவள் மீதிருந்து வந்த சோப்பின் நறுமணம் அவனை எங்கோ அழைத்துச் சென்றது.. அவனது ஸ்பரிசத்தை உணர்ந்ததினால் உண்டான அதிர்வு அவளை எங்கோ அழைத்துச் சென்றது..

அதற்கு முன்னால் அவள் மயங்கி விழுந்து அவன் தாங்கிப் பிடித்தபோது அவள் தன்னுணர்வில் இல்லை.. இப்போது அப்படியில்லை.. அவள் சுயநினைவுடன் இருந்தாள்.. அவனது தொடு உணர்வை உணர்ந்தவளாக இருந்தாள்.. முதன் முதலாக அவனது ஸ்பரிசத்தை அறிகிறவளாக இருந்தாள்..

சுமித்ராவின் மனதில் பூப் பூத்தது.. அவள் கழுத்தில் கிடந்த தாலி.. அவனுடனான அவளது சொந்தம் எதுவென்பதை சொல்லிக் கொண்டிருந்தது.. அவளைக் கட்டிலில் படுக்க வைத்தவனின் கைமீது படிந்து புரண்ட தாலிச்சரட்டில் அவனும் அவள் முகம் பார்த்தான்.. இருவர் பார்வைகளும் பின்னிப் பிணைந்தன.. சுமித்ரா காய்ச்சல் தந்த அயர்வோடு கண்களை மூடிக் கொண்டாள்.. அவள் மனதில் ஓரமாக ஒரு குரல் ஒலித்தது..

'சுமித்ரா.. உனக்கு கல்யாணமாகிருச்சுடி.. இவன் உன் கணவன்.. உன்னுடையவன்..'

அந்த உணர்வே சுமித்ராவுக்கு இன்பத்தைத் தந்தது.. கட்டிலுக்கு வெகு அருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அவன் உட்கார்ந்ததில் அவள் இதயம் படபடத்தது.. கண்களை மூடுவதைப் போல அரை இமைகளை மூடியவளாய் அவனை அவதானித்தாள்..

ஒரு கிரேக்கச் சிற்பத்தைப் போல செதுக்கி வைத்த முகவெட்டுடன் அவன் இருந்தான்.. கம்பீரமான தோற்றம்.. ஆஜானுபாகுவான உடல் வாகு.. அடர்ந்து கட்டுக் கடங்காமல் நெற்றியின் மீது ஒரு பிடிவாதக்காரக் குழந்தையைப் போல வந்து விழுகும் முடி... என்று எல்லாவகையிலும் அவளை ஈர்க்கிறவனாக இருந்தான்..

'இவனுடன் எனக்குக் கல்யாணம் முடிந்து விட்டதா..! இவன் என்னுடைய புருசனா..! எனக்கே எனக்கானவனா..! எனக்கு மட்டும் சொந்தமானவனா..!'

சுமித்ராவிற்கு பிரமிப்பாக இருந்தது.. நம்ம ஆளு என்று தாரா சொன்னதை நினைத்துப் பார்த்தவள்..

'ஊஹீம்.. இவன் இப்ப என்னோட ஆளு..' என்று இறுமாப்புடன் நினைத்துக் கொண்டாள்..

அவன் கூட இருந்த லஜ்ஜையில் கண்மூடிப் படுத்திருந்தவளைக் காய்ச்சல் அதிகமாகி விட்டதோ என்ற கவலையுடன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான் தனஞ்ஜெயன்.. அவன் விரல்கள் தொட்ட ஸ்பரிசத்தில் அவள் மேனி நடுங்கியதில்.. காய்ச்சல் அதிகமாகி விட்டதோ என்று அவன் கவலைப் பட்டுப் போனான்..

"அம்மா.."

அவன் அழைத்த வேகத்தில் வயதாகி விட்டதையும் மறந்து ஓட்டமும் நடையுமாக ஓடிவந்தாள் இந்திராதேவி..

"என்னப்பா..?"

"இவளுக்கு காய்ச்சல் அதிகமாகிருச்சு போல.. உடம்பெல்லாம் நடுங்குதும்மா.."

"இல்லையேப்பா.. காலையிலதானே காய்ச்சல் விட்டு வியர்த்து வழிஞ்சுச்சு..? இப்ப எப்படி காய்ச்சல் அதிகமா கிருச்சுன்னு சொல்ற..?"

இந்திரா மருமகளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.. சில்லென்று இருந்தது.. குழப்பத்துடன் மகனைப் பார்த்தாள்..

"காய்ச்சல் இறங்கிருச்சுப்பா.. நீ கவலைப்படாதே.."

"உடம்பு நடுங்குச்சும்மா.."

"பலவீனமா இருக்கலாம்.. டாக்டர் வந்ததும் என்னன்னு கேட்போம்.. நீ வா சாப்பிடலாம்.."

"இவ இன்னும் சாப்பிடலையேம்மா.."

சுமித்ராவின் இமையோரம் நீர் அரும்பி விட்டது.. அவள் மீதான அவனது கவனிப்பில்.. அக்கறையில்.. உரிமையுணர்வில் அவள் உருகிவிட்டாள்..

'என்ன மாதிரியான பந்தம் இது..!' அவள் இதயம் நெகிழ்ந்தது..

"அதுவும் சரிதான்.. நான் சுசிலாகிட்ட இட்லி சாம்பாரை கொடுத்து அனுப்பறேன்.. இவளை சாப்பிட வைச்சு மாத்திரை கொடுத்துட்டு.. நீயும் சாப்பிட்டிருப்பா.. இப்ப டாக்டர் வந்திருவார்.."

இந்திராதேவி மிகக் கெட்டிக்காரத்தனமாக.. மகனுக்கும் மருமகளுக்குமான தனிமையை உண்டு பண்ணினாள்.. கண் விழித்து விட்ட மருமகள் கணவனின் அருகாமையை உணர்ந்து அதை ஏற்றுக் கொள்ள பழகிக் கொள்ளட்டுமே என்பது அவளது எண்ணமாக இருந்தது..

தனஞ்ஜெயனின் அறையில் முதலிரவுக்கான பூ அலங்காரங்கள் நடந்து கொண்டிருந்த போது சுமித்ரா காய்ச்சலில் விழுந்து விட்டாள்.. அவளும்.. அவளுடைய பெட்டிகளும் வேறு ஒரு அறையில் இருக்க வேண்டியதாகி விட்டது.. இப்போதுதான் அவள் கண் விழித்திருக்கிறாள்.. உடனடியாக அவளிடம் தனஞ்ஜெயனின் அறைக்கு

அவள் இடம் மாற வேண்டியதைப் பற்றிப் பேச முடியுமா..? அதே சமயத்தில் தனித்தனி அறைகளில் இருக்கும் மகனுக்கும்.. மருமகளுக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டு விட்டால் அதை இந்திராதேவியால் தாங்கிக் கொள்ள முடியுமா..?

அவள் வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தவள்.. ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி மகனையும் மருமகளையும் அருகருகே இருக்குமாறு அவள் பார்த்துக் கொண்டாள்..

சுசிலா கொண்டு வந்த தட்டுக்களையும்.. கிண்ணங்களையும் வாங்கி மேஜை மேல் வைத்த தனஞ்ஜெயன்.. அகன்ற கிண்ணத்தில் இட்லிகளை வைத்து.. அதில் சாம்பாரை ஊற்றி ஊற விட்டான்.. ஸ்பூனால் அவற்றை விண்டபடி... சுமித்ராவின் அருகே நெருங்கினான்.. பக்கத்திலிருந்த டீப்பாயில் கிண்ணத்தை வைத்து விட்டு அவள் தோளைப் பற்றி லேசாக அசைத்தான்..

சுமித்ராவின் உடலில் புகுந்த மாய அலைகள் அவளை ஏதேதோ உணர்வுகளுக்கு ஆட்படுத்தின.. அவள் அவசரமாக கண்களைத் திறந்தாள்..

"மெதுவா எழுந்திருச்சு உட்கார்ந்துக்க.. இட்லி சாப்பிட்டுட்டு மாத்திரை சாப்பிடலாம்.." தனஞ்ஜெயன் அதே பரிவுடன் சொன்னான்..

'இவன் என்னை பேசண்டாய் பார்க்கிறான்..'

சுமித்ராவின் மனம் சோர்ந்தது.. அவளைத் தொடும் உணர்வு அவனுக்கில்லையா..? அதில் ஆசையில்லாமல் நோயாளிக்குச் செய்யும் சேவைதான் இருக்கிறதா..?

சுமித்ரா எழுந்து கொள்ள முயன்றாள்.. அயர்வான அவள் உடல் அதற்கு ஒத்துழைக்கவில்லை.. தடுமாறினாள்..

"இரு.. நான் தூக்கி விடறேன்.."

தனஞ்ஜெயன் கட்டிலில் அவள் பக்கத்தில் உட்கார்ந்து விட்டான்..

சுமித்ராவின் இதயத்தில் யாரோ மத்தளம் அடிக்க ஆரம்பித்தார்கள்.. அவள் காதோரம் எங்கேயோ வாசிக்கப் படும் வயலினின் ஓசை கேட்டது.. அவள் மனதுக்குள் பாரதிராஜாவின் படக் கதாநாயகியைப் போல பசுமையான புல்வெளியில் ஸ்லோ மோசனில் ஓடிவர ஆரம்பித்தாள்..

"உட்கார்ந்துக்க.."

அவள் தோளைத் தொட்டு தூக்கிப் பிடித்த தனஞ்ஜெயனின் கரங்களின் இறுக்கத்தில் இதமான இன்ப இம்சையை அவள் அனுபவித்தாள்.. அவள் சாய்ந்து கொள்ளத் தோதாக கட்டிலின் முதுகுபக்கத்தில் தலையணைகளை அவன் வைத்து விட்டதில் அவன்மீது அவளுக்குள் பிடிப்பு ஏற்பட்டது..

"சாப்பிடு.."

கிண்ணத்திலிருந்த சாம்பாரில் ஊறிய இட்லித் துண்டுகளை ஸ்பூனில் எடுத்து அவளுக்கு ஊட்ட ஆரம்பித்தான் தனஞ்ஜெயன்..

"நானே சாப்பிட்டுக்கறேன்.." சங்கடத்துடன் அவள் சொன்னாள்..

"எதுக்கு..? கை நடுக்கத்திலே மொத்த சாம்பார் இட்லியையும் மேலே கொட்டிக்கிறதுக்கா..?"

அவன் புருவங்களை உயர்த்திக் கேட்ட விதத்தை வெகுவாக அவள் ரசித்தாள்.. அவன் மீதிருந்து வந்த இதமான நறுமணம்.. அது அவனுக்கேயுரிய நறுமணம் என்று சொல்லியது.. அவளது வாய்க்கு அருகே வந்து போன அவனது வலிமையான கரத்தின்மீது அவள் பார்வை படிந்தது..

ஏதோவொரு நதியில் இறங்கும் மயக்கத்தினை சுமித்ரா உணர்ந்தாள்.. இதுநாள்வரை இப்படிப்பட்ட ஒரு மயக்கத்தில் அவள் நனைந்ததில்லை.. உடல் முழுவதும் அந்த மயக்கத்தின் திவலைகள் கொடுத்த சிலிர்ப்பில் அவள் மனம் மயங்கியது..

"குட் கேர்ள்.. நாலு இட்லி சாப்பிட்டுட்ட.."

அவன் திருப்தியுடன் சொன்னபோது.. இவன் என்ன என்னைச் சின்னஞ்சிறு சிறுமியாக பாவிக்கிறானா..? என்ற கோபம் அவளுக்குள் எழுந்தது.. அவள் முகம் சுருங்கியதில் அவன் புருவங்கள் உயர்ந்தன..

"என்ன..?" என்றான்..

"கேர்ளா..? நான் என்ன எல்.கே.ஜி படிக்கிற பேபியா..?"

வெடுக்கென்று கேட்ட அவள் கோபத்தில் அவன் முகத்தில் வியப்பு வந்தது.. இவள் இப்படிக் கூடப் பேசுவாளா என்ற ஆச்சரியத்துடன்..

"வேற எப்படிச் சொல்கிறது..?" என்று அவளிடமே விசாரித்தான்..

"குட்வுமன்னு சொல்லியிருக்கனும்.." அவள் திருத்தினாள்..

"ஆகட்டுங்க.. இனி அப்படியே சொல்கிறேங்க.."

சின்னச் சிரிப்புடன் அவன் சொன்னதில் அவளுக்கு வெட்கமாகி விட்டது.. அவளுக்கான மாத்திரைகளை எடுத்துக் கொடுத்து அவளை விழுங்கச் சொன்னான்.. அவள் வாயில் அவன் மாத்திரைகளை போட முயன்ற போது..

"நானே போட்டுக்கறேன்.." என்று அவற்றை கையில் வாங்கிக் கொண்டாள் சுமித்ரா..

"ஏன்..? நான் போட்டு விட்டால் ஆகாதா..?" அவன் கேட்டான்..

எதையாவது சாக்கு வைத்து அவளுடன் பேசிக் கொண்டிருக்க அவன் விழைந்தான்.. அதே எண்ணம்தான் அவளுக்கும்.. அவன் உதிர்க்கும் வார்த்தைகளை வைத்தே வாய் வளர்த்து அந்தப் பேச்சை நீடிக்க வைக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்..

"இப்பத்தான் சொன்னேன்.." அவளும் வாய் வளர்த்தாள்..

"என்ன சொன்னே..?" அவன் கமா போட்டான்..

"நான் எல்.கே.ஜி. படிக்கிற பாப்பா இல்லை.."

"பின்னே..?"

அவனது குறும்பான கேள்வியில் இவன்கூட இப்படிப் பேசுவானா என்றிருந்தது அவளுக்கு.. அவள்மீது படிந்த அவனது பார்வையின் கூர்மையில் பஞ்சாயத்து நடந்த போது அவன் பார்த்த பார்வைகள் அவளுக்கு நினைவுக்கு வந்தன..

அவள் முகம் ரோஜா வண்ணத்துக்கு போனது.. அவனது பேச்சை ரசிக்கும் முறுவலுடன்..

"ஓஹோ.. உங்கள் ஊரில் சேலைகட்டிய பெண்களையெல்லாம் பாப்பான்னுதான் சொல்வீங்களோ.." என்று சொன்னாள்..

"ஹா.. ஹா.." அவன் சிரித்தான்..

சுமித்ரா உடனே ஜன்னல் வழியாக தோட்டத்தைப் பார்த்தாள்..

"அங்கே என்ன பார்க்கிற..?" அவன் விசாரித்தான்..

"உங்க சிரிப்பு சத்தத்திலே எத்தனை பறவைகள் பயந்து போய் அலறியடிச்சுக்கிட்டு பறந்து போகுதுகன்னு பார்க்கிறேன்.." அவளும் பதில் கொடுத்தாள்..

அந்தப் பேச்சு வார்த்தையை அவர்கள் இருவருமே விரும்பி ரசித்தார்கள்.. சுமித்ராவின் உள்ளங்கையில் மாத்திரைகளை வைத்த தனஞ்ஜெயனின் கை அவளது உள்ளங்கையில் அழுந்தி மீண்டது.. சுமித்ராவின் முகத்தில் ரோஜாக்கள் பூத்தன.. அவள் மாத்திரைகளை விழுங்குவதை.. அவன் விழுங்குவதைப் போல பார்த்து வைத்தான்.. வெட்கத்துடன் தண்ணீர் தம்ளரை டீப்பாயில் வைக்கப் போனாள் சுமித்ரா..

"என்கிட்டக் கொடு.."

அதை வாங்கி வைத்த தனஞ்ஜெயன்..

"பக்கத்திலே எதுக்காக நான் இருக்கிறேன்..? காய்ச்சல் வந்த உடம்பு.. அலட்டிக்கலாமா..?" என்று கடிந்து கொண்டான்..

இப்போதும் அவன் அவளை நோயாளியாகத்தான் பார்க்கிறானா..? இத்தனை நேரமும் அவளுடன் அவன் பேசிய குறும்புப் பேச்சுக்கள் அனைத்தும் ஒரு நோயாளிக்கான புத்துணர்வைக் கொடுப்பதற்காகத்தானா..?

சுமித்ரா ஏமாற்றமாக உணர்ந்தாள்..

"எனக்குத் தெரியும்.."

முகத்தை ஒரு முழ நீளத்துக்கு தூக்கி வைத்துக் கொண்டவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது..

"இதுக்குப் போய் கோபமா..?" என்று கேட்டான்..

சுமித்ராவின் முக இறுக்கம் குறைந்தது.. மென்மை படர்ந்தது.. அவனது சொந்தம் கலந்த வார்த்தைகளில் அவள் சுகம் கண்டாள்..

"நீங்க இன்னும் சாப்பிடலையே.." மெதுவான குரலில் சொன்னாள்..

இப்போது அவன் முகம் மலர்ந்தது.. அவள் காட்டிய சொந்தத்தில் மூன்று நாள்களாக அவன் மனதை ஆக்ரமித்திருந்த புழுக்கம் அகன்றது.. இதமான இன்ப உணர்வில் அவன் திளைத்தான்..

"சாப்பிடனும்தான்.. உனக்கு ஊட்டி விட நானிருக்கேன்.. எனக்கு ஊட்டி விட யாரிருக்கா..?"

சோகம் போல முகத்தை வைத்துக் கொண்டு தட்டில் இடலிகளை எடுத்து வைத்து.. சட்னி.. சாம்பாரை ஊற்றியபடி அவளை ஜாடையாக பார்த்தவனின் கண்களில் தெரிந்த சிரிப்பை அவள் கண்டு கொண்டாள்..

நான் ஊட்டி விடவா என்று அவள் கேட்க வேண்டுமென்று அவன் விரும்புவதை உணர்ந்து கொண்டவளுக்கு.. அவனுக்கு ஊட்டிவிட வேண்டும் போல மனம் பரபரத்தது..

அதை அடக்கியபடி அப்பாவி போல முகத்தை வைத்துக் கொண்டு..

"காலையிலே ஒரு பாட்டி வந்தாங்களே.." என்றாள்..

"ஊம்.. என் அம்மாவோட சித்தி அவங்க.." என்றான் தனஞ்ஜெயன்..

"அவங்களை வேணும்னா வரச் சொல்லட்டுமா..?"

முகம் மாறாமல் அவள் கேட்க.. எதற்காக கேட்கிறாள் என்று புரிந்து கொள்ளாதவனாக அவன்..

"எதுக்கு..?" என்று கேட்டு வைத்தான்..

"உங்களுக்கு ஊட்டி விடத்தான்.." அவள் சிரிக்காமல் சொன்னாள்..

"ஹா... ஹா..." சிரித்தவனுக்கு.. என்றைக்கு மில்லாமல் அன்று இட்லியும்.. சாம்பாரும்.. தேவாமிர்தமாக ருசித்தது..

"ஏனாம்..? பாட்டி ஊட்டி விட்டாத்தான் எனக்கு தொண்டையிலே இட்லி இறங்குமா..?"

அவன் விழிகள் நீ ஊட்டி விட்டாலும் இறங்கும் என்று சொல்லாமல் சொல்லின.. சுமித்ராவின் படபடப்பு அதிகமானது.. அதை மறைத்தபடி..

"டில்லிக்கு ராஜான்னாலும் பாட்டி சொல்லைத் தட்டாதேன்னுதான் பாட்டிருக்கு.." என்றாள்..

"டில்லியை எதுக்காக இங்கே இழுக்கிற..?"

"நீங்கதான் அன்னவாசல் ஜமீன்தாராச்சே.."

"அதுக்கு..?"

"எப்பவுமே பாட்டிக்கும் ராஜாக்களுக்கும்தான் பற்று அதிகமாம்.."

"அப்படின்னு யார் சொன்னது..?"

"இந்தப் பாட்டுச் சொல்லுதே.."

"உனக்குத் தோதாய் ஒரு பாட்டைப் பிடிச்சுக்கிட்டு.. நீ பாட்டு மேலே பழியைப் போடறியா..?"

அவன் காலி தட்டை வைத்து விட்டு... குளியலறைக்குள் சென்றான்.. வாஷ் பேசினில் கை கழுவிவிட்டுத் திரும்பியவன்

"சுசிலா.." என்று குரல் கொடுத்தான்..

"ஐயா.." அவள் ஓடோடி வந்தாள்..

"இந்தப் பாத்திரங்களை எடுத்துக்கிட்டு போ.. டாக்டர் வருகிற நேரம்.." தனஞ்ஜெயன் சொன்னான்..

சுசிலா பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அகன்றாள்.. தனஞ்ஜெயனின் பார்வை குறுகுறுவென சுமித்ராவின் முகத்தின் மீதே படிந்தது. அவளுக்குள் உற்சாக ஊற்று வந்தது..

'இவன் என்னத்தையோ சொல்லப் போகிறான்..'

அவளது யூகம் பொய்க்கவில்லை.. அவன் சொன்னான்.. இல்லையில்லை.. பாடிக் காட்டினான்.. அவளையே பார்த்தபடி மிக மெதுவான குரலில்..

"ராஜாவின் பார்வை..

ராணியின் பக்கம்..

கை தேடுது சொர்க்கம்..

கண் மூடுது வெட்கம்

பொன் காலை மயக்கம்.."

என்று பாடிவிட்டு..

"இந்தப் பாட்டை நீ கேட்டதில்லையா..?" என்றும் விசாரித்து வைத்தான்..

"இதன் மூலம் தாங்கள் சொல்ல விரும்புவது என்னவோ..?" அவள் முகம் சிவக்கக் கேட்டாள்..

"ராஜாவுக்கும்.. ராணிக்கும்தான் சம்பந்தமிருக்கு.. ராஜாவுக்கும் பாட்டிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யென்று சொல்ல விரும்பினேன் ராணியாரே.." அவன் உல்லாசமாக நகைத்தான்..

"தங்கள் பாட்டில் ஒரு பிழையிருக்கிறது அரசரே.." என்றாள் சுமித்ரா..

"என்ன பிழை ராணியாரே..?"

"பொன் மாலை மயக்கம் என்றுதான் அந்த திரைப்படப் பாடலில் வருவதாக நான் செவியுற்றிருக் கிறேன் அரசரே.."

"அது மாலை நேரத்தில் பாடிய பாடலாக இருக்கும் ராணியாரே.. இது அப்படியில்லை.. காலை நேரத்தில் பாடப்படும் பாடல்.. இந்தப் பாடலில் பொன் காலை மயக்கம் என்று வந்தால்தான் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று இவ்வாறு மாற்றி உச்சரித்தேன் ராணியாரே.."

அவளுக்குள் பொன் காலை மயக்கம் வந்தது.. தலை குனிந்தவளைப் பார்த்தவனின் விழிகளில் மோகம் வந்தது.. அவர்களின் தனிமையைக் கலைக்க டாக்டரும் வந்து சேர்ந்தார்.. சுமித்ராவை பரிசோதித்து விட்டு..

"ஃபீவர் குறைஞ்சிருச்சு.. ஜஸ்ட் டூ ஆர் த்ரி டேஸ்.. இவங்க பெட்ரெஸ்டில இருந்தாப் போதும்.. ஷி வில் பி ஆல் ரைட்.." என்று சொல்லி இந்திராதேவியின் வயிற்றில் பாலை வார்த்து விட்டுப் போய்விட்டார்..

14

சுமித்ராவுக்கு நடக்க வேண்டும் போல இருந்தது.. அவள் மெதுவாக எழுந்து அறையை விட்டு வெளியே வந்தாள்.. மாடி ஹாலை ஒட்டியிருந்த நீண்ட காரிடார் போன்ற

பகுதியில் நடந்தாள்.. இரு பக்கமும் இருந்த அறைகளைப் பார்த்தவளுக்கு வழிதப்பி ஏதோ ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குள் வந்து விட்டதைப் போல இருந்தது.. அந்த வீட்டின் தோட்டத்தின் அளவு கூட மணிவாசகத்தின் வீடு இருக்காது என்ற உண்மையில் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அதற்கே அவள் எங்கள் வீட்டைப் போல உண்டா என்று தோழிகளின் மத்தியில் பெருமையாக பேசுவாள்..

இருபக்கமும் இருந்த அறைகளில் எந்த அறையில் தனஞ்ஜெயன் இருப்பான் என்று அறியும் ஆர்வம் அவளுக்குள் எழுந்தது.. யாரிடம் அதைக் கேட்பது..? கட்டிய கணவன் எந்த அறையில் இருக்கிறான் என்பதைக் கூட அறியாமல் இருக்க நேர்ந்த துர்பாக்கியத்தில் அவள் மனம் கனத்தது..

அந்த ஒரு வாரமாக தனஞ்ஜெயன் அவள் அருகில் தான் இருந்தான்.. அவள் கண் விழித்து அவனுடன் சகஜமாக பேச ஆரம்பித்த அந்த தினத்திலிருந்து இரவு படுக்க மட்டும் அவனது அறைக்குப் போய் விடுவான்.. போவதற்கு முன் லேசாக தயங்கி நின்று அவளைப் பார்ப்பான்.. மாத்திரைகளை எடுத்துப் பார்ப்பதைப் போல தேங்கி நிற்பான்.. அப்படியே அவன் நின்று விட மாட்டானா என்று அவள் மனம் ஏங்கும்.. அவள் முகத்தை முகத்தைப் பார்க்கிறவனின் மனதில் என்ன ஓடுகிறது என்று அறியத்துடிப்பாள்

சுமித்ரா.. அவன் ஒரு நீண்ட பெரு மூச்சோடும்.. சின்னத் தலையசைவோடும்.. போய் விடுவான்.. சுமித்ராவின் விழியோரம் நீர் வழியும்..

'ஏன் இந்தக் காய்ச்சல் வந்தது..?'

அவள் காய்ச்சலை நொந்து கொண்டாள்.. அதுதானே அவனையும் அவளையும் தனித்தனி அறைகளில் பிரிந்திருக்க வைத்திருக்கிறது..!

பால்கனி பரந்த விளையாட்டு மைதானம் போல பெரிதாக இருந்தது... தோட்டத்துச் செடிகளின் குளுமையான

காற்றும்.. அதன் கைப்பிடி வளைவுகளில் படர்ந்து பூத்திருந்து முல்லைக் கொடிகளில் அரும்பியிருந்த முல்லை அரும்புகளின் வாசனையும் அவள் மனதைக் கவர்ந்து இழுத்தன..

சுமித்ராவுக்கு அந்தச் சூழலை பிடித்துப் போய் விட்டது..

அங்கிருந்த ஊஞ்சலில் அமர்ந்து காலை விந்தித் தள்ளியவளுக்கு லேசான சந்தோசம் வந்தது..

'இங்கே உட்கார்ந்து பாட்டுக் கேட்கலாம்.. கதை படிக்கலாம்..'

இன்னும் என்னவெல்லாம் அந்த பால்கனியில் அமர்ந்தபடி செய்ய முடியுமென்று அவள் மனது பட்டியல் போட்டது.. முல்லைக் கொடியின் மீது படிந்த பார்வை..

'பூக்கட்டலாமே..' என்று புதிதாக ஒரு வேலையை கண்டுபிடித்தது..

"அம்மா.."

சுமித்ராவை அழைத்தபடி அங்கே வந்து நின்றாள் தேவகி..

"ஹாய் தேவகி.. குட்மார்னிங்.." உற்சாகமாக சொன்னாள் சுமித்ரா..

படித்த சின்ன எஜமானியின் குட்மார்னிங்கில் மகிழ்ந்து போய் விட்டாள் தேவகி... பதிலுக்கு குட்மார்னிங்கை உதிர்க்காமல் சந்தோச சிரிப்பை மட்டும் உதிர்த்தாள்..

"குட்மார்னிங் சொன்னா பதிலுக்கு குட்மார்னிங் சொல்லனும்.."

"ஹி.. ஹி.."

"இதுதான் உங்க ஊரில குட்மார்னிங்கா..?"

"உங்களுக்கும் இதுதாம்மா ஊரு.."

"ஓ.. நீ அப்படி வர்றியா.."

சுமித்ரா மாடிப் பால்கனியின் கைப்பிடி வளைவில் இருந்த முல்லை கொடியை பார்த்தபடி சொன்னாள்.. அதில் தேவகி

திகைத்துப் போய் விட்டாள்.. அவள் ஒன்றும் அப்படி வரவில்லையே.. அந்தப் பக்கம் வருவதற்கும் எந்தவிதமான மார்க்கமும் இல்லையே.. உயரமான பால்கனி.. எட்டமுடியாத உயரத்துடனும்.. அமைப்புடனும் இருந்தது.. ஏணி வைத்து ஏறினாலொழிய அந்தப் பக்கமாக யாரும் குழாயைப் பிடித்துக்கூட ஏறிவந்து விட முடியாது..

"அப்படி வர முடியாதேம்மா.. நான் இப்படித்தான் வந்தேன்.."

தேவகி காட்டிய திசையில் மாடிப் படிக்கட்டுகள் இருக்கவும் சுமித்ரா பல்வரிசை தெரிய அழகாக சிரித்தாள்.. தேவகியின் அப்பாவித்தனம் அவளைக் கவர்ந்தது..

"எதுக்கு என்னைக் கூப்பிட்ட தேவகி..?" என்று அன்புடன் கேட்டாள்..

அவளின் அந்த அன்பில் தேவகிக்கு சின்ன எஜமானியை மிகவும் பிடித்துப் போய் விட்டது..

"உங்களைப் பார்க்க.. உங்க ஊரில இருந்து உங்க சொந்தக்காரங்க வந்திருக்காங்கம்மா.. ஐயாவும்.. பெரியம்மாவும் உங்களாலே கீழே இறங்கி வர முடியுமான்னு கேட்டுட்டு வரச் சொன்னாங்க.." தேவகி சொன்னதும்..

"என்னது..?" என்று அவசரமாக எழுந்து கொண்டாள் சுமித்ரா..

"மெல்லம்மா.. காய்ச்சல் வந்த உடம்பு.. என் தோளை வேணும்னா பிடிச்சுக்கங்க.." தேவகி பதறினாள்..

"உங்க ஐயாதான் படுத்தறாருன்னு நீயும் சேர்ந்துக்கிட்டு என்னைக் காய்ச்சல்காரின்னு பட்டம் கட்டி மூலையில உட்கார வைச்சிருவ போல இருக்கே.. காய்ச்சலெல்லாம் ரெண்டே நாளில ஓடிப் போயிருச்சு.. இப்ப ஓட்டப் பந்தயம் ஓடறதுன்னாக் கூட நான் ரெடி.. நீ ரெடியா..?"

"எதுக்கும்மா..?"

"ஓட்டப் பந்தயத்துக்கு.."

"ஹி..ஹி..."

"வா.. போகலாம்..."

சுமித்ரா முன்னால் போக.. தேவகி பின் தொடர்ந்தாள்.. திரும்பிப் பார்த்த சுமித்ரா புருவங்களை உயர்த்தினாள்.. தேவகி திகைத்தாள்..

"அம்மா..?"

"இப்ப எதுக்காக மகாராணிக்குப் பின்னால வர்ற சேடிப் பொண்ணு போல என் பின்னால பதுங்கிப் பதுங்கி வர்ற..?"

"அம்மா..?"

"கூட.. வா.."

தேவகியின் முகம் ஜொலித்தது... அவளுடன் இணைந்து பேசியபடி படிகளில் இறங்கின சுமித்ராவுக்கு.. தன் பெயரில் இருந்த ஓட்டு வீட்டை எழுதிக் கொடுத்து விட அவள் சித்தமாகி விட்டாள்..

'ஜமின்தாரோட பொண்டாட்டிங்கிற கர்வமில்லாம எப்படி வீட்டு மனுஷி போல என்னை நினைச்சு பேசிப் பழகுது இந்தம்மா..'

சுமித்ரா மாடிப் படிகளை விட்டு இறங்கி.. ஹாலில் கால் பதித்த போது.. பெரிய ஹாலில் போடப் பட்டிருந்த சோபாக்களில் உட்கார்ந்திருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்..

"எப்படி இருக்கிற சுமித்ரா..?"

அவளைப் பார்த்ததும் எழுந்து நின்று கேட்டவனைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டாள் சுமித்ரா... அவளுக்கு பேச நா வரவில்லை.. நீண்ட காலமாக பார்க்காமல் இருந்து பார்த்ததினால் ஏற்படும் பல்வேறு உணர்ச்சிக் கலவைகள் அவள் முகத்தில் வந்து

போவதை இறுக்கமான முகத்துடன் கவனித்தபடி கால்மேல் கால் போட்டு தோரணையாக உட்கார்ந்திருந்தான் தனஞ்ஜெயன்..

அவனைக் கூடக் கவனிக்காமல் வந்திருந்த விருந்தாளியின் முகத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி நின்றிருந்த மனைவியின் செய்கை அவன் இதயத்தைப் பிளந்தது..

சுமித்ரா காய்ச்சலில் இருந்து மீண்டு எழுந்த அந்த மூன்றாவது நாளிலிருந்து.. அன்று காலைவரை.. தனஞ்ஜெயனிடம் உற்சாகமாக பேசிக் கொண்டிருந்த பேச்சுக்கள் எல்லாம் பொய்யா..? அவை கானல் நீரா..? வந்திருப்பவனைக் கண்டதும் அவையெல்லாம் ஓடி ஒளிந்து கொண்டனவா..?

அந்த நான்கு தினங்களாக அவள் பார்த்த பார்வைகளும்.. பேசிய பேச்சுக்களும்.. அப்படி சூரியனைக் கண்ட பனித்துளிகளைப் போல மறைந்து போவதில் அவன் மனம் துயரம் கொண்டது..

அப்படிக் கணவனின் நினைவை மறக்கடிக்கும் அளவிற்கு வந்திருப்பவனின் வருகைக்கு சக்தி இருக்குமானால்..

'யார்.. இவன்..?'

தனஞ்ஜெயனின் புருவச் சுளிப்பில் இந்திராதேவியின் மனம் நைந்தது.. அவளால் மகனின் மனப் போராட்டத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது.. அதனால்.. வந்திருப்பவனைப் பார்த்தபடி மலைத்து நின்றுவிட்ட சுமித்ராவை அவள் அழைத்தாள்..

"சுமித்ரா..!"

அந்த அழைப்பில் மலைப்பிலிருந்து மீண்டுவிட்ட சுமித்ரா..

"அத்தை..?" என்று இந்திராதேவியின் முகம் பார்த்தாள்..

"இப்படி உட்காரும்மா.. காய்ச்சல் வந்த பொண்ணு.. இன்னைக்குத்தான் மாடியை விட்டு கீழே இறங்கி வந்திருக்கிற.. நிற்கக் கூடாது.."

இந்திராதேவியின் கனிவான உத்தரவில் தன்னிச்சையாக தனஞ்ஜெயன் அமர்ந்திருந்த நீண்ட சோபாவில் அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள் சுமித்ரா.. அதில் தனஞ்ஜெயனின்

புருவச் சுளிப்பு மறைந்து போனதில் இந்திராதேவியின் மனதில் நிம்மதி உண்டானது.. அவள் எழுந்து நின்றிருந்தவனைப் பார்த்து..

"நீயும் உட்காருப்பா.." என்று உபசரித்தாள்...

சுமித்ராவின் முகத்தையே ஆராய்வதைப் போல பார்த்தபடி அவன் உட்கார்ந்தான்.. மலரை மொய்க்கும் வண்டாக அவன் பார்வை சுமித்ராவின் முகத்தைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.. அதில் தனஞ்ஜெயனின் முகம் கடுத்தது..

"தம்பி யாருன்னு தெரியலை சுமித்ரா.. நம்ம தனஞ்ஜெயன் தோட்டத்தில் உலாத்திக்கிட்டு இருந்திருக்கான்.. இந்தத் தம்பி காம்பவுண்டுக்கு வெளியே நின்னிருக்கு.. தோட்டக்கார முனுசாமி யாருன்னு கேட்டதுக்கு.. உன்னோட உறவுக்காரன்னு சொல்லுச்சாம்.. முனுசாமி தனாகிட்ட வந்து சொல்லியிருக்கான்.. உள்ளே வரச்சொல்லி தனா விசாரிச்சப்பவும் உறவுக்காரன்னு மட்டுமே தம்பி சொல்லியிருக்கு.. யாரு.. எவருன்னு சொல்லலை.. அதான்.. காபி சாப்பிடச் சொல்லி உட்கார வைச்சுட்டு உன்னை வரச் சொன்னோம்.. தம்பி யாரும்மா..?"

இந்தராதேவியின் பேச்சில் வந்திருந்தவன் முகம் சுளித்தான்..

"இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க..? சுமித்ராகிட்ட நான் வந்ததைப் பத்திச் சொல்கிறீங்களா..? இல்லை.. நான் யார் எனக்கும் சுமித்ராவுக்கும் என்ன உறவுங்கிறதைப்

பத்தி விசாரணை கமிசன் நடத்தறிங்களா..? உங்க பேச்சே சரியில்லையே..."

வந்திருந்தவனின் பேச்சு சரியில்லாமல் இருந்ததில் சுமித்ராவுக்கு கோபம் வந்தது.. அவள் பல்லைக் கடித்தாள்..

'யார் வீட்டுக்கு வந்து இவன் என்ன பேச்சுப் பேசுகிறான்.. அதுசரி.. யாரு இவன்..? என் அத்தையைக் கட்டின சுந்தர புருசனான திருக்குமரனோட ஒன்று விட்ட ரெண்டும்

கெட்டான் தம்பியில்ல.. வேற எப்படிப் பேசுவான்..' எரிச்சல் பட்டாள்..

அதே எரிச்சல் தனஞ்ஜெயனுக்கும் வந்திருக்க வேண்டும்.. சும்மாவே அவன் இந்திராதேவிக்கு

ஒன்று என்றால் பதறி விடுவான்.. உன் வீட்டுக்கு மருமகளாக அனுப்புவதற்காகத்தான் நான் என் மகளை பெற்று வளர்த்திருக்கிறேனா என்று மணிவாசகம் இந்திராதேவியைப் பார்த்துக் கேட்ட வார்த்தைகளுக்காக அவர் மகளையே மணம் முடித்து இந்திராதேவியின் மருமகளாக ஆக்கிக் காட்டியவன் அவன்..

அவன் முன்னிலையில் வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளி அப்படிப் பேசினால் எப்படிப் பொறுத்துக் கொள்வான்..? என்னதான் வந்திருப்பவன் புது மனைவியின் உறவினன் என்று இருந்தாலும்.. அவன் தனஞ்ஜெயனின் அம்மாவிடம் முகம் சுளித்துப் பேசக் கூடாதே...

அந்த தைரியத்தை யார் அவனுக்குக் கொடுத்தது..?

தனஞ்ஜெயன் சுமித்ராவை முறைத்தான்.. முதன் முதலாக உணர்ந்த அவனது முறைப்பில் அவள் தடுமாறினாள்..

'நான் என்ன செய்தேன்..?' அவள் கண்கள் கேள்வி கேட்டன..

"உங்க பேச்சுத்தான் சரியில்லை.. உங்க சொந்தக் காரங்களைப் பார்க்க வந்திருக்கீங்க.. வீட்டில இருக்கிற பெரியவங்ககிட்ட எப்படிப் பேசறதுன்னு தெரியாதா..?"

கண்டிப்புடன் பேசிய தனஞ்ஜெயனை கண்டு கொள்ளவே இல்லை அந்த நித்தியானந்தம்..

"எப்படிங்க பேசிட்டேன்..? என் கண் முன்னாலேயே சுமித்ராவை இத்தனை கேள்வி கேட்கிறாங்கன்னா..

நான் போன பின்னாலே எத்தனை கேள்வி கேட்க மாட்டாங்க..?"

"கேட்க வேண்டிய தேவை இருந்தா கேட்கத்தான் செய்வாங்க... அவங்க சுமித்ராவோட மாமியார்... அவங்க கேட்கிற கேள்விகளுக்கு அவள் பதில் சொல்லித்தான் ஆகனும்... அது எங்க வீட்டுப் பிரச்னை... உங்களுக்கு என்ன வந்தது...? மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தையில் நீங்க எப்படித் தலையிடலாம்..?"

"சுமித்ரா எங்க வீட்டுப் பெண்.."

"என்னது..?"

தனஞ்ஜெயன் வெகுண்டு விட்டதில் சுமித்ரா பயந்து விட்டாள்..

"தனா.. என்னப்பா இது..? தம்பிக்கு நம்ம வீட்டு நிலவரம் தெரியாதில்ல.. மனசில பட்டதை பேசிருச்சு.. நீ அதைப் பெரிசா எடுத்துக்கலாமா தம்பி..? நம்ம சுமியின் மனசை நினைச்சுப் பார்க்க வேணாமா..?" இந்திராதேவி மகனை அமைதிப்படுத்த முயன்றாள்..

"அவதான் நம்மைப் பத்தி.. நினைச்சுப் பார்த்து அதன்படி நடந்துக்கப் பழகிக்கனும்.. முதலில் இருந்ததைப் போல இருக்கக்கூடாது.."

தனஞ்ஜெயனின் கோபத்தில் முதலில் அவள் எப்படி இருந்தாள் என்ற கோபம் சுமித்ராவுக்குள் மேலோங்கியது..

எப்படி அவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லலாம்..?

சுமித்ராவின் முகமாறுதலைக் கவனிக்காமல் கண்டிப்புடன் தன் பேச்சைத் தொடர்ந்தான் தனஞ்ஜெயன்..

"அப்ப அவ லட்சுமிபுரத்தில பிறந்த பொண்ணு.. மணிவாசகத்தின் மக.."

'ஓ.. இதைத்தான் இவன் இந்த லட்சணத்தில் சொல்லி வைத்தானா..?' சுமித்ரா மனம் தெளிந்தாள்..

"இப்ப... அவ அன்னவாசல் ஜமீன்தாரரான தனஞ்ஜெயனோட பெண்டாட்டி.. ஜமீன்தாரிணி இந்திரா

தேவியின் மருமகள்.. அன்னவாசல்தான் இனி அவளோட ஊர்.. இதை நினைவில வைத்துக்கப் பழகிக்கனும்..."

'என்ன தேவைக்கு..?' சுமித்ராவுக்கு கடுப்பாக இருந்தது..

திருமணமாகி வந்தவளிடம் கணவனாகப் பட்டவன் பழகிப் பார்க்க நினைப்பானா.. அதை விட்டுவிட்டு.. அவளிடம் நினைப்பை வைத்துக்கப் பழகிப் பார்க்கச் சொல்கிறான்..

'கொடுமைடா சாமி..'

எப்போதுதான் இவன் அவளிடம் பழகிப் பார்க்க நினைக்கப் போகிறான் என்ற ஆயாசம் சுமித்ராவுக்கு ஏற்பட்டது..

'இதில இது வேற..'

அவள் எதிரே சட்டமாக அமர்ந்திருந்த நித்தியானந்தத்தை முறைத்துப் பார்த்தாள்.. அவள் பார்வையில் அவன் நெளிந்தான்..

'இவனை யாரு இங்கே வெற்றிலை பாக்கு வைத்து வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்தது..?'

அந்த நித்தியானந்தம் அவளுடைய பதினாறு வயதுப் பிராயத்தில் ஊர் திருவிழாவுக்கு வருகின்ற சமயங்களில் அவளை 'சைட்' அடிக்க முயன்ற அற்புதக் காட்சிகள் அவள் மனக்கண்ணில் வந்து நின்றன..

15

"சைட்டுன்னா சைட்.. செம சைட்டுடி.. எங்க வீட்டுக்கு கெஸ்டா வந்துட்டு.. என்னையே சைட் அடிப்பாண்டி அவன்.."

"பதினாறு வயசு மயிலுன்னு நினைச்சிருப்பான்.."

"என்ன கழுதையோ.. எனக்கு எட்டிக்காயா இருக்கும்.."

"ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரைன்னு நீயும் பதிலுக்கு சைட் அடிச்சிருப்ப.."

"ச்சீ.. அப்ப ரெண்டும் கெட்டான் வயசுடி.. நம்மையும் ஒருத்தன் உத்து உத்துப் பார்க்கிறானேன்னு

ஒரு மண்டைக் கனம் வந்ததென்னவோ உண்மைதான்.. மத்தபடி இப்ப நினைச்சுப் பார்க்கிறப்ப செம காமெடியா இருந்துச்சில்லன்னு சிரிப்புத்தான் வருது.."

சுமித்ரா தோழிகளிடம் சொல்லியதுதான் உண்மை.. சிறு வயதில் வெகுவாக மனதை தாக்கும் எத்தனையோ நிகழ்வுகளை பிற்காலத்தில் நினைத்துப் பார்க்கும் போது வெகு அபத்தமாக இருக்கும்... நாமா இதுபோன்ற சின்னஞ்சிறு விசயங்களுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்தோம் என்று மனம் ஆச்சரியப்படும்..

அது போன்றதொரு ஆச்சரியத்தை சுமித்ராவுக்கு கொடுத்தவன்தான் நித்தியானந்தன்.. அவன் ஆறு ஆண்டு காலம் கழித்து இப்போது என்ன அலுவலுக்காக அவளைப் பார்க்க வேலை மெனக்கெட்டு அன்னவாசலுக்கு வந்திருக்கிறான்..? அவன் போக வேண்டிய இடம் லட்சுமிபுரமல்லவா..?

"என்ன விசயமா வந்தீங்க மாமா..?"

சுமித்ரா கேட்டு விட்டாள்.. நித்தியானந்தனின் முகத்தில் லேசான மாறுதல் வந்தது..

"ஏன் சுமித்ரா.. ஏதாவது விசயமிருந்தாத்தான் உன்னைப் பார்க்க நான் வரனுமா..?" அவன் குரல் கரகரத்தது..

தனஞ்ஜெயனின் முகத்தில் படிந்த கோபத்தின் நிழலில் சுமித்ரா பயந்தாள்.. எதற்காக இந்த நித்தியானந்தன் சீன் கிரியேட் பண்ணுகிறான் என்று மனம் நொந்தாள்..

"நிச்சயமா மாமா.. ஏதாவது விசயமிருந்தாத்தான் என்னைப் பார்க்க நீங்க வரனும்.. அதோட.. என்னையேன் நீங்க பார்க்க வரனும்..? நீங்க எங்க அத்தை புருசனோட ஒன்னு விட்ட தம்பி.. எங்க மாமாவைப் பார்க்க எங்க வீட்டுக்கு வந்து போவீங்க.. கொஞ்சநாளா அந்தப் போக்குவரத்தும் இருந்ததில்லை.. இப்பத் திடிர்ன்னு வந்து நிற்கிறவங்க..

உங்க அண்ணனைப் பார்க்க எங்க அப்பா வீட்டுக்குத்தானே போகனும்..? என் வீட்டுக்கு ஏன் வரனும்..?"

சுமித்ராவின் கோர்வையான பேச்சில் இந்திரா தேவியின் கேள்விக்கானஅத்தனை விடைகளையும் சுமித்ரா தந்துவிட.. அவள் மனதிற்குள் மருமகளை மெச்சிப் போனாள்..

ஆனால் அப்போதும் தனஞ்ஜெயனின் முகத்திலிருந்த கோபம் வடிந்து தொலைக்கவில்லை.. அது சுமித்ராவின் மனதிற்குப் பெருத்த இம்சையைத் தந்து வைத்தது..

நித்யானந்தனின் முகத்தில் தெரிந்த அடிபட்ட உணர்வில் சுமித்ராவின் மனதில் எந்தவிதமான வருத்தமும் எழவில்லை..

'இவனெல்லாம் என்ன மனிதன்...?' என்ற கசப்புணர்வுதான் அவளுக்குள் எழுந்தது..

அவளின் புகுந்த வீடு இது என்று தெரிந்து கொண்டு வந்திருப்பவனுக்கு... அவளின் திருமணம் எந்த நிர்ப்பந்தத்தில் நடந்தது என்பது மட்டும் தெரியாமல் இருந்திருக்குமா..? அப்படிப்பட்ட சூழ்நிலையில் புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைத்திருப்பளைத் தேடிப் போய் பார்க்கப் போகிறோமே.. இதனால் அவளுக்கு

என்ன சிரமங்கள் உண்டாகுமோ என்று நினைத்துப் பார்த்திருந்தால் அவன் இப்படி வந்திருப்பானா..?

"நீயா இப்படிப் பேசற சுமித்ரா..."

வருத்தம் தோய்ந்த நித்தியானந்தனின் குரலில் அவளுக்கு கையில் கிடைத்ததை எடுத்து அவன் தலையில் போட வேண்டுமென்ற ஆதங்கம் உண்டானது..

'இவன் இம்சையைக் கூட்டுகிறானேயொழிய.. அதைக் குறைக்கனும்னு நினைத்தாவது பார்க்கிறானா..?'

சுமித்ராவின் கண்களில் நீர் ததும்பவா என்று கேட்டது.. இமை சிமிட்டி அதை அடக்கிக் கொண்டாள்..

"நான்தான் பேசறேன் மாமா... பின்னே என் குளோனிங்கா வந்து பேசுது..? நல்லா காமெடி பண்றிங்க போங்க.."

"கடைசியில என்னைக் காமெடியனா ஆக்கிட்டேல்ல.."

நித்யானந்தன் விடாமல் சுமித்ராவுக்கு துயரம் தருவதிலேயே குறியாக இருந்தான்.. இது என்னடா வம்பு என்று சுமித்ரா இந்திராதேவியை இறைஞ்சலுடன் பார்த்தாள்..

தனஞ்ஜெயனிடம் அவள் உதவி கேட்டு விட முடியாது.. நித்தியானந்தம் பண்ணிக் கொண்டிருந்த அலும்பில் அவன் கண்களில் சிகப்பு ஏறிக் கொண்டே இருந்தது..

'இந்த அரைவேக்காடு இவனைக் காமெடியனா ஆக்கிட்டேன்னு சொல்லுதே.. காமெடியனை காமெடியனா ஆக்காம ஹீரோவாகவா ஆக்க முடியும்..?'

சுமித்ராவுக்கு தலையை வலிக்க ஆரம்பித்தது.. நித்யானந்தம் ஏதோ ஒரு உள்நோக்கத்துடன்தான் அங்கே வந்திருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.. திருக்குமரன்கூட அவனை அனுப்பி வைத்திருக்கலாம்.. அது போன்ற கீழ்த்தரமான செய்கைகளை அவன் செய்யக் கூடியவன்தான்.. அடுத்த வீட்டுப் பெண்களின் வீட்டு விவகாரங்களை வேவு பார்ப்பதில் திருக்குமரனுக்கு நிகர் திருக்குமரனேதான்.. அவன் குடும்பத்தை மட்டும் அவன் காபந்து பண்ணிக் கொள்வான்..

நித்தியானந்தம் சுமித்ராவை ஒரு மாதிரிப் பார்க்க ஆரம்பித்ததை உணர்ந்து விட்ட மணிவாசகம்.. இனி திருவிழாக்களுக்கு அவன் வரக்கூடாது என்று சொல்லி விட்டார்..

இத்தனைக்கும் மணிவாசகத்தின் வீட்டில் திருவிழா என்றோ.. மற்ற குடும்ப விஷேசங்கள் என்றோ உறவினர் கூட்டம் வந்தால் வீட்டின் தரைத் தளத்தில்தான்

அவர்கள் தங்குவார்கள்.. மாடிப் பக்கம் போக மாட்டார்கள்.. அதற்கு அவர்களுக்கு அனுமதி கிடையாது.. அது வீட்டுப்

பெண்கள் இருக்கும் இடம்.. விருந்தாளிகளின் இருப்பிடம் கீழ்பகுதிதான்..

அப்படி அந்த வீட்டிற்கு வந்து போன நித்தியானந்தனிடம் சுமித்ரா ஓர் வார்த்தை கூட நின்று பேசியதில்லை.. அரை வினாடிக்கு மேல் அவன் பார்வையைச் சந்தித்ததில்லை..

காபி.. தண்ணீர்.. சாப்பாட்டு பந்தியில் பரிமாறுவது என்று உறவினரை உபசரிக்கும் எதுவாக இருந்தாலும் அவற்றை வீட்டின் வேலையாள்கள் மூலமாகத்தான் திலகவதி செய்வாள்.. மல்லிகா திலகவதியுடன் இணைந்து கொள்வாள்.. மற்றபடி சுமித்ராவோ.. மல்லிகாவின் இரு பெண்களோ.. அந்த உபசரிப்பில் பங்கெடுத்து விட முடியாது.. கோவிலுக்குப் போய்வர.. சாப்பிட.. என்று கீழே இறங்கி வருவதோடு சரி.. மற்ற நேரங்களில் எல்லாம் அவர்கள் மாடியில்தான் இருக்க வேண்டும்.. கீழ்தளத்தில் காலடி வைத்துவிட முடியாது..

அப்படி வரும் தருணங்களுக்காக கொக்கு போல காத்திருந்து.. சுமித்ரா வந்து போகும் சமயங்களில் கிடைக்கும் அரைவினாடியைக் கூடப் பயன்படுத்திக் கொண்டு அவளை உற்று உற்றுப் பார்த்து வைத்த நித்தியானந்தனின் பார்வையை மணிவாசகம் ஓர்நாள் பார்த்து விட்டார்.. அன்றே திருக்குமரனை அழைத்துக் கண்டிப்பாக உத்தரவிட்டு விட்டார்..

"இங்கே பாருடா.. உனக்குச் சொந்தக்காரன்ங் கிறதுக்காக.. வீட்டுக்குள்ளே விட்டா.. இவன் மட்டு மரியாதையைக் காப்பாத்திக்க மாட்டான் போல இருக்கு.. இனிமே இவன் நம்ம வீட்டுக்கு திருவிழா கொண்டாட வரக் கூடாது.. சொல்லி அனுப்பி வைச்சிரு.."

இப்படிச் சொன்ன மணிவாசகத்திடம் எதிர்த்துக் கேள்வி கேட்காமல் நித்தியானந்தத்திடம் சொல்லுகிற விதமாக சொல்லி அவனை அனுப்பி வைத்துவிட்டு மல்லிகாவிடம் வந்து பொங்கினான் திருவாளர் திருக்குமரன்..

"வீட்டோட மாப்பிள்ளைன்னா உன் அண்ணனுக்கு இளக்காரமாப் போச்சா..? இதுவே என் வீடா இருந்திருந்தா

என் சின்னம்மா மகனை இனிமே என் வீட்டுப் பக்கம் வராதேன்னு நான் சொல்லி அனுப்ப வேண்டிய நிலை வந்திருக்குமா..?"

அதைக் கேட்டுக் கொண்ட அவனின் தர்ம பத்தினி உடனடியாக எழுந்து ஒரு டிரங்கு பெட்டியை கையில் எடுத்துக் கொண்டாள்..

"என்னடி..?" என்று திகைத்த அவளின் உத்தம புருசனிடம்..

"இந்த டிரங்கு பெட்டிதானேங்க உங்களோட சொத்து..? உங்க அப்பா உங்களுக்குன்னு இதை மட்டும் தான் விட்டுட்டுப் போயிருக்காரு.." என்று கேட்டாள்..

'எந்த நேரத்தில எதைச் சொல்லிக் காட்டறா பாரு..' எரிச்சல் பட்ட அந்த வல்லாள கண்டன்..

"அதை இப்ப என்னத்துக்குடி தூக்கற..?" என்று பல்லைக் கடித்தான்..

"வீட்டை விட்டு வெளியில போகத்தான்.. வேற எதுக்கு..? பிள்ளைகளை எழுப்புங்க.. நாம கிளம்பலாம்.." மல்லிகா.. தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகளை எழுப்ப ஆரம்பித்துவிட்டாள்..

"எங்கேடி கிளம்பச் சொல்கிற..?" திருக்குமரனுக்கு திகில் பிடித்து விட்டது..

"தனி வீட்டுக்குத்தான்.. இந்த வீட்டில் இதுக்கு மேலேயும் இருக்கக் கூடாதுங்க.. கூழோ.. கஞ்சியோ.. கஞ்சி கிடைக்காதுன்னு நினைக்கிறேன்.. நீங்க உழைக்கிற உழைப்புக்கு கூழே அதிகம்.. அதைக் குடிச்சுக்கிட்டு.. குடிசையா இருந்தாலும் சந்தோசமா வாழலாம்.. குடிசையாவது கிடைக்குமில்ல.. இல்ல அதுவும் களத்து மேடுதானா..? எதுவோங்க.. நமக்கு கூழும், குடிசையும் முக்கியமில்லை.. நம்ம வீடு தேடி வாரவங்களுக்கு விருந்தாக்கிப் போடனும்.. அதுதான் முக்கியம்.. என்ன போகலாமா..?" மல்லிகா அவனை கதிகலங்க வைத்து விட்டாள்..

அதற்குப் பின்னாலும் அந்தப் பேச்சை எடுக்க திருக்குமரனுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..?

அந்த நித்தியானந்தன்தான் வேலை மெனக்கெட்டு சுமித்ராவைப் பார்க்க என்று அன்னவாசலுக்கு அவளைத் தேடி வந்திருக்கிறான்..

'என்ன துணிச்சல்...!'

அவனை கன்னம் கன்னமாக நாலு அப்பு அப்பினால் என்னவென்று சுமித்ராவுக்குத் தோன்றியது.. நித்யானந்தனின் பார்வையில் தெரிந்த கபடம் அவன் தானாக வரவில்லை என்பதைச் சொல்லியது..

திருக்குமரன்தான் அவனை அனுப்பி வைத்திருந்தான்..

"உனக்குப் பெண் கேட்டேன்டா தம்பி.. சுமித்ராவை என் சின்னம்மா மகனுக்கு கட்டிக் கொடுங்க மாமான்னு கேட்டேன்.. என் மாமனுக்கு மனசு இரங்கலை.. உனக்குப் பெண் கொடுத்ததே பெரிசுங்கிறதைப் போல ஒரு பார்வைய பாத்து வைச்சாரு.. உனக்குக் கிடைக்காத அந்த சுமித்ரா உருப்படியாய் வாழக்கூடாதுன்னுதான் அந்த பரமசிவம் மகனை மடக்கப் பார்த்தேன்.. அந்தக் களவாணிப்பய என்னடான்னா நான் பேசினத வீடியோவா எடுத்து அந்த அன்னவாசல் ஜமீன்தார்கிட்டக் கொடுத்துட்டான்.. என் மாமனுக்கு என்மேல இருந்த நம்பிக்கையும் பாசமும் போயிருச்சுடா தம்பி.. என் பெண்டாட்டி, பிள்ளைகள் கூட என்கூடப் பேசமாட்டேங்கிறாங்க.. இதைக்கூட தாங்கிக் கலாம் போல இருக்குடா.. ஆனா.. உனக்குக் கிடைக்காத அந்த சுமித்ராவுக்கு ஜமீன்

வாழ்க்கை கிடைச்சிருக்கு பாரு.. அதைத்தாண்டா தம்பி என்னால தாங்க முடியலை.."

நித்யானந்தனின் ஊருக்குத் தேடிப் போய் அவனைத் தூண்டி விட்டான் திருக்குமரன்.. எட்டாக்கனிக்கு ஆசைப் பட்ட நித்யானந்தனின் ரத்தமும் கொதித்தது..

"என்ன செய்யலாம்ன்னு சொல்லுங்க அண்ணே.. நீங்ககோடு போட்டா.. அதில நான் ரோட்டைப் போட்டுக் காமிக்கறேன்.." என்று வீராதி வீர விக்கிரமாதித்த மகாராஜாவைப் போல சபதம் செய்தான்..

அதன்படி தீட்டிய திட்டத்தை செயல்படுத்தத்தான்.. விடிந்தவுடன் முதல் பஸ்ஸை பிடித்து அன்னவாசலுக்கு வந்து சேர்ந்திருந்தான் நித்தியானந்தன்..

சுமித்ராவுக்குத் தலை வேதனையாக இருந்தது.. நித்தியானந்தன் யார்..? அவள் யார்..? வேலை மெனக் கெட்டு எதற்காக அவன் அவள் வீட்டுக்குள்ளே வந்து வேவு பார்க்கிறான்..?

'இவனையெல்லாம் பொலி போடனும்..'

அவள் தலையைப் பிடித்துக் கொண்டாள்.. ஓரக் கண்ணால் தனஞ்ஜெயனின் முகத்தைப் பார்த்தாள்.. அதே சமயத்தில் அவனும் அவளைப் பார்த்து வைத்ததில் அவள் மனதில் பூப்பூத்தது.. நாணத்துடன் நித்தியானந்தனை மறந்து அவன் பார்வையை ஆவலுடன் சந்தித்த சுமித்ரா திகைத்தாள்..

தனஞ்ஜெயன் சுமித்ராவைப் பார்த்த பார்வையில் கடுகளவும் காதல் இல்லை.. எவளோ ஒருத்தியைப் பார்ப்பதைப் போல 'யார் நீ..' என்ற பாவனையில்

அவன் பார்த்து வைத்ததில் சுமித்ராவிற்கு அழுகையே வந்து விட்டது..

'இந்த கேடுகெட்டவன் வீடு தேடி வந்ததிற்கு நானா காரணம்..?'

அவள் மனம் வெம்பியது.. இப்படி ஒரு விருந்தாளி அந்த அதிகாலையில் அவள் வீட்டிற்கு வந்து நிற்க வேண்டும் என்று அவள் என்ன வரமா கேட்டாள்..?

"என் நினைவே உனக்கு வரவில்லையா சுமித்ரா..?" படு உருக்கமாக நித்தியானந்தன் கேட்ட விதத்தில் சுமித்ரா கடுப்பாகிப் போனாள்..

அவளே கட்டிய கணவனின் மனதில் அவள் மீது காதல் இருக்கிறதா, இல்லையா என்ற தவிப்பில் இருக்கிறாள்.. இதில் அவன் வேறு அழையாத விருந்தாளியாக அங்கு வந்து உட்கார்ந்து கொண்டு இம்சை செய்கிறான்..

"நீங்க யாருன்னு கூட எனக்கு நினைவுக்கு வரலை மாமா.. சொந்தக்காரங்களை ஓரளவுக்குத்தான் நினைவில வைச்சுக்க முடியும்.. உங்களை வீட்டில் கூட அப்பா

சேர்க்க மாட்டாரே.. எப்பவோ ஒரு சிலதடவை உங்களை கூட்டம் கும்பலில் பார்த்திருக்கிறேன்.. அதை வைத்து நீங்க இன்னார்ன்னு நான் அடையாளம் வேணும்னா கண்டுக்கலாம்.. நினைவில் வைச்சுக்கிறதுன்னா எப்படி மாமா..?"

சுமித்ராவும் நன்றாகத்தான் கொடுத்துக் கட்டினாள்.. அந்த மானங்கெட்டவன் அசைந்து கொடுக்கவில்லை.. மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்கும் துர் எண்ணம் கொண்டவன்கள் எதையும் காதில் வாங்கிக் கொள்ள மாட்டான்கள்.. என்னதான் செருப்பைக் கழட்டி அடித்தாலும் தட்டி விட்டுப் போய் விடுவார்கள்.. அவர்களுக்கும்

ஒரு குடும்பமிருக்கிறது... மற்றவர்களுக்கு அவர்கள் விளைவிக்கும் துன்பத்தை அவர்களின் குடும்பத்திற்கு மற்றவர்கள் விளைவித்தால் அவர்களுக்கு எப்படியிருக்கும் என்று நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார்கள்..

இது சாத்தான்கள் வாழும் பூமி..! இங்கே தேவதைகள் வாழப் போராட வேண்டும்..

சுமித்ரா தேவதை..! அவள் எப்படிப் போராடுவது என்று யோசிக்க ஆரம்பித்தபோது அவளுக்கு அந்த வேலையை வைக்காமல் இந்திராதேவியே இடையில் புகுந்தாள்..

இந்திராதேவி புத்திசாலி..! கண்கொண்டு பார்ப்பதை வைத்தே மனதின் ஆழத்தைத் தொட்டு வந்து விடும் சூட்சுமம் அறிந்தவள்.. இல்லாவிட்டால் அவ்வளவு பெரிய குடும்பத்தின் எஜமானியாக அவளால் நிர்வாகம் பண்ண முடியுமா..?

நித்தியானந்தனைக் கண்டவுடன் சுமித்ராவின் முகத்தில் தெரிந்த உணர்வலைகளில் காதலின் சுவடு தெரியவில்லை.. அதே போல அவள் அவனை உபசரிக்கவும் விரும்பவில்லை.. அவள் முகத்தில் இவன் ஏன் இங்கு வந்தான் என்ற அதிருப்தியே படர்ந்திருந்தது..

அதை இந்திராதேவி உணர்ந்து கொண்டாள்.. அடுத்து அவள் கேட்ட கேள்விக்கு சுமித்ரா பதிலளிக்கும் முன்னரே நித்தியானந்தன் ஆட்சேபித்ததும் சுமித்ராவின் முகத்தில் தோன்றிய கோபத்தையும் கவனித்து விட்டாள்..

அது உரிமையில் விளைந்த கோபம்.. இது என் வீடு.. இவர்கள் என் மனிதர்கள்.. இவர்களைப் பார்த்து எப்படி நீ எதிர்த்து கேள்வி கேட்கலாம் என்று பொங்கிய கோபம் அந்த கோபம்..

அப்போதே இந்திராதேவியின் மனம் குளிர்ந்து விட்டது.. அத்தோடு வந்திருப்பவன் திருக்குமரனின் ஒன்று விட்ட தம்பி என்கிறபோது.. நல்ல விதமாக அவனைப் பற்றி இந்திராதேவிக்கு நினைக்கத் தோன்ற வில்லை.. திருக்குமரனின் சுயரூபத்தை தனஞ்ஜெயன் வெளிப்படுத்தியிருக்கிறான்.. அவனுடைய முகத்திரையைக் கிழித்து அவன் கைக்கூலிக்காக எதையும் செய்யத் துணிபவன் என்பதை அம்பலப் படுத்தியிருக்கிறான்.. அப்படிப்பட்ட தனஞ்ஜெயனுக்கு திருக்குமரனின் மாமன் மகளை திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள்.. அந்தத் திருமணமும் ஒரு சொல்லில்லாமல்.. ஒரு குறைவில்லாமல்.. பிரம்மாண்டமாய் நடந்து முடிந்திருக் கிறது என்றால் திருக்குமரனைப் போன்ற நாசக்காரனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா..?

அவன்தான் நித்தியானந்தனை அனுப்பி வைத்திருக்க வேண்டும் என்பதை அன்னவாசலின் ஜமீன்தாரிணி கண்டுபிடித்து விட்டாள்..

"உனக்கு என்னப்பா பிரச்னை..?"

இந்திராதேவி நிதானமாக நித்தியானந்தனிடம் கேட்டாள்.. அவன் முகத்தில் சிடுசிடுப்பு வந்தது.. அவன் என்ன வயதான பெண்மணியுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காகவா அன்னவாசலுக்கு கிளம்பி வந்திருக்கிறான்..? வயதுப் பெண்ணான சுமித்ராவிடம் ஜொள்ளு விடத்தானே கிளம்பி வந்திருக்கிறான்..

"உங்களுக்கும் எனக்கும் பேச்சில்லைங்க.." எடுத்தெரிந்து பேசினான் அவன்..

சுமித்ரா கொதித்துப் போனாள்.. அவள் வாய் திறக்கப் போகையில் இந்திராதேவி அவளை அமைதியாக இருக்கும்படி சமிஞ்கை செய்து விட்டாள்.. தனஞ்ஜெயனின் முகம் ரத்தமென சிவந்தது..

"அப்ப எதுக்காக இங்கே உட்கார்ந்திருக்க..? கிளம்பு.." இந்திராதேவி கறாராகச் சொல்லி விட்டாள்..

"என்னது..?" நித்தியானந்தனுக்கு பக்கென்று ஆகிவிட்டது..

அவன் வந்த காரியத்தை ஆரம்பிக்கக் கூட இல்லை.. அதற்குள் அவன் கிளம்புவதா..? அப்போதுதான் அன்னவாசலின் ஜமீன் மாளிகைக்கு வந்து சேர்ந்தான்.. அந்த மாளிகையின் அழகிலும், பிரம்மாண்டத்திலும், செல்வச் செழிப்பிலும் வயிறு எரிந்தான்..

'பணத்தைக் காட்டி மயக்கிட்டான்..' என்னு என்னவோ அவனுடைய ஆசைக் காதலியை அபகரித்து வந்து விட்டவனைச் சாடுவதைப் போல தனஞ்ஜெயனை மனதுக்குள் சாடினான்..

'ஜமீன் மாப்பிள்ளை கிடைச்சதும் என்னை கை கழுவிட்டா..' என்று அவனைக் காதலித்து ஏமாற்றிய வளைத் திட்டித் தீர்ப்பதைப் போல சுமித்ராவைத் திட்டித் தீர்த்தான்..

அதற்குப் பின்னால் உள்ளே வந்து உட்கார்ந்து.. தனஞ்ஜெயனின் வீட்டுக் காபியை நொட்டை விட்டுக் குடித்து விட்டு அவர்களையே எதிரிகளைப் பார்ப்பதைப் போல பார்த்து கொண்டிருந்தவன் இன்னும் வந்த வேலையை செவ்வனே செய்து முடிக்கவில்லையே..

அதற்குள் அவனைக் கிளம்பச் சொன்னால் எப்படி அவன் கிளம்புவான்..?

"என்ன சுமித்ரா.. உன் முன்னாடியே உன் மாமியார் என்னை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்கிறாங்க.. நீ பார்த்துக்கிட்டு பேசாம இருக்கியே.." அவன் சுமித்ராவிடம் நியாயம் கேட்டான்..

'இந்த அத்தை இவனைக் கிளம்பச் சொல்கிறதுக்குப் பதிலா கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லியிருக்கலாம்.. இந்த வீட்டில் வேலையாள்களுக்கா பஞ்சம்..? இவங்க கண்ணசைவில் அவங்க இவனைக் குண்டுக்கட்டாக் கட்டித் தூக்கி வீதியிலே விட்டெறிஞ் சிருப்பாங்களே..' சுமித்ரா தலையைப் பிடித்தாள்..

இந்திராதேவி அதைத்தான் செய்தாள்..

"முனுசாமி, கந்தசாமி, ரங்கசாமி.."

அவளின் குரல் உயர்வில் அந்த வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த அத்தனை சாமிகளும் ஓடி வந்தார்கள்..

"இவன் அந்தத் திருக்குமரனோட தம்பியாம்.. வீட்டுக்குள்ளே வந்து சட்டமா உட்கார்ந்துக்கிட்டு வியாக்கினம் பேசிக்கிட்டு இருக்கான்... அவன் புத்திதானே இவனுக்கும் இருக்கும்..? தூக்கி வெளியில கடாசுங்க.."

இந்திராதேவியின் உத்தரவில் நித்தியானந்தன் அனைத்து சாமிகளாலும் 'அலேக்..' செய்யப்பட்டான்.. அந்த நிலையிலும் அவன்..

"இது சரியில்லை.. பெண்ணைக் கொடுத்த வீட்டில இருந்து சொந்த பந்தம் வந்தா அன்னவாசல் ஜமீனிலே

இப்படித்தான் நடத்துவீங்களா..? நான் சுமித்ராவுக்கு சொந்தக்காரன்.." என்ற உரிமைக் குரலை எழுப்பினான்..

"சரி, தப்பைப் பத்தியெல்லாம் நீ பேசக் கூடாது தம்பி.. உன் அண்ணன்காரன் காசை வாங்கிக்கிட்டு செய்து வைத்த வேலையை ஊரே கேட்டுச்சு.. அவன் தம்பிதான நீ.. சுமித்ராவுக்கு நீ சொந்தக்காரனா இருக்க முடியாது.. அதுக்கான தகுதி உனக்கில்லை.. இனிமே உன் மூச்சுக் காத்துக்கூட அன்னவாசல் பக்கம் அடிக்கக் கூடாது.. யார் வீட்டு மருமகளை நீ சொந்தக்காரங்கன்னு சொல்கிற..? இந்த அன்னவாசல் ஜமினின் மருமகளுக்கு சொந்தக்காரன்னு சொல்லிக்கிறதுக்கு உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கனும்..? போனது.. வந்ததுக எல்லாம் இந்த வீட்டுக்குள் சொந்தம் கொண்டிக்கிட்டு காலை வைச்சிர முடியாது தம்பி.. அதுக்கெல்லாம் தராதரம் இருக்கனும்.. உனக்கு அது இல்லை.."

இந்திராதேவியின் கோபத்தில் நித்தியானந்தனை 'அலேக்' செய்திருந்த சாமிகளுக்கு 'சாமி' வந்து விட்டது..

"இவனை நாங்க பார்த்துக்கறோம்மா.. ஏண்டா டேய்.. எங்க ஐயா மேலே பழி போட்ட அந்த நாதாரிக்கு தம்பிகாரனாடா நீ.. இதுக்கே உன்னைக் கொன்னு புதைக்கனும்டா.. உன் மூச்சுக்காத்து என்ன.. நீயே இந்த அன்னவாசல் பக்கம் தலை வைச்சுப் படுக்கக்கூடாது.. வாங்கடா.. இவனுக்கு உடம்புப் பிடிச்சு விட்டு ஊரைப் பாத்து ஓட்டி விடலாம்.."

சாமி வந்த சாமிகள் அவனை ஊர் எல்லைக்கே கொண்டு போய் சாமியாடித் தீர்த்தார்கள்.. வேப்பிலை இல்லாமல் நித்தியானந்தன் வாங்கிய அடிகள் அத்தனையும் உள்காயம் கொண்டனவாக இருந்தன.. தேர்ந்த அடிகளைக் கொடுத்தவர்களின் திறமையில் நித்தியானந்தன் கதி கலங்கிப் போனான்.. பொட்டு ரத்தம் கூடச் சிந்தாமல்.. அவனுடைய உடல் எலும்புகளை பொடிப்பொடியாக்கி பொட்டலம் கட்டி அனுப்பி வைத்த அந்த வித்தையாளர்களின் கால்களைப் பிடித்து விட்டு விடுமாறு கதறினான் அந்த காதல் மன்னன்...

"இனிமேக் கொண்டு இந்த ஊருப்பக்கம் எட்டிப் பார்த்தன்னு வைய்யி.. எப்படிப் போனேன்னு தெரியாம மாரடைப்பு வந்து போய் சேர்ந்திருவ.."

சாமிகள் பயமுறுத்தி அவனை பற்றி விட்டு வீடு திரும்பினார்கள்..

நித்தியானந்தன் அலேக் செய்யப் பட்ட போதும் சரி.. அவனை குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு சாமிகள் வெளியேறிய போதும் சரி.. தனஞ்ஜெயன் வாயே திறக்கவில்லை.. நடப்பதையெல்லாம் உறுத்துப் பார்த்தபடி உக்கிரமாகவே இருந்தான்.. நித்தியானந்தன் அகற்றப் பட்டதும் இந்திராதேவியைப் பார்த்து..

"அவசரப் பட்டுட்டீங்கம்மா.." என்றான்..

"ஏண்டா தம்பி இப்படிச் சொல்கிற..? அவன் பேசின பேச்சை நீயும் கேட்டேதான..?"

"இருக்கலாம் அம்மா.. யார் கொடுத்த தைரியத்தில் அவன் பேசினான்..? உங்க மருமகளுக்கு அவனை நீங்க அனுப்பி வைத்த விதத்தில் மன வருத்தம் வந்திருக்கும் அம்மா.. அதனால்தான் நீங்க அவசரப்பட்டுட்டீங்கன்னு சொல்றேன்.."

"சேச்சே.. என்ன தனஞ்ஜெயா இது.."

இந்திராதேவி கோபத்துடன் மகனின் பேச்சை ஆட்சேபித்தாள்.. அவன் தாய் சொல்வதை காது கொடுத்துக் கேட்காமல் மாடிக்குப் போய் விட்டான்.. சுமித்ராவுக்கு துக்கமாக இருந்தது.. தனஞ்ஜெயனின் கோபம் அவளை வதைத்தது..

"நான் என்னத்தை பண்ணினேன்..?" கண்களில் நீர்மல்க கேட்டாள்..

"ஊஹீம்.. இதற்கெல்லாம் நீ உடைந்து விடக் கூடாது.. ஆம்பளைபுத்தி இப்படித்தான் யோசிக்கும்.. பெண்டாட்டின்னு வருகிறப்ப எப்பேற்பட்ட ஆம்பளைக்கும் உரிமை உணர்வு வந்துரும் சுமித்ரா.. தனா அந்தக்

கோபத்தில்தான் பேசறான்.. எடுத்துச் சொன்னா சரியாகிருவான்.."

"ஆனா அத்தை.. இப்ப வந்து போனவன் கூட நான் நின்று கூடப் பேசியதில்லை.. இவனைப் பார்த்தே பல வருசமாச்சு.. வயதுப் பெண்கள் இருக்கிற வீடுன்னு அப்பா இவனை வீட்டுப் பக்கம் வரவே விட மாட்டார்.."

"உன் அப்பா உன்னை அப்படிப் பொத்திப் பொத்தி பாதுகாத்து வளர்த்திருக்கார்.. நான்தான் கொஞ்சம் கூட யோசிக்காம இவனை வீட்டுக்குள்ள வர விட்டு உட்கார வைச்சு காபியும் கொடுத்திட்டேன்.. தப்பு என்மேல தான்.. நான் உன்னை கீழே வரச் சொல்லியிருக்கவே கூடாது.." இந்திரா தேவி வருத்தப்பட்டாள்..

அப்போது மட்டும் தனஞ்ஜெயன் அமைதியாய் இருந்திருப்பானா..? இல்லையென்று சொன்னது சுமித்ராவின் மனம்.. அவள் தளர்வாக மாடியேறி.. அவளுக்குக் கொடுக்கப் பட்டிருந்த அறையில் போய் கட்டிலில் விழுந்தாள்.. கண்மூடிப் படுத்திருந்தவளுக்கு வந்த காய்ச்சல் ஏன் குணமானது என்று அழுகை அழுகையாக வந்தது..

அந்த காய்ச்சல் இருந்திருந்தால் அவளருகில் தனஞ்ஜெயன் இருந்திருப்பானே..

சுமித்ராவின் கண்ணீர் துளிகள் தலையணையை நனைத்தன.. எவ்வளவு நேரமாய் கண்ணீர் விட்டாளோ.. அவளுக்கே தெரியவில்லை.. அயர்வுடன் கண்மூடி விட்டாள்.. அவளருகில் யாரோ வந்து நிற்பதைப் போன்ற உணர்வில் அனிச்சையாக கண் விழித்துப் பார்த்தாள்..

அங்கே தனஞ்ஜெயன் நின்றிருந்தான்.. அவளுடைய கண்ணீர் கரை படிந்த முகத்தையும்.. கலங்கிச் சிவந்திருந்த விழிகளையும் இமைக்காமல் பார்த்தவன் உதட்டைக் கடித்தான்..

'என்னத்துக்கு இப்படிப் பண்றான்..?'

தனஞ்ஜெயனின் முகத்தில் கோபத்தையும் தாண்டித் தெரிந்த குற்ற உணர்வில் சுமித்ரா திகைத்தாள்..

"மன்னிச்சுக்க.." என்றான் தனஞ்ஜெயன்..

'இது எதுக்கு..?' சுமித்ரா கலவரமானாள்..

"உன் மனசில என்ன இருக்குன்னு தெரியாம உன் வாழ்க்கையை கெடுத்திட்டேன்... உனக்கும் ஓர் மனசிருக்கும்... அதிலயும் தனிப்பட்ட ஆசைகள் இருக்கும்ன்னு எனக்குத் தோணாம போயிருச்சு.."

'என்னடா இது வம்பா இருக்கு..? என் மனசில என்ன தனிப்பட்ட ஆசைகள் குமிஞ்சு கிடக்குன்னு இவன் வந்து டயலாக் பேசறான்..'

"என்னை நீ நம்பலாம்.."

'அடப்போடா.. உன்னை நம்பாம நான் வேற யாரை நம்பப் போறேனாம்..'

"உனக்கு விருப்பமில்லாத வாழ்க்கையை உன்மேல் திணிக்க மாட்டேன்.."

'இப்ப நீ திணிச்சுக்கிட்டு இருக்கிற இந்த வாழ்க்கைக்கு பெயர் என்னப்பா..? இதைத்தான் நான் விரும்பறேன்னு உன்கிட்ட வந்து சொன்னேனா..?'

"மேற்கொண்டு படிக்க விரும்பினாப் படி..."

'எம்.எஸ்ஸி வரைக்கும் படிச்சது உனக்குப் போதாதா சாமி..? வாழ்க்கை பூராவும் என்னைப் பள்ளிக் கூடத்துப் பக்கம் ஓட்டி விட்டு பழிவாங்கனும்ங்கிற குறிக்கோளுடன் தான் என் கழுத்தில் தாலியைக் கட்டினயா ராசா..?'

"உன் மனசில வேற எதுவும் எண்ணமிருந்தாச் சொல்லு.."

அதுவரைக்கும் பொறுமை காத்தவளால் அதற்கு மேலும் பொறுமை காக்க முடியவில்லை.. நிமிர்ந்து அவனைத் தீர்க்கமாக ஓர் பார்வை பார்த்தாள்.. அதில் தெரிந்த தீட்சண்யத்தில் அவன் தடுமாறிப் போனான்..

"புரியலை.."

அவளின் அழுத்தமான கேள்வியில் எப்படி அவன் மனதிலிருப்பதைச் சொல்வது என்று தெரியாமல் ஓர் நொடி மௌனம் சாதித்தான் தனஞ்ஜெயன்..

மௌனம் ஒரு சிலந்திக் கூடைப் போல அவர்களைச் சுற்றி அலுப்பான ஒரு வலையை பின்ன ஆரம்பித்திருந்தது.. சுமித்ரா பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.. இப்போது சொல்ல நினைத்ததை தனஞ்ஜெயனால் சுலபமாக சொல்லி விட முடிந்தது..

"நீ விரும்பற வாழ்க்கையை அமைச்சுத் தரேன்.."

சுமித்ராவின் விழிகள் சரேலென உயர்ந்து தீப்பிழம்பைப் போல தனஞ்ஜெயனை வெறித்தன.. அந்தப் பார்வையில் வாயடைத்துப் போய் அசைவற்று நின்று விட்டான் தனஞ்ஜெயன்..

"தயவு செய்து நீங்க உங்க ரூமுக்குப் போங்க.."

"சுமித்ரா.."

"போங்கன்னு சொல்றேனில்ல.."

"இல்லை சுமித்ரா.. நமக்கு நடந்தது கட்டாயக் கல்யாணம்.."

"எதுவா வேணும்னாலும் இருக்கட்டும்.. கல்யாணம் கல்யாணம்தானே..? வாழ்க்கையில ஒரு தடவைதாங்க கல்யாணங்கிற நிகழ்வு நடக்கும்.. நான் அப்படித்தான் வளர்ந்திருக்கேன்.. இதுக்கு மேலே பேச எனக்கு விருப்பமில்லை.. நான் அன்னவாசல் ஜமீன்தாரிணி இந்திராதேவியோட மருமகள்.. என் உயிர் போனால்தான் என் உடல் இந்த வீட்டை விட்டுப் போகும்.. இதுதான் என் பதில்.. இப்பவாவது வெளியே போறிங்களா..?"

சுமித்ரா கதவை ஓங்கி அடித்து தாழிப்பாள் போட்டு விட்டு சரிந்து அமர்ந்தாள்..

17

ஊர்பெரிய மனிதர்களிடம் பேசிக் கொண்டிருந்தான் தனஞ்ஜெயன்.. போர்டிகோவில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.. யாராக இருக்கும் என்ற கேள்வி மனதில் எழுந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் பேச்சைத் தொடர்ந்தான்..

"வாங்கண்ணா.. வாங்கண்ணி.."

இந்திராதேவியின் வரவேற்பைக் கேட்டவன் லேசாக பேச்சை நிறுத்தி விட்டுத் திரும்பிப் பார்த்தான்..

மணியக்காரர் தியாகராஜனும், மரகதமும் இந்திரா தேவியுடன் பேசியபடி வந்து கொண்டிருந்தார்கள்..

"நம்ம வீட்டுக்கு வர இப்பத்தான் வழி தெரிஞ்ச தாண்ணி.." இந்திராதேவி மனத்தாங்கள் பட்டாள்..

பதில் சொல்ல வாயெடுத்த மரகதம்.. ஊர் பெரிய மனிதர்களைக் கண்டதும் பேச்சை நிறுத்திக் கொண்டாள்..

வளமை தெரிந்த ஊர் பெரியவர்கள் எழுந்து தனஞ்ஜெயனிடம் விடை பெற்றுக் கிளம்பி விட்டார்கள்..

"வாங்க மாமா.. வாங்க அத்தை.." தனஞ்ஜெயன் எழுந்து நின்று கை கூப்பி வரவேற்றான்..

"அதான் வந்துட்டோமில்ல மாப்பிள்ளை.." வாஞ்சையுடன் தனஞ்ஜெயனின் தோள் மீது கை போட்டு அணைத்துக் கொண்டார் தியாகராஜன்..

"விருந்துக்கு அழைக்க வந்தோம் அண்ணி.. சுமித்ராவுக்கு உடம்பு சரியில்லாம இருந்ததில விருந்து தள்ளிப் போயிருச்சு.. புதுசா கல்யாணமான பிள்ளையை விருந்துக்கு அழைக்க வராம.. காய்ச்சலை விசாரிக்க வாரதில என் மனசுக்கு சம்மதமில்லை அண்ணி.."

அத்தனை தினங்களாக அங்கு வராததிற்கான காரணத்தைச் சொன்னாள் மரகதம்.. தலை அசைத்து அதை ஆமோதித்தார் தியாகராஜன்..

"நீங்க சொல்றதிலயும் ஒரு அர்த்தமிருக்குதுதான்.." இந்திராதேவி ஒப்புக் கொண்டாள்..

அவர்கள் ஹாலில் அமர்ந்து பொதுவாக பேசிக் கொண்டிருந்தார்கள்.. சுமித்ரா எங்கே என்று கேட்டாள் மரகதம்.. தேவகியை அழைத்து சுமித்ராவை கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னாள் இந்திராதேவி.. தேவகி போனபோது சுமித்ரா கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்து ஏதோ யோசனையாக காற்றில் விரலால் கோலம் வரைந்து கொண்டிருந்தாள்.. தேவகி விழித்தாள்..

'அம்மா என்ன பண்ணுறாக..?'

அதே நினைவோடு அவள் சுமித்ராவின் முன்னால் போய் நெளிந்து வளைந்து நின்றாள்.. காற்றில் கோலம் போட்டுக் கொண்டிருந்த சுமித்ராவின் விரல் வட்டத்துக்குள் தெரிந்த தேவகியின் நெளிதலில் கோலம் போடுவதை நிறுத்தியவள் என்ன என்று கேட்கும் விதமாக புருவங்களை உயர்த்தினாள்..

"பெரியம்மா கூப்பிட்டாகம்மா.."

"இன்னைக்கு யாரு வந்திருக்கிறாங்க தேவகி..?"

"நம்ம மணியக்கார ஐயாவும், அம்மாவும் வந்திருக்காகம்மா.."

"ஓ..."

சுமித்ரா சோர்வுடன் எழுந்தாள்.. அந்த மட்டிலும் அவள் ஊரைச் சேர்ந்தவர்கள் யாரும் வரவில்லையே என்ற எண்ணம் அவளுக்கு.. வருகிறவர்கள் தான் அவள் வீட்டைச் சேர்ந்தவர்களாக இருக்காமல் ஊரிலுள்ள அனைத்து வீடுகளையும் சேர்ந்தவர்களாக இருந்து வைக்கிறார்களே.. ஒரு நித்தியானந்தன் வந்து போனதற்கே தனஞ்ஜெயன் உன் விருப்பப்படி வாழ்க்கையை அமைத்துத் தருகிறேன்

என்று சொல்லி விட்டான்.. அந்தச் சொல்லடியிலிருந்தே அவள் இன்னும் மீண்டு வரவில்லை.. இதில் அடுத்த சொல்லடி கிளம்புமானால் அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா..?

செழுத்தப்பட்ட பதுமை போல சுமித்ரா வெளியே நடந்தாள்.. கூட வந்த தேவகி..

"ஏம்மா.." என்று இழுத்தாள்..

அவள் எதையோ கேட்க விரும்புகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட சுமித்ரா..

"என்ன தேவகி..?" என்றாள்..

"அது வந்தும்மா.." அவள் தயங்கினாள்..

"என்ன கேட்கனும்னாலும் தயங்காமல் கேள் தேவகி.." சுமித்ரா ஊக்கப் படுத்தினாள்..

"வாசலிலதானம்மா கோலம் போடுவாக..?"

"ஆமாம்.. உனக்கு அதிலென்ன சந்தேகம்..?"

"நீங்க காத்திலே கோலம் போட்டுக்கிட்டு இருந்தீங்களே.. எப்படிம்மா அது..?"

ஆவலுடன் கேட்ட தேவகியின் கேள்வியில் அந்த வித்தையை பயின்று கொள்ளும் ஆர்வம் தெரிந்தது..

அவளை ஏற இறங்கப் பார்த்த சுமித்ரா..

"ம்ஹீம்.. தேவைதான் எனக்கு.." என்றாள்..

"என்னம்மா சொல்றீக..?"

"அதெல்லாம் மாயம், மந்திரம் தெரிஞ்சவங் களுக்குத்தான் வரும் தேவகி.. உனக்கெல்லாம் வராது.." என்றாள்..

"உங்களுக்கு மந்திரம், மாயம் தெரியுங்களா..?"

ஓரடி தள்ளி நின்ற தேவகியின் விழிகளில் பயம் வந்தது..

"இத்தனை நாளா அது உனக்குத் தெரியாதா..?"

"எப்பவுமே எனக்குத் தெரியாதும்மா.."

"நீ எதைச் சொல்கிற..?"

"மாயம் மந்திரத்தைச் சொல்றேன்ம்மா.."

"சரியாப் போச்சு போ.. நான் மந்திரம் போடத் தெரிஞ்சவங்கிற விசயம் இத்தனை நாளா உனக்குத் தெரியாதான்னுல்ல நான் கேட்டேன்..?"

"அது தெரியர்தும்மா.."

பயபக்தியுடன் பின்னடைந்த தேவகியைப் பார்க்கப் பார்க்க சுமித்ராவுக்கு சிரிப்பு வந்தது.. இவள்தான் எத்தனை வெகுளியாய் இருக்கிறாள் என்ற நினைவுடன் படியிறங்கியவள் அந்தப் புன்னகையுடன் ஹாலைப் பார்த்தாள்.. அங்கே மற்றவர்களுடன் அமர்ந்திருந்த தனஞ்ஜெயன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவனைக் கண்டதும் சுமித்ராவின் புன்னகை மறைந்ததில் அவன் நெற்றி சுருங்கியது..

"அத்தை.."

சுமித்ராவின் அழைப்பில் திரும்பிய இந்திராதேவி கைநீட்டி மருமகளை தன்னருகில் அழைத்துக் கொண்டாள்.. அவள் முகத்தில் இவள் என் மருமகள் என்ற பெருமையும், வாத்சல்யமும் நிறைந்திருந்தன..

"அண்ணனும், அண்ணியும் வந்திருக்காங்க சுமித்ரா.."

அவள் சொன்னதும் வந்திருக்கும் அண்ணனும் அண்ணியும் யார் என்று தெரியாமலே கை குவித்தாள் சுமித்ரா..

மணியக்காரரின் வீட்டில்தான் அவளும், அவளுடைய குடும்பமும் திருமணத்திற்கு முதல்நாள் தங்கியிருந்தார்கள் என்றாலும்.. அது மணியக்காரரின் வீடு என்றோ.. அவர்கள் தான் தியாகராஜனும், மரகதமும் என்றோ சுமித்ராவுக்கு அடையாளம் தெரியாது.. அந்த நிலையில் அவள் இல்லையே.. எங்கே இருக்கிறோம் சுற்றிலும் யார்

இருக்கிறார்கள் என்று தெரியாமல் பித்துப் பிடித்தவளைப் போல இருந்த நாளல்லவா அந்த நாள்..?

அவர்களும் அதை உணர்ந்தவர்களைப் போல இதமாக சிரித்தார்கள்..

"உட்காரும்மா.." பரிவுடன் சொன்னாள் மரகதம்..

சுமித்ரா இந்திராதேவியை ஒட்டிக் கொண்டதைப் போல உட்கார்ந்தாள்.. புதியவர்கள் வந்தால் தாயின் சேலை முந்தானையில் ஒளிந்து கொள்ள முயலும் குழந்தையின் செய்கையாக அது இருந்தது..

தனஞ்ஜெயனின் முகம் லேசாக மாறியது.. அவனருகில் உட்காருவதை அவள் தவிர்ப்பதாக அவன் நினைத்தான்.. இந்திராதேவியோ மரகதத்தின் முன்னால் மருமகள் காட்டிய சொந்தத்தில் மகிழ்ந்து போய் விட்டாள்..

"உங்க ரெண்டு பேரையும் பார்த்தா மாமியா, மருமக போலவே இல்ல அண்ணி.. தாயும், மகளும் போல இருக்கு.. என் கண்ணே பட்டிறப் போகுது.." மரகதம் கண்களைத் துடைத்துக் கொண்டாள்..

"சும்மாயிரு மரகதம்.. ஊர் கண்ணுக்கும் உன் கண்ணுக்கும் வித்தியாசம் இல்லையா..? நீ என்ன வேத்தாளா..?" இந்திராதேவி பெருமையுடன் சொன்னாள்..

தியாகராஜனுக்கு சந்தோசமாக இருந்தது.. ஹாலில் இருந்த ரகுநாதனின் புகைப்படத்தைப் பார்த்தார்.. நண்பனின் மகனுக்கு அவரால் ஆன உதவியைச் செய்து விட்ட மனநிறைவு அவருக்குள் வந்தது..

"அப்புறம் என்ன தங்கச்சி.. உன் மனம் போல மருமக கிடைச்சிருச்சு.. கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதமா இருந்த மாப்பிள்ளைக்கும் கால்கட்டு போட்டாச்சு.. சந்தோசம்தானே..?"

தியாகராஜனின் கேள்வியில் பனித்த கண்களைத் துடைத்துக் கொண்டபடி 'ஆமாம்' என்ற பாவனையில் தலையை ஆட்டினாள் இந்திராதேவி..

'இவன் கல்யாணம் வேணாம்ன்னு சொன்னானா..? எதுக்கு..? லவ் பெயிலியரா..?'

சுமித்ராவுக்கு அடுத்த உறுத்தல் ஆரம்பமாகி விட்டது.. தனஞ்ஜெயனின் வாழ்வில் அவளுக்கு முன்பே ஒரு பெண்ணுக்கு இடமிருந்திருக்கிறது என்ற நினைவை அவளால் ஜீரணிக்க முடியவில்லை..

'இவனுக்குப் பிடிக்காத வாழ்வை வீம்புக்காக ஏத்துக்கிட்டானா..? அதனால்தான் எனக்குப் பிடிக்காத வாழ்வை என் மேலே திணிச்சுட்டேன்னு வசனம் பேசினானா..?'

சுமித்ரா மனம் கசந்தாள்.. தியாகராஜன் கேட்ட கேள்விகளுக்குப் பதிலைச் சொல்லியபடி ஊடும், பாடும் அவளையே பார்த்துக்கொண்டிருந்த தனஞ்ஜெயனை முறைத்தாள்.. அவன் புருவங்கள் சுருங்கின..

'போடா..' இவள் பல்லைக் கடித்தாள்..

"என்னைக்கு வர்றீங்க மாப்பிள்ளை..?"

சுமித்ராவையே பார்வையிட்டுக் கொண்டிருந்த தனஞ்ஜெயன் தியாகராஜனின் கேள்விக்கு..

"எங்கே மாமா..?" என்று கேட்டு வைத்தான்..

"சரியாப் போச்சு போங்க.. மாப்பிள்ளைக்கு நினைவு இங்கே இல்லை.. எங்கேயோ இருக்கு.."

மரகதத்திடம் கண் சமிக்ஞை செய்து சிரித்தார் தியாகராஜன்.. அவள் அர்த்த புஷ்டியுடன் சுமித்ராவைப் பார்த்தபடி கணவருடன் சேர்ந்து சிரித்தாள்.. சுமித்ராவின் முகம் சிவந்து விட்டது.. நடந்து கொண்டிருக்கும் கேலி பேசுதலை கண்டு கொள்ளாமல் தனஞ்ஜெயன் அவள் முகத்தை பருகு.. பருகென்று பார்க்க ஆரம்பிக்க.. மணியக்காரர் தம்பதிகளின் சிரிப்பு வலுத்தது.. இந்திராதேவி புன்னகைத்தாள்.. சுமித்ரா லஜ்ஜையுடன் தலை குனிந்து கொண்டாள்..

"மாப்பிள்ளை நாங்களும் இங்கே இருக்கிறோம்.." கிண்டல் செய்தார் தியாகராஜன்..

தனஞ்ஜெயன் சிரித்த லேசான சிரிப்பில் கம்பீரம் இருந்தது.. கொஞ்சம்கூட அசடு வழியாத அவனது சிரிப்பில் மனம் லயித்தாள் சுமித்ரா.. அவன் அவளுடையவன் என்பதில் அவள் மனம் இனித்தது..

'இவன் வேற ஒருத்தியை காதலிச்சிருக்கானா..?' அவளுக்குள் கோபம் கனன்றது..

மற்றவர்கள் அறியாமல் அவனை ரகசியமாக முறைத்தாள்.. மற்றவர்கள் அறியாமல் அவள் கோபத்தை ஏனென்று வினவும் பாவனையில் தனஞ்ஜெயன் புருவங்களை ஏற்றி இறக்கினான்..

'இருக்குடா மச்சான் உனக்கு..'

சுமித்ரா ஒற்றை விரலை உயர்த்தி அவனுக்கு எச்சரிக்கை விடுத்தாள்..

'இது எதுக்கு..?'

அவன் வலது கையை குவித்து உயர்த்திக் கேட்டான்..

இத்தனை நாடகத்தையும் அவர்கள் மற்றவர்களின் மத்தியில் நடத்தினார்கள்.. அதை கண்டும் காணாததைப் போல பெரியவர்கள் பூரித்துப் போனார்கள்..

"விருந்துக்கு வரனும் மாப்பிள்ளை.. அதுக்கு அழைக்கத்தான் நானும் உங்க அத்தையும் வந்திருக்கிறோம்.." சிரிப்புடன் சொன்னார் தியாகராஜன்..

"ஆமாம் தனா.. இதையே உன் மாமா எத்தனை தரம் சொல்வாரு..? பாவம்.. வயசான மனுசன்.." மரகதம் கணவரின் பக்கம் பேசுவதைப் போலச் சொன்னாள்..

"ஆமாம் மாப்பிள்ளை.. எனக்கு வயசாகிருச்சு.. உங்க அத்தைக்கு இளமை திரும்பிருச்சு.." கிண்டலடித்தார் தியாகராஜன்..

"நம்ம சீமையிலே ஆம்பளைகளுக்குத்தான் இளமை திரும்புது.. பொம்பளைகளைத்தான் ஒரு பிள்ளையைப் பெத்ததுமே நீ கிழவின்னு சொல்லி பட்டியிலே அடைச்சுடறோமே.." மரகதம் விட்டுக் கொடுக்கவில்லை..

அடுத்த சில மணித்துளிக்களுக்கு அவர்களில் யார் இளமையாய் இருக்கிறார்கள் என்பதைப் பற்றிய் பட்டி மன்றத்தை அவர்கள் நடத்தி முடித்தார்கள்.. அந்த கால இடைவெளியில் தனஞ்ஜெயன் சுமித்ராவை உற்று உற்றுப் பார்த்து வைத்தான்..

'அடையாளம் பார்த்து வைச்சுக்கறானா..?'

சுமித்ராவுக்கு அந்தக் கேள்வியை அவனிடம் கேட்டே ஆக வேண்டும் போல இருந்தது..

விருந்துக்கு அழைக்க வந்த மணியக்காரர் தம்பதிகளுக்கு விருந்து பரிமாறப்பட்டது.. அவர்களுடன் தனஞ்ஜெயனையும் சுமித்ராவையும் அவர்கள் உட்காரச் சொன்னார்கள்.. சுமித்ரா மறுத்துவிட்டாள்..

"நான் அத்தைகூடச் சாப்பிட்டுக்குவேன் பெரியம்மா.. நீங்களும் பெரியப்பாவும் சாப்பிட உட்காருங்க.."

அவள் இயல்பாக அவர்களை உறவு முறையைச் சொல்லி அழைத்ததில் அவர்களின் முகம் மலர்ந்து விட்டது..

அவர்களின் பார்வையும், இந்திராதேவியின் பார்வையும் சந்தித்து மீண்டன.. அவர்கள் மூவரும் சேர்ந்து முடிவெடுத்து நடத்தி வைத்த கல்யாணம் எத்தகைய மருமகளை கொண்டு வந்து சேர்த்திருக்கிறது என்ற எண்ணப் பரிமாற்றம் அதில் எதிரொலித்தது..

தனஞ்ஜெயன் விருந்தினருடன் சாப்பிட உட்கார்ந்தான்.. சுசிலா கொண்டு வந்து கொடுத்த பதார்த்தங்களை சுமித்ரா பரிமாற ஆரம்பித்தாள்.. அதில் இந்திராதேவி சந்தோசப்பட்டுப் போனாள்..

சேலை முந்தானையை இழுத்துச் சொறுகிக் கொண்டு பாந்தமாக அவள் பரிமாறிய விதத்தில் அவள் மனம்

குளிர்ந்தது.. தனஞ்ஜெயனின் தட்டைப் பார்த்துப் பார்த்து அவள் பரிமாறியதில் கணவனின் மீதான அவளது அபிமானத்தை இந்திராதேவி கண்டு கொண்டாள்..

'நன்றி தெய்வமே..' அவள் மனம் அமைதி யடைந்தது..

தனஞ்ஜெயன் அவன் அறையிலிருக்க.. சுமித்ரா தேவி காய்ச்சல் வந்ததினால் படுக்க வைக்கப்பட்டிருந்த அறையிலேயே ஒதுங்கி விட என்று மணமான தம்பதிகள் பிரிந்து நின்றதில் அவள் மனம் கணமாக இருந்தது.. சுமித்ராவின் செய்கை அந்த ரணத்தை ஆற்றி விட்டது..

'இப்பப் பிரிஞ்சிருந்தா என்ன..? என்னைக்கு இருந்தாலும் என் மகன் மனசை என் மருமக திருப்பிக் காட்டிருவா..' அவள் மனதில் நம்பிக்கை துளிர் விட்டது..

சுமித்ரா தனஞ்ஜெயனின் தட்டில் பரிமாறப் போனபோது அவன் போதும் என்ற பாவனையில் வலது கையை ஊடே நீட்டினான்.. அவள் வெகு இலகுவாக அவன் கையைப் பற்றி நகர்த்தி விட்டு பரிமாற வந்ததை பரிமாறி விட்டு நகர்ந்தாள்..

தனஞ்ஜெயனின் உடலில் மின்சாரம் பாய்ந்தது.. அவன் தியாகராஜனுடன் பேசிக் கொண்டே சாப்பிடுவதைப் போல காத்திருந்தான்.. அடுத்துப் பரிமாற சுமித்ரா வந்த போது அவன் கை நீட்டி மறுக்காமல் அவள்கையை இறுக்கிப் பிடித்து தடுத்தான்..

இப்போது அவள் உடலில் மின்சாரம் பாய்ந்தது..

18

வீட்டின் பின்பக்கத்திலிருந்த சிமிண்ட் போடப்பட்ட தளத்தில் மிளகாய் வற்றல், மல்லி, மஞ்சள் போன்ற பொருள்கள் பரப்பப் பட்டு காய்ந்து கொண்டிருந்தன.. சுசிலாவும், தேவகியும் அவற்றைக் கைகளால் பரப்பி விட்டு

காய்வதற்கு வழி வகை செய்து கொண்டிருந்தார்கள்.. அந்த வேலையை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த இந்திராதேவியின் பக்கத்தில் போய் நின்றாள் சுமித்ரா..

"மிளகும், சீரகமும் சட்டியிலே வறுத்ததைப் போல மொறுமொறுன்னு காய்ஞ்சிருக்கனும்.."

உத்தரவிட்டபடி திரும்பிய இந்திராதேவி மருமகளைக் கண்டதும்..

"என்னம்மா..?" என்று அன்போடு வினவினாள்..

"சும்மாதான் அத்தை.. உங்ககூட பேசிக்கிட்டு இருக்கலாம்ன்னு வந்தேன்.. நீங்க இங்கே இருந்தீங்க.." சுமித்ரா விளக்கம் சொன்னாள்..

"அப்படியா..? உள்ளே வா.. உட்கார்ந்து பேசலாம்.."

மருமகளை அதிக நேரத்திற்கு அங்கே நிற்க விடாமல் வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போய் விட்டாள் இந்திராதேவி.. அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த சுசிலாவின் மனதில்..

'எப்பேற்பட்ட மாமியா..' என்ற எண்ணம் எழுந்தது..

தேவகி அவள் காதருகில்..

"ஸ்ஸ்.. ஸ்ஸ்.." என்றாள்..

"எதுக்குடி இஸ்ஸீ போடற..?"

"உனக்குத் தெரியுமா சுசி..?"

"என்ன..?"

"நம்ம சின்னம்மாவுக்கு மாயம், மந்திரம் தெரியுமாம்.."

ரகசியம் போலச் சொல்லிய தேவகியை விசித்திரமாக பார்த்தாள் சுசிலா..

"ரொம்ப நேரமா மண்டையைப் பிளக்கிற உச்சி வெயிலில உலாத்திக்கிட்டு இருக்கியா..?" என்று கேட்டாள்..

"அட..! ஆமாம் புள்ள.. எப்புடி கண்டு பிடிச்ச..? உனக்கும் மந்திர மாயம் தெரியுமா..?" தேவகி விழிவிரிக்க..

"நீ தேற மாட்டடி.." என்று சுசிலா தலையில் அடித்துக் கொண்டாள்..

வீட்டுக்குள் போன இந்திராதேவி.. ஹாலில் ஃபேனைப் போட்டு விட்டு உட்கார்ந்தாள்..

"ஸ்ஸ்.. அம்மாடி.. என்ன வெயில்.." என்றாள்..

பக்கத்தில் உட்கார்ந்த சுமித்ரா தலையசைத்து அதை ஆமோதித்தாள்..

அவர்கள் பேச ஆரம்பித்தார்கள்.. இந்திராதேவி மருமகளின் ஊரைப் பற்றியும், வீட்டைப் பற்றியும் விசாரித்தாள்.. படிப்பைப் பற்றிக் கேட்டாள்.. பொறுமையாக பதில் சொன்னாள் சுமித்ரா.. பேச்சின் ஊடே..

"இவர் எதுக்காக அத்தை கல்யாணத்தை தள்ளிப் போட்டாரு..?" என்று கேட்டு விட்டாள்..

"யாரைக் கேட்கிறம்மா.. தனாவையா..?" என்றாள் இந்திராதேவி..

"ம்ம்ம்.." முணுமுணுத்தாள் சுமித்ரா..

"அதையேன்ம்மா கேட்கிற.. அது பெரிய கதை.." இந்திராதேவி பெருமூச்சு விட்டாள்..

'அவ்வளவு பெரிய கதையா..? எவ.. அவ..?' சுமித்ராவுக்கு வெறி வெறியாக வந்தது..

"இவன் காலேஜில படிக்கிறப்ப.. சித்ரா.. சித்ரான்னு ஒரு பொண்ணு கூடப்படிச்சிருக்கு.."

'ஓ.. அவ சித்ராங்கியா..? இருக்கட்டும்.. நானா.. இல்ல அந்த சித்ராங்கியா..?ன்னு ரெண்டில ஒன்னை முடிவு பண்ணிட்டு வேற வேலையைப் பார்க்கறேன்..'

சுமித்ராவின் மனதில் அப்போதே

'நீயோ நானோ யார் நிலவே..?

அவர் நினைவைக்

கவர்ந்தது யார் நிலவே..?'

என்ற பாடல் எழுந்து விட்டது..

"அந்தச் சித்ராவுக்கு நம்ம தனாமேல மதிப்பு.."

'அந்த மதிப்பு காதலா மாறுச்சாக்கும்..? பாதகி..! படிக்க வந்தாளா..? இல்லை என் புருசனை ரூட் விட வந்தாளா..?'

"நம்ம தனாவும் அந்தப் பொண்ணுகிட்ட பாசமாப் பழகுவான்.."

'காதலாப் பழகுவான்னு சொல்லுங்கத்தை.. ஏண்டா மச்சான்.. இங்கே கட்டின பெண்டாட்டியைப் பாத்தா 'யார் நீ..'ன்னு பாத்து வைக்கிற..? படிக்கிற இடத்தில கூடப் படிச்சவகிட்ட பாசத்தைப் பொழிஞ்சிருக்கிற.. உனக்கெல்லாம் இவ்வளவு ஓரவஞ்சனை இருக்கக் கூடாதுடா..'

"நம்ம தனா எதைச் சொன்னாலும் அந்தப் பொண்ணு கேட்டுக்குமாம்.."

'அப்படி இவன் என்ன சொன்னான்..? அவ எதை கேட்டுக்கிட்டா அத்தை..?' சுமித்ராவுக்கு குளிரும் காய்ச்சலும் சேர்ந்து வரும் போல இருந்தது..

"இப்படி ஒன்னா மண்ணா பழகிக்கிட்டிருந்த காலத்தில ஒருநாளு.. அந்தப் பொண்ணு நம்ம தனாகிட்ட வந்துச்சாம்.."

'ஓடிப்போயிரலாம் 'வா'ன்னு கூப்பிட்டாளோ..?'

"நம்ம தனா மட்டும் தனியா மரத்தடியில உட்கார்ந்திருந்தானாம்.."

'கூட ஆள் இருக்கிறப்ப அவ எப்படி வருவா அத்தை..?'

"அந்தச் சித்ரா ஒரு போட்டாவை நீட்டி இதில இருக்கிறது யாருன்னு கேட்டாளாம்..?"

'ஓ..! கதை இப்படிப் போகுதா..? நம்ம காதல் மன்னன் சித்ராங்கிக்கு முன்னாலேயே வேற ஒரு ஃபிகரோட போட்டோவை வைச்சுக்கிட்டு சுத்திக்கிட்டு இருந்தாராமா..? அவ அதைக் கண்டு பிடிச்சு வந்து கேள்வி கேட்டுட்டா போல...'

"இவன் அதை வாங்கிப் பாக்காமலே.. நாலாம் கிளாஸில் ஆரம்பிச்சு.. பனிரெண்டாம் கிளாஸ் வரைக்கும் கூடப் படிச்ச பொண்ணுகளோட பெயரைச் சொல்லி.. அதுவா.. அதுவான்னு கேட்டு வைச்சிருக்கான்.."

'என்னது..?' சுமித்ராவால் அவள் காதுகளையே நம்ப முடியவில்லை..

ரிஷிய சிருங்கரைப் போல பெண்டாட்டியைக் கண்டால் தவம் கலைந்து விடுமென்று ஓரம் கட்டி ஒதுங்கிப் போகும் தனஞ்ஜெயன் நான்காம் வகுப்பிலே இருந்து காதலிக்க ஆரம்பித்து விட்டானா..?

'என்கிட்ட மட்டும் இந்தப் பூனையும் 'மியாவ்' சொல்லுமாங்கிற ரேன்சில முகத்தை வைத்துக்கிட்டு விலகிப் போறானே.. பெண்டாட்டின்னா இவனுக்குப் பிடிக்காதா..? கூட படிக்கிற குமரிகளத்தான் பிடிக்குமா..?'

சுமித்ரா வயிறெந்தாள்.. அவள் ஆசையாசையாய் ஒளிந்து மறைந்து ரசிக்கும் கணவனின் கம்பீரமான அழகுக்கு அவனது நான்காம் வகுப்பிலிருந்தே பல்வேறு பெண்கள் உரிமை கொண்டாடியிருக்கிறார்கள் என்ற விவரத்தில் அவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது..

கண்களில் துளிர்த்த நீரை மாமியார் அறியாத வண்ணம் இமைகளைச் சிமிட்டி அவள் அடக்கிக் கொண்டிருக்க.. அந்த வழியாகப் போன தனஞ்ஜெயன்.. அவள் அவனைப் பார்த்து கண்ணடிக்கிறாள் என்ற நினைவில் கண்கள்மின்ன அவளைப் பார்த்து விட்டுப் போனான்..

'பேசாம போயிரு... இல்லேன்னா... கையில கிடைக்கிறதை எடுத்து உன் மண்டையை உடைச் சிருவேன்..' கருவினாள் சுமித்ரா..

ஒரு மனிதனாகப்பட்டவன் நான்காம் வகுப்பிலிருந்தே காதலிக்க ஆரம்பித்து விடுவானா..?

"என்ன கொடுமையோ.. இந்தப் பயல் அப்படிச் செஞ்சுத் தொலைச்சிருக்கிறான்.. எல்.கே.ஜி படிக்கிறப்பவே டீச்சருக்கு ரோஸ் கொண்டு போய் கொடுக்கிற பயலாச்சே.."

இந்திராதேவி சொல்லியதில் இந்த அத்தை மகனை நான்கு மொத்து மொத்தி வளர்த்திருந்தால்தான் என்ன என்ற கோபம் சுமித்ராவுக்குள் பொங்கியது..

"தனா சொல்லச் சொல்ல.. அந்தச் சித்ராவோட முகம் பேயறைஞ்சதைப் போல ஆகிருச்சாம்.."

'பின்னே.. தேவதை வரம் கொடுத்ததைப் போலவா ஆகும்..?'

"அவ கோவிச்சுக்கிட்டு காதலை முறிச்சுக்கிட்டுப் போயிட்டாளாம்.."

'ரோசக்காரி.. அப்படித்தான் செய்வா.. நான் ரோசம் கெட்டவ.. இப்பேற்பட்ட புருசனோட முகத்தை மறைஞ்சு நின்னு பாத்து ரசிச்சுக்கிட்டு இருக்கேன்..'

"தனா அதை மனசில வைச்சுக்கிட்டு கல்யாணமே வேணாம்ன்னு நின்னுட்டான்.."

'ஓ..! ஐயாவுக்கு காதல் தோல்வி..? அதனால்தான் என்னை பாத்து விருப்பப்பட்ட வாழ்க்கையை அமைச்சுத் தரேன்னு சொன்னாரா..?'

"நானும் எவ்வளவோ சொல்லிப் பாத்துட்டேன்.. கெஞ்சிப் பாத்துட்டேன்.. மசியலையே.. கடைசியில பாத்தா உன் போட்டோவைப் பார்த்ததும்.. பொண்ணு அழகாயிருக்கான்னு சொல்லி வைச்சிருக்கான்.. அது உன் மாமா காதில விழுந்து வைச்சதில என்னென்னவோ நடந்து போச்சு.."

'நடக்கும்.. நடக்கும்.. இப்பல்ல தெரியுது.. இந்த மனுசன் வீம்புக்காக இவருக்கு விருப்பமில்லாம தாலியக்

கட்டியிருக்காருன்னு.. சித்ராங்கிதான் இந்த மனுசனுக்கு உயர்த்தியா..? சுமித்ரான்னா அவ்வளவு ஈஸியாப் போயிருச்சா..?'

"இதனாலதான் தனாகிட்ட நான் அடிக்கடி சொல்லுவேன்.. நண்பர்கள்ன்னா உயிரை விட்டுப் பழகாதேடான்னு.."

இந்திராதேவி மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டதில் நண்பர்களுடன் உயிருக்குயிராய் பழகுவதற்கும்.. தனஞ்ஜெயனின் காதல் தோல்விக்கும் என்ன சம்பந்தம் என்று சுமித்ரா குழம்பிப் போனாள்..

"கூடப் படிக்கிறவன் கூட நண்பனாப் பழகினா ஒரு அளவுக்குத்தான் பழகனும்மா.. அதை விட்டுட்டு அவன் பிறப்பு, வளர்ப்பு முழுசையும் 'ஊம்' கொட்டிக் கதை கேட்டா இந்தக் கதிதான்.."

இந்திரா தேவியைப் போன்ற புத்திசாலி எப்படி ஒன்றுக்கொன்று இணைந்து வராத செய்திகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறாள் என்று சுமித்ராவுக்கு பிடிபடவே இல்லை..

'அத்தை இப்படியெல்லாம் சம்பந்தா சம்பந்தமில்லாம பேச மாட்டாங்களே...'

"அதிலயும் அவன் சொன்ன கதையெல்லாம் இதைப் போல வில்லங்கமான கதைகளாத்தான் இருந்து தொலைச்சிருக்கு..?"

'எவன் சொன்ன கதை..?'

அந்த 'அவன்' நிச்சயமாக தனஞ்ஜெயனில்லை என்பது மட்டும் சுமித்ராவுக்கு உறுதியாகத் தெரிந்தது.. சித்ராங்கியின் கதையில் வந்த அந்த சித்ராந்தகன் யார் என்று தெரியாமல் அவள் தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள யத்தனித்தாள்..

"எவனோ ஒருத்தன் எல்.கே.ஜியில இருந்து காதல் பண்ணினா என் மகன் என்ன பண்ணுவான்..? நீயே சொல்லும்மா.."

'நான் என்னத்தைச் சொல்ல..?' சுமித்ரா திருதிருத்தாள்..

அதற்கு மேலும் மர்மம் வளர்ந்தால் அவள் உட்கார்ந்திருக்கும் சோபாவை பிறாண்ட ஆரம்பித்து விடுவாள் போல அவளுக்குள் படபடப்பு வந்து சேர்ந்ததில்..

"யாரைச் சொல்கிறிங்க அத்தை.." என்று திருவாயைத் திறந்து கேட்டு விட்டாள்..

"வேறு யார் அம்மா.. எல்லாம் அந்தக் கட்டையில போகிற அன்பழகன்தான்.." கையை நெறித்தாள் இந்திராதேவி..

அன்பழகன் எதற்காக கட்டையில் போக வேண்டும் என்று சுமித்ராவுக்குத் தெரியவில்லை.. அந்தக் கட்டையில் போகும் அன்பழகனுக்கும்... தனஞ்ஜெயனின் காதல் கதைக்கும் என்ன சம்பந்தம் என்றும் அவளுக்குத் தெரியவில்லை..

தெரியாத இந்த விவரங்களை அவளுடைய அருமை மாமியார் தெளிவு படுத்தி விட மாட்டாளா என்று சுமித்ரா வெகுவாக ஏங்கிப் போனாள்..

"அந்த அன்பழகன் என்ன செய்தான் அத்தை..?"

"அவன்தானம்மா எல்.கே.ஜியில இருந்து பன்னிரன்டாம் கிளாஸ் வரைக்கும் காதல் பண்ணிட்டு அந்தக் கருமாந்திரக் கதைகளையெல்லாம் என் மகன் காதில ஓதியிருக்கான்.."

"உங்க மகன் காதில ஓதினானா..? ஏன் அத்தை..?"

"காலக்கொடுமை அம்மா.. அந்தக் கட்டையில போகிறவன் நம்ம தனாவோட ரூம் மேட்டா இருந்திருக்கான்.. இருந்த மகராசன் வாயை வைச்சுக்கிட்டு சும்மாயிருக்காம அவன் காதலித்த வீர.. தீர பராக்கிரமக் கதைகளை அள்ளி விட்டிருக்கான்.. நம்ம தனாவும் ஊம் போட்டுக் கேட்டிருக்கான்.. கேட்டவன் இந்த மாதிரிக் கதைகளை எல்லாம் இந்தக் காதில வாங்கி அந்தக் காதில விட வேணாமோ..?"

'அப்படியா விடனும்..?' சுமித்ராவுக்குத் தெரியவில்லை..

"இவன் மனதுக்குள்ள வைச்சிருந்திருக்கான்.. அந்தச் சித்ரா வந்து கேட்டதும் பொட்டுன்னு போட்டு உடைச்சிட்டான்.."

'என்னங்கடா இது... அன்பழகனின் காதல் லீலைகளைக் கேட்டா தனஞ்ஜெயனின் காதலி இவனை விட்டுட்டு ஓடிப் போனா..?'

சுமித்ராவுக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

"அவ உடனே சீமையில் இல்லாத காதல் அழிஞ்சு போச்சுன்னு தனாகிட்டச் சொல்லிட்டுப் போயிட்டா.. இந்தக் கடன்காரன் உன்னாலதாண்டா என் காதல்

கெட்டுப் போயிருச்சுன்னு தனா மேல பழியைப் போட்டுட்டான்.."

'என்னது இது.. தனஞ்ஜெயனோட காதல் முறிஞ்சு போனா.. அன்பழகன் எதுக்காக தனஞ்ஜெயன் மேலே பழி போட்டான்..?'

அதற்கு மேலும் தாங்க மாட்டாமல் அவள் கேட்ட போது..

"அந்தக் கடன்காரன்தானே சித்ராவைக் காதலிச்சவன்..?" என்றாள் இந்திராதேவி..

"என்னது..?" சுமித்ராவுக்கு தலை சுற்றியது..

இன்னும் எத்தனை 'என்னது'களைக் கேட்க வேண்டி வருமோ என்று அவள் மனம் ஆயாசப்பட்டது..

"ஆமாம்மா.. நம்ம தனாவோட ரூம் மேட்டா இருந்த அன்பழகன் சித்ராங்கிற பொண்ணைக் காதலிச்சிருக்கான்.. அந்தப் பொண்ண அமெரிக்காவில இருந்து பொண்ணு கேட்டு வரவும் அவ இவனைக் கழட்டி விடத் திட்டம் போட்டு.. தனாகிட்ட வந்து ஏதோ ஒரு போட்டோவை கண் மறைவா வைச்சுக்கிட்டு இந்தப் போட்டோ உங்க நண்பர்கிட்ட இருந்தது.. இது யாருன்னு கேட்டிருக்கா.. நம்ம வீட்டு உண்மை விளம்பி.. அவன் பிரண்டோட நான்காம் வகுப்புக் காதலிலே இருந்து ஆரம்பிச்சு பனிரெண்டாம் வகுப்பு வரைக் கொட்டிக் கவிழ்த்து.. இதுவா.. இதுவான்னு

கேட்டிருக்கான்.. அவ எதுவுமே இல்ல.. உங்க பிரண்டுக்கும் எனக்கும் காதலும் இல்லேன்னு சொல்லிட்டு ஓடிப்போய் அமெரிக்கா மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டிட்டு பறந்து போயிட்டா.. அந்த அன்பழகன் தனாவாலேதான் அவன் காதல் முறிஞ்சிருச்சுன்னு பழி போட்டுட்டான்.. இந்த முரட்டு தனஞ்ஜெயன் இருக்கானே.. இவன் இளகின மனசுக்காரன்.. தன்னாலேதானே நண்பனோட காதல் முறிஞ்சு போச்சுன்னு இவன் கல்யாணமே வேண்டாம்ன்னு தள்ளிப் போட ஆரம்பிச்சிட்டான்.. இந்தக் கதையை எங்கேயாவது கேட்டிருக்கியா..?"

கேட்டதே இல்லை என்று தலையை ஆட்டிய சுமித்ரா பொங்கிச் சிரித்தாள்.. மாடியிலிருந்து இறங்கி வந்த தனஞ்ஜெயனைப் பார்த்தவளின் சிரிப்பு அதிகரித்தது..

'கடைசியில் நம்மாளு காதலே பண்ணாம தாடி வளர்த்த கேஸா..?'

அவளால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை...

19

'எதுக்குச் சிரிக்கிறா..?'

தனஞ்ஜெயனுக்குத் தெரியவில்லை.. ஆனாலும் அவள் சிரிப்பதைப் பார்க்க அவனுக்குப் பிடித்திருந்தது.. அவளை ஒரு மார்க்கமாக பார்த்தபடி படியிறங்கினான்.. அவனுடைய ஒரு மார்க்கப் பார்வையில் அவள் முகம் சிவந்தது.. சிரிப்பை அடக்க முடியாமல் நாணத்துடன் வேறு திக்கில் பார்த்தாள் சுமித்ரா..

'சந்தோசமாத்தான் இருக்கா..'

தனஞ்ஜெயன் அவளைப் பார்த்வாறே சோபாவில் உட்கார்ந்தான்.. ஒருபக்கமாய் திரும்பி.. சோபாவின் முதுகுப் பகுதியில் ஒருகையை போட்டு.. சுமித்ராவைப்

பார்க்க வாகாக உட்கார்ந்து கொண்டவன் தோரணையாய் கால்மேல் கால் போட்டுக் கொண்டான்..

அவன் எங்கே உட்கார்ந்தாலும் கால் மேல் கால் போட்டுத் தோரணையுடன்தான் உட்காருவான்.. சுமித்ராவுக்கு அது பிடிக்கும்.. அவளுக்கு அது மட்டுமா பிடித்திருந்தது..? அவனையே அவளுக்குப் பிடித்திருந்த தால் அவனது ஒவ்வொரு பழக்கவழக்கத்தையும் கூர்ந்து கவனித்து ரசிப்பதை அவள் வழக்கமாக வைத்திருந்தாள்.. அது தெரியாத தனஞ்ஜெயன் அவளுடைய சிரிப்பில் தெரிந்த சந்தோசத்தை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான்..

'இங்கே இருக்கிறதில இவளுக்கு வருத்தமில்லை போல...'

அதில் அவனுக்குள் லேசான அமைதி வந்தது.. அவனை ஓரக்கண்ணால் பார்த்துப் பார்த்துச் சிரித்தவளை பருகுவதைப் போல பார்த்தபடி..

"என்னம்மா..?" என்று இந்திராதேவியிடம் கேட்டான்..

"என்னம்மான்னா..?" அவள் புரியாததைப் போல பதிலுக்கு கேட்டு வைத்தாள்..

அதற்கும் சுமித்ரா சிரித்து வைத்ததில் தனஞ்ஜெயனின் பார்வை அவளை ஊடுறுவியது.. அதில் அவளது கன்னச் சிகப்பு அதிகமாகியது..

"எதுக்கு இந்தச் சிரிப்பு..?"

"நானா சிரிக்கிறேன்..?"

இந்திராதேவி மடக்கியதில் சுமித்ராவின் சிரிப்பு அதிகரித்தது.. அவள் பொங்கிச் சிரித்ததை ஊன்றிப் பார்த்தான் தனஞ்ஜெயன்.. தளைகளற்ற சிரிப்பாக சுமித்ராவின் சிரிப்பு இருந்தது.. தனஞ்ஜெயன் திருமணத்தைத் தள்ளிப் போட்டதற்கான காரணம்

அவனது காதல் தோல்வியல்ல.. அவனுடைய நண்பனின் காதல் தோல்வி என்று அறிந்ததிலிருந்து அவளுக்குள் உற்சாகம் ஊற்றெடுத்தது.. அந்த நண்பனின் காதல் தோல்விக்கும் எந்தவகையில் தனஞ்ஜெயன் காரணமாக

அமைந்தான் என்பதை அறிந்ததும் அவளால் சிரிக்காமலிருக்க முடியவில்லை..

"அத்தை.. நான் கூட இவர்தான் காதலித்து அது நிறைவேறாமல் தாடி வளர்க்காமலே கல்யாணத்தைத் தள்ளிப் போட்டாரோன்னு நினைச்சுட்டேன்.. இப்பப் பார்த்தா.. ஹா.. ஹா..."

சுமித்ராவின் மலர்ந்த முகத்தை ஆழமாகப் பார்த்த இந்திராதேவிக்கு மனதுக்கு நிறைவாக இருந்தது.. அவளால் மகனின் மீது மருமகள் கொண்டிருக்கும் காதலைப் புரிந்து கொள்ள முடிந்தது.. சுமித்ராவின் மனதில் தனஞ்ஜெயனின் மீது எந்த அளவுக்கு காதலிருந்தால்.. அவன் காதல் தோல்வியில் அமிழவில்லை.. அவனுடைய நண்பன்தான் காதலில் தோல்வியடைந்தான் என்பதில் இந்த அளவுக்கு குதூகலம் கொள்வாள்..?

"இவனா..? காதலிக்கிறதா..? காதலிக்கிற வயசில தான் அந்த அன்பழகனோட கருமாயக் கதயையெல்லாம் கேட்டுட்டானில்ல.. அப்புறம் எங்கிருந்து காதலிப்பான்..? எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டான்.. இவன் ஏறெடுத்துப் பார்த்த ஒரே பொண்ணு நீதான்ம்மா.."

இந்திராதேவி சொன்னபோது சுமித்ராவின் முகத்தில் பரவிய வெளிச்சத்தில் அவளுக்குள் சந்தோசம் குமிழிட்டது..

'என் மருமகளுக்குத்தான் என் மகன்மேல எம்புட்டு ஆசை..!'

அந்த ஆசையை உணராத முரட்டுத் தனஞ்ஜெயன் சுமித்ராவைப் பற்றுதல் இல்லாததைப் போல பார்த்து வைப்பதில் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.. அதைப் பற்றி மகனிடம் பேசவும் முடியாது.. நித்தியானந்தன் வந்து போன நாளிலிருந்து தனஞ்ஜெயன் இறுக்கமாகவே காணப்பட்டான்.. அந்தச் சூழலில் இந்திராதேவி எதைச் சொன்னாலும் அது தனஞ்ஜெயனை நிர்பந்தப் படுத்துவதாகவே இருக்கும்.. அப்படியிருக்கக் கூடாது என்று இந்திராதேவி விரும்பினாள்.. அன்போ.. பாசமோ..

காதலோ.. எதுவாக இருந்தாலும் அது தானாக வரவேண்டும்.. நிர்பந்தத்தில் வரக்கூடாது.. பிற்காலத்தில் தனஞ்ஜெயனே எனது அம்மாவுக்காகத்தான்.. அவர்களின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத்தான் உன்னுடன் வாழ்ந்தேன் என்று சுமித்ராவைப் பார்த்துச் சொல்லி விடலாம்.. அதுபோன்ற வார்த்தைகளைக் காதில் கேட்க நேர்ந்தால் சுமித்ரா துடித்துப் போய் விட மாட்டாளா..? ஏன் என் கணவரை நிர்பந்தப்படுத்தினீர்கள் என்று இந்திரா தேவியிடம் கேள்வி கேட்க மாட்டாளா..? நீங்கள் சொல்லித்தான்.. உங்களின் வார்த்தைகளுக்காகத்தான் என் கணவர் என்னுடன் வாழ்ந்தாரா என்று கோபம் கொள்ள மாட்டாளா..?

அதனால்தான் இந்திராதேவி அமைதிகாத்தாள்.. தனஞ்ஜெயனைத் தேடும் சுமித்ராவின் பார்வையை அறியாதவனாக நடமாடும் முரட்டு மகனைப் பெற்றவளுக்குத் துன்பமாக இருக்கும்..

'எவனோ ஒரு வந்தட்டிப் பய வந்துட்டுப் போனான்னு இவன் தங்கம் பெத்த மருமக முகத்த ஏறெடுத்துப் பார்ப்பேனான்னு பிடிவாதமா இருக்கானே..இவனை என்னதான் செய்கிறது..?'

ஏதும் செய்ய இயலாதவளாக இந்திராதேவி தவித்துக் கொண்டிருக்கும் போதுதான் சுமித்ரா தனஞ்ஜெயனின் காதல் கதையைப் பற்றி இந்திராதேவியிடம் விசாரித்தாள்.. மருமகளின் மனதை கண்டு கொண்ட இந்திராதேவியும் விலாவாரியாய் அதை விவரித்தாள்.. கதை முடிவில் காதலில் தோற்றுப் போனது தனஞ்ஜெயனல்ல.. அவனுடைய நண்பன்தான் என்பதை அறிந்ததும் சுமித்ராவின் முகத்தில் தோன்றிய சந்தோசத்தைக் காணக் கண்கோடி வேண்டும் என்று இந்திராதேவிக்குத் தோன்றியது..

அதில் விளைந்த சிரிப்புடன் மருமகளிருக்க.. அந்தச் சிரிப்பை பருகு.. பருகென்று பார்த்தபடி மகன் வந்து உட்கார்ந்ததில் இந்திராதேவியின் மனதிலும் குதூகலம் பிறந்தது..

அந்தச் சிரிப்பைச் சாக்கிட்டாவது மகனும், மருமகளும் பேசிக் கொள்ள வேண்டும் என்று அவள் நினைத்தாள்.. தனஞ்ஜெயன் இந்திராதேவியை ஊடே வைத்து சுமித்ராவின் சிரிப்பைப் பற்றி விசாரித்ததும் 'நானா சிரிக்கிறேன்..' என்று அவனை மடக்கி விட்டாள்..

குலுங்கிச் சிரித்துக் கொண்டிருந்த சுமித்ராவைப் பார்க்கப் பார்க்க தனஞ்ஜெயனுக்குத் தெவிட்டவேயில்லை.. அவளுக்கு விருப்பப்பட்ட வாழ்க்கையை அமைத்துத் தருவதாக மனதைக் கல்லாக்கிக் கொண்டு சொன்னவனிடம் அவள் காட்டிய கோபத்தை எப்போது நினைத்தாலும் அவன் மனது இறகைவிட லேசானதாக மாறிவிடும்..

'நீ கூடவா சுமித்ரா..?'

நித்தியானந்தனின் இந்தக் கேள்விதான் தனஞ்ஜெயனைப் புரட்டிப் போட்டு அடித்தது..

'ஏன் அவன் அப்படிக் கேட்டான்..? ஒருவேளை சுமித்ராவுக்கு அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் நினைவு இருந்ததோ..?'

தனஞ்ஜெயனுக்குள் சஞ்சலம் வந்தது.. சுமித்ராவை ஒன்றும் அவன் உலக வழக்கப்படி பெண் கேட்டுப் போய் அவளுடைய பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்ளவில்லையே..

பஞ்சாயத்தில் சுமித்ரா தானாக முன் வந்து அவனை மணக்கச் சம்மதம் கொடுத்ததற்கு காரணம் என்ன..? அவள் என்ன தனஞ்ஜெயனைக் காதலித்தாளா..? இல்லையே.. அவளுடைய தாய், தந்தைக்கு வந்திருந்த இக்கட்டிலிருந்து அவர்களை விடுவிக்கத்தன்னைப் பணயமாக்கிக் கொண்டாள்..

'என்னை மன்னிச்சிரு..'

மனமார இதைச் சொன்னான் தனஞ்ஜெயன்.. அவள் விரும்பினால் அவள் மனம் விரும்பிய வாழ்வை அவளுக்கு

அமைத்துத் தருவதாகச் சொல்லி விட்டு வாங்கிக் கட்டிக் கொண்டான்..

'நமக்குள் நடந்தது கட்டாயக் கல்யாணம்..'

'எதுவா வேணும்னாலும் இருக்கட்டும்.. கல்யாணம் கல்யாணம் தானே..?'

சுமித்ராவின் கேள்வியில் தனஞ்ஜெயனின் மனதில் அடித்துக் கொண்டிருந்த ஆழிப் பேரலை சமனமானதை அவள் அறிவாளா..?

அவன் முகத்தில் அடித்ததைப் போல ஓங்கி அவள் கதவைச் சாத்தியதில் அவனுக்குக் கோபம் வரவில்லை.. சந்தோசம்தான் வந்தது..

அவனை அவள் தவிர்க்க ஆரம்பித்ததில் அவன் மனம் வலித்தது..

குற்ற உணர்வில் இருந்தவனால் வலியப் போய் அவளிடம் பேச முடியவில்லை.. அந்த வன்கொடுமை யினால் இந்திராதேவியை ஊடே புகுத்தி அவளிடம் பேச முயன்றால்.. அதற்கு இடம் தராமல் அவனைப் பெற்ற தாயே காலை வாருகிறாளே.. இது தகுமா..?

"அம்மா..?"

"என்னடா..?"

"சிரிச்சது நீங்க இல்லன்னு எனக்கும் தெரியும்.."

"தெரியுதில்ல.. சிரிக்கிறவங்ககிட்டப் போயி காரணம் கேளு.. அதைவிட்டு என்கிட்டக் கேட்டா எனக்கென்ன தெரியும்..?"

இந்திராதேவி கெட்டிக்காரத்தனமாக மகனையும்.. மருமகளையும் கோர்த்து விட்டாள்.. தனஞ்ஜெயன் சுமித்ராவைப் பார்த்தான்.. அவன் பார்வையைச் சந்திக்க முடியாமல் அவள் தடுமாறியதில் அவன் கண்களில் மின்னல் வந்தது..

அவன் தோளைக் குலுக்கிக் கொண்டு எழுந்தான்..

"கிளம்பிட்டியா தனா.."

"ஆமாம்மா.. பேக்டரியில ஹெவி வொர்க் இருக்கு.."

"அது எப்பவும்தான் இருக்கும்.. நீ சாயங்காலம் வெரசாவே வீட்டுக்கு வந்திரு.."

"எதுக்கு..?"

தனஞ்ஜெயன் சுமித்ராவை பார்வையிட்டபடி கேட்டான்.. கிடைக்கும் மணித்துளிகளையெல்லாம் மகன் தவற விடாமல் பயன் படுத்திக் கொள்வதை இந்திராதேவி மனதுக்குள் மெச்சிக் கொண்டாள்..

"இன்னும் நம்ம குலதெய்வ கோவிலுக்கு போயிட்டு வரலை தனா.. கல்யாணமானவுடனே முத வேலையா அங்கே போய் பொங்க வைச்சிருக்கனும்.. செய்யலையே.. சுமித்ராவுக்கு காய்ச்சல் வந்திருச்சு.. அவ குணமானவுடனே போகலாம்ன்னா முடியாமல் போச்சு.."

எதனால் முடியாமல் போனது என்ற நினைவு வந்ததில் சுமித்ராவின் சிரிப்பு நின்று விட்டது.. தனஞ்ஜெயன் குற்ற உணர்வுடன் பார்வையை விலக்கிக் கொண்டான்.. அதைக் கவனிக்காதவளைப் போல இந்திராதேவி கேட்டாள்..

"அப்ப பொழுது சாயறதுக்குள்ள நீ வந்துருவ இல்ல..?"

"ம்ம்ம்.."

தனஞ்ஜெயன் சம்மதமாக முணுமுணுத்துவிட்டு வெளியேறினான்.. அவனை சுமித்ராவின் அடிப்பார்வை தொடர்ந்தது.. அவன் கதவோரமாகப் போனபோது சட்டென்று திரும்பிப் பார்த்தான்.. திகைத்துப் பின்வாங்கிய அவளது அடிப் பார்வையில் அவன் முகத்தில் மந்தஹாசம் பரவியது.. அவளைப் பார்த்தபடியே..

"வரேன்ம்மா.." என்றான்..

அதில் சுமித்ரா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. தனஞ்ஜெயனின் முகத்தில் திரும்பிய உல்லாசத்தில் இந்திராதேவியின் மனம் குளிர்ந்தது..

கோவிலில் கூட்டம் நிரம்பியிருந்தது.. ஜமீன் வீட்டு மருமகள் குலதெய்வத்துக்கு முதல் பொங்கலை வைக்கப் போகிறாள் என்ற செய்தி தண்டோரா இல்லாமலே சுற்றுப் பட்டு கிராமங்களுக்குப் பரவியிருந்ததில்.. தனஞ்ஜெயனின் குடும்பத்தார் போவதற்குள் மற்றவர்கள் அங்கே குழுமி விட்டார்கள்..

மணியக்காரர் தன் மனைவியுடன் வந்திருந்தார்.. மற்ற உறவுக்காரர்களும் குடும்பத்துடன் வந்திருந்ததில் எப்படிப் பொங்கல் வைக்கப் போகிறோமோ என்று சுமித்ராவுக்கு பயம் வந்து விட்டது..

அவள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவள்.. கொஞ்சமாக சமைக்கத் தெரிந்தவள்.. மற்ற வீட்டுக் காரியங்களை பாந்தமாக கவனித்தாலும் சமையல் என்று வரும்போது அவளுக்குள் ஒரு உதைப்பு ஏற்படத்தான் செய்தது..

என்னதான் சுசிலாவும், தேவகியும்.. அவள் கூடவே இருந்தாலும் பொங்கல் வைக்கப் போகிறவள் அவளல்லவா..?

மருமகளின் படபடப்பை உணர்ந்தவளாக இந்திராதேவி அவள் பக்கத்தில் வந்து புன்னகைத்தாள்.. பதிலுக்கு சிரிக்க முடியாமல் சிரித்து வைத்தாள் சுமித்ரா..

"இது குலதெய்வத்தோட கோவில் சுமித்ரா.."

இதை எதற்காக இந்திராதேவி சொல்கிறாள் என்று புரியாதவளாக தலையை ஆட்டி வைத்தாள் சுமித்ரா..

குலதெய்வத்தின் கோவிலுக்குள் நின்று கொண்டிருப் பவளிடம் இதுதான் குலதெய்வத்தின் கோவில் என்று இந்திராதேவி எதற்காக எடுத்துச் சொல்லுகிறாள்..

"பொம்பளைகளுக்கு பிறந்த வீட்டுக் குலதெய்வம் சாமி மட்டும்தான்.. புகுந்த வீட்டுக் குலதெய்வம்தான் அவங்க பரம்பரையைக் காக்க நிற்கும் குலதெய்வம்.. இனி இதுதான் உன் குலதெய்வம்.. அம்மனை வணங்கிக்க

சுமித்ரா.. பொங்கல் வைக்கப் போகிறது அவள்தான்.. நீயில்லை.."

"அத்தை.."

சுமித்ராவுக்கு புல்லரித்தது.. கர்ப்பக் கிரகத்தில் குடி கொண்டிருந்த அம்மனின் மங்களகரமான முகத்தைப் பார்த்தாள்.. மனம் அமைதியானது...

"உனக்குத் தெரிஞ்சதை நீ செய்யி.. மத்ததை அவ பார்த்துக்குவா.. நீ வைக்கிற பொங்கலில பக்தியும், பாசமும், அர்ப்பணிப்பும் இருந்தாப் போதும்.. அதுதான் அவளுக்குச் சர்க்கரைப் பொங்கல்.. பயப்படாதே சுமித்ரா.. அம்மன் பால் பாயாசத்தை மட்டும் விரும்பிக் குடிக்கிறவளில்ல.. கூழைக் கரைச்சுக் கொடுத்தாலும் சந்தோசமா ஏத்துக்கிறவ..."

சுசிலா பொங்கல் வைப்பதற்கான அடுப்பைக் கூட்டுவதற்காக ஃ வடிவத்தில் கற்களைப் போடும்படி டிரைவர் பூபதியிடம் சொன்னாள்.. அவள் சொன்னால் அவன் எதையும் செய்வானென்று அவன் மார்தட்டினான்.. அப்படியெல்லாம் சுசிலா சொல்வதற்காக அவன் எந்த மலையையும் புரட்ட வேண்டாம் என்று சுசிலா சொல்லி விட்டாள்..

"அம்மா சொன்னாங்கன்னு வந்து சொல்றேன்.. செஞ்சா செய்யி.. செய்யாட்டிப் போ.. நீ எனக்காக ஒன்னும் எந்த ஆணியையும் புடுங்க வேணாம்.. அம்மா சொன்னதுக்குச் செஞ்சாப் போதும்.. இப்ப கல்லைப் புரட்டிப் போடறியா.. இல்ல.. அம்மாகிட்டப் போய் சொல்லவா..?"

"அது எதுக்கு புள்ள.. தோ.. ஒரு நிமிசத்தில கல்லப் புரட்டிப் போட நானாச்சு.."

"அஃது.."

பூபதி அவசரமாக வடிவமைத்துக் கொடுத்த அடுப்பில் தேவகியின் உதவியோடு பொங்கல் பானையை ஏற்றி வைத்தாள் சுமித்ரா.. பட்டுப் புடவையைத் தூக்கிச்

சொருகிக் கொண்டு பாந்தமாக அவள் பொங்கல் வைத்த பேரழகில் சொக்கிப் போய் நின்றான் தனஞ்ஜெயன்..

"ஏம்மா.. அவளுக்குப் பொங்கல் வைக்க வருமா..?" அவன் கவலைப்பட..

"வேணும்னா உங்க பொண்டாட்டிக்குப் பதிலா நீங்க போயி பொங்க வையுங்களேன்.." என்று சிரிக்காமல் யோசனை சொல்லிக் கொடுத்தார் மணியக்காரர்..

"ஏற்கனெவே தனா அந்த யோசனையிலதான் இருக்கிறதைப் போல தெரியுதுங்க.." மரகதமும் கணவருடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு தனஞ்ஜெயனைக் கேலி பண்ணிச் சிரித்தாள்..

பொங்கல் அமோகமாகப் பொங்கியதில் பெண்கள் கூட்டம் குலவையிட்டு அம்மனுக்கு நன்றியைச் சொல்லியது.. இந்திராதேவி சொன்னதுதான் சரியானதாக இருந்தது.. சுமித்ரா வைத்திருந்த பொங்கல் தேவாமிர்தமாக இருந்தது..

"இது நான் வைத்த பொங்கலா..?" சுமித்ரா அதிசயப் பட்டாள்..

"இந்த அம்மன் வைத்த பொங்கல்.." இந்திராதேவி கை குவித்தாள்..

சுமித்ராதேவி சொந்தத்துடன் குலதெய்வமாய் அருள் பாலித்த அம்மனை கையெடுத்துக் கும்பிட்டு வணங்கினாள்.. மனமுருக அவள் வேண்டிக் கொண்டதற்கு செவி சாய்த்ததைப் போல மாங்கல்ய பலம் தரும் அம்மனின் ஆலய மணியோசை ஒலித்தது..

தனஞ்ஜெயனும் சுமித்ராவும் அருகருகே நின்று அம்மனின் தீபாதரனைக் காட்சியினைப் பார்த்தார்கள்.. குருக்கள் கொடுத்த குங்குமத்தை சுமித்ரா நெற்றியில் இட்டபடி தனஞ்ஜெயனை நிமிர்ந்து பார்த்தாள்..

'இவன்தான் என் குங்குமத்திற்குச் சொந்தக்காரன்..!'

அவளின் பார்வையின் சொந்தத்தில் தனஞ்ஜெயனின் கண்கள் மின்னின..

20

"அவ ரெடியாகிட்டாளாம்மா..?"

தனஞ்ஜெயன் கைக்கடிகாரத்தைக் கட்டியபடியே வினவினான்..

"அத்தை.." என்ற சப்தத்தில் அவன் பார்வை திரும்பியது..

மாடிப்படியில் ஒயிலாக இறங்கி வந்து கொண்டிருந்தாள் சுமித்ரா.. கெட்டி ஜரிகையிட்ட பட்டுப் புடவையும்.. வைர நகைகளுமாக.. ஜமீன் குடும்பத்தின் மருமகளாக இறங்கிக் கொண்டிருந்தவளின் சோபையில் மயங்கி விட்டான் தனஞ்ஜெயன்..

"நான் ரெடி.." இந்திராதேவியிடம் சொன்னாள் சுமித்ரா..

அதில் தனஞ்ஜெயன் பல்லைக் கடித்தான்..

'இவ என்கூட விருந்துக்கு வரப் போகிறாளா.. இல்லை.. என் அம்மா கூடப் போகப் போகிறாளா..? கட்டின புருசன் செஞ்சு வைச்ச சிலையாட்டம் இவ முன்னால நிக்கிறான்.. என்கிட்டப் போசாம எங்கம்மா கிட்டப் பேசறா..'

அவனிடம் சுமித்ரா இயல்பாக பேசிய சில தினங்களை அவன் நினைத்துப் பார்த்தான்.. அந்த சுமித்ரா எங்கே போனாள்..?

"பூ வைச்சுக்கம்மா.."

இந்திராதேவியின் கண்பார்வையில் நெருக்கமாகத் தொடுத்திருந்த மல்லிகைச் சரத்தைக் கொண்டு வந்து நீட்டினாள் தேவகி..

அவள் பார்வை மாய, மந்திரம் தெரிந்த சின்ன எஜமானியை பயபக்தியுடன் பார்த்தது..

'அம்மா நினைச்சா இந்த மல்லிகைப் பூவை ரோசாப் பூவா மாத்தினாலும் மாத்திருவாக..'

அவள் நினைத்து முடிப்பதற்குள் அவள் கையில் மல்லிகைப் பூ காணாமல் போய் அங்கே ரோஜாப்பூ வந்திருந்தது..

'எப்புடி..?' தேவகி அரண்டு விட்டாள்..

தலையில் செருகியிருந்த ரோஜாப் பூவை எடுத்து அவள் கையில் வைத்து விட்டு மல்லிகைச் சரத்தை எடுத்துத் தன் தலையில் சூடிக் கொண்டிருந்த சுமித்ரா தேவகியின் அரண்ட பார்வையில் புருவங்களை உயர்த்தினாள்..

"ஒன்.. ஒன்.. ஒன்னுமில்லேம்மா.."

செய்தியை சுசிலாவிடம் ஒலிபரப்ப உள்ளே ஓடிவிட்டாள் தேவகி.. விசித்திரமாக அவளைப் பார்த்தபடி தோளைக் குலுக்கிய சுமித்ராவைத் தின்று விடுவதைப் போல பார்த்து வைத்தான் தனஞ்ஜெயன்..

"போகலாமா அத்தை.."

சுமித்ரா இந்திராதேவியிடம் கேட்டு வைத்து தனஞ்ஜெயனின் ரத்த அழுத்தத்தை எகிற வைத்தாள்..

"அதுசரி... விருந்து எனக்கா.. இல்லை உங்களுக்கா..?" கேலியாகக் கேட்டாள் இந்திராதேவி..

"நீங்களும் கூட வந்தா என்னவாம்..?" சுமித்ரா சிணுங்கினாள்..

மருமகளின் அன்பில் மனம் கரைந்தாலும் இந்திராதேவி அவர்களுடன் செல்ல மறுத்து விட்டாள்..

"நாட்டு வழக்கம்ன்னு ஒன்னு இருக்கும்மா.. தாய்க்குப் பின்னால தாரம்.. இனி தனஞ்ஜெயனுக்கு நீதான்.. எங்கே போனாலும் உன்கூடப் போய் நின்னாத்தான் அவனுக்கு மதிப்பு.."

"அதுசரி... அன்னவாசல் ஜமீன்தாரர் இந்த சுமித்ராவை பக்கத்தில் நிறுத்தித்தான் மதிப்பைத் தேடிக்கனுமாக்கும்.. அவருக்கான மதிப்பும், மரியாதையும் மலை போல குவிஞ்சிருக்கு அத்தை.."

சுமித்ராவின் பேச்சில் இந்திராதேவி பெருமையுடன் புன்னகை செய்தாள்.. அவள் விழிகள் பார்த்தாயா என் மருமகளை.. என்று தனஞ்ஜெயனிடம் கேட்டன.. அவனுக்கும் சுமித்ராவின் பேச்சில் சந்தோசமாகத்தான் இருந்தது.. அந்த சந்தோசத்தில்..

"மலை போல மரியாதையும், மதிப்பும் குமிஞ்சிருந்தாலும்.. அன்னவாசல் ஜமீன்தாரிணிகூடப் போய் நிற்கிறதைப் போல ஆகுமா..?" என்று சுமித்ராவைப் பார்த்தபடி சொல்லி வைத்தான்..

"தனா சொன்னதைக் கேட்டுக்கிட்டியா.. சுமித்ராங்கிறது தனி மனுஷியில்லம்மா.. தனஞ்ஜெயனின் பெண்டாட்டி.."

இந்திராதேவி சொல்லிய விதத்தில் கணவன், மனைவி இருவர் மனதிலும் உல்லாசம் புகுந்தது.. அவர்கள் மணியக்காரரர் அளிக்கும் விருந்திற்குக் கிளம்பினார்கள்.. தனஞ்ஜெயன் கார் கதவை அவளுக்காக திறந்து விட்டான்.. அவன் பக்கத்தில் உட்கார்ந்த முதல் பயணத்தில் அவள் புல்லரித்துப் போனாள்..

குலதெய்வம் கோவிலுக்குப் பொங்கல் வைக்கப் போனபோது.. இந்திராதேவியுடன் காரின் பின்சீட்டில் அமர்ந்து விட்டாள் சுமித்ரா.. தனஞ்ஜெயனின் பக்கத்தில் உட்காரவில்லை.. முதன் முதலாக அவன் பக்கத்தில் அவள் உட்கார்ந்ததில் புது மணப்பெண்ணாக அவனருகில் அவள் உட்கார்ந்து வந்த தினம் அவன் நினைவுக்கு வந்தது..

சுமித்ராவின் தலையில் சூடியிருந்த மல்லிகையின் மணம் கதவுகள் மூடப்பட்டிருந்த அந்த ஏஸி கார் முழுவதும் நிறைந்தது.. தனஞ்ஜெயனின் மனம் மயங்கியது.. காரில் இருந்த சிடியைப் போட்டான்..

"தட்டுத் தடுமாறி நெஞ்சம் -கை

தொட்டு விளையாடக் கொஞ்சும்..

சிட்டு மலர்மேனி துள்ளும்.."

காரில் ஒலித்த பாடலில் ஒளிந்திருந்த மன்மத போதை அவர்களின் மனங்களில் நிறைந்தது.. சுமித்ராவின் மனதையும்.. உடலையும் அந்தப் பாடல் ஏதோ செய்தது.. அவள் ஓரக்கண்ணால் தனஞ்ஜெயனைப் பார்த்தாள்.. அதே நொடியில் அவனும் அவளைப் பார்த்து வைத்ததில் உதட்டைக் கடித்துக் கொண்டு முகம் சிவந்தாள்..

"உன் மேல கொண்ட ஆசை..

உத்தமியே மெத்தையுண்டு

சத்தியமாச் சொல்லுறேண்டி..

தங்க ரத்தினமே..!

தாள முடியாது கண்ணே..!

பொன்னு ரத்தினமே..!"

பாடல் மாறியதில் அவள் தவிப்பு அதிகரித்தது.. முதல் பாடலை விட இந்தப் பாடல் கிளப்பி விட்ட மோகத் தீயின் ஜ்வாலை தாங்காமல் சுமித்ரா தவித்தாள்.. இப்போது தனஞ்ஜெயன் அவளை நேரடியாகவே பார்த்து வைத்தான்.. அவன் விழிகளில் தெரிந்த வேட்கையில் அவள் உடலை இதமான இம்சை ஆட்டிப் படைத்தது..

'எங்கேயிருந்து இப்படியாப்பட்ட பாட்டுக்களா தேடிப் பிடிச்சான் இவன்..?' சுமித்ராவின் கன்னம் ரத்தமெனச் சிவந்தது..

மெத்தைக்கு அழைக்கும் அந்தப் பாட்டில் அவன் வெட்கமில்லாமல் அவளைத் தின்று விடுவதைப் போலப் பார்த்தபடி விசில் அடித்து வைத்தான்.. சுமித்ராவின் ரத்த நாளங்கள் சூடேறின..

'பாருடா.. இந்த ரிஷிய சிருங்கர் போடற போட்டை.. இந்த லட்சணத்திலே ஐயா பொண்டாட்டியக்கூட ஏறெடுத்துப் பார்க்க மாட்டாராம்..'

இளமையின் தாபமும்.. மனைவியென்ற சொந்தமும் சேர்ந்து அவளைப் பாடாய் படுத்தின... அவளின் உணர்வுகளுக்குத் தீ மூட்டி அதில் அவன் குளிர் காய்வதாக அவள் நினைத்தாள்.. அவன் பார்வையில் மெத்தைக்கான அப்பட்டமான அழைப்பிருந்தது.. அதை விரல் நகம் கூடப் படாமல் பார்வையில் மட்டும் அவன் சொல்லி வைத்ததில் அவள் வெந்து தணிந்தாள்..

"அம்மாக் கண்ணு..

சும்மா சொல்லு..

ஆசையில்லையோ - என்மேல்

ஆசையில்லையோ..?"

அடுத்த பாடல் கேள்வி கேட்ட போது சுமித்ரா ஒரு வழியாகி விட்டாள்.. அவளின் தவித்த பார்வையில் அவன் பார்வை பின்னிப் பிணைந்த போது மணியக்காரரின் வீடு வந்து விட்டது.. அவன் இறங்கி அவளுக்காக கார் கதவைத் திறந்து விட்டான்.. அவன் பார்வை அவளை அழைத்ததில்..

'இந்த பணிவிடையைச் செய்யச் சொல்லி நான் கேட்டேனா..?' என்ற சினத்துடன் கீழே இறங்கினாள் சுமித்ரா..

தனஞ்ஜெயனின் புருவங்கள் முடிச்சிட்டன.. எதற்காக இந்த கோபம் என்று அவன் விழிகள் கேட்டதில் அந்தக் காரைப் புரட்டி அவன் தலையில் போட்டால்தான் என்ன என்ற பெருங்கோபம் அவளுக்குள் வந்தது..

'பருகு.. பருகுன்னு பார்த்து வைப்பான்..' மனதுக்குள் கணவனைத் திட்டித் தீர்த்தாள்..

அவன் விரல் படாத ஏக்கத்தில் அவள் உடல் உருகிக் கொண்டிருந்தது.. அந்தக் கொதிப்பில் அவன் பார்வையைத் தவிர்த்தாள்..

"வாங்க மாப்பிள்ளை.. வாம்மா சுமித்ரா.."

தியாகராஜன் வாசலுக்கே வந்து வரவேற்றார்.. மரகதம் வந்து சுமித்ராவின் கையைப் பிடித்துக் கூப்பிட்டுக் கொண்டு போனாள்.. அவளுடன் போன சுமித்ராவைத் தொடர்ந்த தனஞ்ஜெயனின் பார்வையால்..

"பூ கொடுக்கக் கூப்பிட்டுக்கிட்டுப் போறா.. இப்ப சுமித்ரா வந்திரும் மாப்பிள்ள.. கவலைப் படாதீங்க.." என்று கேலிச் சிரிப்புடன் அவனைத் தேற்றினார் தியாகராஜன்..

"மாமா.. நீங்க இருக்கீங்களே.." தனஞ்ஜெயனின் சிரிப்பில் இழையோடிய லேசான வெட்கத்தில் தியாகராஜன் வியந்து போனார்..

எப்பேற்பட்ட இரும்பு மனிதனையும் இளக்கி விடும் மென்மை படைத்ததா பெண்மை..?

திரும்பி வந்த சுமித்ராவை தனஞ்ஜெயனின் பக்கத்தில் உட்கார வைத்துப் பால், பழம் கொடுத்து உண்ண வைத்தாள் மரகதம்..

"தள்ளி உட்காரும்மா.." என்று அவள் தள்ளிய வேகத்தில் தனஞ்ஜெயனின் மடியில் போய் விழுந்தாள் சுமித்ரா..

தோதாக மடியில் விழுந்தவளை வாகாக இறுக்கிக் கொண்டவனைப் பார்த்து தியாகராஜன் சிரித்த சிரிப்பில் தனஞ்ஜெயனும் சுமித்ராவும் லேசாக விலகி உட்கார்ந்தார்கள்..

"முதல்ல நீ சாப்பிட்டுட்டு.. அதுக்கப்புறமா சுமித்ராவுக்கு கொடுக்கனும் தனா.."

மரகதத்தின் கட்டளையில் அவர்கள் இருவரும் பகிர்ந்துண்ட பால், பழம் எல்லையற்ற ருசியுடன் இருந்ததைப் போல உணர்ந்தாள் சுமித்ரா.. தனஞ்ஜெயனுக்கும் அப்படியே என்பதை அவனது மயக்கும் பார்வை சொல்லியது..

விருந்தின் போது அவர்கள் இருவரின் இலையிலும் பரிமாறப்பட்ட பதார்த்தங்களை ஒருவருக்கொருவர் ஊட்டி விட வேண்டுமென்று மரகதம் சொல்லி விட்டாள்..

சுமித்ரா வெட்கத்துடன் தயங்கினாள்.. வெட்க மில்லாத தனஞ்ஜெயன் உடனடியாக அவன் இலையி லிருந்து அல்வாவை எடுத்து சுமித்ராவுக்கு ஊட்டி விட்டு விட்டான்..

"பாரு மரகதம்.. அதுக்குள்ளே என் மாப்பிள்ள பெண்டாட்டிக்கு அல்வாவும், பூவும் தான் பிடிக்கும்ங் கிறதை கண்டு பிடிச்சு வைச்சிருக்காரு.."

தியாகராஜனின் சிரிப்புடன் மரகதத்தின் சிரிப்பும் இணைந்து கொண்டது.. பதிலுக்கு தனஞ்ஜெயனுக்கு ஊட்டிவிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளான சுமித்ரா.. அதே அல்வாவை எடுத்து அவன் வாயில் ஊட்டி விட்டாள்..

அவளைப் போல வாயைத் திறந்து ஊட்டி விட்டதைப் பட்டும் படாமலும் வாங்கிக் கொள்ளாமல் தனஞ்ஜெயன் அவள் விரல்களோடு சேர்த்து அல்வாவை சுவைத்து வைத்தான்.. அவனது எச்சில் தோய்ந்த விரல்களில் சுமித்ரா வேறு உலகிற்குப் போய் வந்தாள்..

"தனா.. விரலை விட்டிரு பாவம்.." மரகதம் சிபாரிசு செய்ததில் சுமித்ராவுக்கு லஜ்ஜையாகி விட்டது..

'இவன் இருக்கானே..'

வெட்கத்துடன் அவள் விரல்களை இழுத்துக் கொண்டபோது அவள் விரல்களில் ஒட்டியிருந்த அல்வாவின் நெய் தனஞ்ஜெயனின் சட்டையில் சொட்டாக பட்டு விட்டது..

"அடடா.." சுமித்ரா பதறிப் போய் அவளுடைய பட்டுப் புடவையின் முந்தானையில் அவன் சட்டையில் படிந்திருந்த நெய்யை துடைத்து விட முனைந்ததில் மரகதம் வியந்து விட்டாள்..

"காஞ்சிபுரம் பட்டுப் புடவை சுமித்ரா.. பாழாகிரும்.. பொறு.." என்றவள் லேசான சோப்பின் துளியோடு கூடிய கைக்குட்டையில் தனஞ்ஜெயனின் சட்டையிலிருந்த நெய்கறையை எடுத்து விட்டாள்..

சுமித்ராவின் கண்கள் அதை ஏக்கத்துடன் பார்த்ததில்..

"அடுத்து நெய்கறை பட்டா நீயே இவனைக் குளிப்பாட்டி விடு என்ன..?" என்று சமாதானம் வேறு செய்து வைத்ததில் சுமித்ராவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது..

விருந்துக்குப் பின்னால் தாம்பூலத் தட்டை எடுத்து வந்த மரகதம்.. வெற்றிலையை எப்படிப் பாக்கு சுண்ணாம்புடன் வாகாக மடித்துக் கொடுப்பது என்று சுமித்ராவுக்கு பயிற்சி கொடுத்தாள்.. அதன்படி சுமித்ரா மடித்த வெற்றிலையை தனஞ்ஜெயனிடம் கொடுக்கச் சொன்னாள்.. அவன் போதை ததும்பும் விழிகளுடன் அவளை உற்று உற்றுப் பார்த்தபடி வாங்கி வாயில் போட்டுக் கொண்டான்..

"கொஞ்ச நேரம் கண்ணசருங்க.. சாயங்காலம் காபி, பலகாரத்தை முடிச்சுட்டுத்தான் நீங்க கிளம்பிப் போகனும்.."

மரகதம் கட்டளையிட்டு விட்டு அவர்களுக்காக மாடியறையை கை காட்டி விட்டாள்.. உண்ட மயக்கத்தில் அவர்கள் இருவருக்குமே கண்களைத் தூக்கம் சுழற்றியதில் ஆட்சேபிக்காமல் மரகதம் காட்டிய அறைக்குப் போய் விட்டார்கள்.. உள்ளே போனதும்தான் சுமித்ரா திகைத்து நின்றாள்..

அந்த அறையில் ஒரேயொரு கட்டில்தான் இருந்தது..

திட்டம் போட்டு மரகதம் அவர்களை அங்கே அனுப்பியிருப்பதைப் புரிந்து கொண்டவளுக்குள் மோகம் மூண்டாலும்.. அவள் செய்வதறியாமல் நின்றாள்..

அதுநாள்வரை அவளும், தனஞ்ஜெயனும் தனித்தனி அறைகளில்தான் இருக்கிறார்கள்.. அப்படியிருக்க.. ஒரே அறையில் ஒரே கட்டிலில் அவர்களால் எப்படிப் படுக்க முடியும்..?

"எனக்குத் தூக்கம் வரலை.." சுமித்ரா வெளியே போகத் திரும்பினாள்..

"ஊஹீம்.. வெளியே போகாதே.. அத்தையும்.. மாமாவும் சந்தேகப் படுவாங்க.."

தனஞ்ஜெயன் அவளிடம் நேரடியாகப் பேசி விட்டான்.. அதில் கண்கள் பளபளக்க அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.. இருவர் பார்வையும் கலந்தன.. அசையாமல் நின்றவர்களின் உடலும் மனமும் ஒருவரிடமொருவர் அடைக்கலமாகி விடத் துடித்தன.. முதலில் யார் அடைக்கலமாவது என்று புரியாமல் அவர்கள் பார்வையை விலக்கிக் கொண்டார்கள்..

'தொட்டா என்ன சொல்லுவாளோ..? அன்னைக்கு என்னவோ உன் மனம் போல வாழ்க்கையை அமைச்சுத் தரேன்னு சொன்ன... இப்ப தனிமை கிடைத்ததும் புருசன்ங்கிற உரிமையை எடுத்துக்கப் பார்க்கறியான்னு கேட்டுட்டா..?' தனஞ்ஜெயன் தயங்கினான்..

'நானாப் போய் எப்படிச் சொல்கிறது..? அட மாங்காய் மடையா..! நீ என் புருசன்டா.. இப்படி எட்டி நிற்கா தேடான்னு நான் சொல்லித்தான் இவன் தெரிஞ்சுக் கனுமா..? நான் இவனோட பெண்டாட்டி யில்லையா..? புருசனா இவன் நடந்துக்க வேணாமா..?' சுமித்ராவின் மனம் சிணுங்கியது..

"கட்டிலில் படுக்கத்தானே முடியாது..? உட்கார லாமில்ல..?"

தனஞ்ஜெயன் வகுத்த திட்டத்தில் போடா என்றிருந்தது சுமித்ராவுக்கு.. இருவரும் கட்டிலின் இருமுனைகளிலும் அமர்ந்தார்கள்.. சற்று நேரத்தில் தூக்கம் சொக்க சுமித்ரா கட்டிலின் ஒரு மூலையில் சுருண்டு படுத்தாள்.. அசதியுடன் கட்டிலின் மறு மூலையில் தனஞ்ஜெயன் படுத்தான்.. மாலைப் பொழுதின் மயக்கத்தின் அவர்கள் விழித்துப் பார்த்த

போது தனஞ்ஜெயன் சுமித்ராவைக் கட்டிப் பிடித்தபடி படுத்திருப்பதை உணர்ந்தார்கள்.. சுமித்ராவின் கைவளைவோ அவன் கழுத்தைச் சுற்றியிருந்தது.. எப்படி என்று புரியாமல் இருவரும் பதறி விலகி எழுந்தார்கள்..

பூஜையறையிலிருந்து வெளியே வந்தாள் சுமித்ரா.. மாடியிலிருந்து இறங்கி வந்த தனஞ்ஜெயனைப் பார்த்ததும் தயங்கி நின்றாள்.. அவள் மனதில் முதல் நாளின் நினைவுகள் வந்து நின்றன.. உட்கார்ந்திருக்கலாம் என்று சொன்னவன் அவளைக் கட்டிப் பிடித்து சயனித்த நினைவில் அவள் கன்னங்களில் ரோஜாக்கள் பூத்தன..

தனஞ்ஜெயன் அவள் பார்வையைக் கவனிக்க வில்லை.. பேக்டரியில் ஏதோ பிரச்னையென்று போன் வந்ததில் அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருந்தான்..

வழியில் நின்று கொண்டிருந்தவளைக் கடந்து சென்று சமையலறையிலிருந்த இந்திராதேவியிடம்..

"டிபன் ரெடியாம்மா.. பேக்டரிக்கு நேரமாகுது.." என்று பறந்தான்..

சுமித்ராவின் முகம் விழுந்து விட்டது.. முதல் நாள் மாலையில் தூக்கக் கலக்கத்தில் அவளை அணைத்திருப்பான் என்று நினைத்துக் கொண்டாள்.. அவள் மனதில் ஏக்கம் சூழ்ந்தது.. மாடிக்குப் போகத் திரும்பியவளை இந்திராதேவியின் குரல் தடுத்து நிறுத்தியது..

"சுமித்ரா.. தனஞ்ஜெயனுக்கு டிபன் வைம்மா.. அவனுக்கு பேக்டரிக்கு நேரமாகுதாம்.."

மாமியாரின் உத்தரவை மறுத்துப் பேச முடியாமல் டைனிங்டேபிளுக்கு வந்தாள் சுமித்ரா.. அவள் முகத்தைப் பார்க்காமல் வந்து உட்கார்ந்த தனஞ்ஜெயனின் முன்னால் தட்டை வைத்தாள்.. அந்தத் தட்டை அப்படியே அவன் தலையில் போட்டுப் பதம் பார்க்க வேண்டும் என்ற ஆசை மிகுந்தாலும்.. இந்திராதேவியின் முகத்தாட்சண்யத்துக்காக அந்த ஆசையின் மென்னியை முறித்துப் போட்டுவிட்டு அவனுக்குப் பரிமாற ஆரம்பித்தாள்..

"உம்.. என்னவாம்..? நான் வந்து பேசிக்கறேன்.. ஊஹீம்.. அதான் வந்து பேசிக்கறேன்னு சொல்றேனில்ல.."

செல்போனில் சப்தம் போட்டபடி சாப்பிட்ட தனஞ்ஜெயன் வெகு அருகில் நின்றிருந்த சுமித்ராவின் வாசனையை உணரவே இல்லை..

ஆனால் சுமித்ரா அவனது வாசனையை உணர்ந்தாள்.. அவனுக்கேயுரிய அந்த பிரத்யேக நறுமணத்தை முதல்நாள் காரில் அவனருகில் அமர்ந்த போது உணர்ந்தாள்.. அந்த நறுமணம் அவளை அலைக் கழித்தது.. மணியக்காரர் வீட்டு மாடியறையில் இருவரும் தூக்கத்தில் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டதில் அவனது நறுமணம் அவளிடம் இடம் பெயர்ந்து விட்டது.. முதல் நாளின் இரவு முழுவதும் அவள்மீது படிந்திருந்த வாசனையில் அவள் தூக்கமிழந்து தவித்தாள்..

அப்படி அவளைப் பாடாய் படுத்திவிட்டு.. காலையில் எவனோ ஒரு அன்னியனைப் போல காலை டிபனை முழுங்கிக் கொண்டிருந்தவனைப் பார்க்கும் போது அவளுக்கு கொலைவெறி வந்தது..

அவள் போடப் போட சாப்பாட்டின் சுவையறியாத வனாய் இயந்திரம் போல மொக்கி விட்டு அவன் எழுந்து போய் விட்டான்.. திரும்பிப் பார்ப்பான்.. லேசாகத் தலை அசைப்பான்.. என்றெல்லாம் எதிர்பார்த்து ஏமாந்து போனாள் சுமித்ரா..

'என்ன பிழைப்பு இது..?'

அவளுக்கு சோர்வாக வந்தது.. இந்திராதேவி சாப்பிட வந்ததில் அதை மறைத்துக் கொண்டு அவளிடம் முக மலர்ச்சியாய் பேசிச் சிரித்தாள்.. முதல்நாள் விருந்தைப் பற்றி விசாரித்தாள் இந்திராதேவி.. தெரிந்த வரையிலான விவரங்களைச் சொன்னாள் சுமித்ரா..

காலை உணவுக்குப் பின்னால் ஓய்வெடுக்கப் போய் விட்டாள் இந்திராதேவி.. சுமித்ராவுக்கு பொழுதே போகவில்லை.. இப்படியாகப்பட்ட மங்குணி கணவன் அமைந்து விட்டால் பொழுது எப்படிப் போகும் என்று மனதுக்குள் தனஞ்ஜெயனைச் சாடித் திருப்தி பட்டுக் கொண்டாள்..

அந்த மங்குணிக் கணவன் மதிய உணவுக்காக வீட்டுக்கு வந்தான்.. இந்திராதேவியின் அறிவுறுத்தலின்படி இப்போதும் பரிமாறப் போனாள் சுமித்ரா.. அந்த மங்குணியோ சுமித்ராவுக்குப் பதில் செல்போனுக்குத் தாலி கட்டியிருக்கிறவனைப் போல அதைக் காதில் வைத்தபடி சாப்பிட உட்கார்ந்தான்.. தட்டில் பரிமாறப் பட்ட பதார்த்தங்களையும் கவனிக்கவில்லை.. அவற்றைத் தட்டில் பரிமாறியவளையும் கவனிக்கவில்லை..

ஒரு சின்னப் பார்வை..?

ஊஹீம்.. என்னவோ நேர்த்திக் கடனை நேர்ந்திருக் கிறவனைப் போல குனிந்த தலை நிமிராமல் காதில் ஒட்டியிருந்த செல்போனுடன் ஒட்டி உறவாடியபடி

அவன் சாப்பிட்டு முடித்தான்.. சாம்பார் கிண்ணத்தை அவன் தலையில் கவிழ்க்கும் வேகத்தை ஓடு.. ஓடு.. என்று விரட்டி விட்டபடியே.. விதியை நொந்து கொண்டு அவனுக்கு பரிமாறி முடித்தாள் சுமித்ரா.. சாப்பிட்டு முடித்தவன் மாடிக்குப் போய் விட்டான்.. சாப்பிட மனமின்றி உட்கார்ந்து விட்ட சுமித்ராவை இந்திராதேவி சாப்பிட வைத்தாள்..

தனஞ்ஜெயனைப் போன்ற ஒருவனுக்குப் பெண்டாட்டியாக வாய்த்தவளுக்கு மதியத் தூக்கம் ஒன்றுதான் குறைச்சலென்று, ஹாலின் சோபாவில் குத்துக் காலிட்டு உட்கார்ந்து டிவியின் சேனல்களை விருப்பம் போல மாற்றிக் கொண்டிருந்தவளை வேகமாக ஒரு நிழல் கடந்து சென்றது..

பயத்தில் அலற வாய் திறந்தவள்.. போர்டிகோவில் கார் கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள்..

தனஞ்ஜெயன்தான் காரில் ஏறிக் கொண்டிருந்தான்..

'இவன்தான் அந்தக் காத்துக் கருப்பா..? நான் என்னவோன்னு பயந்திட்டேன்..'

நெற்றியில் அடித்தபடி திரும்பியவளுக்கு உண்மையிலேயே தூக்கம் வந்து விட்டது.. ஹாலின்

சோபாவில் சுருண்டு படுத்துத் தூங்கி விட்டவளை காபியுடன் எழுப்பி விட்டாள் இந்திராதேவி..

"ஏம்மா..? ரூமிலே போய் தூங்காம இங்கேயே தூங்கிட்ட..?" பரிவுடன் கேட்டவளிடம்..

"அசதி அத்தை.." என்று சமாளித்தாள் சுமித்ரா..

"அசதியா..? திரும்பவும் காய்ச்சல் வந்திருச்சா..?" பதறிப் போய் சுமித்ராவின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள் இந்திரா...

'காய்ச்சல் வந்தாத்தான் அசதி வருமா..? உங்க மகனைப் போல சாமியாருக்கு வாக்கப் பட்டாலும் அசதி வரும்..'

அயர்வுடன் ஒன்றும் இல்லையென்று இந்திரா தேவியைச் சமாதானப் படுத்தினாள் சுமித்ரா..

காபி குடித்து விட்டு.. அவளுடைய அறைக்குப் போய் முகம் கழுவி.. தலை வாரிப் பின்னலிட்டு லேசான ஒப்பனையுடன் அவள் கீழே இறங்கி வந்தபோது.. தேவகி மல்லிகைச் சரத்துடன் நின்றிருந்தாள்..

'இப்ப அம்மா என்ன மந்திரம் போடப் போறாக..?'

அவள் நினைத்து முடிப்பதற்குள் அவள் கையிலிருந்த நீண்ட மல்லிகைச்சரம் சிறு துண்டாக மாறியிருந்தது..

'ஆத்தி..'

தேவகி அலறியடித்துக் கொண்டு சுசிலாவிடம் ஓடினாள்.. அவளுக்காக சிறு துண்டு மல்லிகைச் சரத்தை கொடுத்திருந்த சுமித்ரா.. பூவைத் தலையில் வைத்துக் கொள்ளாமல் பின்னங்கால் பிடறியில் பட அவள் ஓடுவதை புரியாமல் பார்த்தாள்..

'இவளுக்கு என்ன ஆச்சு..?'

பூஜையறையில் விளக்கேற்றி வைத்து விட்டு.. இந்திராதேவியுடன் உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருந்ததில் பொழுது ஓடி விட்டது.. இரவு மணி பத்தை நெருங்கியது.. இந்திராதேவி சாப்பிட அழைத்தாள்..

"நீங்க சாப்பிடுங்க அத்தை.."

பிடிவாதமாக அவளை மட்டும் சாப்பிட வைத்து தூங்க அனுப்பி விட்டாள் சுமித்ரா.. நள்ளிரவைத் தொடும் நேரத்தில் வந்து சேர்ந்த தனஞ்ஜெயன் கதவைத் திறந்து விட்டவளிடம் இன்னுமா விழித்திருக்கிறாய் என்பதைப் போன்ற பரிவான வார்த்தைகள் எதையும் உதிர்க்கவில்லை.. வேகமாக மாடியேறி விட்டவன் சாப்பிட வருவானா.. மாட்டானா என்று தெரியாமல் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சுமித்ரா..

மாடியில் காலடி சப்தம் கேட்டதில் நிமிர்ந்து பார்த்தாள்.. குளித்து முடித்து.. கைலியும், டிசர்ட்டுமாக இறங்கிக் கொண்டிருந்தவனின் தோற்றத்தில் அவள் மனம் மயங்கியது.. டைனிங் டேபிளுக்குப் போய் விட்டவனுக்கு யார் பரிமாற வருவார்களாம் என்ற கோபம் அவளுக்குள் எழுந்தது.. வழியில் உட்கார்ந்திருக்கிறவளை ஓர் பார்வை பார்க்காமல் திமிராக அவன் போனால் என்ன அர்த்தம்..? அங்கே அந்த நள்ளிரவில் அனுக்குப் பரிமாற சாப்பிடாமல் யார் காத்துக் கொண்டிருக்கிறார்களாம்..?

சுமித்ரா மௌன யோகியாக அவன் முன்னால் 'டமால்' என்ற சப்தத்துடன் தட்டை வைத்தாள்.. தனஞ்ஜெயன் அவசரமாகத் திரும்பி இந்திராதேவியின் அறையைப் பார்த்து வைத்தான்.. சப்தம் கேட்டு அவனுடைய தாய் எழுந்து விடுவாளோ என்ற அவனின் கவலை புரிந்ததில் அவளது கோபம் அதிகமானது..

பல்லைக் கடித்தபடி அவனுக்குப் பரிமாறினாள்.. மௌனமாக சாப்பிட்டவன் அவள் சாப்பிட்டாளா என்று கூடக் கேட்காமல் மாடிக்குப் போய் விட்டான்.. சுமித்ரா அப்படியே உட்கார்ந்து டைனிங் டேபிளில் தலை சாய்ந்தாள்.. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது..

அவள் தலையை யாரோ வருடியதில் பதட்டத்துடன் தலை நிமிர்ந்தாள்.. கருணையே வடிவாக நின்று கொண்டிருந்த

இந்திராதேவி சுமித்ராவின் முன்னால் தட்டை வைத்துப் பரிமாறினாள்.. சுமித்ரா நெகிழ்ந்து போய் விட்டாள்..

அந்த மாளிகையின் மகாராணி, அன்னவாசலின் ஜமின்தாரிணி.. அவளுடைய மருமகளுக்காக தூக்கம் விழித்துப் பரிமாறுகிறாள்..

"தூங்கலையா அத்தை..?"

"எப்படித் தூக்கம் வரும் சுமித்ரா.. தனா லேட்டா வருவான்தான்.. இவ்வளவு லேட்டா வந்ததில்ல.. அதனால் உறக்கம்வராம புரண்டு, புரண்டு படுத்துக்கிட்டு இருந்தேன்.."

சுமித்ராவை சாப்பிட வைத்து அவளை மாடிக்கு அனுப்பிவிட்டு அதன் பின்னர்தான் உறங்கப் போனாள் இந்திராதேவி..

தனஞ்ஜெயனின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.. கதவு தாழிடப்படாமல் லேசாக திறந்திருந்தது..

'என்ன செய்கிறான்..?' என்ற கேள்வி மனதில் வந்தபோதும்.. அதை உள்ளே போய் விசாரிக்க முடியாமல் விலகி நடந்தாள் சுமித்ரா..

அவள் அறைக்குள் போய் கதவைத் தாழிட்டு படுக்கையில் சரிந்தபோது யாருமில்லாத அநாதரவான உணர்வு அவள் மனதில் எழுந்தது..

அந்த வார இறுதியில் தனஞ்ஜெயன் அவளைத் தேடி வந்தான்.. தோட்டத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்த சுமித்ராவின் அருகில் போய் நின்றான்.. அவள் ஏனென்று கேட்காமல் பூப்பறிப்பதிலேயே கவனமாக இருந்தாள்..

"க்கும்.." தனஞ்ஜெயன் கனைத்தான்..

'இவனென்ன குதிரையா..?' சுமித்ரா கடமையே கண்ணாகினாள்..

அவள் ஏனென்று கேட்பாளென்று தாமதித்துப் பார்த்த தனஞ்ஜெயன் அதற்கு மேலும் பொறுமை காத்தால் வேலைக்கு ஆகாது என்று பொறுமையை கைவிட்டவனாக..

"நாளைக்குச் சாயங்காலம் நாம டவுனுக்குப் போகனும்.." என்றான்..

'இப்படி மொட்டைக் காத்தான் குட்டையில் விழுந்தான்னு பேசறதுக்குப் பதில் இவன் பேசாமலே இருக்கலாம்..'

"என் பிரண்டோட தம்பியோட கல்யாண ரிசப்சன்.."

'அதுக்கு..?'

"நீயும், நானும் போயாகனும்.."

சுமித்ரா எதுவும் சொல்லாமல் போய்விட்டாள்.. அவள் வருவாளா மாட்டாளா என்ற சஞ்சலத்துடன் தனஞ்ஜெயன் பேக்டரிக்குப் போய்விட்டான்.. மறுநாள் காலையில் பேக்டரிக்குக் கிளம்பும் போது சுமித்ராவின் முகம் பார்த்தான்.. அவள் முகம் உணர்வுகள் துடைக்கப்பட்ட முகமாக நிச்சலனத்துடன் இருந்தது..

'வருவாளா..? மாட்டாளா..?'

சுவர் கடிகாரத்தின் பெண்டுலம் போல அன்று முழுவதும் இந்தக் கேள்விதான் தனஞ்ஜெயனின் மனதில் ஊசலாடிக் கொண்டிருந்தது.. மாலையில் வீட்டுக்குப் போனவனை இந்திராதேவி எதிர்கொண்டு காபி, டிபனைக் கொடுத்தாள்..

'எப்பவும் அவதான பரிமாற வருவா..? இன்னைக்கு என்ன ஆச்சு..? கூட வான்னு கூப்பிட்டதிலே கோபமா கிட்டாளா..?'

தனஞ்ஜெயன் சஞ்சலப்பட்டான்.. விருப்பமில்லாத பெண்ணை வற்புறுத்துகிறோமோ என்று மனதுக்குள் மருகினான்..

"அவ எங்கேம்மா..?" தாங்க முடியாமல் கேட்டு விட்டான்..

"மாடியில இருக்காப்பா.." இந்திராதேவி பொதுவாகப் பதில் சொன்னாள்..

"பரிமாறுகிற ஒரு வேலையைத்தான் உருப்படியாச் செய்கிறா.. இப்ப அதையும் உங்க கையிலே கொடுத்திட்டு எங்கே ஓடி ஒளிஞ்சுக்கிட்டா..?"

எதற்காகவோ வந்த கோபத்தை எதன் மீதோ காட்டினான் தனஞ்ஜெயன்.. அதற்குள் கொழுசொலி கேட்டு விட்டது.. அவசரமாகத் திரும்பிப் பார்த்தான்.. அங்கே அழகாக அலங்கரித்துக் கொண்டு வெளியே கிளம்பத் தயாராக எதிரே வந்தாள் சுமித்ரா..

'கிளம்பிட்டா..' தனஞ்ஜெயனின் கண்கள் மின்னின.

"இன்னைக்கு டவுனுக்குப் போகனுமுன்னு சொன்னயாம்.. கிளம்பனும்ன்னு சொன்னா.. நான்தான் தனா வந்தா காபி, டிபனை நான் கொடுத்துக்கறேன்.. நீ போய் கிளம்புன்னு அனுப்பி வைச்சேன்.."

இந்திராதேவியின் இதழ்களில் ஆதரவானப் புன்னகை தவழ்ந்தது.. மகனின் மனமறிந்து அவள் பேசினாள்..

சுமித்ராவுக்காக கார் கதவைத் திறந்து விடும் போது தனஞ்ஜெயனின் மனதில் ஒளிந்திருந்த உல்லாசம் எட்டிப் பார்த்தது..

22

"சிட்டுக்குருவி முத்தம் கொடுத்துச்..

சேர்ந்திடக் கண்டேனே.."

சுமித்ராவின் ஏக்கம் இழையோடிய பாடல் தனஞ்ஜெயனின் மனதைத் தொட்டு இழுத்தது..

"அண்ணா.. உங்க பெண்டாட்டி என்னமா பாடறாங்க..."

வியந்து போனாள் வனிதா.. நண்பன் வீட்டுத் திருமண வரவேற்பிற்கு தனஞ்ஜெயன் அழைத்ததும் மறுக்காமல் சுமித்ரா வந்து விட்டதில்.. நண்பர்கள் குடும்பத்துடன் போன

ஒரு நாள் உல்லாசப் பயணத்திற்கும் சுமித்ராவை அழைத்தான் தனஞ்ஜெயன்.. கிளம்பும் வரை அவள் வருவாளா மாட்டாளா என்று தவிக்க வைத்த போதும் அவள் வந்து விட்டாள்.. அருகிலிருந்த அருவிக் கரையில் அவர்கள் குடும்பங்களாக ஒன்று கூடிக் குதூகலித்தார்கள்..

ஒருபுறம் அருவிக் குளியல்.. மறுபுறம் அருவியின் ஆற்றுத் தண்ணீரில் மீன்பிடித்து அங்கேயே பொறித்த மீன் பொறியல் என்று அந்த உல்லாசப் பயணம் களை கட்டிக் கொண்டிருந்தது..

உணவுக்குப் பின்னால் ஆடி ஓய்ந்தவர்கள் அருவிக் கரையின் அடர்ந்த மர நிழலில் விரிக்கப்பட்டிருந்த ஜமுக்காளத்தில் 'அக்கடா' என்று படுத்து ஓய்வெடுத்தார்கள்..

அப்போதுதான் அங்கே பாட்டுக் கச்சேரி ஆரம்பமானது.. அவரவர் வாய்க்கு வந்த பாடல்களை பாடித்தள்ள.. சுமித்ராவின் முறை வந்தது.. அவள் விழிகள் உயர்ந்து தனஞ்ஜெயனைப் பார்த்துச் சுண்டியிழுத்தன..

"சிட்டுக்குருவி.. முத்தம் கொடுத்துச்..

சேர்ந்திடக் கண்டேனே..

செவ்வானம் கடலினிலே..

கலந்திடக் கண்டேனே..

மொட்டு விரித்த மலரினிலே..

வண்டு மூழ்கிடக் கண்டேனே..

மூங்கிலிலே காற்று வந்து

மோதிடக் கண்டேனே...

ஹோய்..."

சுமித்ராவின் பாடல் அவளைச் சுற்றி நடக்கும் அத்தனை கலவிகளையும் அறிவுறுத்தின.. தனஞ்ஜெயன் உதட்டைக் கடித்தபடி அவளை ஆழ்ந்து பார்த்தான்.. அவள் பாடலில்

ஒளிந்திருந்த சூட்சுமமான உணர்வலைகளில் அவன் சிக்கிக் கிறங்கித் தவித்தான்..

"ஒரு பொழுது.. மலராக..

கொடியில் இருந்தேனா..?

ஒரு தடவை தேன் கொடுத்து

மடியில் விழுந்தேனா..?

இரவினிலே.. நிலவினிலே..

என்னை மறந்தேனா..?

இளமை தரும் சுகத்தினிலே..

கன்னம் சிவந்தேனா..?

ஹோய்.."

தனஞ்ஜெயனுக்கு அவளைக் கொய்து மடியில் போட்டுக் கொள்ள வேண்டும்

போல இருந்தது.. அவளின் இளமை ததும்பும் யௌவனத் தோற்றத்தில் அவன் சுற்றியிருப்பவர்களை மறந்து கொஞ்சம்கூட வெட்கமில்லாமல் அவளை வைத்த கண் வாங்காமல் பார்க்க ஆரம்பித்தான்..

வனிதா அதைக் கவனித்து மற்றவர்களிடம் சொல்ல.. அவர்கள் தங்களுக்குள் கிசுகிசுத்துச் சிரித்துக் கொண்டார்கள்..

சுமித்ராவும் தனஞ்ஜெயனும் அவர்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை உணரவே இல்லை.. அவர்களுக்கான ஓர் மாய உலகில் அவர்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள்..

"பறந்து செல்ல மனமிருந்தும்..

எனக்கும் சிறகில்லையே..

பழக வந்தேன்.. தழுவ வந்தேன்..

பறவை துணையில்லையே..

எடுத்துச் செல்ல மனமிருந்தும்..

வார்த்தை வரவில்லையே..

என்னென்னவோ நினைவிருந்தும்..

நாணம் விடவில்லையே..

ஹோய்.."

தனஞ்ஜெயன் சுமித்ராவை ஸ்வாஹா பண்ணி விடுபவன் போலப் பார்த்துக் கொண்டிருக்கையில் அவள் பாடலை முடித்தாள்.. திரும்பி வரும்போது அவர்களுக்கு இடையே அழகான ஒர் மௌனம் குடிகொண்டிருந்தது.. அன்று இரவு தனஞ்ஜெயன் அவளை அடிக்கடி பார்த்து வைத்தான்.. அவள் தூங்கப் போகும் போது அவன் அறைக்கதவு முழுவதுமாக திறந்திருந்தது.. சுமித்ராவின் மனம் அடித்துக் கொண்டது.. அந்த அறையைக் கடக்கும் போது அவள் கால்கள் பின்னின.. அவளையுமறியாமல் அறைக்குள் அவள் பார்த்தாள்.. அங்கே வெற்று மார்புடன் சுவரில் சாய்ந்து தனஞ்ஜெயன் நின்றிருந்தான்..

ஒரு நொடி.. அனைத்தையும் மறந்து அவன் அறைக்குள் போய் விடலாமா என்று நினைத்தாள் சுமித்ரா..

அது யாருடைய அறை..? அவளது கணவனின் அறையல்லவா..? அங்கே கால் பதிக்க அவளுக்கு இல்லாத உரிமையா..?

இதயம் உரிமைப் போராட்டத்தை அறிவித்த போதும்.. அறிவு அவன் அவளை அந்த அறைக்குள் 'வா' என்று அழைக்கவில்லை என்பதை அறிவுறுத்தியது..

சுமித்ரா நகர யத்தனித்தாள்.. கால்களில் இரும்புக் குண்டைக் கட்டி விட்டதைப் போல நகர முடியாமல் துடித்தாள்.. தனஞ்ஜெயனின் பார்வை அவளைத் துளைத்தது..

ஒருவழியாக அவன் அறையைக் கடந்து அவள் அறையைத் தொட்டபோது உடலில் உள்ள சக்தியெல்லாம் வடிந்து விட்டதைப் போல அவள் தொய்ந்து விட்டாள்.. அறைக் கதவைத் தொட்டவள் அனிச்சையாக திரும்பிப் பார்த்த போது.. தனஞ்ஜெயன் அவனுடைய அறை வாசலுக்கு வந்திருந்தான்..

'இவன் மனசில் என்னதான் நினைப்பிருக்கு..?'

சுமித்ராவுக்கு அழுகை.. அழுகையாக வந்தது.. ஒன்று ஒட்டியிருக்க வேண்டும்.. இல்லையெனில் தள்ளி நிற்க வேண்டும்.. இரண்டும் இல்லாமல் அவளை இந்தப்பாடு படுத்துகிறானே.. அவனுக்கு மனச்சாட்சியே இல்லையா..?

அடுத்த இரு வாரங்களில் ரகுநாதனின் உறவு வகையில் ஒரு காதணி விழா நடந்தது.. அன்னவாசல் ஜமீன்தாரரான தனஞ்ஜெயன் பெண்டாட்டியோடு

போய் நின்றாக வேண்டும் என்று இந்திராதேவி சொல்லி விட்டாள்.. அந்தக் காதணிவிழா தொலைவான ஊரில் நடந்ததால் சுமித்ராவும் தனஞ்ஜெயனும் அந்த ஊருக்கு அருகிலிருந்த டவுனில் தங்க வேண்டி வந்தது..

"உன் அப்பா வழிச் சொந்தம்டா தனா.. நீ சுமித்ராவோடு போய் முன்னால நின்னாகனும்.."

இந்திராதேவியின் கண்டிப்பால் கிளம்பிவந்தவர்களை விசேச வீட்டினர் நன்றாகக் கவனித்துக் கொண்டார்கள்.. அந்த கிராமத்தில் தனஞ்ஜெயனை தங்க வைக்க

முடியாது என்பதினால் பக்கத்து டவுனில் இருந்த வீட்டை வாடகைக்கு எடுத்து தயார் படுத்தி வைத்திருந்தார்கள்.. அவர்களின் உபசரிப்பைக் கவனித்த போது தனஞ்ஜெயனின் வரவை அவர்கள் உயர்வாக கருதுவதை சுமித்ராவால் புரிந்து கொள்ள முடிந்தது..

புதிதான ஒரு சூழலில் இரவைக் கழிக்க வேண்டி வந்ததில் சுமித்ராவுக்கு ஒரு பொட்டுக்கூடத் தூக்கம் வரவில்லை.. அவளுக்குப் பழகிய இடத்தைவிட்டு வேறு இடத்தில் படுத்தால் தூக்கம் வராது..

அவள் அறையை விட்டு வெளியே போக முயற்ச்சித்தபோது தனஞ்ஜெயன்..

"வேண்டாம்.." என்று சொல்லி விட்டான்..

'எதுக்காம்..? இங்கே உட்கார்ந்து உன் முகத்தை நானும்.. என் முகத்தை நீயும் விடியவிடியப் பார்த்துக்கிட்டு இருக்கிற கழுதைக்கு மொட்டை மாடிக்குப் போனாலாவது நட்சத்திரத்தை எண்ணிக்கிட்டே ராப்பொழுதை ஓட்டிரலாம்..' சுமித்ராவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது..

"எனக்குத் தூக்கம் வரலை.." என்றாள் மொட்டையாக..

"எனக்கு மட்டும் வருதா.." என்று அவளிடமே கேட்டு வைத்தான் அவளது ஆருயிர் கணவன்..

"தூக்கம் வராம இங்கே உட்கார்ந்து என்ன பண்ண..?"

"வெளியே போனா மட்டும் தூக்கம் வந்திருமா..?"

"பொழுதாவது போகுமில்ல.."

"இல்லை.. வெளியே எங்க அப்பாவழிச் சொந்தக் காரங்க படுத்திருக்காங்க.. நீ தனியாப் போனா ஏதாச்சும் நினைச்சுக்குவாங்க.."

"தனியாப் போனாத்தானே பிரச்னை..?"

"துனைக்கு நானும் வந்தாலும் பிரச்னைதான்.."

"இதில என்ன பிரச்னை வந்திரப் போகுது..?"

"உனக்குப் புரியாது.."

'உனக்கு மட்டும் புரிஞ்சிருச்சாக்கும்..' சுமித்ராவுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

"புரிஞ்ச வரைக்கும் புரிஞ்சுக்கறேன்.. நீங்க சொல்லுங்க.." என்றாள்..

"நாம புதுசாக கல்யாணமானவங்க.."

'இதைச் சொல்லியே வெறியேத்து.. என்னமோ நாம புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடிதானுங்கன்னு பாட்டுப்

படிடறதைப் போலவே பேசிவை.. உன்னப் பாத்தா புதுசாக் கட்டிக்கிட்ட புருசனப் போலவா இருக்கு..?' சுமித்ரா நெடுமூச்செரிந்தாள்..

"அதனால என்ன..?" என்று சுள்ளென்று கேட்டு வைத்தாள்..

"இதுக்குத்தான் உனக்குப் புரியாதுன்னு நான் சொன்னேன்.. புதுசாக்கட்டிக்கிட்டவங்க மொட்டை மாடியிலே காத்தாட நின்னா பாக்கிறவங்க என்ன நினைப்பாங்க..?"

"எதையோ நினைச்சுட்டுப் போகட்டும்..."

"உனக்கென்ன..? தூக்கம் வரலை.. அவ்வளவு தானே.. வா.."

தனஞ்ஜெயனின் அழைப்பில் முகம் சிவந்து விட்டாள் சுமித்ரா.. அப்படிப் பட்டவர்த்தனமாக அவன் அழைத்து வைப்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.. அடுத்த ஊருக்கு வந்து.. அடுத்தவரின் வீட்டில் தங்கிக் கொண்டு அவளை அழைத்து வைக்கிறானே.. அவன் அழைப்புக்கு இணங்கி அங்கேயே முதலிரவைக் கொண்டாடுவது சரியா என்று அவள் மனதில் பட்டி மன்றம் நடந்தது..

இதையெல்லாம் அவன் நினைத்துப் பார்க்காமலா அழைப்பான் என்ற நினைவில் அவள் உடல் நடுங்கியது.. இதமான இம்சை அவள் உடல் முழுவதும் பரவியதில் எதிர்பார்ப்பின் பெருந்தீ அவளை ஆட் கொள்ள ஆரம்பித்தது..

'இதோ தொடப் போகிறான்..'

அவனுடைய ஸ்பரிசத்திற்காக அவள் தேகம் ஏங்கித் துடித்துக் கொண்டிருந்த போது அவள் முன்னால் வரிசையாக சீட்டுக்கள் வந்து விழுந்தன..

"என்ன இது..?" திகைப்புடன் அவள் கேட்டாள்..

"பார்த்தாத் தெரியலை...? சீட்டுக்கட்டு.. விளையாடலாம் வா.. பொழுதும் போய் விடும்.. தூக்கமும் வந்து விடும்.."

அவன் இலகுவாக சீட்டுக்களைக் கலைத்துப் போட்டதில் அவளை ஆக்ரமித்திருந்த உணர்வலைகள் அவளை ஆட்டிப்பார்த்தன..

'இவன் என்னதான் நினைத்துக்கிட்டிருக்கான்..?'

சுமித்ரா எரிச்சலோடு கட்டிலில் குப்புற விழுந்தாள்..

"எனக்குத் தூக்கம் வருது.." கண்களை மூடினாள்..

"தூக்கம் வரலைன்னு சொன்ன..?"

"அது அப்ப.. இது இப்ப..."

கைக்கெட்டும் தொலைவில் கணவன் படுத்திருக்க.. கல்யாணமாகியும் கன்னியாக தவிப்பதில் உள்ள கொடுமையில் வெந்து தணிந்தபடி அந்த இரவைத் தூக்கமின்றிக் கழித்தாள் சுமித்ரா..

மறுநாள் அவனுக்கு மனைவியாக அவன் பக்க உறவினர் வீட்டு காதணி வைபத்தில் கலந்து கொண்ட போது ஏனோ அவள் மனம் வெறிச்சென்று இருந்தது..

அன்னவாசலுக்குத் திரும்பி வந்த பின்னால் அவனுக்கு உணவு பரிமாறுவதை தவிர்க்க ஆரம்பித்தாள்..

'இது ஒன்னுதான் எனக்கும் இவனுக்கும் இடையில இருக்கிற உறவா..? நானென்ன இவனுக்கு பரிமாறுகிற வேலைக்காரியா..?'

அவள் மனம் சண்டித்தனம் செய்தது.. இந்திரா தேவியால் ஒர் அளவுக்கு மேல் அவளை வற்புறுத்த முடியவில்லை.. மற்ற நேரமெல்லாம் இந்திரா தேவியின் பின்னாடியே அலைகிறவள் தனஞ்ஜெயன் சாப்பிட வந்து விட்டால் மாயமாய் மறைந்து விடுவாள்.. அவளைத் தேடி ஏமாந்து போனவனாக தனஞ்ஜெயன் இந்திராதேவி பரிமாற சாப்பிட்டு விட்டு போய் விடுவான்..

அதையும் சுமித்ராவால் தாங்கிக் கொள்ள முடியாது..

'இந்த மனுசனுக்கு நான் பரிமாறினாலும்.. பரிமாறலைன்னாலும் கவலையில்லை போல.. பரிமாற

அவங்கம்மா இருக்காங்களே.. என்னை எதுக்காக தேடப் போகிறார்..?'

அவளுக்கு உலகமே வெறுத்தது..

இந்திராதேவிக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.. தனஞ்ஜெயனும், சுமித்ராவும் தனித்தனி அறைகளில் இருப்பதில் அவளுக்கு சம்மதமில்லை.. வீட்டில் வேலை செய்யும் வேலையாள்கள் அதைக் கவனித்து வெளியில் சொல்லி விட்டால் என்ன செய்வது..?

அதைத் தனஞ்ஜெயனிடம் கோடிட்டுக் காட்ட அவளால் முடியவில்லை.. அவனுக்கே அது தெரிய வேண்டாமா..?

கண்ணுக்கு அழகாய் மருமகள் வந்தும்.. கருத்தான மகன் அவளுடன் இசைந்து வாழாமல் இன்னும் எட்டவே நிற்கிறானே என்ற துக்கத்தில் அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை..

எல்லாமும் இருந்து விட்டால் போதுமா..? மனதில் நிம்மதி இருக்க வேண்டாமா..?

23

அகன்ற மாடி பால்கனி.. மிகப் பரந்த ஹாலைப் போல இருந்தது.. தரையிலும்.. சுவரிலும்.. சலவைக் கற்கள்.. அதன் நடு மையத்தில் பெரிய கனத்த இரும்புச் சங்கிலிகளில் தொங்கிக் கொண்டிருந்த மர ஊஞ்சல்...

ஊஞ்சலில் அமர்ந்து மெதுவாக கால்களைத் தரையில் உந்தி சிந்தனையுடன் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தாள் சுமித்ரா.. அவள் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது.. அங்கிருந்து பார்த்த போது தெரிந்த தோட்டத்தின் அலங்கார வளைவுகளில் அவள் மனம் லயித்தது.. அப்படி ஊஞ்சலாடியபடியே தோட்டத்தைப் பார்த்தபோது

அலைபாயும் அவள் மனது சமனப்படுவதை ஆச்சரியத்துடன் அவள் உணர்ந்தாள்..

காலைநேரக்காற்று பால்கனியில் நான்கு திசைகளிலிருந்தும் தடுக்கும் தடுப்புகளற்ற திறந்த வெளியில் புகுந்து அவள்மேனியைத் தொட்டுத் தழுவி இம்சை செய்தது..

'அவன் கிளம்பியிருப்பானா..?'

தனஞ்ஜெயனை நினைத்துக் கொண்டாள்.. அவள் முகம் பார்க்காமல் காலை டிபனை அவன் உண்ட விதத்தை நினைத்துப் பார்த்தபோது அவள் மனதில் சினம் உண்டானது..

'இவனுக்கெல்லாம் எதுக்குக் கல்யாணம்..?'

கோபத்துடன் ஊஞ்சலை வேகமாக ஆட்டினாள்.. அது ஆடிய வேகத்தில் அவள் கோபத்தின் பரிணமாம் தெரிந்தது... அவள் மனம் செதுக்கி வைத்த சிலையைப் போல இருந்த தனஞ்ஜெயனின் கம்பீரமான தோற்றத்தில் நிலை கொண்டிருந்தது..

'இவன் என் புருசனாம்..'

அவளுக்குள் தாபம் அலைக்கழிந்தது.. கிட்டத்தில் இருந்தும் எட்டாத உயரத்தில் தொட்டுவிட முடியாத தொடுவானைப் போல இருந்தவனை கட்டுக்குள் கொண்டு வரத் துடித்தது அவள்மனது..

'யாரோ போலப் பார்க்கிறான்.. போகிறான்.. வருகிறான்.. இவன் மனசில் என்னதான் நினைத்துக்கிட்டு இருக்கான்..? நானென்ன கல்லா..? இயந்திரமா..? இல்லையே.. ரத்தமும் சதையுமாக.. உணர்வுகளால் உருவாக்கப்பட்ட சாதாரண மனுஷியல்லவா நான்..'

அவள் இமையோரம் சிறிதாக நீர் முத்துக்கள் துளிர்த்தன.. கட்டின கணவனை சொந்தம் கொண்டாட முடியாத துயரம் அவளுள் பாறையாக கனத்தது..

அதைவிட அதிகமாக கனத்த காலடி சப்தத்தில் அவள் செவிகள் கூர்மையாகின.. உன்னிப்பாக கவனித்தாள்.. காலடி சப்தம் அவளை சமீபித்தது.. அவளின் பக்கவாட்டில் அவன் வந்து நிற்பதை அவள் ஓரவிழிப் பார்வையில் உணர்ந்தாள்..

ஊஞ்சலாடுவதை தொடர்ந்தாள்.. அவன் வந்து நிற்பதைக் கவனிக்காததைப் போல பாவனை செய்தவளின் பக்கவாட்டுத் தோற்றத்தில் அவன் ஈர்க்கப்பட்டான்.. நீண்டிருந்த அவளின் பின்னல் ஊஞ்சலின் பலகையைத் தாண்டித் தொங்கிக் கொண்டிருந்தது.. தோட்டத்து முல்லைக் கொடியில் பூத்த மலர்கள் நெருக்கமான மலர்ச் சரமாக அவள் கூந்தலில் சூடப்பட்டு தோள்களின் இருபக்கமும் வழிந்து பரவியிருந்தன.. அழகான அவள் காதுகளில் தொங்கிய ஜிமிக்கியில் அவன் மனம் ஆடவா என்று கேட்டது.. அத்தனையையும் தாண்டி.. கனமான தங்கத் தாலிச் சரட்டில் டாலரைப் போல இருந்த மாங்கல்யம் அவனைப் பார்த்து கண் சிமிட்டி.. இவள் உன்னுடைய மனைவி என்று சொல்லியது..

அவள் தனிமையில் இருக்கும் போது.. தங்கத் தாலிச் சரட்டை.. டாலர் செயினைப் போல புடவைக்கு வெளியே போட்டுக்கொள்வதை அவன் பலமுறை கவனித்திருக்கிறான்..

அப்போதெல்லாம் அவன் மனம் ததும்பும்.. எதற்காக அவள் அதைச் செய்கிறாள் என்பதை அவனால் யூகிக்க முடிந்ததில்லை.. இருப்பினும்.. அவளை அப்படிப் பார்க்க நேரும் போதெல்லாம் அள்ளி அணைக்க கைகள் பரபரப்பதை அவனால் கட்டுப்படுத்த முடிந்ததில்லை.. உடனே விலகி வெளியே போய் விடுவான்.. இருட்டி வெகு நேரமானபின்பு வீடு திரும்புவான்..

அழகான மைசூர் பட்டில்.. அவள் தேவதையைப் போல இருந்தாள்.. நெற்றியிலிருந்த பொட்டின் மேலிருந்த குங்குமத்தீற்று அவனைக் கவர்ந்தது.. அவன்

முன்னே சென்று அவள் பார்வையில் படும்படி பால்கனியில் அகன்ற தூணில் சாய்ந்து நின்றான்.. அதற்கு மேலும் பாவனை செய்ய முடியாமல் அவள் ஊஞ்சலாடுவதை நிறுத்தினாள்..

'இப்ப என்னவாம்..?' அவள் மனம் சிணுங்கியது..

எப்படியும் அவளுக்காக அவன் அவளை தேடி வந்திருக்கவில்லை என்பதை அவள் அறிவாள்.. அவளிடம் அவனுக்கு ஏதாவது காரியம் ஆக வேண்டியிருக்குமாக இருக்கும்.. அதனால்தான் அவளைத் தேடி வந்திருக்கிறான்..

அவளையே பார்த்துக் கொண்டிருந்த அவன் பார்வையில் அவள் மனம் சினந்தாள்..

'இதுக்கொண்ணும் குறைச்சலில்ல...'

'என்ன..?' என்று வினவும் பாவனையில் புருவங்களை உயர்த்தினாள்.. அந்தச் செய்கையில் அவன் வசீகரிக்கப்பட்டான்..

அன்னவாசலின் ஜமின்தாரர்... சுற்றுப்பட்டி கிராமங்களுக்கும் பெரிய மனிதன்.. அந்த வட்டாரத்தின் முக்கியமான பெரும்புள்ளி.. அவனைப் பார்த்து அவள் புருவங்களை உயர்த்துகிறாள்..

அவன் இதழ்களில் லேசான புன்னகை கோடிட்டு மறைந்தது..

'என்னடா இது.. இவன்கூட சிரிக்க டிரை பண்றான்..' அவள் விழிகளில் மின்னிய ஆச்சரியத்தில் அவள் காதைத் திருகும் ஆசை அவனுக்குள் மிகுந்தது..

'சேட்டைக்காரி..' உதட்டை மடித்துக் கடித்து ஒரு மார்க்கமாக அவளை பார்த்து வைத்தான்..

'போடா.. டேய்..'

அவளுக்கு ஏதோ ஒரு மாயம் உண்டானது.. இதமான அந்த இம்சையைத் தாங்க முடியாதவளின் மனதில்

கொலைவெறி உண்டானது..

'இவனுக்கு இதுதான் வேலை..' அவள் முகத்தை திருப்பிக் கொண்டாள்.. அதில் அவன் முகத்தில் எதுவோ வந்து போனது..

"இன்னைக்கு சாயங்காலம் ஒரு பங்சனுக்குப் போக வேண்டியிருக்கு.." அதே மார்க்கப் பார்வையுடன் அவன் சொன்னான்..

'அதானே பார்த்தேன்.. என்னடா.. காலை டிபனை உள்ளே தள்ளினதும் பேக்டரியைக் கட்டிப் புடிச்சுக்க ஓடிருவானே.. இன்னைக்கு அதிசயத்திலும் அதிசயமா மாடிப் பக்கம் வந்திருக்கானே.. பொண்டாட்டியைக் கட்டிப்புடிக்க வந்திருக்கானோன்னு நினைச்சிட்டேன்.. இதுதான் விசயமா..?'

அவள் உதடுகளைச் சுழித்தபடி அவனை ஊன்றிப் பார்த்தபடி..

"போக வேண்டியிருந்தாப் போங்க.." என்று சொன்னாள்..

அவன் முகம் மாறியது.. அவள் அதை விரும்புவாள் என்று நினைத்திருந்தானே.. அது தவறாகி விட்டதா..? அவனுடன் வெளியே வருவதை அவள் விரும்ப வில்லையா..?

அவன் மனதில் முந்தைய சம்பவங்களெல்லாம் நிழலாடின.. அவனுடன் விருப்பமில்லாமல் வந்தவள் பார்க்கிற பார்வைகளா அவை..? தொடுகிற ஸ்பரிசங்களா அவை..? தவிக்கிற தவிப்புகளா அவை..?

ஆனாலும் அதைப் பற்றிய ஆராய்ச்சிக்கு அப்போது நேரமில்லை.. அவளுக்குப் பிடித்திருந்தாலும்.. பிடிக்கா விட்டாலும்.. அவனுடன் அவள் வந்துதானே ஆக வேண்டும்..?

"தனியாப் போக முடியாது.." அழுத்தமாக அவன் சொன்னான்..

"ஏன்..? வழிதெரியாதா..?" இடக்காக அவள் கேட்டாள்..

அந்த இடக்கை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை யென்பது அவன் விழிகளில் மின்னிய ஆச்சரியத்திலிருந்து தெரிந்தது.. அவனிடம் அவள் அப்படியெல்லாம் பேச மாட்டாள்.. அன்று அவள் காட்டிய எதிர்ப்பில் அவன் புருவங்கள் முடிச்சிட்டன..

"எனக்குத் தெரியாத வழின்னு ஏதுமில்ல.." அமர்த்தலாக சொன்னான்..

"ஓஹோ.. அப்புறம் எதுக்காக தனியாப் போக முடியாதுன்னு சொன்னீங்க..?" அவள் மடக்கினாள்..

"அதுக்கு இப்படியொரு அர்த்தத்தை நீ கண்டு பிடிப்பன்னு எனக்குத் தெரியாமப் போச்சு.."

"வேற என்ன அர்த்தம் சார்..?"

"சாரா..?"

"வேணும்னா ஜமீன்தாரேன்னு கூப்பிடவா..?"

பல்லைக் கடித்தபடி அவள் கேட்ட கேள்வியில் எதற்காக இந்த கோபம் என்று அவன் திகைத்தான்.. அவள் முகத்தில் தெரிந்த கோபச்சிவப்பில் அவன் மனம் தடுமாறியது..

"என்ன ஆச்சு..?" விசாரித்தான்..

'எதுவும் ஆகலை.. அதுதாண்டா பிரச்னையே..'

சுமித்ராவுக்குள் ஆத்திரம் பெருக்கெடுத்தது.. பால்கனியின் ஓரமாக வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டி களில் ஒன்றை எடுத்து அவன் தலையில் போட்டு உடைத்து விடலாமா என்றுகூட ஓர்நொடி ஆவேசப் பட்டாள்.. அவளால் அதைச் செய்ய முடியவில்லை.. மாறாக..

"ஒன்றுமில்லை.." என்று சொல்லி விட்டு முகத்தைத் திருப்பிக் கொள்ளத்தான் முடிந்தது..

"ஒன்றுமில்லையா..?" அவன் முகத்தில் நம்பாத பாவனை அப்பட்டமாகத் தெரிந்தது..

நீ நம்பினால் எனக்கென்ன.. நம்பாவிட்டால் எனக்கென்ன என்று அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

"சுமித்ரா... இன்னைக்குச் சாயங்காலம் நம்ம பேக்டரியில வேலை பார்க்கிற சூப்பர்வைசரோட கல்யாண ரிசப்சன்.."

"அதுக்கு..?"

"பேக்டரியோட முதலாளிங்கிற முறையில நான் கட்டாயமா இந்த ரிசப்சனுக்குப் போயாகனும்.."

"போங்க.. நானென்ன உங்க கையைப் பிடிச்சா இழுத்து நிறுத்தியிருக்கேன்..?"

அவள் கேள்வியில் அவன் ஆச்சரியம் அதிகமானது.. அவளது பார்வையோ.. வலிமையான.. ரோமங்கள் அடர்ந்த.. அவனது இரும்புக் கையின்மீது படிந்தது.. அந்தக் கையைப் பிடித்து இழுத்து நிறுத்த அவள் மனம் ஆசை கொண்டது..

"ஓ..."

அவனது குவிந்த உதடுகளில் அவள் முகம் சிவந்தது.. அவளையே அவன் பார்த்துக் கொண்டிருந்ததில் அவள் மனம் படபடத்தது..

"நீ என் கூட வரலைன்னா.. என் கையைப் பிடிச்சு இழுத்து நிறுத்துகிறதுக்குத்தான் அது சமமாகும்.." நிதானமாக சொன்னான் தனஞ்ஜெயன்..

"அது எப்படியாம்..?" அவள் கேட்டாள்..

"பொண்டாட்டியோட ஒருத்தன் போயி நின்னாத்தான் அவனுக்கும் மரியாதை.. அவன் கலந்துக்கிற விழாவுக்கும் மரியாதை.. பெண்டாட்டி இல்லாம தனியாப் போய் நின்னா இரண்டு பக்கமும் மரியாதையிருக்காதுங்கிறப்ப எப்படித் தனியாப் போக முடியும்..? அதனால.."

"அதனால..?"

"நீ கட்டாயம் கூட வந்துதான் ஆகனும்..?"

"என்னால வர முடியாது.."

நிர்தாட்சண்யமாக அவள் மறுத்ததில் அவனுக்கு கோபம் வந்து விட்டது..

'பாவம்.. சின்னப்பொண்ணு.. அரட்டக்கூடாதுன்னு பார்த்தா.. இவ கூடக்கூடப் போசிக்கிட்டு இருக்கா..'

அவன் தீர்க்கமாக அவள் முகத்தைப் பார்த்து ஆணையிடுவதைப் போலச் சொன்னான்..

"நீ வருகிற.. அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.. சாயங்காலம் நான் வருகிறப்ப.. நீ பங்சனுக்குப் போகத்தயாராக இருக்கனும்.. இது என்னோட ஆர்டர்.."

கண்டிப்புடன் சொல்லி விட்டுப் போகத் திரும்பியவனை அவள் குரல் தடுத்து நிறுத்தியது..

"நில்லுங்க.."

அவன் கோபம் குறையாத முகத்துடன் நின்றான்..

"நான் ஏன் உங்க கூட வரனும்..? இதுக்கான பதிலைச் சொல்லிட்டுப் போங்க.."

அவளின் பிடிவாதமான கேள்வியில் அவனுக்கு கோபம் எகிறியது..

"பைத்தியமாடி நீ..?" சீறினான்..

"நீ என் பெண்டாட்டி.. என்கூட வந்துதான் ஆகனும்ங்கிறேன்.. நீ எரிச்சலைக் கிளப்பற மாதிரி கேள்வி கேட்டுக்கிட்டு நிற்கிற.. இதுகூடத் தெரியாத கைக் குழந்தையா நீ..?" பல்லைக் கடித்தான்..

"நான் கைக்குழந்தையில்லை.. அதனாலதான் எக்குத்தப்பா கோபம் வருது.. பெண்டாட்டின்னா என்னங்க..? நீங்க ஆட்டி வைக்கிற பொம்மையா..? உங்ககூட அலங்காரப் பதுமையா ஜோடி போட்டுக்கிட்டு கூட வந்துட்டு வரத்தான் என் கழுத்தில நீங்க தாலியைக் கட்டினீங்களா..?"

"இன்னைக்கு என்னடி.. அதிகமாப் பேசற..?"

"இத்தனை நாளாய் பேசாம விட்டது என்தப்புத்தான்.. என்னை என்ன மரப்பாச்சி பொம்மைன்னு நினைச்சுக் கிட்டிங்களா..? ஊர் உலகத்துக்கு இவதான் என் பெண்டாட்டின்னு காண்பிக்கத்தான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டிங்களா..?"

"என்னதான் உன் பிரச்னை..? அதைச் சொல்லித் தொலை.."

"தொலை.. கிலைன்னு சொன்னா எனக்கு கெட்ட கோபம் வந்திரும்.. நீங்கதான் என்னோட பிரச்னை.. போதுமா.."

"நானா..?"

"நீங்களேதான்.. வாய்க்கு வாய் பெண்டாட்டி.. பெண்டாட்டின்னு சொல்றீங்களே.. அந்தப் பெண்டாட்டி சாப்பிட்டாளா.. தூங்கினாளான்னு ஒரு நாளாவது கேட்டிருப்பீங்களா..? இவர் பாட்டுக்கு கல்லையும்.. மண்ணையும் பார்க்கிறதைப் போல பெண்டாட்டியையும் பார்த்துக்கிட்டு போய் வருவாராம்.. வீட்டுக்குள்ளே பெண்டாட்டி எதிரே வந்தாக்கூட ஏன்னு கேட்க மாட்டாராம்.. அந்தப் பெண்டாட்டி மட்டும் இவர் கூப்பிட்டதும் ரோசம் கெட்டுப் போய்.. சீவிச் சிங்காரிச்சுக் கிட்டு இவர் கூப்பிடற இடத்துக்கு கூடப் போய் வரணுமாம்.. அதுக்கு வேற ஆளைப் பாருங்க.."

சுமித்ராவுக்கு கோபத்தில் மூச்சிரைத்தது.. அவளையே வியப்புடன் தனஞ்ஜெயன் பார்த்துக் கொண்டிருப்பதை அவள் உணரவில்லை.. அடக்க முடியாத கோபத்துடன் அவள் ஊஞ்சலில் உட்கார்ந்து கால்களை விந்தினாள்.. தனஞ்ஜெயன் ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்து அவளின் ஊஞ்சலாட்டத்தை நிறத்தினான்..

"நான் ஏகபத்தினி விரதன்டி.. வேற ஆளைப் பார்க்கிற உத்தேசமெல்லாம் எனக்கில்லை.."

உல்லாசத்துடன் சொன்னவனின் பார்வை அவள் மேனியில் மேய்வதை அப்போதுதான் உணர்ந்தாள் சுமித்ரா.. அவளின் கோபச் சிகப்பு.. வெட்கச் சிகப்பாக மாறியது..

"என்னை மட்டும் சொல்கிறயே.. நீ ஒரு நாளாவது.. உன் புருசன் சாப்பிட்டானா.. தூங்கினான்னு கேட்டிருப் பியா..? நினைச்சாவது பார்த்திருப்பியா..?"

ஊசி முனையாய் வந்த அவன் கேள்வியில் சுமித்ரா மன அதிர்வுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.. இப்படியொரு எண்ணம் அவன் மனதிலும் இருக்கிறதா..? நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் என்பது இதுதானா..?

"நினைச்சுப் பார்க்காமத்தான் உங்களுக்குப் பரிமாற வந்தேனா..?"

"அம்மா சொல்லி வந்த.. நீயா வந்தியா..?"

"நான் பரிமாறினாத்தான் சாப்பிடுவேன்னு நீங்க சொல்லியிருக்கீங்களா..? நான் வர லேட்டானா.. உங்க அம்மாவை பரிமாறச் சொல்லி சாப்பிட்டுட்டு ஓடற ஆள்தானே நீங்க..?"

"அவ எங்கேம்மான்னு கேட்காம நான் தட்டில் கையை வைத்தேன்னு அம்மாவைச் சொல்லச் சொல்லு பார்க்கலாம்.."

ஆணித்தரமான அவனது சவாலில் அவளுக்குள் ஆனந்தம் உண்டானது.. அவன் அவளைத் தேடினானா..?

"இவ்வளவு பேசறவ.. ஏன் இவன் இத்தனை பிடிவாதமா வெளியே கூப்பிடறான்னு நினைச்சுப் பார்த்தியா..? அந்த நேரத்திலலேயாவது நீ என் பக்கத்திலேயே இருப்பேன்னு நினைச்சேண்டி.."

தனஞ்ஜெயனின் கரங்கள் சுமித்ராவின் தோள்களைத் தடவிக் கீழே இறங்கின.. மேனியில் மின்சாரம் பாய்வதை உணர்ந்தாள் சுமித்ரா..

"உனக்குப் பிடிக்காத கல்யாணம்.. நீ சம்மதிக்காத கல்யாணம்.. நிர்பந்தத்தாலே நடந்த கல்யாணம்.. பஞ்சாயத்தில் நிற்க வைச்சு.. இதுவா.. அதுவான்னு உன் கழுத்தில கத்தியை வைச்சு நான் தாலி கட்டிய கல்யாணம்.. அந்தக் கல்யாணத்தில நீ இசைஞ்சு என் கூட வாழ மாட்டேன்னு நான் நினைச்சேண்டி.."

அவளின் பின்புறமாக நின்று அவள் தோளை அணைத்து அவள் உச்சந்தலையில் முகம் புதைத்தபடி சொன்னான் தனஞ்ஜெயன்.. அத்தனை நாள்களாக ஏங்கிய கணவனின் அருகாமை கிடைத்து விட்ட ஆனந்த அயர்வில் கண்களை மூடினாள் சுமித்ரா.. தனஞ்ஜெயனின் கரங்கள் அவள் இடையில் ஊர்ந்து வயிற்றுப் பகுதியில் அழுந்தி இறுக்கிப் பிடித்தன..

'ஹ..' மனதுக்குள் அரற்றினாள் சுமித்ரா..

அவள் மீதிருந்து வந்த பூவாசத்தில் தனஞ்ஜெயனின் அத்தனை கட்டுக்கோப்புகளும் உடைந்து சுக்கு நூறாக ஆகின.. அவனுடன் ஒன்றிக் கண்மூடியிருந்தவளைப் பார்த்தபோது அவளை ஆளும் ஆவேசம் கொண்ட வேட்கை அவனுக்குள் கிளர்ந்து எழுந்தது..

"சுமித்ரா.." கரகரத்த குரலில் அழைத்தான்..

"ம்ம்ம்.." அவள் பதிலுக்கு முணுமுணுத்தாள்..

"கல்யாணம் முடிஞ்சு வீட்டுக்குள்ளே காலடி வைச்சவுடனே நீ காய்ச்சல் கண்டு மயங்கி விழுந்த.. நான் ராட்சசனோன்னு என்னை நானே நொந்துக்கிட்டேண்டி.."

"நானா காய்ச்சலை வா.. வான்னு வெற்றிலை பாக்கை வைச்சு அழைத்தேன்..? அதுவா வேண்டாத விருந்தாளியாய் வந்து நின்னா நானென்ன பண்ணுகிறதாம்..? திடீர்ன்னு கழுத்தில தாலி விழுந்தா எந்தப் பெண்ணுக்கும் அதிர்ச்சி வரும்.. இது நீங்க

பிறந்து வளர்ந்த வீடு.. நம்ம கல்யாணத்தில நீங்க எங்கேயும் போக வேண்டியிருக்கலை.. இருக்கிற வீட்டிலே சட்டமாக இருந்தீங்க.. நான்தானே என் பிறந்த வீட்டை

விட்டுட்டு.. உங்க பின்னாலே உங்க வீட்டுக்கு வந்தேன்..? அதையும் அப்படி நடக்கப் போகுதுன்னு நினைச்சுப் பார்க்காம நடந்ததிலே அதிர்ச்சி வராதா..? அந்த அதிர்ச்சியிலே மயக்கமும்.. காய்ச்சலும் வராதா..? நீங்க அதுதான் சாக்குன்னு வீட்டுக்குள்ளேயே என்னைத் தள்ளி வைச்சிருவீங்களா..?"

"தள்ளி வைச்சேனா..? நானா..? என்ன கொடுமைடி இது...! முதலிரவுக்கு நம்ம ரூமை அலங்காரம் பண்ணியிருந்தாங்க.."

"நம்ம ரூமா..?"

"பின்னே..? அது என் ஒருத்தனோட ரூம் மட்டும் தானா..? அடிதாண்டிவாங்கப் போற.. அது நம்ம ரூம்தான்.."

"இப்ப வந்து இதைச் சொல்லுங்க.. காய்ச்சல் வந்தவளைத் தன்னத் தனியா சின்ன ரூமில படுக்க வைச்ச ஆளுதானே நீங்க..?"

"சின்ன ரூமில படுக்க வைச்சேன்னு மட்டும் சொல்லு.. தன்னந்தனியான்னு சொல்லாதே.. உன் பக்கத்திலே மணிக்கொருதரம் மாத்திரை மருந்தைக் கொடுத்துக்கிட்டு விடிய.. விடிய.. கண்முழிச்சுப் பார்த்துக் கிட்டது யாராம்..?"

"யாராம்..?"

"உன் புருசன்டி.."

தனஞ்ஜெயனின் கரங்கள் இறுகின.. சுமித்ராவின் தவிப்பு அதிகமானது.. அவனுடன் ஒன்றியிருந்த அந்த அற்புதமான பொழுதில் இடையூறு வந்து விடக்கூடாது என்று அவள் வேண்டிக்கொண்டாள்.. அவன் விரல்களின் அழுத்தமான ஸ்பரிசத்தில் அவளுக்கு அப்போதும் காய்ச்சல் வந்து தொலைத்து விடும் போல இருந்தது..

"என்னக் கிராதகன்னு நானே திட்டிக்கிட்டு இருக்கிறப்ப.. முதலிரவு அலங்காரம் பண்ணியிருக்கிற நம்ம ரூமில உன்னைப் படுக்க வைச்சா என்னைப் பத்தி நீ என்ன

நினைப்பேன்னு என் மனச்சாட்சி என்னை சாட்டையாலே அடிச்சுச்சு.."

"உங்க மனச்சாட்சிக்கு வேற வேலையே இல்லையா..?"

"ஹா.. ஹா.."

"அதுதான் போகுதுன்னு பார்த்தா.. காய்ச்சல் குறைஞ்சு ஒரு வாரத்தில ஐயா என்னை அடைச்சு வைச்சிருக்கிற சின்ன ரூமுக்கு வந்து நிற்கிறாரு.. மன்னிச்சுக்க.. உன் மனசில என்ன இருக்குன தெரியாம உன் வாழ்க்கையை கெடுத்திட்டேன்னு வசனம் பேசறாரு.. எனக்கு எப்படியிருந்திருக்கும்..?"

"அப்ப என் மனசில குற்ற உணர்வுதான் இருந்துச்சுடி சுமி.."

"சுமியா..? யாரைக் கூப்பிடறிங்க..?"

சுமித்ரா சுற்று முற்றும் தேடுவதைப் போல பாவனை செய்ய தனஞ்ஜெயனுக்கு சிரிப்பு வந்தது.. அது ஆனந்தச் சிரிப்பு..

"ஹா.. ஹா.. ஏண்டி.. என் பெண்டாட்டியோட பேரைச் சுருக்கிக் கூப்பிடறதுக்கு கூட எனக்கு உரிமையில்லையா..?"

அவன் அவளை இன்னும் அதிகமாக இறுக்கிக் கொண்டான்.. சுமித்ரா கிறங்கிப் போனாள்.. அவளின் உடலின் ஒவ்வொரு அணுவும் அவனது அருகாமையைத் தேட ஆரம்பித்தன.. அந்தத் தாபத்துடன் அவள் கோபப் பட்டாள்..

"இப்பத்தான் இவருக்கு இந்த ஞானோதயம் வந்திருக்கு.. இத்தனை நாளா சுமித்ரான்னு கூடக் கூப்பிடாம மௌனப் பார்வை பார்த்துக்கிட்டு இருந்தாரே.. அப்ப இந்த ஞானோதயம் எங்கே போயிருந்ததாம்..? கடைத் தெருவில பெண்டாட்டிக்குன்னு கால் கிலோ அல்வாவும்.. ஒரு முழ பூவும் வாங்கிட்டு வர முடியலை.. எப்பப்பாரு.. வீசின கை வெறுங்கையா வீடு வந்து சேர்வாரு.. இதிலே சுமியாம்.. சுமி.."

"ஏய்ய்..! நீ அது வேணும்ன்னு நினைச்சியாடி.."

தனஞ்ஜெயனின் பரபரப்பில் அவன் சொன்ன அந்த 'அது' எது என்ற கேள்வியுடன் அவள் உதட்டைக் கடித்தாள்..

"பேசாமத்தான் இருக்கீங்களா..?" அவள் வெட்கிப் போனாள்..

"இனிப் பேசாம இருக்கிறதா..? வாய்ப்பே இல்லை.." அவன் கரங்கள் அவள் உடலில் ஊர ஆரம்பித்தன..

"போதும்.." அவன் கரங்களை அவள் லஜ்ஜையுடன் அழுத்திப் பிடித்துக் கொண்டாள்..

"சுமி.. என் சுமி.."

தனஞ்ஜெயன் அவள் பக்கத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்து அவளை மடிக்கு இழுத்துக் கொண்டான்.. முதன் முதலாக உணர்ந்த அவனது நெருக்கத்தில் சுமித்ரா அவளாகவே இல்லை.. இறக்கையில்லாமல் வானில் பறப்பதைப் போல அவள் உணர்ந்தாள்..

"இந்த வாய்தான் அன்னைக்கு.. உனக்கு விருப்பமில்லாத வாழ்க்கையை உன்மேல திணிக்க மாட்டேன்னு சொல்லிச்சு.."

அவள் குறைபட்டுக் கொண்டாள்.. அந்த வாய் அவளது வாயை நெருங்கிக் கவ்விக் கொண்டது.. சுமித்ரா தாளமுடியாத நடுக்கத்தோடு.. அவன் கைகளை இறுக்கமாக பற்றிக் கொண்டாள்.. அதில் உணர்ந்த நடுக்கத்தில் அவன் மனம் ஆண்மையின் கர்வத்தைக் கொண்டது..

"இப்பவும் அதைத்தான் சொல்றேண்டி.. உனக்குப் பிடிக்காத வாழ்க்கையை உன்மேல திணிக்க மாட்டேன்.. ஆனா.. இப்ப.. இந்த நொடியில நீ வாழற வாழ்க்கையில உனக்குப் பிடித்தமில்லைன்னு சொல்லு.. பார்க்கலாம்.."

சிரிப்புடன் அவன் மீண்டும் ஒரு சவாலை முன் வைத்தான்.. சொல்ல முடியாத அவளின் இதழ்களில் அவன் இதழ்கள் மீண்டும் அழுந்தப் பதிந்தன.. அவனது பின்னந்தலைமுடியை இறுக்கிப் பிடித்திருந்த அவளின்

துடிப்பில் அவன் மீதான அவளின் ஆசையின் அளவீட்டை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது..

'இத்தனை நாளாய் இது புரியாம எட்டி நின்னிருக்கேனே..'

கடந்து போன நாள்களை ஈடுகட்ட துடித்தவனாக அவன் அவளுடன் பின்னிப் பிணைந்து விடத் துடித்தான்..

"நீங்க அதை மட்டுமா சொன்னீங்க..? மேற்கொண்டு படிக்க விரும்பினாப் படி.. உன் மனசில வேற எதுவும் எண்ணமிருந்தாலும் சொல்லு.. நீ விரும்பற வாழ்க்கையை நான் உனக்கு அமைச்சுத்தரேன்.. அப்படி.. இப்படின்னு வாயில வந்ததை வைத்துத் தள்ளினீங்க.." அவள் மனத்தாங்கலுடன் சொன்னாள்..

"உன் மனசில எதுவும் இல்லைன்னு எனக்கு எப்படிடீ தெரியும்.. நீ நான் சொன்னதுக்கு பதிலே சொல்லலை.. அந்த ரூமை விட்டுட்டு.. நம்ம ரூமுக்கும் வரலை.."

"எப்படி வருகிறதாம்..? இப்படிப் பேசற மனுசன்கிட்ட என் மனசில எந்த எண்ணமும் இல்லைடா.. உன்மேலதான்.. இவன் தான் என் புருசன்கிற எண்ணம் உண்டாகியிருக்குன்னு எப்படிச் சொல்கிறதாம்..?"

"வாடா.. போடாங்கிற.. நான் ஜமீன்தாருடி.."

"அது ஊருக்கு.. எனக்கு என் புருசன் மட்டும்தான்.. ஆசைவந்தா நான் அப்படித்தான் கூப்பிடுவேன்.."

அவள் சொன்ன ஆசையில் அவன் அனைத்தையும் மறந்தான்.. அவள் மேல் ஆசையாகி பின்னிப் பிணைந்தான்.. "சுமி" என்று அவள் காதோரமாக ரகசியம் பேசினான்..

"அதுக்கப்புறமும் வரலாமுன்னா... அன்னவாசல் ஜமீன்தாருக்கு பெண்டாட்டியை வாடின்னு கூப்பிடற நினைவு வராமல் போயிருச்சே.. அப்புறமா எப்படி இவரைத் தேடி இவரோட ரூமுக்குப் போகிறதாம்..?"

"அது நம்ம ரூம்டி.."

தனஞ்ஜெயன் வேட்கையுடன் அவள் கழுத்தில் உதட்டைப் பதித்தான் கண்மூடி அவன் தலையில் முகம் புதைத்த சுமித்ரா.. காலடியோசையைக் கேட்டதும் பதறி விலகினாள்.. அவளின் முந்தானைச் சேலையைப் பிடித்து இழுத்து தடுத்தான் தனஞ்ஜெயன்.. அதைப் பார்த்தபடி அங்கே வந்து நின்ற இந்திராதேவிக்கு அவள் கண்களையே நம்ப முடியவில்லை.. அவளைக் கண்டதும் அவசரமாக தனஞ்ஜெயன் சுமித்ராவின் சேலை முந்தானையை விட்டுவிட.. வெட்கத்துடன் சேலையை சரிசெய்து கொண்ட சுமித்ராவுக்கு சிரிப்பு வந்தது..

"அம்மா.." தனஞ்ஜெயன் எழுந்து கொள்ள முயன்றான்..

"ஒன்னுமில்லை தனா.. நீ உட்காரு.. உன்னைத் தேடி ஊருப் பெரியவங்க வந்திருக்காங்க.. ஸ்கூல் கட்ட டொனேசன் வேணுமாம்.. அதை நானே கவனிச்சு அவங்களை அனுப்பி வைச்சிடறேன்.." இந்திராதேவி அவனை உட்காரவைத்தாள்..

"நான் வருகிறேனேம்மா.."

அரை மனதுடன் சொன்ன தனஞ்ஜெயனை வெட்டும் விழிப் பார்வையிலே முறைத்தாள் சுமித்ரா.. அவன் பேசாமல் உட்கார்ந்து விட்டான்.. அதை ஜாடையாக கவனித்த இந்திராதேவிக்கு மகன் மீதான மருமகளின் ஆளுமையில் சந்தோசம் வந்தது.. மருமகளின் ஒர பார்வையில் அடங்கி உட்கார்ந்தவனைக் கண்டதும்..

'என் மகன் வாழ்ந்திருவான் போல இருக்கே..' என்று அவள் மகிழ்ந்து போனாள்..

அவளுக்கு தரையில் கால்கள் பாவவில்லை.. அப்போதிருந்த மனநிலையில் மொத்தப் பள்ளியையும் கட்டிக் கொடுத்து விடுகின்ற முடிவுக்கு அவள் வந்திருந்தாள்..

"நீ ஏன் தனா வரனும்..? பாவம்.. உனக்கே தலைவலி.. இதில உடம்பு வேற கொதிக்கிறதைப் போல இருக்கு.."

இந்திராதேவி அள்ளிவிட.. அப்படியா என்பதைப் போல சுமித்ரா கள்ளச்சிரிப்புடன் கணவனை பார்த்து வைத்தாள்..

"அதனாலே.. நீ ரூமில ரெஸ்ட் எடு.. சுமித்ரா உன்னைக் கவனிச்சுக்கட்டும்.. நான் மதியச் சாப்பாட்டை ரூமுக்கே அனுப்பி வைக்கிறேன்.. மத்த வேலைகளை நான் பார்த்துக்க மாட்டேனா..? நீ இருப்பா.."

இந்திராதேவி போய் விட்டாள்.. சுமித்ராவுக்கு அவள் காதுகளையே நம்பமுடியவில்லை.. அவளுடைய மாமியார் சொன்னதன் பொருள் என்ன..? தனஞ்ஜெயன் அவளுடன் அந்த நாளைக் கழிக்கப் போகிறானா..?

அவளைத் துகிலுரித்த தனஞ்ஜெயனின் பார்வை ஆம் என்றது.. அவன் அவளை நெருங்கி இடுப்பில் கை கொடுத்துத் தூக்கினான்.. சுமித்ராவின் கைகள் அவன் கழுத்தில் மாலையாகின.. அந்தக் கைகளுக்கு முத்தம் கொடுத்தவன்.. அவனுடைய பிரம்மாண்டமான.. பெரிய படுக்கையறையை நோக்கி நடந்தான்.. அதுவரை அவள் பிரவேசித்தறியாத அவனது அறைக் கதவை அவன் காலால் தள்ளித் திறந்த போது.. அவளது வாழ்வின் கதவுகள் அவளுக்காக திறந்து வழி விட்டதைப் போல அவளுக்கு இருந்தது..

முன்புறமிருந்த ஹாலைப் போன்ற வரவேற் பறையைக் கடந்து அடுத்ததாக இருந்த படிக்கும் அறையையும் கடந்து.. அதற்கும் அடுத்ததாக இருந்த படுக்கையறைக்குள் போனான்.. ஆறு நபர்கள் தாராளமாக படுத்து உறங்கலாம் என்பதைப் போல இருந்த பெரிய கட்டிலின் நுரை போன்ற மெத்தையில் அவளைக் கிடத்தி விட்டு அவள்மீது சரிந்தான்.. அவள் வெட்கத்துடன் விலகினாள்..

"ஏண்டி..?" சீறினான்..

"கதவு.." அவள் கைவிரல்களால் முகத்தை மூடிக் கொண்டாள்..

விரலிடுக்கில் தெரிந்த அவள் பார்வையின் அழைப்பில் அவளை விட்டு விலக முடியாதவனாய் அவள் கை விலக்கி

முகம் பார்த்தவன் கெஞ்சினான்..

"ஒரேயொரு முத்தம்டி.. அதுக்கப்புறமா கதவைச் சாத்தறேன்.."

அவள் முகம் சிவந்தாள்.. மௌனத்தையே சம்மதமாகக் கொண்டு.. அவள் முகத்தருகே இவன் முகம் நெருங்கிய போது செல்போன் ஒலித்தது..

"இது ஒரு தொல்லை.." ஆத்திரத்துடன் விலகி எழுந்தான்.. போனை காதுக்கு கொடுத்து.. பேக்ட்ரிக்கு அன்று வரமுடியாது என்று சொன்னான்.. மற்ற இடங்களுக்கும் அதையே சொல்லிவிட்டு செல்போனை அணைத்து தூர எறிந்தான்.. கதவை தாழிட்டு விட்டு.. அவளை வேட்டையாடும் வேட்கையோடு கிட்ட நெருங்கினான்.. சுமித்ராவின் ரத்த நாளங்கள் சூடறின..

"இப்பக் கதவும்.. செல்போனும் ஊடே வராதுடி.."

அவளை இழுத்து மூர்க்கத்தனமாக அணைத்து அவள் முகமெங்கும் முத்தமழையைப் பொழிந்தான்.. முகம் நனைத்த அவனது எச்சிலின் ஈரத்தில் சுமித்ராவின் ஆசைகள் அரங்கேற ஆரம்பித்தன.. அவள் தேடிய அவளுடைய கணவன் அவளுக்கு கிடைத்து விட்டதில் அவள் அவனுடன் இறுக்கிப் பிணைந்தாள்..

அவள்மீது பரவிப் படர்ந்த அவனது கைகளின் அத்து மீறலில் புரியாத பல புரிதல்களை அவள் கண்டாள்.. அவள்மீது சரிந்து ஆக்ரமித்தவனின் உடல் பாரத்தில் அவளது மனபாரம் விலகியோடுவதை வியப்புடன் அவள் உணர்ந்தாள்..

விட்டு விடுதலையான அவர்களின் உடைகள் தரைமீது ஒன்றன்பின் ஒன்றாக விழுந்தன.. அதற்கு மேல் தனஞ்ஜெயன் அவள் காதோரமாக பேசிய பேச்செல்லாம் வேறு விதமாகவே இருந்தன.. வெறி கொண்ட சிங்கமாக அவன் வேட்டையை ஆரம்பித்தான்.. இரையாக விரும்பிய புள்ளிமானாக அவள் விருப்பத்துடன் அவன் வேட்கைக்கு இரையானாள்.. உண்ண.. உண்ண அடங்காத பசி அவனின்

பசியாக இருந்தது.. பரிமாற அவள் சளைத்த போதெல்லாம் அவன் கோபம் கொண்டதில்.. அவள் தடுமாறி.. தயக்கங்களை விட்டு அவனுக்கு உணவானாள்..

திருமணமே வேண்டாம் என்று இருந்த தனஞ்ஜெயனா இவன் என்று அவனை அறிந்தவர்கள் ஆச்சரியப்பட்டுப் போகும் விதத்தில் அவன் அணுஅணுவாக அவளுடன் இன்பம் துய்த்துக் கொண்டிருந்தான்..

"சுமி..."

"ம்ம்ம்.."

"சுமி..."

"ம்ம்ம்.."

இதுதான் அவர்களின் பேச்சாக இருந்தன.. மூடப்பட்ட அவனது அறைக்கதவு பகலுணவை வாங்கிக் கொள்வதற்காக மட்டுமே திறந்தது.. மறுபடியும் அடைக்கப்பட்ட அறைக்கதவு.. அவன்விட்ட கதையைத் தொடரப் போவதை சொல்லாமல் சொல்லியது..

அலை மோதும் ஜனத்திரளுக்குள் தனஞ்ஜெயனின் கையைப் பிடித்தபடி நடப்பதில் உள்ள பரமசுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள் சுமித்ரா.. இந்திரா தேவியின் பிறந்த வீட்டில் விருந்து முடிந்து அன்னவாசலுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.. ரயில் பயணத்திற்கு ஆசைப்பட்ட சுமித்ராவுக்காக காரை அன்ன வாசலிலேயே விட்டுவிட்டு ரயிலில் பயணித்திருந்தான் தனஞ்ஜெயன்..

திருநெல்வேலிக்கே உரிய 'லே' ஆங்காங்கே காதினில் விழுந்தன..

"என்னலே.. என்ன சொல்லுத..?"

"ம்ம்.. சொரக்காய்க்கு உப்பில்லேன்னு சொல்லுதேன்.. அதுக்கு இப்ப என்னங்கிறலே..?"

இது போன்ற பேச்சுக்களை ரசித்தபடி சுமித்ராவுடன் உராய்ந்து கொண்டிருந்த தனஞ்ஜெயன்.. தூரத்தில் யாரையோ கண்டதும் கை தட்டி அழைத்தான்..

"யாருங்க அது..?" சுமித்ரா விசாரித்தாள்..

"என் கூடப் படிச்சவன்.." தனஞ்ஜெயன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே.. கை தட்டலுக்குத் திரும்பிப் பார்க்காத நண்பன்.. அவனருகே வந்து விட்டான்..

"அன்பு.."

அருகாமையில் அவன் வந்தவுடன் தனஞ்ஜெயன் அன்பைப் பிழிய அந்த நண்பன் பேயைக் கண்டவனைப் போல அரண்டு போய் அப்படியே நின்று விட்டான்..

"என்னடா.. பேக்கு மாதிரி முழிக்கற..? தனஞ்ஜெயன்டா.. காலேஜில உன் கிளாஸ்மேட்.. ஹாஸ்டலிலே உன் ரூம் மேட்.."

இந்தக் கதையையெல்லாம் நான் கேட்டேனா என்ற ரீதியில் அவன் முறைத்துக் கொண்டே நின்றான்.. அவனருகில் நின்றிருந்த பெண் சிநேகிதமாக சுமித்ராவைப் பார்த்து சிரித்து வைத்தாள்..

"ஹலோ..."

"ஹலோ.."

"என் பெயர் ஆர்த்தி.. இவரோட வொய்ப்.."

"என் பெயர் சுமித்ரா.. இவரோட வொய்ப்.."

"இதுக ரெண்டும் எங்க குழந்தைகள்.."

மிஸஸ் ஆர்த்தி அன்பழகன் சுட்டிக் காட்டிய திசையில் அன்பழகனின் இரண்டு கைகளையும் ஆளுக் கொன்றாகப் பிடித்தபடி இரண்டு பெண் குழந்தைகள் நின்றிருந்தார்கள்..

"கியூட்டா இருக்காங்க.." சுமித்ரா சொன்னாள்..

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்..?" ஆர்த்தி கேட்டதும் முகம் சிவந்தாள்..

"இப்பத்தான் எங்களுக்கு மேரேஜ் ஆச்சு..?"

"ஓ.. இவரோட பிரண்டுன்னதும் நான் எங்களைப் போலன்னு நினைத்துக் கேட்டுட்டேன்.."

என்னவோ அந்தப் பெண்ணும் சுமித்ராவும்தான் கல்லூரியில் ஒன்றாகப் படித்த தோழிகளைப் போலப் பேசிக் கொண்டிருந்தார்கள்.. அன்பழகன் யாருக்கு வந்த விருந்தோ என்று நின்றிருந்தான்.. தனஞ்ஜெயன் அவனை ஜென்ம விரோதியைப் போல முறைத்துக் கொண்டிருந்தான்..

"டிரெயின் வந்திருச்சு.."

சுமித்ராதான் தனஞ்ஜெயனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ரயிலில் ஏற வேண்டியிருந்தது.. அவன் அப்போதும் பிளாட்பாரத்தில் நின்றிருந்த அன்பழகனை கொலைவெறியுடன் முறைத்துக் கொண்டிருந்தான்..

ரயில் வேகமெடுத்ததும் சுமித்ரா விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்..

"இப்ப எதுக்குடி இந்தச் சிரிப்பு சிரிக்கிற..?" தனஞ்ஜெயன் எரிந்து விழுந்தான்..

"இவர்தான் உங்களால் காதலில் தோற்றுப்போன அன்பழகனா..?"

"உனக்கெப்படிடீ தெரியும்..?"

"மைனா வந்து சொல்லுச்சு.. போவிங்களா.. என்னவோ காலம் பூராவும் கல்யாணம் பண்ணிக்கவே மாட்டேன்னு சபதம் போட்டவர்.. காலேஜ் படிப்பு முடிஞ்சதும் முதல் வேலையா அதைத்தான் செய்திருக்காரு போல.. கைக்கொன்னா ரெண்டு பிள்ளைகள் வேற.. ஹா.. ஹா.."

சுமித்ராவின் சிரிப்பை முறைத்தபடி இருந்த தனஞ்ஜெயனின் முகம் மெல்ல.. மெல்ல மாறியது.. அவனும் சுமித்ராவுடன் கூடச் சேர்ந்து சிரித்தபடி அவளைப் பக்கத்தில் இழுத்துக் கொண்டான்.. தனிமை நிறைந்த அந்த முதல் வகுப்பு கூபேயில் அவன் இதழ்கள் அவள்

இதழ்களைத் தேடிப் பதிந்தன.. அவள் காதோரமாக சொன்னான்..

"அப்பவே நானும் கல்யாணத்துக்கு ரெடியாகிருந் தேன்னா.. நீ எனக்குக் கிடைச்சிருப்பியாடி.. இப்பவே பப்பா போலதான் இருக்க.. அப்ப நிஜமாவே பப்பாவாய் ஸ்கூல் போய்கிட்டு இருந்திருப்ப.. உனக்கும், எனக்கும் முடிச்சுப் போட்ட அந்த கடவுள்தான் என்னைக் கல்யாணத்தை தள்ளிப் போட வைச்சிருக்காருடி.."

அவன் சொன்னதற்கு இசைவாக அவள் தலையசைத்து கண்களை மூடிக் கொண்டாள்..

25

ஒருபக்கம் அகன்ற பள்ளத்தாக்கு.. அதன் ஓரமாக உயரமாக விளிம்பு கட்டியிருந்த இரும்பு கைப்பிடி வளைவு.. மலையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த நீண்ட நடைபாதை.. கொடைக்கானலின் பிரசித்திபெற்ற 'கோக்கர்ஸ் வால்க்..'

தனஞ்ஜெயனின் விரல்களோடு விரல்களைப் பிணைத்து நடந்து கொண்டிருந்தாள் சுமித்ரா.. தனஞ்ஜெயனின் கை உயர்ந்து அவள் தோளை வளைக்க முனையும் போதெல்லாம் அவள் விரல்கள் அவன் விரல்களை அழுத்திப் பிடித்து அவன் கையை தடுத்தன..

தனஞ்ஜெயன் அவளை முறைத்தான்.. அவள் தோள் தொட்டு இறுக்கி அணைத்தபடி நடக்க முடியாத கோபம் அவன் விழிகளில் தெரிந்தது.. சுமித்ரா ஏதும் அறியாதவளைப் போல..

"என்ன..?" என்றாள்..

"இப்ப என்ன அலுவலுக்கு என் கையைத் தடுக்கிற..?" அவன் கனன்றான்..

"இல்லையே.." அவள் விழிவிரித்தாள்..

"இல்லைல்ல...?" உறுதி செய்து கொள்ள முனைபவனைப் போல அவன் வினவினான்..

"இல்லவே இல்ல.." உறுதி போல அவள் சொன்னாள்..

"ஓஹோ.."

ஒரு தினுசான குரலில் சொல்லியவன் என்ன செய்யப் போகிறான் என்பதை சுமித்ரா யூகிப்பதற்குள் அவள் விரல்களிலிருந்து தன் விரல்களை உறுவிக் கொண்டவன் புயல் வேகத்தில் அவள் தோளைச் சுற்றிக் கையைப் போட்டுத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான்..

"விடுங்க.. யாராவது பார்த்துரப் போறாங்க.." சுமித்ரா கெஞ்சினாள்..

"இது அன்னவாசல் இல்லைடி.. கொடைக்கானல்.. இங்கே உன்னையும்.. என்னையும் வேவு பார்க்கத்தான் ஆளுக வந்திருக்காங்களா..? கொடைக்கானலைச் சுற்றிப் பார்க்க வந்திருக்காங்கடி.."

அவர்களைச் சுற்றியிருந்த கூட்டத்தில் இதைவிட நெருக்கமாக பிணைந்தபடி பல ஜோடிகள் கடந்து சென்றதை சுட்டிக் காட்டினான் தனஞ்ஜெயன்..

"இதுக்கெல்லாம் சார் உடனுக்குடனா எவிடன்ஸை காட்டிருவீங்களே.." செல்லமாக முறைத்தாள் சுமித்ரா..

பிடிக்காததைப் போல காட்டிக் கொண்டாலும் அவளுக்கு தனஞ்ஜெயனின் முரட்டுத்தனமான அணைப்பை மிகவும் பிடித்திருந்தது.. பொது இடத்தில் அவள் விரல்களையாவது தொட்டுக் கொண்டிருக்க வேண்டு மென்று அவன் துடித்தான்.. அவன் காட்டிய அதீத நெருக்கத்தில் சுமித்ராவுக்கு விலகி நின்ற காலமெல்லாம் மறந்தே போய் விட்டது..

தனஞ்ஜெயன் சுமித்ராவின் தோளை அழுத்தினான்..

"வலிக்குது.." சிணுங்கினாள் சுமித்ரா..

அப்படியா என்று அவன் கையை விலக்கிக் கொள்ளவில்லை.. மாறாக அவளைத் தின்று விடுவதைப் போல பார்த்து வைத்தான்..

"போட்டிங் போகலாமா..?"

"ம்ம்ம்.."

சுமித்ரா சம்மதமாக தலை அசைத்தாள்.. அவர்கள் தேனிலவுக்காக அங்கே வந்து ஒரு வாரம் ஓடியிருந்தது.. தினமும் ஒர் இடமாக பார்த்தாலும் போட்டிங் போவதை மட்டும் தினப்படி வேலையாக வைத்திருந்தார்கள்.. எங்கே சுற்றினாலும் தனஞ்ஜெயன் மறக்காமல் அவளை ஏரிக்கு அழைத்தக் கொண்டு வந்து விடுவான்..

சுமித்ராவுக்கு போட்டிங் போக மிகவும் பிடிக்கும்.. அதை அவள் வாய் விட்டுச் சொல்லாமலே அவன்

புரிந்து கொண்டதில் அவன்மீதான சுமித்ராவின் காதல் அதிகரித்தது..

படகுத் துறையில் கூட்டம் அதிகமில்லை.. ஒருவர் மட்டும் துடுப்பு போடும் படகில் ஏறிய தனஞ்ஜெயன் துடுப்பை எடுத்துக் கொண்டான்.. அவனுக்கு எதிர் புறமாக அமர்ந்திருந்த சுமித்ராவை காதல் பொங்கப் பார்த்தபடி துடுப்பை போட ஆரம்பித்தான்..

அந்தி வெயிலின் கதிர்கள் பட்டு சுமித்ரா பொன்னிற தேவதைபோல மிளிர்ந்தாள்.. அவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஆசை மேலிட்டது.. அவன் பார்வையில் முகம் சிவந்து தண்ணீரை அள்ளி அவன்மீது வாரியடித்தவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்..

"என்ன அழகு..! எத்தனை அழகு..!

கோடிமலர் கொட்டிய அழகு..!

பெண்ணென்று உருவானதோ.."

அவன் பாடலில் உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள் சுமித்ரா.. காற்றில் கலைந்து பறந்து அவனது முன்

நெற்றியில் படிந்த முடியில் விரல் விட்டுக் கோதும் ஆசை அவளுக்குள் வந்தது..

அதை உணர்ந்தவனின் கண்களில் மின்னல் வந்ததில் வெட்கச் சிரிப்போடு கரையைப் பார்த்தாள்..

"சுமி..."

"ம்ம்ம்.."

"என்னைப் பிடிச்சிருக்காடி..?"

சுமித்ரா சிரித்து விட்டாள்.. அவன் மீதான அவளது காதலை உணர்ந்த பின்னாலும் அவன் தினமும் கேட்கும் இந்தக் கேள்வியில் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது..

"பிடிக்கலைன்னு சொன்னா என்ன செய்வீங்க..? என் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவீங்களா..?"

விளையாட்டாய் கேட்டவள் மௌனமாகி விட்டாள்.. தனஞ்ஜெயனின் புருவங்கள் சுருங்கின..

"ஏய்ய்.. சுமித்ரா..! என்னடி ஆச்சு..?" என்று கேட்டான்..

"ஒன்னுமில்லை.." சுமித்ராவின் முகத்தில் மெலிதான சோகம் வந்திருந்தது..

அவளுடைய பிறந்த வீட்டில் அவளை நினைத்துக் கொண்டிருக்கிறார்களா.. இல்லை.. மறந்து விட்டார்களா..?

அதற்குள் கரை வந்து விட்டிருந்ததால்.. தனஞ்ஜெயன் காட்டேஜீக்குப் போனபின்னால் என்னவென்று கேட்டுக் கொள்ளலாம் என்று பேசாமல் கரையேறினான்.. சுமித்ராவுக்கு கை கொடுத்து கரைக்கு இழுத்துக் கொண்டான்.. அவள் தோள் மீது கை போட்டவனை அவள் ஆட்சேபிக்கவில்லை.. மௌனமாக அவனுடன் நடந்தாள்..

சுமித்ராவின் மனம் வேறு எங்கோ இருக்கிறது என்பதை புரிந்து கொண்டான் தனஞ்ஜெயன்.. இல்லா விட்டால் அவள் தோள்மீது அவனது கை விழுந்திப்பதைக் கூட உணராதவளாக அவனுடன் நடப்பாளா..? உடனடியாக செல்லச் சண்டையொன்றை போட்டிருப்பாளே..

ஏதோ யோசனையுடன் நடந்த சுமித்ராவின் கண்கள் சற்றுத் தள்ளி நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்த இளைஞனைக் கண்டதும் மின்னின..

"சுந்தர்.." பரபரத்தாள்..

"அக்கா.." அவளைவிட வேகமாக அவளருகே வந்தான் சுந்தர்..

"எப்படிடா இருக்க..?"

சுமித்ராவின் கண்களில் குளம் வந்தது.. தம்பியை அவள் கட்டிக் கொண்டாள்.. அவனோ தனஞ்ஜெயனை விரோதியைப் பார்ப்பதைப் போல முறைத்துப் பார்த்து வைத்தான்..

'என்னஙகடா இது..'

தனஞ்ஜெயன் தாடையைத் தடவியபடி தள்ளி நின்று அந்த அக்காள், தம்பியின் அன்புப் பிணைப்பை பார்த்துக் கொண்டிருந்தான்.. அவனுடைய அன்பு மைத்துனனோ.. அக்காள் கணவனைப் பார்க்கப் பிடிக்காதவனாக முகத்தை திருப்பிக் கொண்டு சுமித்ராவிடம் மட்டும் பாசப்பறவையை பறக்க விட்டுக் கொண்டிருந்தான்..

"என்க்கா இளைச்சுட்ட..? துரும்பா இருக்கறயே.."

மைத்துனனின் உருகலில்..

'ஆமாண்டா மச்சான்.. உங்க அக்காவுக்கு எங்க வீட்டில சோறே போடறதில்ல பாரு.. அதனாலதான் இவ துரும்பா இளைச்சிருக்கா..' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான் தனஞ்ஜெயன்..

"உன் முகமே வாடியிருக்கேக்கா.."

'நீ வந்து தண்ணி பாச்சுடா மச்சான்.. வாடிப்போன உன் அக்கா முகம் மலர்ந்துரும்..'

"உன்னோட சிரிப்பு எங்ககேக்கா போச்சு..?"

'எந்தக் குருவி தூக்கிட்டுப் போச்சோ.. தெரியலைடா மச்சான்.. ஏழுகடல், ஏழுமலை தாண்டி ஒரு மலையுச்சியிலே பதுக்கி வைச்சிருக்காம்.. நொண்டிக் குதிரையிலே ஏறி.. அட்டைக் கத்தியோட போய் குருவிகூட சண்டை போட்டு மீட்டுட்டு வாப்பா..'

"ஆளே அடையாம் தெரியாம மாறிப் போயிட்டியேக்கா.."

'இதெல்லாம் ஓவர்டா மச்சான்.. அடையாளம் தெரியாமலா நீ அக்கான்னு ஓடி வந்த..?'

"வாக்கா.. நம்ம வீட்டுக்குப் போயிடலாம்.."

'ஆமாண்டா மச்சான்.. நீ அழைச்சவுடனே உன்கூட அவளை அனுப்பி வைச்சுட்டுத்தான் வேற வேலை பார்ப்பேன்..'

அதுவரை மைத்துனன் கேட்ட கேள்விகளுக்கு மனதுக்குள் பதிலைச் சொல்லிக் கொண்டிருந்த தனஞ்ஜெயன் பல்லைக் கடித்தான்..

"தம்பி கூப்பிடறாப்புலயே சுமித்ரா.. எப்படி..? கிளம்பி 'உன்' வீட்டுக்குப் போயிடறயா..?" கடினமான முகத்துடன் கேட்டான்..

சுமித்ரா துணுக்குற்றாள்.. அத்தனை தினங்களாக பார்க்காமல் இருந்த தம்பியை பார்த்து விட்ட மகிழ்வில் இருந்தவளுக்கு அப்போதுதான் சுந்தரின் பேச்சிலிருந்த விபரீதம் உறைத்தது..

'என் தம்பி கலாட்டாக் கல்யாணத்திலே அரண்டு போய் கேள்வி கேட்கிறான்.. பஞ்சாயத்திலே தானா முன் வந்து கல்யாணத்துக்கு ஒப்புக்கிட்ட அக்கா எப்படி வாழ்கிறாளோங்கிற கவலையிலே பேசறான்.. அவனுக்கு என் மனதைப் பற்றி என்ன தெரியும்..? தாலி கட்டிய இவனே உன் விருப்பம்போல வாழ்க்கையை அமைத்துத்தரேன்னு வசனம் பேசினப்ப.. என்கூடப் பிறந்த தம்பி, விருப்ப மில்லாத வாழ்வை அக்கா வாழ்கிறான்னு நினைச்சிருக்க மாட்டானா..? அந்தப் பதட்டத்தில் அவன் பேசினா இவன் உடனே கிளம்பிப் போய் விடச் சொல்வானா..?'

சுமித்ராவின் முகம் கடுமையானது..

"'உன்' வீடா..?"

தனஞ்ஜெயன் கொடுத்த அதே அழுத்தத்துடன் உன் வீட்டை உச்சரித்து வினவினாள்.. தனஞ்ஜெயனின் கண்கள் இடுங்கின..

"அப்படித்தானே உன் தம்பி சொன்னாப்புல..?" என்று புருவங்களை உயர்த்தினான்..

"அவன் சொல்வான்.. அவனுக்கு என்ன தெரியும்..? சின்னப் பையன்.. இப்பத்தான் ப்ளஸ்டூவை முடிச்சிருக்கான்.. காலேஜில் காலெடுத்து வைக்கப் போகிறான்.. நீங்க அப்படியா..?"

"இங்கே பார்.. பேசுகிற பேச்சையெல்லாம் அக்காளும் தம்பியும் பேசிட்டு என்மேல் பழி போடக் கூடாது.."

"ஒற்றை வார்த்தையிலே உன் வீட்டுக்குக் கிளம்பிப் போன்னு நீங்க சொல்வீங்க.. அதை ஏன்னு கேட்டா பழிபோடறதா அர்த்தமாகுமா..? நல்லாயிருக்குங்க.. அன்னவாசல் ஜமீனின் நியாயம்..."

"ஏய்ய்.. எங்க ஊரு நியாயமெல்லாம் நல்லாத்தாண்டி இருக்கு.. உங்க ஊர் நியாயம்தான் எகனைக்கு மொகனையா இருக்கு.."

"வேணாங்க.. திரும்பவும் வார்த்தை தப்புது.. சொல்லிட்டேன்.. முதல்ல 'உன் வீடு'ன்னீங்க.. இப்ப 'உங்க ஊர்'ன்னு சொல்கிறீங்க.. எனக்கு இப்பவே ஓர் உண்மை தெரிஞ்சாகனும்.."

"என்ன உண்மை..? வீரம் விளைஞ்ச மண்ணு அன்னவாசலா..? இல்லை லட்சுமிபுரமான்னா..?"

தனஞ்ஜெயனின் கோபாவேசத்தில் சுந்தர் கண் சிவந்தான்.. அவனுடைய அருமை அக்காவை அவள் கழுத்தில் கட்டாயத்தாலி கட்டிய தனஞ்ஜெயன் கொடுமைப் படுத்துகிறான் என்று கணக்குப் போட்டு விட்டான்.. அந்தக் கோபத்தில் அக்காளைக் காக்கும் தம்பியாக.. சட்டைக்

காலரை உயர்த்தியபடி தனஞ்ஜெயனிடம் சண்டைக்கு கிளம்பி விட்டான்..

"லட்சுமிபுரத்து மண்ணு ஒன்னு வீரத்திலே குறைஞ்சது இல்லைங்க.. அன்னவாசல் ஜமீன்தார் அப்படிங்கிறதுக்காக யாரும் இங்கே பயந்து ஒதுங்க மாட்டோம்.."

"ஓ..."

"கூடப் பிறந்தவளுக்காக எதையும் தாங்குவோம்.."

"அட.. எதையும் தாங்கும் இதயம்ன்னு உன்னைப் பார்த்துத்தான் சொல்லி வைச்சாங்களா..?"

"என் அக்காவுக்கு ஒன்னுன்னா தட்டிக் கேட்க நானிருக்கேன்.."

"சபாஷ்.."

"இவர்கூட என்ன பேச்சு.. வேண்டிக்கிடக்கு..? நீ வாக்கா.. நம்ம வீட்டுக்குப் போயிரலாம்.."

தனஞ்ஜெயனின் முகம் பயங்கரமாக மாறிவிட்டது.. சுமித்ரா உதட்டைக் கடித்தாள்.. சுந்தர் பேசப்பேச.. கூடப் பேசிய தனஞ்ஜெயனின் கிண்டல் அவள் மனதை பாதித்திருந்தது.. அவளுடைய தம்பியை தனஞ்ஜெயன் அவமதிப்பதாக அவள் மனதுக்குள் பொங்கினாள்.. அதற்கேற்ப தனஞ்ஜெயன் ஒட்டாத பார்வையுடன் பேசினான்..

"போம்மா.. அதான் உன் உடன்பிறப்பு.. பாசக்காரத் தம்பி.. வீச்சருவாள் வீராச்சாமி.. உன்னை வெற்றிலை பாக்கு வைச்சு அழைக்கிறாப்புலயில்ல.. கிளம்பு.. கிளம்பு.. உன் தம்பி கூட உன் ஊரைப் பார்த்து நடையைக் கட்டு.."

தனஞ்ஜெயனின் எகத்தாளமான தொனியில் மனதில் அடிவாங்கினாள் சுமித்ரா.. அதை சும்மா விடக் கூடாது என்ற வீம்பும் பிடிவாதமும் அவள் மனதில்

தோன்றி விட்டன..

'கல்யாணமான நாளில இருந்து என் அப்பா வீட்டில இருந்து ஒரு ஈ, குருவி வந்திருக்குமா..? இந்த மனுசனுக்கு கழுத்தை

நீட்டினா நான் என் அப்பாம்மா வீட்டை மறந்துரனுமா..? வெளியூருக்கு வந்த இடத்திலே கூடப் பிறந்தவனைப் பார்த்தா அவன் கூட நின்று பேசக் கூடக் கூடாதா..? அக்காங்கிற பாசத்திலே அவன் வாக்கா

நம்ம வீட்டுக்குப் போகலாம்ன்னு கூப்பிட்டா இந்த மனுசன் அதில குற்றம் பார்ப்பானா..? நான் என்ன செய்திருக்கனும்னு இவன் நினைக்கிறான்..? என் தம்பியைப் பார்த்தும் பார்க்காததைப் போல பிரிஞ்சு போயிருக்கனுமா..? இவன் மட்டும் இவங்கம்மாவைப் பிரியாம இவன் வீட்டில இருக்கலாம்.. நான் மட்டும் என் கூடப் பிறந்தவன்கிட்ட பாசம் காட்டிப் பேசக்கூடாது.. எவ்வளவு வினயமா இருக்கிறான்..?'

சுமித்ரா செல்போனை கையில் எடுத்தாள்.. நம்பர்களை அழுத்தப் போனாள்..

"யாருக்குப் போன் போடற..?" தனஞ்ஜெயன் கேட்டான்..

"உங்க அம்மாவுக்குத்தான்.." நிதானமாக சொன்னாள் சுமித்ரா..

"என் அம்மா உனக்கு யாருடி..?" தனஞ்ஜெயன் சீறினான்..

"என் தம்பி மட்டும் உங்களுக்கு யார்..? வேண்டா தவனா..? மச்சினன்னு நினைச்சுப் பார்த்திங்களா..?" சுமித்ராவும் பதிலுக்குச் சீறினாள்..

"மச்சான்னு உன் தம்பி நினைச்சுப் பார்த்தாப்புலயா..? அதை முதலிலே கேளு.. என்னவோ வில்லனைப் பார்க்கிறதைப் போல பார்த்து வைக்கிறாப்புல.. என்ன..? உனக்கு அதெல்லாம் கண்ணுக்குத் தெரியாதா..? மனச்சாட்சியே இல்லையாடி..? நீயென்ன இளைத்துக் கருத்து.. எழும்பும் தோலுமா ஆளே அடையாளம் தெரியாத மாதிரி

உருக் குலைஞ்சா போயிருக்க..? உன் சிரிப்பு எங்கே போச்சுன்னு கேக்றாப்புல..?

நானும் எங்கம்மாவும் உன்னை கொடுமை படுத்தி இந்தக் கோலத்துக்கு ஆளாக்கியிருக்கிறோமா..?" தனஞ்ஜெயன் கொதித்தான்..

பதிலுக்குப் பதில் சீறிக் கொண்டிருந்த சுமித்ராவால் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.. அதே சமயத்தில் அவளுடைய தம்பி பேசியதை தவறு என்று ஒப்புக் கொள்ளவும் தயங்கினாள்..

சுந்தர் என்ன வேண்டுமென்றேவா அப்படிப் பேசினான்..?

அவன் கண்ணுக்கு அப்படித் தெரிந்ததோ என்னவோ.. பிறந்த வீட்டின் ஞாபகத்தில் சுமித்ரா முகம் வாட நடந்து வந்து கொண்டிருந்தது உண்மைதானே.. அவன் பார்வையில் படும் நேரத்தில் அவள் சோகமாகத் தானே இருந்தாள்.. சிரித்துக் கொண்டிருக்கவில்லையே.. முகம்வாட சிந்தனையுடன் வந்தவளைப் பார்த்த சுந்தருக்கு அக்கா துன்பப்படுகிறாள் என்று தோன்றி விட்டதோ என்னவோ..

"அவன் சின்னப் பையன்.." முணுமுணுத்தாள்..

"பேச்சு சின்னதா இல்லையே.."

"இருக்கட்டும்.. அதுக்கு இப்ப என்ன செய்யனும்ங் கறிங்க.. என் தம்பி கூடக் கிளம்பிப் போய் விடச் சொல்கிறீங்களா..? சொல்லுங்க.. போய் விடுகிறேன்.. போகிறதுக்கு முன்னால உங்கம்மாவுக்கு.. அதாவது என் அத்தைக்கு போன் போட்டு விளக்கம் கேட்டுட்டு கிளம்பி விடுகிறேன்.."

"எங்க அம்மாகிட்ட விளக்கம் கேட்கப் போகிறயா..? எதைப் பத்திக் கேட்கப் போகிற.. கழுத்தில கட்டற தாலிக்குப் போடற மூன்று முடிச்சுக்கு என்ன அர்த்தம்ன்னு கேட்கப் போறியா..?"

"ஊஹீம்.. உங்க மகன்.. உங்க ஊருக்கு.. உன் வீட்டுக்குப் போன்னு என்னைச் சொல்கிறார் அத்தை.. எது என் வீடு..? எது என் ஊர்ன்னு கேட்கப் போகிறேன்.."

சுமித்ராவின் கிடுக்கிப் பிடியில் அவளையே உறுத்துப் பார்த்தான் தனஞ்ஜெயன்.. இந்தக் கேள்விகளை சுமித்ரா இந்திராதேவியிடம் கேட்டு வைத்தால் ஏற்படப் போகும் பின் விளைவுகளை எண்ணிப் பார்த்தது அவன் மனம்..

'அவ்வளவுதான்.. அம்மா என்கிட்ட முகம் கொடுத்தேப் பேசமாட்டாங்க..' தனஞ்ஜெயன் சுமித்ராவை முறைத்தான்..

"மிரட்டறயாடி..?"

"என்ன தேவைக்கு..?"

"உன் தம்பியைக் கண்டதும்.. உன் புருசன் உனக்குத் தேவையில்ல..?"

"குட்.. இதுதான் என் கூடப்பிறந்தவனுக்கு நீங்க கொடுக்கிற இம்பார்டன்ஸ்.. ரொம்ப சந்தோசமா இருக்கு.."

"பேச்சை மாத்தாதே.."

"மாத்தி என்ன செய்யப் போறேன்..?"

"முதல்ல போனை ஆஃப் பண்ணு.."

"அத்தையிடம் பேசனும்.."

"உன் பல்லைக் கழட்டிருவேன்.. அடங்குடி.. என்ன..? மாமியாரைக் கைக்குள்ள போட்டிருக்கிற மமதையிலே ஆடிப் பாக்கறியா..?"

"ம்ஹீம்.. புருசனைக் கைக்குள்ள போடத் தெரியாதவ மாமியாரைக் கைக்குள்ள போட்டு எதைச் சாதிக்கப் போறேன்..?"

கணவனும் மனைவியும் சண்டைக் கோழிகளாக ஒருவரையொருவர் உறுத்துப் பார்த்துக் கொண்டனர்.. சுந்தரோ கொடுமைக்கார கணவனிடமிருந்து தமக்கையைக் காப்பாற்றும் மும்முரத்தில் இருந்தான்.. கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் புகுந்தான்..

"இதோ பாருங்க.. நீங்க அன்னவாசல் ஜமீன்தாரா இருக்கலாம்.."

"கூடவே உன் அக்காவுக்கும் புருசனா இருக்கிறேன்ப்பா.."

"கொடுமைக்கார புருசன்னு சொல்லுங்க.."

"அப்படி என்ன கொடுமையை நான் செய்துட்டேன்னு உன் அக்காகிட்டக் கேட்டுச் சொல்லுப்பா.."

"கேட்டால்தானா..? அதான் என் கண் எதிரிலேயே பார்த்துட்டேனே..."

"பார்த்துட்டேல்ல..? நான் இப்படித்தான்.. அதுக்கு இப்ப என்னங்கிற..?"

"உங்ககிட்ட எனக்கென்ன பேச்சு..?"

"வேற யார்கிட்டப் பேசப் போறே..?"

"அக்காகிட்டப் பேசிக்கறேன்.."

"பேசுப்பா.. தாராளமா பேசு.. நானென்ன உன் வாயைப் பொத்தியா வைச்சிருக்கேன்..?"

தனஞ்ஜெயன் கைகளை மார்போடு மடித்துக் கட்டியபடி அமைதியாக நின்றுவிட.. சுந்தர் சுமித்ராவிடம் வற்புறுத்தினான்..

"வாக்கா.. நம்ம வீட்டுக்குப் போயிரலாம்.."

சுமித்ரா சங்கடமடைந்தாள்.. எதைச் சொல்லி சுந்தருக்குப் புரிய வைப்பது என்றே அவளுக்குத் தெரியவில்லை..

"நீ எப்படிடா கொடைக்கானலில் வந்து நிற்கிற..?" என்று பேச்சை மாற்றினாள்..

"பிரண்ட்ஸோட டூர் வந்தேன்க்கா.. வந்த இடத்தில உன்னைப் பார்த்துட்டேன்.. வாக்கா போகலாம்..."

கீறல்விழுந்த ரிகார்டைப் போல சுந்தர் திரும்பத் திரும்ப அனத்திக் கொண்டிருந்தான்.. அவனை காட்டேஜீக்கு அழைத்துப் பேசலாம் என்றால் அழைக்க வேண்டிய தனஞ்ஜெயன் கைகளைக் கட்டிக் கொண்டு எனக்கென்ன என்று நின்று கொண்டிருந்தான்.. அழைப்பை

ஏற்றுக்கொண்டு வர வேண்டிய சுந்தரோ தனஞ்ஜெயனை எதிரிக்காரனைப் போல பார்த்துக் கொண்டிருந்தான்..

இருந்திருந்து அவள் தம்பியை கொடைக்கானலில் பார்த்தாளே.. அந்தச் சந்திப்பு இப்படியா அமைய வேண்டும்..?

"சுந்தர்.. நீ கிளம்பு.." சுமித்ரா ஒரு முடிவோடு சொன்னாள்..

"நீ..?"

"நான் என் வீட்டுக்குப் போகிறேன்டா.. உனக்குப் பிடித்தாலும்.. பிடிக்கலைன்னாலும் இதை நீ ஏற்றுக்கிட்டுத் தான் ஆகனும் சுந்தர்.. எனக்குக் கல்யாணமாகிருச்சு.. இனி என் ஊர் அன்னவாசல்தான்.. உன் மாமா எங்கேயிருக் கிறாரோ அதுதான் என் வீடு.. புரிஞ்சுக்கடா.."

சுமித்ராவின் கையை உதறிவிட்டு சுந்தர் வேகமாக போய் விட்டான்.. மருகி நின்ற சுமித்ராவை விட்டு விலகி நடந்தான் தனஞ்ஜெயன்..

சுமித்ராவின் கண்களில் நீர் தளும்பியது.. அவள் கொடைக்கானலின் ஏரியைப் பார்த்தாள்.. தண்ணீர் நிரம்பியிருந்த ஏரி அவளைக் கேள்வியுடன் பார்த்தது..

'இது எந்தப் பெண்களின் கண்ணீர் துளிகளோ..'

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தனஞ்ஜெயனின் பின்னால் அவள் நடந்தாள்.. திரும்பிப் பார்க்காமல் நடந்தவளின் பின்னால் ஏன் நடக்க வேண்டும் என்று அவளது தன்மானம் முரண்டியது..

'பேசாம சுந்தருடன் லட்சுமிபுரத்துக்கு போய் விடலாமா..?'

கேள்வி கேட்ட மனதை அவளது மார்பில் புரண்ட தாலி தடுத்து நிறுத்தியது.. கட்டிய கணவனுடன் போவதுதான் அவளது பிறந்த வீட்டிற்கு அவள் வாங்கித் தரும் மரியாதை என்று சொன்னது.. அப்படியில்லாமல் சுந்தருடன் அவள் தனியாக போய் நின்றால் அவள் பிறந்து வளர்ந்த ஊர் என்ன சொல்லும்..? சுந்தர் சொன்னதுதான் உண்மை என்று சொல்லி விடாதா..?

'பார்.. பெத்தவங்களுக்காக அந்த பொண்ணு தியாகம் பண்ணுச்சு.. தானா முன்னாடி போய் நின்னு அன்னவாசல் ஜமீன்தாரரைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதம் சொல்லுச்சு.. இப்ப என்ன ஆச்சோ.. ஏது ஆச்சோ.. புருசன்காரர்கூட வராம.. தம்பிகூட தனியா வந்து நிற்குது.. பெத்தவங்களாலே அவங்க பொண்ணுக்கு இப்படியாப் பட்ட கஷ்டம் வந்துருச்சே...'

இப்படித்தான் அவள் ஊர் சொல்லும்.. அவளைப் பெற்றவர்களைக் குற்றவாளியாக்கி விரல் நீட்டும்.. அதற்காகவா சுமித்ரா அப்படியொரு முடிவிற்கு வந்து.. தன் திருமணத்திற்கு.. தானே ஒப்புதலைச் சொன்னாள்..?

இது எல்லாவற்றிற்கும் மேலாக அவளால் தனஞ்ஜெயனைப் பிரிந்து ஒரு அடி எடுத்து வைக்க முடியுமா..?

முன்னால் சென்று கொண்டிருந்த தனஞ்ஜெயனின் பரந்த முதுகை ஏக்கத்துடன் பார்த்தாள் சுமித்ரா.. எத்தனை முறை அந்த முதுகில் அவள் சவாரி செய்திருப்பாள்..?

"உப்பு மூட்டை தூக்கவா..?"

"என்னையா..?"

"உன்னைத் தூக்காம.. அதோ ரோட்டில போறாளே.. மஞ்சப் புடவைக்காரி.. அவளைத் தூக்கச் சொல்கிறியா..?"

"அதானே பார்த்தேன்.. அந்த மஞ்சள் புடவை மஞ்சரி உங்களுக்கு பத்து விட்ட அத்த பொண்ணுதானே.."

"நூறுவிட்ட அத்த பொண்ணுன்னு சொல்லு.. அதுக்கென்ன இப்ப..?"

"அவளத் தூக்கனுமுன்னு மனசுக்குள்ள நோக்க மிருக்கப் போய்த்தானே அவள கை காட்டறிங்க..? போங்க.. போய் அவளையே தூக்குங்க..."

"என்ன அலுவலுக்கு அவளைத் தூக்கச் சொல்கிற..? நான் துக்க எனக்குப் பொண்டாட்டியில்லையா.. என்ன..?"

தனஞ்ஜெயன் முரட்டுத்தனமாக அவளைத் தூக்கி முதுகில் சரித்துக் கொண்டபோது அவள் என்னவோ சப்ர மஞ்சத்தில் படுத்திருப்பதைப் போல ஒய்யாரமாக உணர்ந்தாள்..

அவனுடைய பின்னக் கழுத்தை வளைத்து அவளின் கைகள் மலர் வளையம் போல இருக்க.. அவள் கைகளில் அழுந்த முத்தம் பதித்தபடி.. அவன் அவளை இறுக்கிக் கொள்ளும்பது சொர்க்கத்தில் அவள் இருப்பாள்..

ஆண்மையான அவளது கணவனின் நிமிர்வு.. அவனது பின்னங் கழுத்தின் மீது அவள் முகத்தைப் பதித்துப் புரட்டும்போது அவன் கொள்ளும் கிளர்ச்சி.. அவள் கொள்ளும் கிறக்கம்..

வார்த்தைகளில் வடிக்க முடியாத அந்த ஸ்பரிசங்களின் உணர்வுகளை அப்போது நினைத்தவளுக்குள் அலை புரண்டது..

அது அவனை அணைக்கத் துடித்த அலை..! அவனுடன் பிணையத் துடித்த அலை..! ஒன்றாகக் கலக்கத் துடித்த அலை..!

அலையடிக்கும் உணர்வுகளோடு அவனை நெருங்கியவளை சொந்தமில்லாத பார்வை பார்த்தான் தனஞ்ஜெயன்.. சுமித்ரா விக்கித்துப் போனாள்.. அவள் மனம் வலித்தது..

காட்டேஜீக்குத் திரும்பியதும்.. அவன் கழுத்தைக் கட்டிக் கொள்ளப் போனாள்.. விலக்கி நிறுத்தியவன்.. பெட்டிகளை எடுத்துத் துணிகளை சேகரித்து அதில் அடைக்க ஆரம்பித்தான்..

"ஏன்..?" சுமித்ராவுக்குப் புரியவில்லை..

"ஊருக்குக் கிளம்பனும்.." வறண்ட குரலில் சொன்னான் தனஞ்ஜெயன்..

"இந்த மாதம் முழுதும் இங்கே இருக்கலாம்ன்னீங்களே.." அவள் தொண்டை அடைக்கக் கேட்டாள்..

அவன் நிமிர்ந்து அவளைத் தீர்க்கமாக ஓர் பார்வை பார்த்தான்.. அதில் வாயடைத்துப் போனாள் சுமித்ரா..

"நினைத்ததை எல்லாம் நடத்தி விட முடியுதா என்ன..? அப்படியிருக்கிறப்ப சொல்லியதை எல்லாம் எப்படிச் செய்ய முடியும்..?"

"புரியலை..."

"உன் தம்பியுடன் உன் ஊருக்குப் போக நீ நினைத்தாலும் அதை நடத்த முடியாம போச்சில்ல..

அதைச் சொன்னேன்.."

தனஞ்ஜெயன் உக்கிரத்துடன் ஊருக்குக் கிளம்பி விட்டான்.. அந்த உக்கிரம் பாதித்தாலும் பற்றிக் கொண்டது.. அவளுக்கு மட்டும் கோபம் வராதா..

26

சிரிப்பும்.. சில்மிசப் பார்வையுமாக தேநிலவுக்கு கிளம்பிப் போன மகனும், மருமகளும்.. எதிரும் புதிருமாக முறைத்தபடி திரும்பி வந்து சேர்ந்ததும் இந்திராதேவிக்கு எதுவும் புரியவில்லை..

'என்ன ஆகியிருக்கும்..?'

அவள் தனஞ்ஜெயனிடம் கேட்டாள்.. அவன் ஒன்றுமில்லையென்று சொல்லி விட்டு பேக்டரிக்குப் போய் விட்டான்.. சுமித்ராவிடம் கேட்டாள்.. அவள் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள்..

"அவன் சின்னப்பையன் அத்தை.. என்னை விட ஆறு வயது இளையவன்.. அவனுக்கு என்ன தெரியும்ன்னு அவன் பேசின பேச்சிலே இவர் சுளுவெடுத்தாரு அத்தை..?"

"இந்த ஆம்பளைக புத்தியே இப்படித்தான்ம்மா.. மாமனார் வீட்டுக் கன்றுக்குட்டியைக் கூட ஜல்லிக்கட்டுக் காளையா

நினைச்சுக்கிட்டு முறைச்சுக்குவாங்க.. தனா மட்டும் அதுக்கு விதிவிலக்காவா இருந்து வைக்கப் போகிறான்..? விடும்மா.."

சுமித்ரா விட்டு விட்டாள்.. எதுவும் நடக்காததைப் போல இயல்பாக இருக்க முயன்றாள்.. தனஞ்ஜெயன் விடவில்லை.. நடந்த சம்பவத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அவளுடன் பேசுவதை தவிர்த்தான்.. காலையில் பேக்டரிக்குப் போனால் நள்ளிரவில்தான் வீடு திரும்புவான்.. அவனுக்கான மதிய உணவை டிரைவர் பூபதி வந்து வாங்கிப்போவான்..

'இப்பத்தான் பெண்டாட்டின்னு வாழ ஆரம்பிச்சான்.. அதுக்குள்ளே இப்படியா..?' இந்திராதேவிக்கு ஆற்றாமையாக இருந்தது..

நடந்ததெல்லாம் போதாதென்று.. அந்த வாரத்தின் முதல்நாளில் அன்னவாசல் ஜமீன் வீட்டின் முன்னால் ஆறு லாரிகள் வரிசைகட்டிக் கொண்டு வந்து நின்றன.. கூடவே வந்த காரிலிருந்து மணிவாசகம் திலகவதியுடன் இறங்கி வந்தார்..

அது காலை நேரம் என்பதால் தனஞ்ஜெயன் பேக்டரிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான்.. வரிசை கட்டிய லாரிகளை பால்கனியிலிருந்து பார்த்தவனின் புருவங்கள் சுருங்கின.. மடமடவென்று மாடியிலிருந்து இறங்கி வந்தான்..

"அப்பா.. அம்மா..."

அவனை முந்திக் கொண்டு ஓடிய சுமித்ரா திலகவதியின் கைகளுக்குள் பாய்ந்தாள்.. மகளைக் கட்டிக் கொண்ட திலகவதியின் கண்கள் குளமாகின.. மணிவாசகம் பாசத்துடன் மகளின் தலையை வருடிக்கொடுத்தார்..

தனஞ்ஜெயன் முறைத்துக் கொண்டிருக்க... இந்திராதேவி..

"வாங்க சம்பந்தி.." என்று அவர்களை வரவேற்றாள்..

"ம்ம்ம்.." என்ற மணிவாசகத்திற்கு அவள் முகத்தைப் பார்த்துப் பேச சங்கடமாக இருந்தது..

உங்களுக்கு மருமகளாக அனுப்பி வைப்பதற்காகத் தான் என் பெண்ணை பெற்று வளர்த்து வைத்திருக் கிறேனா என்று கேட்டுவிட்டு இந்திராதேவிக்கே மருமகளாக மகளை அனுப்பி வைத்து விட்ட பின்பு அவள் முகத்தைப் பார்த்துப் பேச அவரால் எப்படி முடியும்..?

இந்திராதேவி மனதில் தைத்திருக்கும் முள்ளை எடுத்துவிடும் வித்தை தெரிந்தவளாக இருந்தாள்..

"பாருங்க சம்பந்தி.. நான் ஒற்றை மகனைப் பெற்றவ.. எனக்கு என் சம்பந்தகாரரின் வீடுதான் ஆதரவா நிற்கனும்.. நீங்களும், நானும் பழசையே மனதில் வைத்துக்கிட்டு இருந்தா வாழ வேண்டிய நம்ம பிள்ளைக வாழ்க்கையை அது பாதிக்காதா..?"

"இல்லைங்கம்மா.." மணிவாசகம் பதறிவிட்டார்..

"எங்க மனசில எதுவும் இல்லைண்ணி.. பெண்ணைக் கொடுத்தோமோ.. உயிரைக் கொடுத்தோமோங்கிறது

தான் பெண்ணைப் பெத்தவங்க மனசு... உங்களுக்குத் தெரியாதது இல்லை... எங்களுக்கு சுமித்ராவோட வாழ்க்கைதான் முக்கியம்.."

"அவளுக்கு என்ன திலகா.. எனக்கு மருமகளா இல்லாம மகளா இருக்கா.."

"இது போதும் அண்ணி.." திலகவதி கண் கலங்கினாள்..

"தனா.. உன் மாமனார், மாமியார் வந்திருக்காங்க பாரு.. வந்தவங்களை வாங்கன்னு கேட்கிறதுதான் உன்னைப் பெத்த அப்பாவுக்கு நீ வாங்கிக் கொடுக்கும் மரியாதை.. இந்திராதேவி மகனை நல்ல முறையில் வளர்த்திருக்கான்னு இந்த ஊர் சொல்லனும் தனா.." கண்டித்தாள் இந்திராதேவி..

"வாங்க.." பொதுவாக அழைத்தான் தனஞ்ஜெயன்..

"சுமித்ராவுக்கு செய்ய வேண்டிய சீர்வரிசை சாமான்களை லாரியில் ஏற்றிக் கொண்டு வந்திருக்கேன்.. இன்னும்

என்ன செய்யனும்னு சொன்னீங்கன்னா அதையும் செய்துடறேன்.." மணிவாசகம் தன்மையாகச் சொன்னார்..

"அன்னவாசல் ஜமீனுக்கு சீர் செய்ய உங்களால் முடியாது.. அதனால கொண்டு வந்ததை திருப்பிக் கொண்டு போங்க..." தனஞ்ஜெயன் கடுமையாகப் பேசினான்..

"தனா.." இந்திராதேவி அதட்டினாள்..

"அவர் அன்னவாசல் ஜமீனுக்கு சீர் செய்ய வரலை.. அவரோட பெண்ணைக் கட்டிக்கிட்ட மருமகனுக்கு சீர் செய்ய வந்திருக்கிறார்.. உன் அந்தஸ்தையும், பணப் பெருமையையும் தள்ளி வைச்சிட்டு அவரோட மருமகனா பேசு.."

தனஞ்ஜெயன் பதில் பேசவில்லை.. இந்திரா தேவியின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு மௌனமாக இருந்தாலும்.. அவன் மனதுக்குள் புயல் அடித்துக் கொண்டிருப்பதை மற்றவர்களால் உணர முடிந்தது..

"நீங்க எதைச் செய்தாலும் அது போதும் சம்பந்தி.." இந்திராதேவி இதமாகச் சொன்னாள்..

"கல்யாணம் முடிந்துட்டா மட்டும் போதாது.. மறுவீட்டு விருந்து.. தலைதீபாவளி அது.. இதுன்னு ஆயிரம் இருக்கு.. அதுக்கெல்லாம் எங்க பொண்ணும், மாப்பிள்ளையும் எங்க வீட்டுக்கு வந்து போகலைன்னா சுத்துப்பட்டி கிராமத்திலே நான் கௌரவமா தலை

நிமிர்ந்து நிற்க முடியாது.." மணிவாசகத்தின் குரல் இறைஞ்சுதலோடு வெளிவந்தது..

சுமித்ராவிற்கு வேதனையாக இருந்தது... அவளுடைய அப்பா இப்படித் தழைந்து பேசுகிறவரல்ல.. திடிரென்று சீரோடு வந்து இறங்கி இப்படித் தழைந்து பேசுகிறார் என்றால்.. சுந்தர் எதையாவது சொல்லியிருக்க வேண்டும்.. பெற்ற மகளுக்கு பிறந்த வீட்டின் அன்பும் ஆதரவும் குறையாமல் இருக்கிறது என்பதை அவளின் புகுந்த வீட்டில் வெளிப்படுத்த அவளைப் பெற்றவர்கள் கிளம்பி வந்திருக்க வேண்டும்..

'எல்லாம் இவனாலே..'

தனஞ்ஜெயனின் மீது அவளுக்கு கோபம், கோபமாக வந்தது..

"அதுக்கென்ன சம்பந்தி.. இன்னும் இரண்டு நாளில தனாவும்.. சுமித்ராவும் லட்சுமிபுரத்துக்கு மறுவீட்டு விருந்துக்கு வருவாங்க.." இந்திராதேவி வாக்களித்தாள்..

"அம்மா.." தனஞ்ஜெயன் ஆட்சேபித்தான்..

"உனக்குப் பிடிக்குதோ.. பிடிக்கலையோ.. நீ போய்த்தான் ஆகனும் தனா.. சில பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு நாம கட்டுப்பட்டுத்தான் ஆகனும்.. இப்ப சுமித்ரா நம்ம வீட்டிலே வாழ வரலையா..?"

இந்திராதேவியின் கேள்வியில் தனஞ்ஜெயனின் மறுப்பு காணாமல் போய் விட்டது.. அன்று மதிய விருந்தை உண்டு விட்டு மணிவாசகமும், திலகவதியும் கிளம்பினார்கள்.. தனிமையில் மகளிடம் சுந்தர் சொன்னது உண்மையா என்று விசாரித்தாள் திலகவதி..

"கொடைக்கானலுக்கு நாங்க எதுக்காக வந்திருந் தோம்ன்னு நினைக்கறிங்கம்மா..? தேநிலவுக்காக வந்திருந்தோம்.." முகம் சிவக்கச் சொன்னாள் சுமித்ரா..

திலகவதி வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தவள்.. பெண்களுக்கே உரிய சூட்சுமமான அறிவு அவள் மகள் இல்லற வாழ்வில் இன்பமாக இருக்கிறாள் என்பதை திலகவதிக்கு உணர்த்தி விட்டது..

"சுந்தர் வேற மாதிரி சொன்னானேம்மா..?" விசாரித்தாள்..

"அதையேன்ம்மா கேட்கறிங்க.."

அலுப்புடன் ஆரம்பித்த சுமித்ரா.. ஆதியோடு அந்தமாய் கொடைக்கானலில் நடந்த மாமன், மைத்துனன் மோதலைப் பற்றி விலாவாரியாக சொல்லி முடித்தாள்..

"இன்னும் மாப்பிள்ளை உன்கூட கோபமாத்தான் இருக்காரா..?"

"ம்ம்ம்.. இந்த கோபம் எத்தனை நாளைக்கு இருக்கப் போகுதும்மா..? போகப் போக சரியாகிரும்.."

நம்பிக்கையுடன் சொன்னாள் சுமித்ரா.. திலகவதி யினால் அந்த நம்பிக்கையுடன் இருக்க முடிய வில்லை.. ஆண்களின் ஈகோ மோதலைப்பற்றி அந்தத் தாய்க்குத் தெரியாதா என்ன..?

இருந்தாலும் அவள் மகளின் நம்பிக்கையை குலைக்கும் வண்ணம் பேசாமல் கிளம்பிப் போய் விட்டாள்.. இந்திராதேவி வாக்குத் தவறாமல் தனஞ்ஜெயனை அதட்டி.. உருட்டி லட்சுமிபுரத்திற்கு மறுவீட்டு விருந்துக்கு அனுப்பி வைத்தாள்.. சுமித்ராவிடமும் சொல்லி வைத்தாள்..

"உன் வீட்டோடு உன் புருசனை பழக வைக்கிறது உன் கையிலதான் இருக்கு சுமித்ரா.. சிறிசா விரிசல் வருகிறப்பவே அதை சரி பண்ணிரனும்.. விட்டுட்டா விரிசல் பெரிசாகிரும்.. உனக்கிருக்கிறது ஒரே தம்பி.. அவனுடன் தனா கோபமாய் இருக்கிறது நம்ம இரண்டு குடும்பத்துக்கும் நல்லதில்லைம்மா.."

"நான் பார்த்துக்கறேன் அத்தை.." சுமித்ரா உறுதி கொடுத்து விட்டுக் கணவனுடன் கிளம்பிப் போனாள்..

தனஞ்ஜெயன் பாராமுகமாய்த்தான் இருந்தான்.. ஒருநாள் மட்டும்தான் மறுவீட்டு விருந்துக்கு தங்குவேன் என்ற நிபந்தனையையும் வைத்தான்.. பெரும்பாண்மை நேரங்களில் சுமித்ராவுடன் பேசாமல் உம்மணாம் மூஞ்சியாக இருந்து சோதித்தான்..

'இருபத்தி நான்கு மணி நேரத்தில் எந்த கோந்தை வைத்து இவனையும் என் தம்பியையும் ஒட்டி வைக்கிறதாம்..?'

சுமித்ராவுக்கு மலைப்பாக இருந்தது.. அவர்கள் போய் இறங்கியதும் மல்லிகா வந்து ஆரத்தி எடுத்து வரவேற்று உள்ளே அழைத்துப் போனாள்.. திருக்குமரனுக்கு வேலை இருக்கிறதென்று பக்கத்து ஊருக்குப் போய் விட்டதாகவும் திரும்பி வர இரண்டு நாளாகும் என்றும் தெரிவித்தாள்..

தனஞ்ஜெயன் விருந்துக்கு வருகிற செய்தியை அறிந்ததும் ஊரை விட்டு ஓடியிருப்பான் என்ற நினைவில் சுமித்ராவின் இதழ்களில் புன்னகை தெரிந்தது..

வழக்கமான பால், பழ உபசரிப்புகளுக்குப் பின்னால் அவர்களைப் பார்க்க வந்திருந்த ஊர் சனங்களிடம் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தான் தனஞ்ஜெயன்..

ஒரு அளவிற்கு மேல் அவனால் அங்கே உட்கார முடியவில்லை.. அவன் முகத்தில் சலிப்பைக் கண்ட மணிவாசகம்..

"சுந்தர்..! மாமாவை மாடி ரூமுக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போ.." என்று கட்டளையிட்டார்..

'ஏன்..? இவ எங்கே போனா..?'

தனஞ்ஜெயனின் விழிகள் சுமித்ராவைத் துழாவின.. அவளைக் காணோம்.. வேறு வழியில்லாமல் வேண்டா வெறுப்பாக சுந்தரை முறைத்தபடி அவன் வழிகாட்ட மாடிக்குப் போனான்..

"இதுதான் உங்க ரூம்.."

சுந்தர் மாடியறையைத் திறந்து விட்டான்.. ஏஸி வசதியுடன் இருந்த அந்த அறை அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.. அறையின் சுவரில் எல்.ஈ.டி டிவி பொருத்தப் பட்டிருந்தது.. ரிமோட்டை எடுத்து தனஞ்ஜெயனின் கையில் கொடுத்தவன்..

"உங்களுக்கு பிடிச்ச புரோக்ராமை பார்த்துக்கங்க.." என்றான்..

தனஞ்ஜெயன் எதுவும் பேசாமல் அவர்கள் கொண்டு வந்த பெட்டி எங்கே என்று தேடினான்.. அவனுக்கு உடை மாற்றியாக வேண்டும்.. லேசாக முகம் கழுவினால் தேவலை என்றிருந்ததில் பாத்ரூம் எங்கேயிருக்கிறது என்று யோசித்தான்..

"இது அட்டாச்சுடு பாத்ரூம்.." சுந்தர் கை நீட்டிக் காட்டிய இடத்தில் கதவு இருந்தது..

இப்போது தனஞ்ஜெயன் அவனையுமறியாமல் தலையை அசைத்தான்..

"வேற எதுவும் வேணுமா மாமா..?" சுந்தர் தனஞ்ஜெயனை மாமா என்று அழைத்து விட்டான்..

அதை மனதில் குறித்துக் கொண்ட தனஞ்ஜெயன்..

"நாங்க கொண்டு வந்த பெட்டி எங்கே..?" என்று கேட்டான்..

"அதை அப்பவே ஷெல்பில் கொண்டு வந்து வைத்துட்டேன் மாமா..." சுந்தர் சுவரலமாரியைத்

திறந்து காட்டினான்.. அங்கே தனஞ்ஜெயனின் பெட்டி இருந்தது..

"தேங்க்யூ" தனஞ்ஜெயன் முறுவலித்தான்..

அதில் சுந்தரின் முகம் மலர்ந்து விட்டது..

"அறிவிருக்காடா உனக்கு.. வாழ வேண்டிய உன் அக்கா வாழ்க்கையிலே குழப்பத்தை உண்டு பண்ணிட்டு வந்திருக்கயே.. அவர் உன் அக்கா புருசண்டா.. கொடைக் கானலிலே அவங்களைப் பார்த்தா முதலில் நீ உன் அக்கா புருசனையில்ல நலம் விசாரிச்சிருக்கனும்..? எப்படியிருக் கீங்க மாமா.. எப்ப நம்ம வீட்டுக்கு விருந்துக்கு வரப் போறிங்கன்னு கேட்டிருந்தா நீ கெட்டிக்காரன்.. உன் கூடப் பிறந்த அக்காவின் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொடுக்கிற புத்திசாலி.. அதை விட்டுட்டு அக்கான்னு ஆரம்பிச்சு அவர் முன்னாலேயே அவரைக் குறை சொல்லி அவங்களுக்குள்ளே சண்டை மூட்டி விட்டுட்டு வந்திருக்கயே.. இதுதான் ஒரு அக்காவுக்கு தம்பி செய்கிற உதவியாடா..? உன் பேச்சைக் கேட்டு பயந்து போய் அன்னவாசலுக்குப் போன பின்னாலில்ல தெரியுது.. உன் அக்கா அங்கே அருமை.. பெருமையா வாழ்ந்துக்கிட்டு இருக்கா.. நீதான் விவரமில்லாம குட்டையைக் குழப்பிட்டு வந்திருக்க.. அதை எப்படி சரி செய்கிறதுன்னு பாரு.."

அன்னவாசலுக்குப் போய் விட்டு வந்த திலகவதி திட்டியதிட்டில் சுந்தர் ஆடிப் போயிருந்தான்.. அவனுடைய

அன்பு அக்காவின் ஆசைக் கணவன் அவனுக்கு எதிரியாவதா..?

"ஸாரி மாமா.." தனஞ்ஜெயனிடம் மன்னிப்புக் கேட்டான்..¶"எதுக்கு..?" புரியாததைப் போலக் கேட்டான் தனஞ்ஜெயன்..¶"அக்காவைப் பிரிஞ்சு இருந்திருக்கேன்.. அப்போல்லாம் அக்கா ஹாஸ்டலில் படிச்சுக்கிட்டு இருக்கும்.. லீவுக்கு வந்திரும்.. இப்ப அப்படியில்லாம அன்னவாசலில் விட்டு விட்டு வந்தோமா..? அக்காவை நீங்க அழைச்சுக்கிட்டு வருவீங்களோ.. மாட்டிங்களோங்கிற பதட்டத்தில என்ன பேசறேன்னு யோசிக்காம பேசிட்டேன் மாமா.."

"நானென்ன வில்லனா..? உன் அக்காவை கடத்திக் கிட்டு போய் சிறை வைத்திருக்கேனா..? இல்லைப்பா.. அவ என் பெண்டாட்டி.. என் வீட்டின் மகாராணி.. நீ எப்ப வேணும்னாலும் நம்ம வீட்டுக்கு வந்து உன் அக்காவை பார்க்கலாம்.. எத்தனை நாள் வேண்டுமானாலும் தங்கலாம்.. அதைப்போல நானும் அடிக்கடி உன் அக்காவை இங்கே அழைச்சுக்கிட்டு வர்றேன்.."

"இது போதும் மாமா.."

சுந்தரின் மலர்ந்த முகத்தில் இவன் அறியாச் சிறுவன் என்ற கருணை தனஞ்ஜெயனுக்குள் வந்தது.. சுமித்ராவின் மீதான சுந்தரின் பாசத்தை தனஞ்ஜெயனால் புரிந்து கொள்ள முடிந்தது.. அவனுக்குத்தான் அக்கா, தங்கையென்று யாருமில்லை.. அவன் மனைவிக்கு தம்பி என்ற உறவு கிடைத்திருக்கும் போது அந்த பாசத்திற்கு அவன் ஏன் தடை சொல்லப் போகிறான்..?¶¶தனஞ்ஜெயன் சுந்தரின் தோள்மீது கை போட்டு பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டான்.. அவனுடைய படிப்பு சம்பந்தமான கேள்விகளைக் கேட்டான்.. ரசனைகள் பற்றி விசாரித்தான்..

தனஞ்ஜெயனுக்காக சுமித்ரா ஜீஸ் கொண்டு வந்த போது.. மாமனும், மைத்துனனும் பிய்த்தாலும் பிய்க்க முடியாதபடி பசையில்லாமல் ஒட்டியிருந்தார்கள்..

"உன் அக்கான்னு ஒருத்தி இங்கேயிருக்கேண்டா.. மறந்திராதே.."

சுமித்ரா பொறாமையுடன் ஊடே புகும் அளவிற்கு அவர்கள் இழைந்து பிணைந்தார்கள்..

சுந்தர் கீழே போய் விட்டான்.. சுமித்ரா சந்தோசத்துடன் அவனைப் பற்றிப் பேச வாயெடுத்தாள்.. தனஞ்ஜெயன் இறுக்கமான முகத்துடன் குளியலறைக்குள் புகுந்து விட்டான்..
'பிடிவாதக்காரன்..' சுமித்ராவிற்கு அழுகை வந்தது..

சோர்வுடன் படியிறங்கியவள் கடைசிப் படியில் காலை வைத்த போது தலை சுற்றி விழப் போனாள்.. மல்லிகா வந்து தாங்கிக் கொண்டாள்.. கீழே இருந்த அறையில் அவளைப் படுக்க வைத்து விட்டு பக்கத்து டவுனில் இருந்த டாக்டரை அழைத்துக் கொண்டு வர மணிவாசகம் ஓடினார்.. தனஞ்ஜெயனுக்குத் தகவல் போனது.. அவன் அவசரமாக மாடியை விட்டு கீழே வந்தான்.. அதற்குள் மணிவாசகம் லேடி டாக்டருடன் வந்து விட்டார்..

"ஒன்றுமில்லைங்க.. மார்னிங் சிக்னெஸ்தான்.. சுமித்ரா கன்சீவ் ஆகியிருக்கா.."

லேடி டாக்டர் நல்ல செய்தியை சொல்லி விட்டுக் கிளம்பினாள்.. சோர்வுடன் படுத்திருந்த சுமித்ராவை தூக்கிக் கொண்டான் தனஞ்ஜெயன்.. பிறந்த வீட்டிலிருக்கும் நினைவில்..

"ஸ்ஸ்ஸ்.. அப்பா.. அம்மா.. சுந்தர்.." என்று எச்சரிக்க முயன்றபடி மீண்டும் மயங்கிப் போனாள் சுமித்ரா..

மாடியறையில் அவளை படுக்க வைத்த தனஞ்ஜெயன் இந்திராதேவிக்குப் போன் பண்ணி விவரத்தைச் சொன்னான்.. அவள் மகிழ்ந்து போனாள்..

"அதுக்காக உடனே கிளம்பி வந்துராதே தனா.. ரெண்டு நாள் அங்கே தங்கிட்டு வா.."

தனஞ்ஜெயன் தங்கினான்.. ஒருநாள் மட்டும் தான் இருப்பேன் என்று நிபந்தனை போட்டவன்.. மூன்று நாள்களுக்கும் மேலாக லட்சுமி புரத்தில் தங்கினான்.. சுமித்ராவின் வாய்க்கு ஏற்றபடி உரைப்பும், புளிப்புமாக சமைத்து அவளை சாப்பிடவைத்தாள் திலகவதி.. பக்கத்தில் இருந்து கவனித்துக் கொண்டான் தனஞ்ஜெயன்.. அதைக் கவனித்த சுந்தருக்கு அக்காளின் மீது அக்காளின் கணவன் கொண்ட பாசம் புரிந்தது..

"கோபம் போயிருச்சா..?" கண்ணீருடன் சுமித்ரா கேட்டபோது..

"போடி பைத்தியம்.." என்று அவளது கலைந்திருந்த முடியைக் கோதிவிட்டு சரிசெய்தபடி செல்லமாக கடிந்து கொண்டான் தனஞ்ஜெயன்..

"மன்னிச்சிருங்க.."

"அடி வாங்கப் போற.."

"தப்பா ஏதாவது பேசியிருந்தா மனசில வைச்சுக்குக்காதீங்க.."

"புருசன் பெண்டாட்டி சண்டையெல்லாம் ஒரு சண்டையாடி..?"

தனஞ்ஜெயன் கனிவுடன் மனைவியை தழுவிக் கொண்டான்.. மூன்று நாள்கள் கழித்து திரும்பி வந்த மருமகளை ஆரத்தி எடுத்து வீட்டுக்குள் அழைத்துக் கொண்டாள் இந்திராதேவி..

சுமித்ராவின் வயிறு வளர்ந்தது.. தனஞ்ஜெயன் வேலைகளைப் பிரித்துக் கொடுத்து மற்றவர்களை கவனிக்க வைத்து விட்டு.. வீட்டுக்கு நேரத்தோடு வந்தான்.. சுமித்ராவுடன் பெரும்பான்மையான பொழுதைக் கழித்தான்..

ஏழாம் மாதம் வளைகாப்பு செய்து லட்சுமிபுரத்திற்கு சுமித்ராவை அழைத்துக் கொண்டு போனார்கள்.. மறுநாளே தனஞ்ஜெயன் போய் அவளை பத்தாம் மாதம் அனுப்பி வைப்பதாகச் சொல்லி கையோடு அழைத்துக் கொண்டு வந்து விட்டான்..

சொன்னபடி அவன் பத்தாம் மாதம் லட்சுமி புரத்தில் சுமித்ராவை கொண்டு போய் விடுவதற்கும்.. சுமித்ராவுக்கு பிரசவ வலி வருவதற்கும் சரியாக இருந்தது..

தனஞ்ஜெயனுக்கு மகன் பிறந்தான்.. அன்னவாசல் ஜமீன்வீடு விழாக் கோலம் பூண்டது.. மூன்று மாதக் கணக்கு முடிந்து சுமித்ராவையும், குழந்தையையும் தடபுடலாக அவர்கள் அன்னவாசலுக்கு அழைத்து வந்தார்கள்.. ஊரை அழைத்து பெயர் சூட்டும் வைபவத்தை நடத்தினார்கள்..

"ரகுவரன்.."

தனஞ்ஜெயன் மகனுக்கு பெயர் வைத்தான்.. இந்திராதேவியின் பனித்த கண்கள் ரகுநாதனின் படத்தைப் பார்த்தன..

'நம்ம பேரன்ங்க..'

அவள் மனதுக்குள் கணவனிடம் சொன்னாள்.. திலகவதி இந்திராதேவியின் கையை புரிதலுடன் பிடித்துக் கொண்டாள்.. விருந்து நடந்த இடத்தில் மணிவாசகம் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.. சுந்தர் ஓடியாடி வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான்..

"ரெண்டு வீடும் ஒன்னாகிட்டாங்க மரகதம்.." மணியக்காரரர் தியாகராஜன் மனநிறைவுடன் சொன்னார்..

"ஆமாங்க.. அண்ணிக்கு சம்பந்தகாரங்களின் சொந்தமும் ஆதரவும் வந்தாச்சு.." மரகதம் தலையை ஆட்டினாள்..

ரகுவரனின் முதல் வருட பிறந்த நாளை விமரிசையாக கொண்டாடினார்கள்.. லட்சுமிபுரத்தில் இருந்து அவனுக்கு தாய்மாமன் சீர் கொண்டு வந்தான் சுந்தர்.. குலதெய்வம் கோவிலில் சுந்தரின் மடியில் குழந்தையை உட்கார வைத்து

மொட்டையெடுத்து காது குத்தினார்கள்.. லட்சுமிபுரத்தில் இருந்து நீண்ட ஊர்வலமாக சீர்வரிசை தட்டுக்கள் வந்து அன்னவாசல் ஜமீன் வீட்டை நிறைத்தன.. இரு வீட்டாரும் இசைந்து நின்ற விசேச தினங்கள் வந்து போயின..

சுந்தர் தனஞ்ஜெயனுக்குப் பிரியமான மைத்துனனான்.. அவனுக்கு சிக்கலாக தோன்றுவதற் கெல்லாம் தனஞ்ஜெயனிடம் தான் தேடி வந்து யோசனை கேட்பான்.. தனஞ்ஜெயனும் மைத்துனனின் தோள்மீது கை போட்டு சிக்கலைத் தீர்க்கும் வழிமுறைகளைச் செய்வான்..

"டேய்.. நான் உன் கூடப்பிறந்த அக்காடா.. என்னையும் கொஞ்சம் ஞாபகத்தில் வைச்சுக்க.."

விளையாட்டாய் சொல்வாள் சுமித்ரா..

இந்திராதேவி பேரனைத் தரையில் விடாமல் தாங்கினாள்.. அவனைக் கூடவே வைத்துக் கொண்டாள்.. பகல் பொழுதில் மகனுக்கு உணவூட்ட சுமித்ரா கெஞ்சிக் கூத்தாடி அனுமதி வாங்க வேண்டியிருந்தது..

இரவுகளில் தடையற்ற சுதந்திரத்துடன் தனஞ்ஜெயன் சுமித்ராவை அணுகினான்.. அவளுடன் செல்லமாக வம்பிழுத்தான்..

"நான் உன்னை சிறையெடுத்தவண்டி.."

"நினைச்சுக்கிட்டே இருங்க.. நானாய்த்தான் சிறையில் வந்து மாட்டினேன்.."

"ஓஹோ.. அப்படின்னா என்வீடு உனக்குச் சிறைங்கிற..?"

"உங்க வீடா..? அது அப்போ சாரே.."

"பாருடா.. இப்ப நிலவரம் என்னடி..?"

"இப்ப இது என்னோட வீடாக்கும்.."

"அடேங்கப்பா.. அதிகாரம் தூள் பறக்குது..? இது யார் கொடுத்த அதிகாரம்.."

"ஊம்..? எனக்குக் கட்டாயத் தாலி கட்டினவர் கொடுத்த அதிகாரம்.."

"இதை மறந்திட்டேனில்ல.. நீ கட்டாயத்தாலி வாங்கிக்கிட்டு கடமைக்காக என்கூட குடும்பம் நடத்தறவள்ல..?"

இல்லையா பின்னே என்று சொல்ல வாயெடுத்த சுமித்ராவால் விளையாட்டுக்குக் கூட அதைச் சொல்ல முடியவில்லை..

ஆண்மை ததும்பிய அவன் மார்பில் முகம் புதைத்து அவனுடன் ஒன்றினாள்.. அந்த சரணாகதியில் தனஞ்ஜெயன் அவளிடம் சரணடைந்தான்.. அவள் முகத்தை நிமிர்த்தி அவள் கண்களுக்குள் உற்றுப் பார்த்தான்.. அதில் கரை கடந்த காதல் தெரிந்தது.. அவள் முகம் பார்த்த அவன் முகத்தை அருகில் இழுத்த சுமித்ரா.. ஆசையுடன் அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்..

- முற்றும் -